# இந்திய அரசியலமைப்பு

## அரசியலமைப்பு

- அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டு மக்களை ஆட்சிபுரியும் அடிப்படை-யான அரசியல் முறையைக் கூறுவதாகும்.
- அரசின் தலையாய அங்கங்களாகிய சட்டமியற்றும் சபை, நிர்வாகம், நீதித்துறை ஆகியவற்றைத் தோற்று-வித்து, அவற்றின் அதிகாரங்களை வரையறுத்து, பொறுப்புகளைப் பகுத்து, அவற்றுடன் மக்களுக்கும் உள்ள உறவுகளை நெறிப்படுத்துவதே அரசியலமைப்பு ஆகும்.

இந்திய அரசியலமைப்பு உலகிலேயே மிக நீளமான எழுதப்பட்ட அரசியலமைப்பு ஆகும். அரசியலமைப்பு நடைமுறைப்-படுத்தப்பட்ட பொழுது 395 பிரிவுகள், 22 பிரிவுகள், 12 அட்டவணைகள் இருந்தன. தற்பொழுது 465 பிரிவுகள் 25 பகுதிகள், 12 அட்டவணைகள் உள்ளன. இந்நீண்ட அரசியலமைப்பிற்கான முக்கிய காரணங்கள்:

- நாட்டின் பரந்த புவியமைப்பு
- காலணியாதிக்க சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பின் வளர்ச்சி ஆகிய-வற்றால் ஏற்பட்ட அழுத்தம் போன்ற வரலாற்றுக் காரணிகள்
- ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர நாடு முழுவதற்கும் ஒரே அரசியலமைப்பு
- அரசியலமைப்பு நிர்ணயசபையில் இடம்பெற்ற சட்ட வல்லுநர்களின் ஆதிக்கம்.

## இந்திய அரசியலமைப்பின் சட்டவளர்ச்சி

- நமது அரசியலமைப்பின் பல்வேறு சிறப்பியல்புகள் ஆங்கிலேய ஆட்சி-யின் தாக்கத்தைக் கொண்டுள்ளது. ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட காலணி ஆதிக்கச் சட்டங்கள் நமது அரசியலுக்கும், அரசியலமைப்புக்கும் தூண்டுதலாக உள்ளன. அவை.

**I. வணிகக்குழுவின் கீழ் சட்ட வளர்ச்சி**

**ஒழுங்கு முறைச் சட்டம் (1773) :**

- இங்கிலாந்து பிரதமர் **"நார்த் பிரபு"** வணிகக்குழுவின் விவகாரங்களை விசாரிக்க தேர்வுக் குழுவை நியமித்தார்.
- இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் 1773 ஒழுங்கு முறைச்சட்டம் மிக முக்கியமானது.

**அரசியல் அறிவியலின் தந்தை - அரிஸ்டாட்டில்**

- ஏனெனில் இந்தியாவில் கம்பெனி நிர்வாகத்தின் மீது பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தனது கட்டுப்பாடு-களைக் கொண்டு வருவதற்கான முதல் முயற்சியாக அச்சட்டம் அமைந்தது.
- இச்சட்டம் முதன் முறையாக, கம்பெனி ஆட்சிக்காக எழுதப்பட்ட அரசியலமைப்பு ஒன்றை வழங்கியது. கம்பெனி அரசியல் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை அங்கீகரித்தது.

1. வங்காளம், மும்பை, சென்னை ஆகிய மாகாணங்களின் நிர்வாக அமைப்பினை ஒரே அதிகார அமைப்பின்கீழ் கொண்டுவரச் செய்தது.
2. வங்காள ஆளுநரை மேற்கண்ட மூன்று மாகாணங்களுக்கும் தலைமை ஆளுநராக நியமித்தது. முதல் ஆளுநர் - வாரன் ஹேஸ்டிங்ஸ்.
3. தலைமை ஆளுநருக்கு உதவி புரிய நான்கு பேர் கொண்ட ஆலோசனைக்குழு ஏற்படுத்தப்பட்டது.
4. கல்கத்தாவில் ஒரு தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட்டது. (1774)
5. (1- தலைமை நீதிபதியும் 3 - துணை நீதிபதிகளும் இருப்பார்)
6. ஊழியர்களின் தனியார் வியாபாரம் தடை செய்யப்பட்டது.

**பிட் இந்தியச் சட்டம் (1784) (ஆகஸ்டில்):**

- 1773-ல் உள்ள நடைமுறை சிக்கல்களை களைய பிட் இந்தியச் சட்டம் உருவாக்கப்பட்டது.

1. கம்பெனியின் வணிகக்குழுவுக்கு இயக்குநர் பொறுப்பு மட்டுமே அளிக்கப்பட்டது.
2. அரசியல் விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஆறு உறுப்பினர்கள் கொண்ட **"கட்டுப்பாட்டு வாரியம்"** அமைக்கப்பட்டது. இங்கிலாந்து அரசரால் நியமிக்கப்பட்டனர்.
3. இந்திய நிர்வாகம் தொடர்பான அலுவல்களைக் கவனிக்க இங்கிலாந்தில் தனித்துறை அமைக்கப்பட்டது.

**சாசனச் சட்டம் (1813):**

- ஒவ்வொரு இருபதாண்டுகளுக்கு ஒருமுறை சாசனச் சட்டங்களை கிழக்கிந்திய கம்பெனியின் சாசனத்தை நீட்டிக்க வகை செய்தது.
- கல்விக்கு ஒரு இலட்சம் நிதியாக வழங்கப்பட்டது.

**சாசனச் சட்டம் (1833):**

- தலைமை ஆளுநரின் கவுன்சில் கூட்டங்களை சட்டமியற்றுவதற்கான கூட்டங்கள் என்றும், நிர்வாகக்

கூட்டங்கள் என்றும் பிரித்துப் பார்க்க வகை செய்தது.

1. அனைத்து சிவில், ராணுவ அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி, கண்காணிக்கிற அதிகாரம் தலைமை ஆளுநரின் கவுன்சிலுக்கு அளிக்கப்பட்டது.
2. கூடுதலாக சட்ட உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார். **(மெக்காலே)**
3. மைய அரசு வலிமை உடையதாகிறது. மாகாணங்கள் தங்களுக்கென சட்டமியற்றிக் கொள்ளும் உரிமைகள் இழந்தன.

**சாசனச் சட்டம் (1853):**

1. சட்டமியற்றும் பணிக்காக தலைமை ஆளுநரின் கவுன்சிலில் மேலும் ஆறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.
2. கவுன்சிலின் சட்டமியற்றும் பணியும், நிர்வாகப் பணியும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டன.
3. அரசுப் பணிகளுக்கு **போட்டித் தேர்வை** அறிமுகம் செய்தது.
4. முதன் முறையாக உள்நாட்டு மக்களுக்கு மைய சம பிரதிநிதித்துவம்.

**இந்திய அரசாங்கச் சட்டம் (1858):**

1. கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த இந்திய ஆட்சிப் பகுதிகள் அனைத்தும் நேரிடையாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தன.
2. தலைமை ஆளுநரின் கவுன்சிலில் அலுவல் சாராத உறுப்பினர்களை அதாவது, இந்தியர்களை இணைத்துக் கொள்ள வழி செய்தது.
3. இந்தியாவின் தலைமை ஆளுநர் **"அரசுப் பிரதிநிதி"** என அழைக்கப்பட்டார். அதன்படி முதல் அரசப் பிரதிநிதி **வைசிராய் கானிங்பிரபு** ஆவார்.

**II. <u>பிரிட்டிஷ் அரசின் கீழ் சட்டவளர்ச்சி</u>**

**இந்திய கவுன்சில் சட்டம் (1861):**

1. சட்டமியற்றல், பிரதிநிதித்துவ அமைப்புகளில் தொடக்கமாக இது அமைந்தது.
2. தலைமை ஆளுநரின் கவுன்சிலில் அலுவல் சாராத உறுப்பினர்களை அதாவது, இந்தியர்களை இணைத்துக் கொள்ள வழி வகை செய்தது.
3. பம்பாய், சென்னை மாகாணங்கள் முன்பு இழந்த சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றன.

**இந்திய கவுன்சில் சட்டம் (1892):**

1. தலைமை ஆளுநரின் கவுன்சில், மாகாண கவுன்சில்களில் கூடுதல் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவை விரிவுபடுத்தப்பட்டன.

2. அலுவல் சாராத உறுப்பினர்களை நியமனம் செய்ய மறைமுகத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
3. கவுன்சில் உறுப்பினர்கள் வரவு-செலவு அறிக்கை பற்றி விவாதம் நடத்தவும், பொதுமக்கள் நலன் கருதி வினாக்கள் எழுப்பவும் அனுமதிக்கப்பட்டனர்.
4. பிரதிநிதித்துவ முறை, நிர்வாகத்துறை பாராளுமன்றத்திற்கு பொறுப்பாக இருத்தல் முதலிய கொள்கைகள் இச்சட்டத்தின் மூலம் செயல்வடிவம் பெறத் தொடங்கின.

**இந்திய கவுன்சில் சட்டம் (1909): (மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள்)**

1. மத்திய, மாகாண கவுன்சில்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அவற்றின் செயல்பாடுகளும் விரிவுபடுத்தப்பட்டன.
2. தலைமை ஆளுநரின் கவுன்சில்களில், நியமன உறுப்பினர்கள் பெரும்பான்மையாகவும், மாகாண கவுன்சில்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மையாகவும் இருந்தன.
3. சாதி அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையும், இஸ்லாமியருக்குத் தனித்தொகுதி முறையும் அறிமுகம் செய்யப்பட்டன.
4. உறுப்பினர்கள் பட்ஜெட் மீது துணைக்கேள்விகள் எழுப்பவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் அனுமதி அளிக்கப்பட்டனர்.

**இந்திய அரசாங்கச் சட்டம் (1919): (மாண்டேகு செம்ஸ் போர்டு)**

1. மத்தியில் இருந்த சட்டமியற்றும் கவுன்சிலுக்குப் பதிலாக மாகாணங்களின் அவை (மேலவை), சட்டமன்றப் பேரவை (கீழவை) என்ற **ஈரடுக்கு முறை** உருவாக்கப்பட்டது.
2. இரு அவைகளிலும் தேர்ந்தெடுக்கப் -பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மை பெற்றனர்.
3. அரசாங்கத்தின் பணிகள் வரையறுக்கப்பட்டு, மைய அரசுப் பணிகள், மாநில அரசுப் பணிகள் என பிரித்தறியப்பட்டன.
4. **மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை** அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி மாகாண அரசின் பணிகள் ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பணிகள் எனவும், சட்டமன்றத்திற்குப் பொறுப்புடைய அமைச்சரின் கீழ் மாற்றப்பட்ட பணிகள் எனவும் பகிர்ந்தளிக்கப்பட்டன.
5. முதன் முறை நேரடித் தேர்தல்முறை அறிமுகம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் **1924** அமைக்கப்பட்டது.

**நவீன இறையாண்மை கோட்பாட்டின் தந்தை - ஜீன் போடின்**

**இந்திய அரசாங்கச் சட்டம் (1935):**

1. இந்தியாவில் இருந்த பிரிட்டீஷ் மாகாணங்களையும் இணைய விருப்பமுள்ள சுதேச அரசுகளையும் உள்ளடக்கிய **"அனைத்திந்திய கூட்டரசு"** அமைப்பு ஒன்று உருவாக வழிசெய்தது. எனினும், சுதேச அரசுகள் உடன்படாததால் கூட்டரசு உருவாகவில்லை.
2. இதுவரை பிரிட்டீஷ் இந்தியா நிர்வகிக்கப்பட்டு வந்த ஓரடுக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.
3. இச்சட்டத்தின்படி அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று பட்டியல்களாகப் பிரிக்கப்பட்டன. அவை கூட்டாட்சி (மத்திய) பட்டியல், மாகாணப்பட்டியல் மற்றும் பொதுப்பட்டியல் என்பனவாகும்.
4. மாகாண அரசுகள், மாகாணப் பட்டியலில் உள்ள பணிகளில் மத்தியக் கட்டுப்பாடு ஏதுமின்றி நிர்வாகம் மற்றும் சட்டமியற்றும் பணிகளை மேற்கொள்ளக் கூடிய தனியொரு சட்டப்பூர்வ அமைப்பாக உருப்பெற்றன.
5. **மத்திய அரசாங்கத்தில் இரட்டை ஆட்சி முறை** கொண்டுவரப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகள் தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் கீழும், மாற்றப்பட்ட துறைகள் அமைச்சரவையின் பொறுப்பிலும் விடப்பட்டன.
6. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை ஒழிக்கப்பட்டு **மாகாண சுயாட்சி** அறிமுகப்படுத்தப்பட்டது.
7. மாகாண அரசாங்கம் தேர்ந்தெடுக்கப் -பட்ட அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டது. அமைச்சரவை சட்டமன்றத்திற்கு கூட்டுப்பொறுப்பு உடையதாகும்.
8. ஆளுநர் நிர்வாகப் குழுவின் தலைவராக இருப்பார். அவர் அமைச்சரவையின் ஆலோசனைப்படி செயல்படுவார் என விதிமுறைகள் செய்யப்பட்டன.
9. வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார் மற்றும் அஸ்ஸாம் மாகாணங்கள் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.
10. ஒரு தலைமை நீதிபதி மற்றும் ஆறு நீதிபதிகளைக் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் டெல்லியில் நிறுவப்பட்டது.

**இந்திய விடுதலைச் சட்டம் : (1947)**

1. இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு குடியேற்ற நாடுகளை (டொமினியன்) உருவாக்க **1947 ஆகஸ்ட் 15** ஆம் தேதி நாள் குறிக்கப்பட்டது.
5. இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் பேரரசியின் பொறுப்புகளும், இந்தியச் சுதேச அரசுகள் மீதான மேலாதிக்கம்

1947 ஆகஸ்ட் 15 தேதியிலிருந்து காலாவதியாகிவிடும்.

2. இரண்டு டொமினியன்களில் ஏதேனும் ஒன்றில் சுதேச அரசுகள் இணைந்து கொள்ளலாம். இரண்டு டொமினியன் -களுக்கும் தனித்தனியாக இரண்டு கவர்னர் ஜெனரல்களை பிரிட்டிஷ் பேரரசி நியமிப்பார்.
3. இரண்டு டொமினியன்களுக்கும் தனித்தனியாக சட்டமன்றங்கள் இருக்கும். பிரிட்டிஷ் நாடாளுமன்றத் -தின் தலையீடு இன்றிச் சட்டமியற்றும் முழு அதிகாரம் அவற்றுக்கு உண்டு.
4. டொமினியன்களை ஆட்சிபுரிவதற் -கான தற்காலிக ஏற்பாடாக, இரண்டு டொமினியன்களின் அரசியல் நிர்ணய சபைகளுக்கும் டொமினியன் நாடாளுமன்றத்திற்கான அந்தஸ்து அளிக்கப்பட்டது.
5. பஞ்சாப், வங்காளம் ஆகிய மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை ஆணையம் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டது.
6. இந்தியச் சுதந்திர சட்டம் 1947யை முழுமையாக அமல்படுத்துவதற்குத் தேவையான விஷயங்கள் குறித்து தற்காலிக ஆணைகள் பிறப்பிக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.



6. இச்சட்டம் மத்தியிலும், மாகாணங்களிலும் சட்டமன்றங் -களுக்குப் பொறுப்புள்ள அரசாங்கங் -களை ஏற்படுத்தியது.
7. இந்திய விவகாரங்களுக்கான அமைச்சரின் பணிகள், இந்தியாவின் முப்படைகள் ஆகியவற்றுக்கான நிபந்தனைகளையும் பிரிட்டிஷ் இராணுவம், கடற்படை, வான்படை ஆகியவற்றின் மீதான பிரிட்டிஷ் பேரரசியின் அதிகார வரம்புகளையும் அச்சட்டம் வரையறுத்தது.

## இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

- ❖ இந்தியாவில் கம்யூனிசிய இயக்கத்தின் முன்னோடியான M.N. ராய் 1934 ஆம் ஆண்டு இந்தியர்களுக்கென அரசியல் சட்டம் உருவாக வேண்டும் என கருதினார்.
- ❖ பின்னர் கேபினெட் தூதுக்குழுவின் பரிந்துரைப்படி, இந்திய அரசியலமைப்பு குழு **16.05.1946**ல் அமைக்கப்பட்டது.

**<u>கேபினேட் தூதுக்குழுவின் உறுப்பினர்கள்</u>**

1. பெத்திக் லாரன்ஸ்
2. சர்.ஸ்டாப்போர்டு கிரிப்ஸ்
3. ஏ.வி. அலெக்ஸாண்டர்

- அரசியல் அமைப்பு குழுக்களுக்கான தேர்தலில் **208** காங்கிரஸ் உறுப்பினர்களும், **73** முஸ்லீம் லீக் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- அரசியலமைப்பு குழுவின் மொத்த உறுப்பினர்கள் - **389 பேர்** (இதில் 292 பேர் தேர்தல் மூலமும், 93 பேர் நியமனம் மூலமும், 4 பேர் தலைமை கமிஷனர் பதவியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்திய அரசியல் நிர்ணய சபை **13 குழுக்களை** அமைத்தது.
- தோராயமான வரைவு **எம்.என்.ராய்** அவர்களால் தயாரிக்கப்பட்டது
- இந்திய சுதந்திரச் சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் **18 ஜூலை 1947ல்** நிறைவேற்றப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வரும்வரை 1935 ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் நடைமுறையில் இருந்தது.
- நேருவைப் பிரதமராகக் கொண்ட இடைக்கால அரசு **1946** நிறுவப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் **முதல் கூட்டம் 9 டிசம்பர் 1946**ல் டெல்லியில் நடைபெற்றது. அரசியல் அமைப்பு குழுவின் தற்காலிக தலைவராக **டாக்டர். சச்சிதானந்த சின்ஹா** தேர்வு செய்யப்பட்டார்.
- பின்னர்,11 **டிசம்பர் 1946ல் டாக்டர். இராஜேந்திரபிரசாத்** அவர்கள் நிரந்தர தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.



டாக்டர். பாபு இராஜேந்திர பிரசாத்

- 1947 ஆகஸ்டு 29-ம் நாள் வரைவுக் குழுவின் தலைவராக டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் நியமனம் செய்யப்பட்டார்.
- **13 டிசம்பர் 1946ல் நேரு** அவர்கள் அரசியலமைப்பின் **முகப்புரையை** வழங்கினார்.
- இதில் இந்திய அரசியலமைப்பின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள் இடம்பெற்றிருந்தது.
- இந்திய அரசியலமைப்பை உருவாக்க மொத்தம் **22 குழுக்கள்** இருந்தன.

| **மாகாண அரசியலமைப்புக் குழு தலைவர்** | **சர்தார் வல்லபாய் படேல்** |
|---|---|
| **அடிப்படை உரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் குழு தலைவர்** | சர்தார் வல்லபாய் படேல் |
| **கொடிக்குழு தலைவர்** | ஜே.பி. கிருபாளனி |
| **மைய அரசின் அதிகாரம் குறித்த குழு தலைவர்** | ஜவஹர்லால் நேரு |
| **மாநில அரசுகளுடன் பேச்சு வார்த்தை குழு** | டாக்டர். ராஜேந்திர பிரசாத் |
| **மைய அரசின் அரசியலமைப்புக் குழு** | ஜவஹர்லால் நேரு |
| **வகைப்படுத்தும் குழு** | டாக்டர். ராஜேந்திர பிரசாத் |

- வரைவுக்குழு **29 ஆகஸ்டு 1947** ல் டாக்டர். அம்பேத்கர் தலைமையில் அமைக்கப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் சிற்பி என அழைக்கப்படுபவர் - **டாக்டர். பி. ஆர். அம்பேத்கர்**
- இந்திய அரசியலமைப்பு குழுவின் சட்ட ஆலோசகராக இருந்தவர் - **பி. என். ராவ்**

**வரைவுக்குழுவில் இருந்த மற்ற உறுப்பினர்கள்:**

- P. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
- N.கோபால்சாமி ஐயங்கார்,
- டாக்டர் K.M. முன்ஷி
- சையது முகமது சாதுல்லா
- B.L.மிட்டர் (என்.மாதவராவ்)
- D.P. கைத்தான் (டி.டி. கிருஷ்ணமாச்சாரி)

- ஆரசிய மைப்பு குழு இந்திய அரசியல் அமைப்பை உருவாக்க **2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்கள்** தேவைப்பட்டது.



டாக்டர். பி.ஆர். அம்பேத்கர்

- இந்திய அரசியல் அமைப்பு குழு உறுப்பினர்கள் 284 பேர் கையொப்பமிட்டு **26 நவம்பர் 1949** ல் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் -கொண்ட பொழுது குடியுரிமை, பாராளுமன்றம், தேர்தல்கள் ஆகியன நடைமுறைக்கு வந்தது.

❖ அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட -போது அதில் 8 அட்டவணைகள், 22 பகுதிகள், **395** ஷரத்துகள் இருந்தன. தற்போது 12-அட்டவணைகள், **465** ஷரத்துக்கள் 25 பகுதிகள் உள்ளது.

❖ 1930 ல் ஜனவரி 26 ம் நாள் பூரண சுயராஜ்ஜிய தினமாக அனுசரிக்கப் -பட்டு தொடர்ந்து அந்நாளை கொண்டாடி வந்ததால், 26 ஜனவரி 1950 இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாளாக கொண்டாடுகிறோம்.

❖ அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளாத முக்கிய தலைவர்கள் **மகாத்மா காந்தி, முகமது அலி ஜின்னா**

❖ அரசியல் நிர்ணய சபை உருவாக்கும் போது சட்டமன்றத் தலைவராக இருந்தவர் **ஜி.வி. மாவ்லங்கர்.**

**அரசியலமைப்பு நிர்ணய சபை :**

❖ பொதுவாக ஓர் இறையாண்மை மக்களாட்சி நாட்டில் அரசியலமைப்பை உருவாக்கும் பணியை, அந்நாட்டு மக்களுக்கு பிரதிநிதிகள் அடங்கிய ஓர் அமைப்பே மேற்கொள்ளும், அரசியலமைப்பை இயற்றி ஏற்றுக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும், அத்தகைய அமைப்பிற்கு அரசியலமைப்பு நிர்ணய சபை என்று பெயர்.

❖ அரசியலமைப்பு நிர்ணய சபை என்ற கருத்து இந்தியாவின் தேசிய இயக்க வளர்ச்சியுடன் நீண்ட தொடர்புடைய ஒன்றாகும்.

❖ இந்திய மக்கள் தமக்குத்தாமே ஓர் அரசியலமைப்பை இயற்றிக் கொள்வதற்காக அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்து 1919 ஆம் ஆண்டு இந்திய அரசாங்க சட்டத்தின் வரைவிலேயே இருந்தது.

❖ **1928 மே 19ஆம்** தேதி பம்பாயில் நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாடு இந்திய அரசியலமைப்பின் கோட்பாடுகளை வரையறுப்பதற்காக மோதிலால் நேருவின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

❖ அக்குழு அளித்த ”நேரு அறிக்கை” இந்தியாவிற்கான முழு நிறைவான அரசியலமைப்பு ஒன்றை இயற்ற இந்தியர்கள் மேற்கொண்ட முதல் முயற்சியாகும்.

❖ 1936 ஆம் ஆண்டின் லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் வெளியிலிருந்து திணிக்கப்படும் எந்த விதமான அரசியலமைப்பினையும் ஏற்க முடியாது எனவும், வயது வந்தோர் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்படும்

**குடியரசு என்ற நூலை எழுதியவர் - பிளேட்டோ**

அரசியலமைப்பினையே ஏற்க முடியும் எனவும் தீர்மானம் நிறைவேற்றியது.

- 1940ஆம் ஆண்டு முதன் முறையாக அரசியல் நிர்ணய சபைக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அதன் பின்னர் **கிரிப்ஸ் தூதுக்குழு (1942)**, புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணி முற்றிலும் இந்தியர்கள் வசம் விடப்படும் என்றும், அரசியல் நிர்ணய சபையால் வரையப்படும் அரசியலமைப்பை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தது.
- இறுதியாக 1946 ஆம் ஆண்டு மார்ச் 15ல் இங்கிலாந்து பிரதமர் அட்லியின் அறிவிப்பை தொடர்ந்து, அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தின் அடிப்படையில் இந்திய விடுதலைச் சட்டம் நடைமுறைக்கு வரும் வரையில் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபை இறையாண்மையைப் பெற்றிருக்க -வில்லை.
- விடுதலைக்குப் பின்னரே இறையா -ண்மையுடையதாக மாறிவிட்டது.
- இந்தியா விடுதலை அடைந்தபோது அதற்கென அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும்வரை பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்க சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்டது.

**அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிறபணிகள் :**

- அரசியலமைப்பு நிர்ணய சபையானது, அரசியலமைப்பை உருவாக்கியது தவிர, பிற பணிகளையும் ஆற்றியது. அவையாவன :

1. காமன்வெல்த் அமைப்பில் இந்தியா உறுப்பினராவதற்கு ஏற்பளிப்பு வழங்கியது **(மே 1949)**
2. இந்தியாவின் தேசியக் கொடியை அறிவித்தது **(ஜூலை 22, 1947)**
3. சுதந்திரம் பெறுவதற்கு மூன்று வாரகாலத்திற்கு முன்பே அங்கீகாரம் அளித்தது.
4. இந்தியாவின் தேசிய கீதத்தையும், தேசியப் பாடலையும் ஏற்றுக் கொண்டது. (ஜனவரி **24, 1950)**

- இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக டாக்டர். இராஜேந்திரப் பிரசாத் அவர்களைத் தேர்ந்தெடுத்தது. (ஜனவரி 24, 1950).

**இந்திய அரசியலமைப்பு வடிவமைப்புக் குழுவின் தலைவரான பி.ஆர். அம்பேத்கரின் கருத்திற்கிணங்க விதி 32 அரசியலமைப்பின் உயிரும் இதயமும் ஆகும்.**

**பல்வேறு நாடுகளின் அரசியல் அமைப்பு மூலங்கள்**

அவை,

| | |
|---|---|
| **அமெரிக்கா** | முகப்புரை<br>அடிப்படை உரிமைகள்<br>நீதிப் புணராய்வு<br>நீதிபதிகள் பதவி நீக்கம்<br>தனித்து இயங்கும் நீதிமன்றம் |
| **இங்கிலாந்து** | பாராளுமன்ற முறை,பிரதம மந்திரி,சட்டம் இயற்றும் முறை<br>சட்டத்தின் வழி ஆட்சி,ஒற்றைக் குடியுரிமை |
| **அயர்லாந்து** | அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்<br>குடியரசுத் தலைவரின் தேர்தல் முறை<br>இராஜ்ய சபைக்கு 12 உறுப்பினர் நியமனம் |
| **கனடா** | மத்தியில் வலிமையுடன் கூடிய கூட்டாட்சி முறை அதிகாரப் பகிர்வு மற்றும் மத்திய அரசிடம் எஞ்சிய அதிகாரங்கள் |
| **தென் ஆஃப்ரிக்கா** | சட்டதிருத்த முறை |
| **ரஷ்யா** | அடிப்படைக் கடமைகள் |
| **ஆஸ்திரேலியா** | பொதுப்பட்டியல்,மத்திய மாநில உறவுகள் |
| **ஜெர்மனி** | அவசரநிலை பிரகடனத்தின் போது அடிப்படை உரிமைகள் இடைநீக்கம் |
| **ஜப்பான்** | உச்ச நீதிமன்றத்தின் தோற்றமும், நடைமுறையும் |
| **இந்திய அரசியலமைப்பு சட்டம், 1935 (மூன்றில் இரண்டு பங்கு இதிலிருந்து எடுக்கப்பட்டது)** | கூட்டாட்சி முறை, ஆளுநர் பதவி,<br>நெருக்கடி கால நிலை |

# முகவுரை

## முகவுரை


THE CONSTITUTION OF INDIA

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:
JUSTICE, social, economic and political;
LIBERTY of thought, expression, belief, faith and worship;
EQUALITY of status and of opportunity;
and to promote among them all
FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;
IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

- முகப்புரை என்பது இயற்றப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் பகுதியாகும்.
- முதன்முதலில் முகப்புரையை அரசியலமைப்பில் வழங்கிய நாடு **அமெரிக்கா.** அதனை தொடர்ந்து இந்தியா மற்றும் பல நாடுகள் வழங்கியது.

**முகப்புரை:**

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை மிக்க, சமதர்மம் சார்ந்த, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும்

சமூக, பொருளாதார, அரசியல் நீதி **(JUSTICE)** கிடைக்கவும்

சிந்தனையில் சிந்தனையை வெளிப்படுத்துவதில், நம்பிக்கையில், பற்றுறுதியில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும் **(LIBERTY),**

தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவம் **(EQUALITY),** உறுதியாக அனைவருக்கும் கிடைக்கச் செய்யவும், தனி ஒருவரின் மாண்புக்கும்,

சகோதரத்துவத்தை **(FRATERNITY)** அனைவரிடத்தில் வளர்க்கவும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைபாட்டுக்கும் உறுதியளிக்கும்

விழுமிய முறைமையுள்ள உறுதி பூண்டு, 1949 நவம்பர் 26-ம் நாளாகிய இன்று நம்முடைய அரசியலமைப்பு நிர்ணய சபையில், ஈங்கிதனால், இவ்வரசியலமைப்பை ஏற்று சட்டமாக இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

- ❖ பண்டித ஜவஹர்லால் **நேரு** அவர்களால் டிசம்பர் 13, 1946 ல் இந்திய அரசியல் நிர்ணய சபையின் குறிக்கோள்கள் பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டு, **ஜனவரி 22,1947ல்** அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்பு இது இந்திய அரசியலமைப்பின் முகப்புரையாக மாற்றப்பட்டது.

- ❖ இந்திய அரசியலமைப்புக்கு முகப்புரை வேண்டும் என்று கூறியவர் - ஜவஹர்லால் நேரு. மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் என்று இந்திய அரசியலமைப்பின் முகப்புரை கூறுகிறது.



- ❖ இந்தியா ஒரு **இறையாண்மை** உடைய **சமதர்ம, மதச்சார்பற்ற, மக்களாட்சி** மற்றும் **குடியரசு** நாடாக உள்ளது.
- ❖ **நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** ஆகியவை நமது நோக்கங்கள் எனவும் அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரை கூறுகிறது. இந்திய அரசியலமைப்பின் முகப்புரை "இந்திய அரசியலமைப்பின் ஆன்மா" - என்று கூறியவர் தாகூர்தாஸ் பார்கவ்.
- ❖ அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட போதே முகவுரையும் ஏற்றுக்கொள்ளப் -பட்டது. அரசியலமைப்பின் நோக்கம், மற்றும் குறிக்கோள்கள் இதில் குறிக்கப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ளப் பட்ட நாள் நவம்பர் 26, 1949.
- ❖ இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் உள்ள சமத்துவம், சுதந்திரம் போன்ற வார்த்தைகள் பிரெஞ்சு புரட்சியின் வழியாக சேர்க்கப்பட்டது. அரசியலமைப்பின்படி இந்தியா ஒரு இறையாண்மை பெற்ற மக்களாட்சிக் குடியரசு எனவும், சமதர்ம நெறி சார்ந்த, மதச்சார்பற்ற குடியரசு எனவும் கூறுகிறது.
- ❖ கேசவானந்த பாரதி - கேரளா அரசை எதிர்த்து தொடங்கிய வழக்கில் (1973) முன்னுரை "அரசியல் அமைப்பின் ஒரு பகுதியே" என்று உச்சநீதிமன்றம் கூறியது.

இறையாண்மை கொண்ட சமதர்ம சமயசார்பற்ற மக்களாட்சி குடியரசை அமைத்திட உறுதி பூண்ட இந்திய மக்களாகிய நாம், அனைத்து குடிமக்களும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி எண்ணத்தில், வெளிப்படுத்தலில், நம்பிக்கையில் பற்றுறுதியில், வழிபடுதலில் சுதந்திரம் தகுதிநிலையிலும் வாய்ப்புரிமையிலும்

சமநிலை பெறவும் அதை அவர்கள் யாவரிடத்தும் மேம்படுத்தவும் தனிநபர் கண்ணியம், மற்றும் நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்ப ாடு கொண்ட சகோதரத்துவம் பெற்றிட உறுதி செய்து, இந்த **1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம்** நாள், நமது அரசியலமைப்பு அவையில் இந்த அரசியலமைப்புச் சட்டத்தை இங்கு ஏற்று, இயற்றி நமக்கு வழங்குகிறோம்.

**முகப்புரையின் முக்கியத்துவம் :**

1. அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள் எந்நோக்கத்திற்காக அதனை இயற்றினார்கள், அதன் மூலம் அவர்கள் அடைய விரும்பிய அரசியல், சமுதாய, பொருளாதார மாறுதல்கள் யாவை என்பன பற்றிய குறிப்புகளை முகவுரை பகிர்கிறது.
2. அரசியலமைப்பின் உட்பிரிவுகளில் காணப்படும் குழப்பங்களை தெளிவுறுத்தவும் சில நேரங்களில் முகப்புரை பயன்படுகிறது.
3. இதன் மூலம் நீதித்துறை அரசியலமைப்பின் மாண்பினை சரியான கோணத்தில் விளம்ப இயலும். மேலும் அரசியலமைப்பின் இறையாண்மை அதிகாரத்தை மூலவர் எவர் என்பதனையும், அரசியலமைப்பு இயற்றப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளினையும் முகப்புரை கொண்டுள்ளது.

**முகப்புரையின் சட்டத்திருத்தம் :**

- முகவுரையில் இதுவரை ஒரே ஒருமுறை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. **42வது சட்ட திருத்தம் (1976)** மூலம் சமதர்மம், மதச்சார்பற்ற என்ற வார்த்தைகளும், ஒருமைப்பாடு என்ற வார்த்தையும் சேர்க்கப்பட்டது.

**ஜனநாயகம் (Democracy)**

- ஆபிரகாம் லிங்கன் கருத்துப்படி ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக அமைக்கப்படும் மக்களின் அரசாகும். இது மக்களால் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் மற்றும் மக்களின் விருப்பங்கள் மற்றும் ஒப்புதலின்படி அரசு செயல்படும் ஒரு ஆட்சி முறையாகும்.
- ஜனநாயக அரசின் பிற இயல்புகளான சட்டத்தின் ஆட்சி குடிமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான விதிகள், அனைவருக்கும் நீதி மற்றும் சமத்துவத்தில் நம்பிக்கை சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற நீதித்துறை பத்திரிக்கை சுதந்திரம் நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல்கள் போன்றவை.

**இந்தியாவின் உயிர் நாடி கிராமங்கள் என்று கூறியவர் மகாத்மா காந்தி**

**மதச்சார்பின்மை (Secularism)**

- ❖ இது அரசியலையும், மதத்தையும் தனித்தனியாக பிரித்து வைப்பதைக் குறிக்கும். ஒரு மதச்சார்பற்ற நாட்டில் நாட்டுக்கென்று ஒரு மதம் இருக்காது. மேலும் அனைத்து குடிமக்களுக்கும் தாங்கள் விரும்பும் மதத்தை பின்பற்ற உரிமை உண்டு.
- ❖ இந்தியாவும் ஒரு மதச்சார்பற்ற நாடாகும். ஆனால் இந்தியாவின் அனைத்து மதங்களும் பாரபட்சமின்றி நடத்தப்படுவதோடு (சர்வ தர்ம சம்பவா) சிறுபான்மை மதங்களின் நலன்களும் காக்கப்படுகின்றது.

**சமூகத்துவம் (Socialism)**

- ❖ இது முதலாளித்துவத்திற்கும் தனிநபருக்கு முக்கியத்துவம் தரும் கொள்கைக்கும் எதிரானதாகும். இது உற்பத்தி மற்றும் வினியோக உரிமைகளை சமூகம் முழுவதிற்கும் பொதுவானதாக மாற்றக்கூடும் தத்துவம் ஆகும்.
- ❖ சமத்துவம், அனைவருக்கும் நலவாழ்வு, மற்றும் அனைவருக்கும் சமவாய்ப்பு போன்ற இயல்புகளை கொண்ட சமூகத்தினை அமைக்க இம்முறை வழிவகுக்கும்.
- ❖ சமூகத்துவம் தனது நோக்கத்தை அரசின் மூலம் நிறைவேற்றும். அரசே பொதுநலனின் பிரதிநிதியாகும்.
- ❖ இம்முறையில் தனியார் சொத்துரிமைக்கு இடம் இருந்தாலும் அவ்வுரிமை பொது நலனை கருத்தில் கொண்டு சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

# அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்

## 1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்

❖ இந்திய அரசியலமைப்பு பல்வேறு வகைகளில் தனிச் சிறப்புடையது. இது உலக நாடுகளின் மற்ற அரசியலமைப்புகளில் இருந்து வேறுபட்டதான பல்வேறு சிறப்புக் கூறுகளைக் கொண்டது. அதன் சிறப்புக் கூறுகளாவன,

### 1. நீண்ட அரசியலமைப்பு:

❖ எந்த நாட்டின் அரசியல் சட்டத்தையும்விட இந்திய அரசியல் சட்டம் நீளமானது. சாதாரண சட்டம் இயற்றும் விவகாரம் ஆயினும், அல்லது நிர்வாகச் செயல் ஆயினும் எல்லா விஷயங்களையும் உள்ளடக்கிய விரிவான ஆவணமாக இது திகழ்கிறது.

❖ ஆரம்பத்தில் **395** சரத்துக்களையும் **22** பகுதிகளையும் **8** அட்டவணைகளையும் பெற்றிருந்தது.

❖ தற்போது 25-பாகங்கள், 12 - அட்டவணைகள், **465 -** சரத்துகள் உள்ளது.

### 2. பல்வேறு மூலங்களிலிருந்து எடுத்தாளப்பட்ட அரசியலமைப்பு:

♦ அமெரிக்கா : முகப்புரை, அடிப்படை உரிமைகள், நீதிப் புணராய்வு

♦ ரஷ்யா : அடிப்படைக் கடமைகள்.

♦ தென் ஆப்பிரிக்கா: சட்ட திருத்த முறை

♦ ஆஸ்திரேலியா : பொதுப்பட்டியல்

### 3. நெகிழா அரசியலமைப்பு

❖ இந்திய அரசியலமைப்பின் சில வகையங்கள் எளிய முறையில் திருத்தப்படலாம் என்றும், சில வகையங்கள் அவ்வளவு எளிதாக திருத்தம் செய்யப்பட இயலாது. ஆகவே நம்முடைய அரசியலமைப்பு நெகிழும் இயல்பும், நெகிழா இயல்பும் கொண்டுள்ளது.

### 4. கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி கூறுகள் :

❖ ஒற்றையாட்சி அரசியலமைப்பில் அதிகாரங்கள் அனைத்தும் மைய அரசுக்குக் கீழ்படிந்தவையாகவும் மைய அரசிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று அதன் பிரதிநிதிகளாகவும் செயல்படும்.

- கூட்டாட்சி அமைப்பில் எழுதப்பட்ட, நெகிழ்ச்சியற்ற அரசியலமைப்பே மேலாண்மை மிக்கதாக விளங்கி மைய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும். அவை தம் அதிகார எல்லைக்குள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கும்.

**5.மக்கள் இறையாண்மை :**

- மக்கள் இறையாண்மை என்ற கொள்கையை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டிருக்கும் அரசியல -மைப்பாக இந்திய அரசியலமைப்பு விளங்குகிறது.

**6.நாடாளுமன்ற ஆட்சி முறை :**

- இந்திய அரசியலமைப்பு பிரிட்டனின் நாடாளுமன்ற அரசாங்க முறையை ஏற்றுக்கொண்டுள்ளது.
- நிர்வாகத் துறை மற்றும் சட்டம் இயற்றும் துறைகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும் அமையப் பெற்றிருப்பதே இம்முறையின் சிறப்பம்சமாகும்.

**7. சுதந்திரமான மற்றும் ஒருங்கிணைந்த நீதித்துறை:**

- நீதிப்புணராய்வு அதிகாரங்களைக் கொண்ட சுதந்திரமான நீதித்துறையை இந்திய அரசியலமைப்பு ஏற்படுத்தி இருக்கிறது.
- ஒன்றியம், மாநிலம், உரிமையியல், குற்றவியல், அரசியல் சட்டம் உள்பட எல்லாச் சட்டங்களைப் பற்றியும் விசாரிக்கும் அதிகாரம் பெற்றதாக உயர்நீதிமன்றங்களும், உச்சநீதி -மன்றமும் கொண்ட ஒருங்கிணைந்த ஒரு நீதித்துறை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**8. வயது வந்தோர் வாக்குரிமை :**

- நாடாளுமன்ற மக்களாட்சி எனும் -போது ஒருவருக்கு ஒருவாக்கு என்பதை நாம் குறிப்பிடுகிறோம்.
- வயது வந்த இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும், எவ்வித பாரபட்சமும் இன்றி, சமவாக்குரிமை அளிக்கப் -பட்டுள்ளது. மேலைநாடுகளில், முன்னேறிய மக்களாட்சி நாடுகளில் கூட படிப்படியாகத்தான் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது.
- 1988-ம்ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் 61வது திருத்தத்தின்படி வாக்குரிமை வயது 21-லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது.

**9. அடிப்படை உரிமைகள் :**

- ஓர் அரசில் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளைக் கொண்டே அந்த அரசின் தன்மையை அறிந்து கொள்ளலாம்.

**அவையாவன :**

1. சமத்துவ உரிமை**(சரத்து 14-18)**
2. சுதந்திர உரிமை**(சரத்து 19-22)**
3. சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு உரிமை**(சரத்து 23-24)**
4. சமயத்தைப் பின்பற்றுவதற்குத் தடையற்ற சுதந்திரம்**(சரத்து 25-28)**
5. பண்பாடு மற்றும் கல்வி கற்பதில் உரிமைகள்**(சரத்து 29-30)**
6. அரசியலமைப்புக்கு உட்பட்டு நிவாரணம் தேடும் உரிமை **(சரத்து 32)**

❖ எந்தவொரு குடிமகனின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக ஏதேனும் சட்டமோ, நிர்வாகச் செயல்பாடோ அமையுமானால் அதனை எதிர்த்து உச்சநீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரலாம்.

**10. அடிப்படை கடமைகள் :**

❖ 1976 ஆம் ஆண்டு 42 வது அரசியலமைப்புத் திருத்தம் IV-A பகுதியில் தனித்தலைப்பில் குடிமக்களின் அடிப்படைக்கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

❖ 42-வது இந்திய அரசியல் சட்ட திருத்தம் மூலம் அடிப்படைக் கடமைகள் என்ற தலைப்பில் ஒரு புதிய பகுதி சேர்க்கப்பட்டது. இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பதினொன்று கடமைகளை அது விதிக்கிறது.

**11. நெறிமுறைக் கோட்பாடுகள் :**

❖ அயர்லாந்தில் அரசியலமைப்பைப் பின்பற்றி இந்திய அரசியல் சட்டத்தில் அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன.

❖ அரசு நெறிமுறைக் கோட்பாடு பகுதி IV

**12. குடியுரிமை :**

❖ பகுதி III, IV, IVA ஆகிய மூன்று பகுதிகளும் இந்திய குடிமக்களின் நலனை பேணுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ சகோதரத்துவத்தையும், ஒன்றுபட்ட இந்தியாவையும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கூட்டரசு அமைப்பு இருந்த போதிலும் ஒரே குடியுரிமை கொண்டுள்ளது. 1955 ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது.

**13. சமயச் சார்பின்மை :**

❖ இந்திய அரசியலமைப்பு இந்தியாவை ஒரு சமயச் சார்பற்ற அரசாக அமைத்துள்ளது. அது எல்லாக் குடிமக்களையும் தங்கள் விரும்பும் சமயத்தைப் பின்பற்றவும், பிறருக்குப் போதிக்கவும், பரப்பவும் உரிமைகளைக் கொடுத்துள்ளது.

**14. நெருக்கடி கால சட்டவகை முறைகள்:**

❖ நாட்டில் அசாதாரணமான சூழ்நிலை நிலவும்போது நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும்

பாதுகாப்பு மக்களாட்சி அரசியல் முறை இவற்றைக் காக்க நெருக்கடி நிலையினை அமல் செய்வதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறது.

- போர், வெளிநாட்டுத் தாக்குதல் மற்றும் உள்நாட்டு ஆயுதக் கலகங்களால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் கருதினால், இந்திய முழுமைக்குமோ அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ தேசிய நெருக்கடி நிலையை தேசிய நெருக்கடி நிலை **352 வது** பிரிவு குடியரசுத் தலைவர் பிரகடனப்படுத்த-லாம். மாநில நெருக்கடி **356**-வது பிரிவு.
- ஒரு மாநில அரசாங்கத்தை அரசியலமைப்புச் சட்ட வகைமுறை-களின்படி நடத்த இயலாத சூழ்நிலை உருவாகி உள்ளது என அம்மாநில ஆளுநர் அனுப்பிய அறிக்கையைப் பெற்றதில் பேரிலோ அல்லது வேறுவிதத்திலோ குடியரசுத்தலைவர் திருப்தியுற்றால், அவர் அந்த மாநிலத்தில் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தலாம்.

**15. சுதந்திரமான அரசியலமைப்பு அமைப்புகள்:**

1. இந்திய அரசியலமைப்பு சட்டமியற்றும் துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை அமைப்புகளை மட்டும் வரையறுக்காமல், சுதந்திரமாக இயங்கக்கூடிய அரசியலமைப்பு நிறுவனங் களையும் ஏற்படுத்தி உள்ளது.
2. இத்தகைய அமைப்புகள் மக்களாட்சியின் மாண்புகளை நிலை நாட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டன.

**அவை:**

1) தேர்தல் ஆணையம்
2) இந்திய அரசுத் தலைமைக் -கணக்காயர் மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர்

**16.மூன்றடுக்கு அரசாங்க முறை :**

- 73வது மற்றும் 74வது இந்திய அரசியலமைப்பு திருத்தச் சட்டங்கள் மூன்றாவது அடுக்கான உள்ளாட்சி அமைப்புகளின் அமைப்பு, அதிகாரம், பணிகள் ஆகியவற்றை வரையறை செய்தன.
- இது உலகின் வேறெந்த அரசியல-மைப்பிலும் காணப்படாத ஒன்றாகும்.
- இதனால் இந்திய அரசியலமைப்பு ஒன்றிய அரசாங்கம், மாநில அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி அரசாங்கம் என்ற மூன்றடுக்கு அரசாங்கமாக உள்ளது.

**தேசிய கொடியானது 1947 ஆம் ஆண்டு ஜீலை 22 அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

# யூனியனும் அதன் ஆட்சிப்பகுதியும்

## யூனியனும் அதன் ஆட்சிப் பகுதிகளும் (சரத்து 1-4)

- இந்திய அரசியலமைப்பு இந்தியாவின் நிலப்பரப்பை, அதாவது ஆட்சிப்பரப்பை தனது முதலாவது பகுதியில் தெளிவாக அறிவிக்கிறது. இப்பகுதியில் நான்கு பிரிவுகள் உள்ளன.

**சரத்து 1. ஆட்சிப் பரப்பு :**

- முதலாவது பிரிவின் சரத்து 1(1)-ன்படி இந்தியா பல மாநிலங்களின் கூட்டிணைப்பு ஆகும். இந்தியா பாரதம் என்ற பெயராலும் வழங்கப்படலாம்.
- சரத்து 1(2) ஆனது மாநிலங்களும், அவற்றின் எல்லைகளும் முதலாம் அட்டவணையில் குறிக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது.
- சரத்து 1(3) ஆனது இந்தியா எல்லையைப் பற்றி கூறுகிறது.
- மாநிலங்களின் எல்லைகளையும், முதலாம் அட்டவணையில் குறிக்கப் -பட்டுள்ள யூனியன் பிரதேசங்களின் எல்லைகளையும், இந்தியா கையகப் -படுத்தக் கூடுமெனப்படுகிற பிற எல்லைகளையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது.

**சரத்து 2. புதிய மாநிலத்தைச் சேர்த்தல் அல்லது நிறுவுதல் :**

- சரத்து 2-ன்படி பாராளுமன்றம் ஒருசட்டத்தின் வாயிலாகத்தான் பொருத்தமெனக் கருதும் ஒப்பந்த விதிமுறைகள், நிபந்தனைகளின் அடிப்படையில் இந்திய ஒன்றியத்திற் -குள் புதிய மாநிலங்களைச் சேர்த்துக் கொள்ளலாம் அல்லது முற்றிலும் புதிய மாநிலங்களை இந்திய ஒன்றியத்திற் -குள் நிறுவவோ பாராளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது.

**சரத்து 3 . ஒரு புதிய மாநிலத்தை உருவாக்குதல், பரப்புகள், எல்லைகள் மற்றும் பெயர்களை மாற்றுதல்:**

- இந்திய ஒன்றியத்திற்குள் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க முடியும். மேலும், ஏற்கனவே இருக்கும் மாநிலங்களின் பரப்புகளை, எல்லைகளை அல்லது பெயர்களை மாற்றவும் முடியும்.

**இப்பிரிவின்படி பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் வாயிலாக**

1. ஒரு மாநிலத்தின் எல்லையைப் பிரிப்பதாலோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட

மாநிலங்களை அல்லது மாநிலங்-களின் பகுதிகளை இணைப்பதாலோ அல்லது எந்த எல்லையையாவது ஏதாவது ஒரு மாநிலத்தின் பகுதியுடன் இணைப்பதாலோ ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கலாம்.

2. எந்த மாநிலத்தினுடைய பரப்பையும் குறைக்கச் செய்யலாம்.
3. எந்த மாநிலத்தினுடைய எல்லையையும் மாற்றலாம்.
4. எந்த மாநிலத்தினுடைய பெயரையும் மாற்றலாம்.

**சரத்து 3: கீழ் மசோதா நிறைவேற்றப்படல்:**

1. குடியரசுத்தலைவரின் பரிந்துரையின்படி மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்-படுத்தவேண்டும்.
2. குடியரசுத்தலைவர் பாதிக்கப்படும் அந்த மாநில சட்டமன்றத்திற்கு தனது கருத்தை குறிப்பிட்ட காலஅளவிற்குள் தெரிவிக்க அனுப்பப்படல் வேண்டும்.
3. எனினும் அந்த மாநில சட்டமன்றம் வெளியிடும் கருத்து குடியரசுத்தலை-வரையோ அல்லது நாடாளு-மன்றத்தையோ கட்டுப்படுத்தாது.
4. இவ்வாறு மாற்றி அமைக்கும் மசோதா பாராளுமன்றத்தில் **சாதாரண பெரும்பான்மையுடன்** சாதாரண சட்டம் வாயிலாக நிறைவேற்றப்பட வேண்டும்.
5. ஆனால் இவ்வுறுப்பின்படி இந்திய நிலப்பகுதியை அயல்நாட்டிற்கு கொடுக்கமுடியாது. அப்படி ஏதாவது ஒரு நிலப்பகுதியை கொடுப்ப தென்றால் சரத்து 368 கீழ் சட்டதிருத்தம் செய்யவேண்டும்.

❖ தற்பொழுது 29 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளது.

**சரத்து 4. எவ்வாறு, புதிய மாநிலங்களை உருவாக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்** என்ற வழிமுறையை எடுத்துக் கூறுகிறது.

❖ நாம் ஏற்கனவே பார்த்தது போலவே சிறப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமலேயே எந்தவொரு சட்டத்தையும் இயற்றுவது போல சாதாரண பெரும்பான்மையில் இச்செயலை மேற்கொள்ளலாம்.

**சுதேச மாநிலங்கள் இணைப்பு :**

❖ இந்திய விடுதலைச் சட்டம் 1947, இந்தியா பாகிஸ்தான் என்ற இரு நாடுகளை உருவாக்கியது.

❖ அப்போது இந்திய எல்லைக்குள் 565 சுதேச மன்னராட்சிப் பகுதிகள் அமைந்திருந்தன.

❖ இப்பகுதிகள் யாவும் இந்தியாவுடன் இணைவதற்கோ அல்லது பாகிஸ்-தானுடன் இணைவதற்கோ அல்லது தனித்து சுதந்திர நாடுகளாக

இயங்கவோ இந்திய விடுதலைச் சட்டம் 1947 வழி செய்தது.

- ஏறத்தாழ 562 சுதேசி அரசுகள் இந்திய யூனியனுடன் இணைந்தன.
- மீதமுள்ள 3 சுதேச அரசுகளான **ஹைதராபாத்**, **ஜுனாகத்** மற்றும் **காஷ்மீர்** இணைப்பிற்கு மறுத்துவிட்டன.
- 1. காஷ்மீர் - **1948** இணைக்கப்பட்டது. 2. ஹைதராபாத் - 1948 காவல்துறை நடவடிக்கையாலும், 3. ஜுனாகர் - 1949 ஒப்பந்தம் மக்கள் வாக்கெடுப்பு மூலமாகவும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.
- **சர்தார் வல்லபாய் பட்டேல்**மற்றும் **வி.பி. மேனன்** ஆகியோர் தனது அரசியல் திறமையினாலும் கடுமையான நடவடிக்கைகளாலும் அந்தப் பகுதிகளை இந்திய யூனியனுடன் இணைத்தார்.

**மொழிவாரியான மாநிலங்கள் உருவாக்கம்:**

- 1920 ஆம் ஆண்டு அளவிலேயே காங்கிரஸ் கட்சியின் அமைப்புகள் மொழியின் அடிப்படையில் குறிப்பிட்ட பகுதிகளில் இயக்கத் தொடங்கின.
- விடுதலை அடைந்த பின்னர் மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது.
- இந்தியாவில் 845 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் 22-மொழிகள் அரசியலமைப்பு சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இக்கோரிக்கையை ஆராய்வதற்காக இந்திய அரசு திரு.எஸ்.கே.தார் அவர்கள் தலைமையில் ஒரு குழு ஒன்றினை **ஜுன் 1948ல்** அமைத்தது.
- அக்குழு **டிசம்பர் 1948ல்** அறிக்கை சமர்ப்பித்தது. தார்க்குழுவானது மாநிலங்கள் நிர்வாக வசதிகளின் அடிப்படையிலேயே பிரிக்கப்பட வேண்டுமேயன்றி மொழியின் அடிப்படையில் பிரிக்கப்படக் கூடாது எனக் கருத்து தெரிவித்தது.
- இக்குழுவின் முடிவுகள் திருப்தி அளிக்காததால் ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீத்தாராமையா ஆகியோர் தலைமையில் மீண்டும் **JVP குழு நவம்பர் 1948-ல்** அமைக்கப்பட்டது.
- இக்குழுவும் மொழி அடிப்படையிலான மாநிலப் பிரிவினையை நிராகரித்தது.
- எனினும், **பொட்டி ஸ்ரீராமலு** என்பவர் தனி ஆந்திர மாநிலம் (1953) கேட்டுப் போராடி உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டார்.
- இதனால்,**1953 ஆம் ஆண்டு** சென்னை மாகாணத்தில் இருந்து தெலுங்கு பேசும் பகுதிகள் பிரிக்கப்பட்டு, முதல் மொழிவாரி

மாநிலமாக ஆந்திரா உருவாக்கப்பட்டது.

- தனி ஆந்திர மாநிலம் உருவானதைத் தொடர்ந்து பிற பகுதிகளும் மொழிவாரியாகப் பிரிவினைக் கோரிக்கையை முன் வைத்தன.
- இதனால் பசல் அலி, கே.எம்.பனிக்கர் மற்றும் கே.என்.குன்ஷ்ரு ஆகியோரைக் கொண்ட **மூவர் குழு 1953ல்** அமைக்கப்பட்டது. அது தனது அறிக்கையை 1955-ல் சமர்ப்பித்தது.
- இக்குழுவானது மொழிவாரி மாநில மறுசீரமைப்பை ஏற்றுக் கொண்டது. எனினும், ஒரு மொழி ஒரு மாநிலம் எனும் கொள்கையை நிராகரித்தது.
- இந்தியாவின் ஒற்றுமையே முதன் முறையான காரணியாக கணக்கில் கொள்ளப்படவேண்டும் என்று கூறியது.
- மேலும், இக்குழு நடைமுறையில் இருந்து நான்கு வகை மாநிலங்களைப் பகுப்பினை நீக்கக் கோரியது.
- 1955-ல் இக்குழுவின் அறிவுரைகளை ஏற்று மாநில மறுசீரமைப்பு சட்டம் (1956) நிறைவேற்றப்பட்டது.
- இதன்படி 14 மாநிலங்களும் 6 யூனியன் பிரதேசங்களும் நவம்பர் 1, 1956-ல் உருவாக்கப்பட்டன.

**1950-க்கு பிறகு உருவாக்கப்பட்ட மாநிலங்கள் :**

- **ஆந்திரப்பிரதேசம்** மெட்ராஸில் சில பகுதிகளையும் சேர்த்து ஆந்திரப் பிரதேச மாநிலச் சட்டம் 1953-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1. **குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா :** பம்பாய் (மறுசீரமைப்பு) 1960ன்படி பம்பாய் மாநிலம் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா என்ற இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.
2. **கேரளா மாநில** மறுசீரமைப்புச் சட்டம் 1956-ன்படி (நவம்பர்) உருவாக்கப்பட்டது. இது திருவாங்கூர் மற்றும் கொச்சின் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது.
3. **கர்நாடகா:** அரசர்களால் ஆளப்பட்ட மைசூர் மாநிலத்தில் இருந்து மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956-ன்படி உருவாக்கப்பட்டது. 1973-ல் கர்நாடகா என்று பெயர் மாற்றப்பட்டது.
4. **நாகலாந்து:** நாகலாந்து மாநிலச் சட்டம் 1962ன்படி இம்மாநிலம் அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டது.
5. **அரியானா:** பஞ்சாப் மாநிலத்திலிருந்து பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டம் 1966-

ன்படி இம்மாநிலம் அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டது.

6. **இமாசலப் பிரதேசம்** : யூனியன் பிரதேசமாக இருந்த இமாச்சலப் பிரதேசம், இமாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம் 1970-ன்படி மாநில அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது.

7. **மேகாலயா** : இது 23 அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1969-ன்படி முதலில் அஸ்ஸாமில் இருந்து துணை மாநிலமாக பிரிக்கப்பட்டது.

8. பின்னர் 1971ம் ஆண்டு வடகிழக்கு பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டம் 1971-ன்படி முழுமையான மாநில அந்தஸ்து பெற்றது.

9. **மணிப்பூர், திரிபுரா** : இந்த இரண்டு மாநிலங்களும் வடகிழக்கு பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டம் 1971-ன்படி யூனியன் பிரதேசமாக இருந்து மாநில அந்தஸ்துக்கு உயர்ந்தது.

10. **சிக்கிம்:** 35-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1974ன்படி சிக்கிமிற்கு இணை மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.

11. **மிசோரம்** : மிசோரம் மாநிலச் சட்டம் 1986-ன்படி முழுமையான மாநில அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டது.

12. **அருணாச்சலப் பிரதேசம்** : அருணாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம் 1986-ன்படி முழுமையான மாநில அந்தஸ்து பெற்றது.

13. **கோவா** : யூனியன் பிரதேசங்களான கோவா, டையு, டாமன் ஆகியவற்றிலிருந்து கோவா பிரிக்கப்பட்டு கோவா, டாமன் மற்றும் டையூ மறுசீரமைப்புச் சட்டம் 1987-ன்படி மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது. ஆனால், டாமன் மற்றும் டையூ ஆகியன யூனியன் பிரதேசங்களாகவே உள்ளன.

14. **சட்டிஸ்கர்** : 2000 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் மத்திய பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டு அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 2000ன்படி உருவாக்கப்பட்டது.

15. **உத்திராஞ்சல்** : 2000 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் நாள் உத்திரப் பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டு அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் 2000ன்படி உருவாக்கப்பட்டது.

16. **ஜார்கண்ட்** : 2000 ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாள் பீகார் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு, அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 2000ன்படி உருவாக்கப்பட்டது.

## யூனியன் பிரதேசங்கள்

- 7வது அரசியலமைப்பு திருத்த சட்டம் **1956ன் மூலம் பிரிவு** A, B மற்றும் C என்ற மாநிலங்களின் வகைகளும் பிரிவு Dன் கீழ் வகைப்படுத்தப்பட்டன.
- மேலும் இந்தியா முழுமையுமாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- மாநிலங்கள் அல்லது மாகாணங்கள் என்பதை மத்திய அரசுடன் கூட்டாட்சி உறவு கொண்ட அரசியலமைப்பு அலகுகளாகும்
- அரசியலமைப்பின் **சரத்து 1ன்** படி பாரதமாகிய இந்தியா மாநிலங்களின் ஐக்கியமாகும்.
- பின்வரும் அடிப்படையில் யூனியன் பிரதேசங்கள் அந்தஸ்து மாநிலங்-களின் அந்தஸ்தில் இருந்து வேறுபடுகிறது.

1. அவை அரசியலமைப்பின் கூட்டாட்சி கட்டமைப்பின் பகுதிகளல்ல. எனவே அவை அதிகார பங்கீட்டில் பங்கேற்பதில்லை.
2. அவை குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் **துணைநிலை ஆளுநர்கள்** அல்லது தலைமை ஆணையர்கள் மூலமாக நேரடியாக மத்திய அரசால் நிர்வகிக்கப்படும்.
3. தற்போது 7 யூனியன் பிரதேசங்கள் உள்ளன. அந்தமான் நிக்கோபார் தீவுகள், சண்டிகர், டெல்லி, டாமன் மற்றும் டையூ, தாதர் நாகர் ஹவேலி, லட்சத்தீவுகள் மற்றும் பாண்டிசேரி.

**யூனியன் பிரதேசங்களின் நிர்வாகம்** (Administration of the Union Territories (UTs))

- யூனியன் பிரதேசங்களின் நிர்வாகம் அதன் துணைநிலை ஆளுநர் அல்லது தலைமை ஆணையரை நியமிக்கும் குடியரசுத் தலைவரின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கும்.
- பாராளுமன்றத்திற்கு பின்வரும் அதிகாரங்கள் உள்ளன.
- தனது சொந்த சட்டசபைகளை உடைய டெல்லி மற்றும் பாண்டிசேரி ஆகியவற்றை தவிர மற்ற யூனியன் பிரதேசங்களுக்கு சட்டங்கள் இயற்றலாம்.

- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட யூனியன் பிரதேசங்களுக்கு ஒரு உயர்நீதிமன்றத்தை அமைக்கவோ அல்லது அவற்றுக்கு அருகில் உள்ள உயர்நீதிமன்றத்திற்கு அந்த யூனியன் பிரதேசங்களின் மேல் அதிகாரம் உண்டு என்று அறிவிக்கவோ இயலும்.

- யூனியன் பிரதேங்களிலேயே டெல்லி -க்கு மட்டுமே அதன் சொந்த உயர்நீதி மன்றம் உள்ளது. மற்ற யூனியன் பிரதேசங்களுக்கும் அதன் உயர்நீதி மன்றங்களுக்கும் பின்வருமாறு உயர்நீதி மன்றங்களைப் பெற்றுள்ளன.

- புதுச்சேரி ஒன்றிய பகுதி சட்டமன்றம், புதுச்சேரி (நிர்வாக) சட்டம், 1962ன்படி கீழ்பிரிவு 239A ல் அமைக்கப்பட்டது.

- பிரிவு 239AA மூலம் டெல்லி சட்டமன்றம் தேசிய தலைமையக ஒன்றியமாக அமைக்கப்பட்டது.

- பாண்டிச்சேரியின் சட்டசபை கூட்டத்தொடர் நடைபெறாத போது குடியரசுத் தலைவர் விதிமுறை -களையும் கட்டுப்பாடுகளையும் வகுக்கலாம்.

- யூனியன் பிரதேசங்களில் ஜனநாயக கட்டமைப்பை சட்டத்தின் முன் அமைக்க குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| பெயர் | வருடம் | அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள் | இடம் |
|---|---|---|---|
| அலகாபாத் | 1866 | உத்திரப்பிரதேசம் | அலகாபாத் (லக்னோவில் ஆயம்) |
| ஆந்திரப் பிரதேசம் | 1954 | ஆந்திரப்பிரதேசம் | ஹைதராபாத் |
| பம்பாய் | 1862 | மகராஷ்டிரம், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, கோவா, டாமன் மற்றும் டையூ | மும்பை (ஆயம் நாக்பூர், பாஞ்சி, ஔரங்காபாத் ஆகிய இடங்களில் பெஞ்ச்) |
| கல்கத்தா | 1862 | மேற்குவங்களாம், மற்றும் அந்தமான், நிக்கோபார் | கொல்கத்தா (போர்ட் பிளேயர்) சர்க்யூட் ஆயம் தீவுகள் |
| டெல்லி | 1966 | டெல்லி | டெல்லி |
| கவுகாத்தி | 1948 | அஸ்ஸாம், மணிப்பூர், மேகலாயா, நாகலாந்து, திரிபுரா, மிசோராம், மற்றும் அருணாச்சல பிரதேசம் | கவுகாத்தி (ஆயம் கோஹிமா மற்றும் சர்க்யூட் ஆயம் இம்பால், அகர்தலா மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஷில்லாங் |
| குஜராத் | 1960 | குஜராத் | அகமதாபாத் |
| இமாச்சலப் பிரதேசம் | 1971 | இமாச்சலப்பிரதேசம் | சிம்லா |
| ஜம்மு மற்றும் காஷ்மீர் | 1957 | ஜம்மு மற்றும் காஷ்மீர் | ஸ்ரீநகர் மற்றும் ஜம்மு |
| கர்நாடகம் | 1884 | கர்நாடகம் | பெங்களூர் |
| கேரளா | 1956 | கேரளா மற்றும் லட்சத்தீவுகள் | எர்ணாகுளம் |
| மத்திய பிரதேசம் | 1956 | மத்தியபிரதேசம் | ஜபல்பூர் ஆயங்கள் |
| சென்னை | 1862 | தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி | சென்னை |
| ஒடிசா[1] | 1948 | ஒடிசா | கட்டாக் |
| பாட்னா | 1916 | பீகார் | பாட்னா (ஆயம் ராஞ்சி) |
| பஞ்சாப் மற்றும் ஹரியானா | 1966 | பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகர் | சண்டிகர் |
| ராஜஸ்தான் | 1950 | ராஜஸ்தான் | ஜோத்பூர் (ஆயம் ஜெயப்பூர்) |
| சிக்கிம் | 1975 | சிக்கிம் | |
| சத்தீஸ்கர் | 2000 | சத்தீஸ்கர் | பிலாஸ்பூர் |
| உத்தரகண்ட்[2] | 2000 | உத்தரகண்ட | நானிடால் |
| ஜார்கண்ட் | 2000 | ஜார்கண்ட் | ராஞ்சி |
| மணிப்பூர்[3] | 2013 | மணிப்பூர் | இம்பால் |
| மேகாலயா[3] | 2013 | மேகாலயா | ஷில்லாங் |
| திரிபுரா[3] | 2013 | திரிபுரா | |

# அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்

- இது பகுதி 3 ல் அமைந்துள்ளது. பிரிவு 12 முதல் 35 வரை அடிப்படை உரிமைகள் பற்றிக் கூறுகிறது.
- அடிப்படை உரிமைகள் மீறும்பொழுது நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம்.
- அடிப்படை உரிமைகள் அரசியலமைப் -பின் தூண்கள் போன்றது என்று கூறியவர் - அம்பேத்கார்
- இது நடைமுறைக்கு வரும்பொழுது 7 உரிமைகளை பெற்றிருந்தது. தற்பொழுது சொத்துரிமை (44வது சட்டதிருத்தம், 1978) நீக்கப்பட்டு ஆறு உரிமைகளை கொண்டுள்ளது.
- சரத்து 300A- இன் கீழ் சாதாரண சட்ட உரிமையாக்கப்பட்டுள்ளது.
- சரத்து (12): அரசு என்பதனை விளக்குகிறது. இதன்படி அரசு என்பது

1. இந்திய அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம்
2. மாநில அரசாங்கம் மற்றும் சட்டமன்றம்
3. இந்திய எல்லைக்குள் உள்ள அனைத்து உள்ளூர் அமைப்புகள்
4. இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள அனைத்து அதிகார அமைப்புகள்

- **சரத்து (13):** அடிப்படை உரிமைகளுக்கு முரணாக உள்ள சட்டங்கள் அனைத்தும் இல்லாத நிலையென இப்பிரிவின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தில் நீதிப்புனராய்வு செய்வதற்கு வகைசெய்கிறது.

**1. சமத்துவ உரிமை (சரத்து 14 முதல் 18 வரை):**

**சரத்து (14):**

- சட்டத்தின் முன் சமத்துவம். சட்டமே முதன்மையானது ஒருவன் எந்த நிலையில் இருந்தாலும் சட்டத்திற்கு மேற்பட்டவனல்ல. இது இங்கிலாந்தி -லிருந்து எடுக்கப்பட்டது.
- சட்டத்தின் சமபாதுகாப்பு அமெரிக்காவிலிருந்து எடுக்கப்பட்டது. ஒரே மாதிரியான சூழ்நிலையில் அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்த வேண்டும். சிறப்பு உரிமைகள் வழங்குவது இரு வேறுபட்ட அமைப்புகளிடையே இருக்கலாம்.

ஆனால் ஒரே அமைப்புக்குள் இருக்கக் கூடாது.

- **சரத்து (15):** சாதி, சமய, இன, பால், பிறப்பு வேறுபாடுகள் காட்டத் தடை.
- **சரத்து (16):** வேலைவாய்ப்புகளில் அனைவருக்கும் சம உரிமை.
- **சரத்து (16.4):** அரசு வேலைகளில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, சிறுபான்மையினருக்கு முன்னுரிமை.
- **சரத்து (17):** தீண்டாமை ஒழிப்பு - தீண்டாமைச் சட்டம் (1955), பின்னர் இதுவே சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (1976) என மாற்றப்பட்டது.
- **சரத்து (18):** பட்டங்கள் ஒழிப்பு (ஆங்கிலேயர் தந்த பட்டங்கள் ஒழிப்பு, இந்திய அரசால் வழங்கப்படும் பத்மஸ்ரீ, பத்மபூசன் போன்ற பட்டங்களும், இராணுவ பட்டங்களான பரம்வீர் சக்ரா போன்ற பட்டங்கள் இருக்கலாம்.)

**2 .சுதந்திர உரிமை (சரத்து 19 முதல் 22 வரை):**

- **சரத்து (19, 19(i), 19(ii)):** பேச்சு மற்றும் கருத்துரிமை, ஆயுதமின்றி கூடும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, இந்தியாவில் எங்கும் செல்ல உரிமை, இந்தியாவில் எங்கும் வசிக்க உரிமை, எந்தத் தொழிலையும் செய்ய உரிமை, கூட்டுறவு சங்கம் அமைக்கும் உரிமை ஆகியன. தற்போது தனிமனித சுதந்திர உரிமைகள் 6 வகையாக உள்ளது.
- **சரத்து (20):** குற்றங்களுக்கு தண்டனை அளிப்பதிலிருந்து பாதுகாப்பு வழங்குகிறது.
- **சரத்து 20(1) :**முன்மேவு சட்டங்களை இயற்றத் தடை.இவ்வாசகம், பின்னர் இயற்றப்படும் சட்டத்தின் முன் மேவுத்தன்மை பற்றியது. ஒரு செயல் குற்றமென தண்டிக்கக்கூடிய தென்றால் அப்போது செயலிலுள்ள சட்டத்தை மீறினால் அன்றி தண்டிக்கப்பட கூடாது.
- **சரத்து 20(2):** இரட்டை இடர்பாடு (Double Jeopardy) : ஒரே குற்றத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட முறை தண்டிக்ககூடாது.
- **சரத்து 20(3):** தன்செயலால் தானே குற்றச்சாட்டிற்கு உட்படுதலுக்கான தடை.
- **சரத்து (21):** உயிர் வாழ்தல் மற்றும் தனிநபர் சுதந்திரம்.
- **சரத்து (20) மற்றும் (21)ல்** உள்ளவைகளை அவசர நிலையின் போதும்கூட பிரிவு 359ன்படி ஓர் ஆணை மூலம் இந்த உரிமைகளை நிறுத்தி வைக்க முடியாது.

❖ **சரத்து (21A):** 6 முதல் 14 வரை உள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாய கல்வி வழங்குதல் (86வது சட்டதிருத்தத்தின்படி இணைக்கப்பட்டது).

❖ **சரத்து (22):** கைது செய்து காவலில் வைப்பதிலிருந்து பாதுகாப்பு.

- ஒருவரிடம் கைதுக்கான காரணங்-களை தெரிவிக்கவேண்டும்.
- அவருடைய வழக்கறிஞருடன் கலந்தாலோசிக்க அனுமதிக்கப் படவேண்டும்.
- 24 மணி நேரத்திற்குள் அருகிலுள்ள குற்ற நடுவரிடம் முன்னிலைப்படுத்தப் - படவேண்டும்.

**3. சுரண்டலுக்கு எதிரான உரிமை (சரத்து 23 முதல் 24 வரை):**

❖ **சரத்து (23):** சுரண்டலுக்கெதிரான பாதுகாப்பு. சட்டவிரோதமாக மனிதர்-களை வியாபாரம் செய்வதிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

❖ **சரத்து (24):** 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை தொழிற்சாலைகளிலோ, சுரங்கங்களிலோ, பிற அபாயகரமான தொழில்களிலோ வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.

**4. சமய சுதந்திர உரிமை (சரத்து 25 முதல் 28 வரை):**

❖ **சரத்து (25):** யாரும் எந்த மதத்தையும் சுதந்திரமாக ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

❖ **சரத்து (26):** எல்லா சமயத்தவரும் சமய மற்றும் அறநிலைய அமைப்புகளை அமைத்து அவற்றை நிர்வகித்துக் கொள்ள உரிமை

❖ **சரத்து (27):** மதத்தினை முன்னேற்றுவதற்கு வரிசெலுத்துவதிலிருந்து உரிமை

❖ **சரத்து (28):** முற்றிலும் அரசாங்க நிதியில் செயல்படும் கல்வி நிறுவனங்களில் சமய போதனை கூடாது என்று கூறுகிறது.

**5. கல்வி மற்றும் கலாச்சார உரிமை (சரத்து 29 முதல் 30 வரை):**

❖ **சரத்து (29):** சிறுபான்மையினர் நலன் காத்தல். தம்முடைய மொழி, பண்பாடு, எழுத்து ஆகியவற்றை பேணிக்காத்தல்.

❖ **சரத்து (30):** சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தி நிர்வகிக்கவும் உரிமையளிக்கிறது.

❖ **சரத்து (31):** சொத்துரிமையை 44வது சட்டதிருத்தத்தின் மூலம் 1978 ஆம் ஆண்டு நீக்கப்பட்டு பிரிவு 300A க்கு மாற்றப்பட்டது. தற்போது இது சட்ட உரிமையாகும்.

**6. அரசியலமைப்பின் படி தீர்வு காணும் உரிமை (சரத்து 32):**

❖ **சரத்து (32):** அரசியலமைப்பின் 3 வது பகுதியில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படும்பொழுது உச்ச

நீதிமன்றம் நீதிப்பேராணை வெளியிட அதிகாரம் படைத்துள்ளது.

- இது **அரசியலமைப்பின் இதயமும், ஆன்மாவும்** போன்றது என்கிறார் **அம்பேத்கார்.**
- இது ஐந்து பேராணைகளை வழங்குகிறது.

1. **ஹேப்பியஸ் கார்பஸ் - (ஆட்கொணர் நீதிப்பேராணை)**

- ஹேபியஸ் கார்பஸ் என்ற இலத்தீன் சொல்லின் பொருளானது ஒருவரது உடலை கொண்டு வருக
- இது ஒருவரை காவலில் வைத்திருப்போரை நீதிமன்ற முன் அவரை முன் நிறுத்துமாறு ஆணையிடுவதாகும்.
- இது அரசாங்க அதிகாரிகள் மற்றும் தனிநபருக்கு எதிராகவும் வழங்கப்படும் நீதிப்பேராணை.

2. **மாண்டமஸ் - (செயலுறுத்தும் நீதிப்பேராணை)**

- மாண்டமஸ் என்ற சொல்லிற்கு கட்டளை என்பதாகும்.
- நீதிமன்றம் ஒரு பொது அதிகாரக் குழுவிற்கு எதிராக அது செய்யக்கூடிய பொதுக் கடமையை ஆற்றுமாறு கூறி இடப்படும் கட்டளையாகும்.
- இது தனிப்பட்ட ஒருவருக்காக எதிராக பிறப்பிக்கப்படுவதல்ல.

3. **புரோஹிபிசன் - (தடையுறுத்தும் நீதிப்பேராணை)**

- இப்பேராணை கீழ்நிலை நீதிமன்றங்கள் அதிகார வரம்பு இல்லாமல் செயல்படும்போது அல்லது அதிகார வரம்பை மீறி செயல்படும்போது அதைத் தடுக்கும் நோக்கம் கொண்டது.
- உயர்நிலை நீதிமன்றத்தால் கீழ்நிலை நீதிமன்றத்திற்கு அல்லது தீர்ப்பாயத் -திற்கு அதன் அதிகாரத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் பிறக்கப்படும்.
- இந்நீதிப் பேராணை நீதி முறையிலான அல்லது நீதிமுறைப் போல் நடைமுறை எதிராக மட்டுமே பிறப்பிக்கப்படும்.

4. **செர்சியோரைய் - (நெறிமுறைப்படுத்தும் நீதிப்பேராணை)**

- கீழ்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் சட்டத்தினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரவரம்பிற்குள் தமது அதிகாரத்தை செலுத்துகிறதா என்பதைக் காணவும் மற்றும் அதன் அதிகாரத்தை மீறி செயல்படுவதைத் தடுத்து அதன் நடவடிக்கைகளை அவற்றில் இருந்து நீக்கி தன் முன் கொண்டு வரும் கீழ்நீதி மன்றங்களின் தீர்ப்பை நீக்கவும் செய்யவும்.

5. **கோவராண்டோ - (தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை)**

- ஒரு பொதுப்பதவியைக் கொண்டிருப்பவர் உரிய தகுதியும்

உரிமையும் கொண்டுள்ளாரா என்பதைத் தீர்மானிக்க நீதிமன்றத்திற்கு வழியாக செய்யும் நீதிப்பேராணை.

- இலத்தின் சொல்லின் பொருள் உமது அதிகாரம் யாது என்பதாகும்.
- ஒரு பதவியை வகிப்பவரை எந்த அதிகாரத்தின் கீழ் பதவி வகிக்கிறார் என்பதை வினவுகிறது.

**பகுதி III-க்கு வெளியேயான உரிமைகள்**

- பகுதி III-ல் உள்ள உரிமைகளுடன் அரசியலமைப்பின் மற்ற சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுரிமைகள் அரசியலமைப்பு உரிமைகள் அல்லது சட்டபூர்வமான உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் அல்லாதவை அவைகள்.

**பகுதி XII-ல் சரத்து 261**

- சட்டபூர்வமல்லாத வழிகளில் வரியை விதித்தல் அல்லது வசூலித்தல் ஆகாது.

**பகுதி XII-ல் சரத்து 300A**

- சட்டத்தின் வழியில்லாமல் எவரிடமிருந்தும் சொத்து பறிக்கப்படுதல் ஆகாது.

**பகுதி XV-ல் சரத்து 326**

- மக்களவைக்கும், மாநிலங்களின் சட்டமன்ற பேரவைகளுக்குமான தேர்தல்கள் வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் இருக்கும்.
- மேலே குறிப்பிட்ட உரிமைகளுக்கு நீதிமன்றம் மூலம் சமமான தீர்வு காண முடியும். எனினும் இவை அடிப்படை உரிமைகளிலிருந்து மாறுபட்டவை. அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால், பாதிக்கப்பட்ட நபர் சரத்து 32ன் கீழ் நேரடியாக உச்சநீதிமன்றத்தை அணுக முடியும். இதுவும் அடிப்படை உரிமையாகும் ஆனால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் பாதிக்கப்பட்ட நபர் இவ்வரசியலமைப்பு தீர்வினை பயன்படுத்த முடியாது. அவர் சாதாரண வழக்கு அல்லது சரத்து 226ன் உயர்நீதிமன்றத்தை அணுக முடியும்.

## அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகள்( சரத்து 36-51)

- அரசானது ஒரு சட்டத்தையோ (அ) செயல்திட்டங்களையோ இயற்றும் பொழுது மக்கள் நலனில் அக்கறை -கொள்ள வேண்டிய கோட்பாடுகளை அரசுக்கு வலியுறுத்துகிறது.
- நெறிமுறைக் கோட்பாடுகள் நான்கு வகைப்படும். அவை,

1. **சமூக நலனை அடைய வழிகாட்டும் கோட்பாடுகள்.**

- ❖ இக்கோட்பாடுகள் சமூகநீதியை வலியுறுத்துகின்றன.
- ❖ குடிமக்கள் அனைவருக்கும் வாழ்க்கைத் தேவைகளை வழங்குதல்
- ❖ ஆண், பெண் வேலைக்குச் சமஊதியம் வழங்குதல்
- ❖ வருவாய் ஏற்றத் தாழ்வை நீக்குதல் போன்ற பல நெறிமுறைகளை வலியுறுத்துகின்றது.
- ❖ **சரத்து (38):** மக்களின் மேம்பாட்டை வலியுறுத்துகிறது.

- மக்களிடையே வருமான வேறுபாடுகள் (சமமின்மையை போக்குதல்)
- **சரத்து (39):** சமமான வேலைக்கு ஆண் பெண் சமமான தலவருமானம், மூல வளங்களை பகிர்ந்தளித்தல்.
- **சரத்து (39 A):** இலவச சட்ட உதவி மற்றும் சமமான நீதி
- **சரத்து (39 F):** ஆரோக்யமான சூழலில் குழந்தையைப் பாதுகாத்தல்.
- **சரத்து (41):** முதுமையில், நோயுற்ற நிலையில் அரசு உதவி செய்தல்
- **சரத்து (42):** பெண்களுக்கு பேறுகால விடுப்பு மற்றும் சலுகைகளை அளிக்கிறது.
- **சரத்து (43):** தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் ஏற்பாடு செய்தல்
- **சரத்து (43 A):** தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்களை பங்கு கொள்ள செய்தல்.
- **சரத்து (47):** மதுவிலக்கு
- **காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்**
- சமூகத்தில் பின்தங்கியுள்ள, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் ஆகியோரின் கல்வி, பொருளாதாரத்தை முன்னேற்றுதல் கிராமபஞ்சாயத்துகளை உருவாக்குதல் குடிசைத் தொழில்களை வளர்த்தல் போன்றவை
- **சரத்து (40):** கிராம பஞ்சாயத்து
- **சரத்து (43):** கிராமப்புறங்களில் சுயதொழில், குடிசைத்தொழில் மற்றும் கூட்டுறவு முறையில் தொழிற் பயிற்சிகளை ஊக்குவிக்க வழிவகை செய்கிறது.
- **சரத்து (43B):** கூட்டுறவு சங்கங்கள் தாமாக முன் வந்து தொழிற்சார்ந்த மேலாண்மையை ஏற்படுத்துதல், சுயேட்சையாக செயல்படுதல் அதற்கென சில உரிமைகள், சுதந்திரம் அளித்தல்.
- **சரத்து (46):** ஆதிதிராவிடர், பழங்குடியினர் கல்வி நலன் மற்றும் பொருளாதார உதவியை மேம்படுத்துதல்

### 2. பன்னாட்டு அமைதி ஏற்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்

- பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துதல்
- **சரத்து (44):** பொது சிவில் சட்டம்
- **சரத்து (45):** 6 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கல்வி
- **சரத்து (48):** கால்நடைகளைப் பராமரித்தல்
- **சரத்து (48 A):** சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்குகளை பாதுகாத்தல்
- **சரத்து (49):** தேசிய சின்னம் பாதுகாப்பு
- **சரத்து (50):** நீதித்துறையையும் நிர்வாக துறையையும் பிரித்தல்
- **சரத்து (51):** சர்வதேச அமைதி, ஒற்றுமையில் நாட்டம் செலுத்துதல்.

### 3. பல் வகையான நெறிக்கோட்பாடுகள்

- சமநீதி, இலவச சட்ட உதவி, நாடு முழுவதும் அனைவருக்கும் பொதுவான சட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றவை இதில் அடங்கும்.
- **சரத்து (50):** நீதித்துறையையும் நிர்வாக துறையையும் பிரித்தல்
- **சரத்து (51):** சர்வதேச அமைதி, ஒற்றுமையில் நாட்டம் செலுத்துதல்.

### 4. பல் வகையான நெறிக்கோட்பாடுகள்

- சமநீதி, இலவச சட்ட உதவி, நாடு முழுவதும் அனைவருக்கும் பொதுவான சட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றவை இதில் அடங்கும்.

# அடிப்படை கடமைகள்

## அடிப்படை கடமைகள் (சரத்து 51A)

- 1976ஆம் ஆண்டு 42-வது சட்டதிருத்தம் வாயிலாக இந்திய அரசமைப்பில் **புதிதாக பகுதி IV A** சேர்க்கப்பட்டது. இதன் கீழ் **சரத்து 51A** சேர்க்கப்பட்டுள்ளது.

- **சரத்து 51A** இந்திய குடிமக்களுக் -குரிய 11 அடிப்படைக்கடமைகளை எடுத்துரைக்கிறது.

- சுவரண்சிங் தலைமையிலான குழு ஒன்று 1976 ஆம் ஆண்டு அமைக்கப் -பட்டு அடிப்படைக் கடமைகள் அரசியலமைப்பில் இணைக்கப்பட்டன. அரசியமைப்புச் சட்டத்தில் இத்தகைய 10 கடமைகள் இடம் பெற்றுள்ளன.

1. அரசியமைப்புச் சட்டங்களின்படி நடத்தல் மற்றும் தேசீயகீதம், தேசியக் -கொடி தேசியச் சின்னங்களுக்கு மதிப்பு அளித்தல்

2. நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர்களின் உன்னத உணர்வுகளை நினைத்துப் போற்றுதல்

3. நமது நாட்டின் இறையாண்மை ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிக்காத்தல்

4. நமது நாட்டின் இறை பாதுகாப்பிற்காக அக்கறை கொள்ளல் தேவை ஏற்பட்டால் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுதல்

5. சகோதரத்துவத்தையும் நல்லிணக் -கணத்தையும் உருவாக்க முனைதல் வேண்டும்.

6. நம்முடைய பண்பாடு மற்றும் பன்முகப் பாரம்பரிய கலாச்சாரத்தின் மேன்மையை மதித்துப் பாதுகாத்தல் வேண்டும்.

7. காடுகள், ஏரிகள், ஆறுகள், விலங்குகள் போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாத்தலும் தரம் உயர்த்தலும் வேண்டும்.

8. அறிவியல் மனப்பான்மை மனிதநேயம் ஆய்வுமனப்பான்மை ஆகியவற்றை மேம்படுத்துதல்.

9. நாட்டின் பொதுச்சொத்துக்களை அக்கறையுடன் பாதுகாத்தல், வன்முறையைக் கைவிடல்

10. அனைத்துத் துறைகளிலும் மிகச் -சிறந்த நிலையை அடைய முயற்சி செய்தல் நமதுநாடு தொடர்ந்து முன்னேறி உயர்ந்த நிலையை அடையப்பாடுபடுதல்

11. 6-14 வயது உள்ள அனைத்துக் குழந்தைகளுக்குக் கல்வி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித்தருதல். இந்தக் கடமை 2002-ஆம் ஆண்டு 86-வது சட்டத்திருத்தத்தின்படி சேர்க்கப்பட்டது.

**சட்டப்பூர்வமாக்கப்பட்ட சில அடிப்படைக் கடமைகள்:**

1. 1860 - இந்திய தண்டனைச்சட்டம்
2. 1951 - மக்கள் பிரநிதித்துவச்சட்டம்
3. 1955 - குடியுரிமைச்சட்டம்
4. 1972 - வனஉயிரி பாதுகாப்புச்சட்டம்
5. 1980 - வனப்பாதுகாப்புச்சட்டம்

# மனித உரிமைகள் பட்டயம்

## மனித உரிமைகள்

- ஒவ்வொரு மனிதருக்கும் உள்ள தடுக்க முடியாத பிரிக்க இயலாத நியாயமான உரிமைகளே மனித உரிமைகள் ஆகும்.

**மனித உரிமைகளை உள்ளடக்கியவை :**

- வரதட்சனை முறை
- பர்தா முறை
- பாலியல் வன் கொடுமை
- தீண்டாமை
- சமூக பாகுபாடுகள்
- கொத்தடிமை
- குழந்தைத் தொழிலாளர்
- சாதிய மற்றும் மத வன் கொடுமைகள்

**அரசாங்கச் சட்டங்கள்**

- 1829 - சதி ஒழிப்பு திட்டம் : வில்லியம் பெண்டிங் பிரபு &ராஜாராம் மோகன்ராய்
- 1856 - விதவை மறுமண சட்டம்
- 1929 - சாராதா சட்டம்
- 1955 - தீண்டாமை சட்டம்
- 1961 - வரதட்சணை தடுப்பு சட்டம்
- 2001 - உணவுக்கான உரிமை
- 2005 - தகவல் அறியும் உரிமை
- 2006 - வேலைவாய்ப்பு உரிமை
- 2010 - கல்வி உரிமை

**அரசியல் அமைப்புச் சட்டங்கள்**

- அடிப்படை உரிமைகள் - பகுதி III (சரத்துகள் 14 - 32)
- DPSP - பகுதி IV (சரத்துகள் 36 -51)

**ஐ.நா. மனித உரிமை சரத்துகள்**

- சரத்து 1 - சமத்துவ, சுதந்திர உரிமை, சகோதரத்துவத்துடன் செயல்படல்
- சரத்து 2 - இன, மொழி , அரசியல் பாகுபாடின்றி எல்லா உரிமைகளும் உண்டு.
- சரத்து 3 - சுதந்திரமாக பாதுகாப்பாக வாழ உரிமை
- சரத்து 4 - யாரையும் அடிமையாக நடத்தகூடாது
- சரத்து 5 - யாரையும் மனிதாபிமானமற்ற முறையில் தண்டிக்கக்கூடாது.
- சரத்து 6 - சட்டத்தின் முன் தனிநபராக வாழ உரிமை
- ஐ.நா. மனித உரிமை ஆணையம் **1948 முதல் டிசம்பர் 10 யை** மனித உரிமை நாளாக கொண்டாடி வருகிறது.

**தற்போதைய தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைவர் ஹெச்.எல்.தத்து**

**சர்வதேச மனித உரிமை உடன்படிக்கை**
ஐ.நா. பொது சபையால் டிசம்பர் 16, 1966 ஆம் ஆண்டு குடியுரிமை மற்றும் அரசியல் உரிமை உடன்படிக்கை மற்றும் சமூக, பொருளாதார பண்பாட்டு உரிமை உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டது.

## தேசிய மனித உரிமை ஆணையம்

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் அக்டோபர் 12,1993ன் படி தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை பாராளுமன்றம் சட்டம் மூலம் உருவாக்கியது.
- இது ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதி இதன் தலைவராக இருப்பார்.
- ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர், பிரதமரைத் தலைவராகக் கொண்ட 6 பேர் கொண்ட குழுவின் பரிந்துரைப்படி நியமனம் செய்கின்றனர்.
- பதவிக்காலம் **5 ஆண்டுகள் அல்லது 70 வயதுவரை** பதவியில் இருப்பர்.

பதவிக்காலம் முடிந்த பிறகு மத்திய அரசிலோ, மாநில அரசிலோ எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது.

## மாநில மனித உரிமை ஆணையம்

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் அக்டோபர் 12,1993ன் படி தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை பாராளுமன்றம் சட்டம் மூலம் உருவாக்கியது
- தமிழ்நாட்டில் **1997-ஆம் ஆண்டு ஏப்ரல் 17-**ஆம்நாள் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- பதவிக்காலம் **5 ஆண்டுகள் அல்லது 70 வயதுவரை** பதவியில் இருப்பர்.
- பதவிக்காலம் முடிந்த பிறகு மத்திய அரசிலோ, மாநில அரசிலோ எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது.

# மத்திய அரசு

## மத்திய அரசு (சரத்து 52-151)

**பகுதி V - மத்திய அரசு: (சரத்து 52 முதல் 151 வரை) குடியரசுத்தலைவர்**

**சரத்து (52):** இந்திய குடியரசுத் தலைவராக ஒருவர் இருப்பார் என கூறுகிறது. இவரே நாட்டின் தலைவர் ஆவார். குடியரசுத் தலைவர் நாட்டின் பெயரளவில் தலைவராக கருதப்படுவார். இவரே இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். 53வது அரசியலமைப்புச் சட்டத்தின் படி மத்திய அரசங்கத்தின் அதிகாரங்கள் அனைத்தும் குடியரசுத் தலைவரிடமே உள்ளது.

**குடியரசுத் தலைவருக்கான தகுதிகள் (சரத்து 58):**

- ❖ இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- ❖ 35 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும்
- ❖ மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதி உடைய -வராக இருக்கவேண்டும். ஆதாயம் தரும் அரசு பதவி வகிக்கக் கூடாது
- ❖ மனநிலை பாதிக்கப்பட்டவராகவோ, திவாலானவராகவோ இருக்கக் கூடாது.
- ❖ குறைந்தபட்சம் 50 வாக்காளர்களால் முன்மொழியவும், 50 வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.பாதுகாப்பு வைப்பு நிதியாக ரூபாய். 25,000 கட்ட வேண்டும்.

**குடியரசுத் தலைவர் தேர்தல்: சரத்து (54)**

- ❖ சரத்து 52 இந்தியாவிற்கு ஒரு குடியரசுத் தலைவர் இருக்க வேண்டும் என உரைக்கிறது.
- ❖ குடியரசுத் தலைவர் தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துகிறது.
- ❖ குடியரசுத் தலைவர் தேர்தலில் மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டப் பேரவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும் வாக்களிப்பார்கள்.
- ❖ குடியரசுத் தலைவர் தேர்தல் விகிதாச்சார முறையில் ஒற்றை மாற்று வாக்கு, இரகசிய சீட்டு மூலமாக நடைபெறும். குடியரசுத் தலைவர் தேர்தல் தகராறுகளை உச்சநீதிமன்றம் தலையிட்டு தீர்த்து வைக்கும்
- ❖ ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படலாம்.

**கொத்தடிமை முறையை ஒழித்தவர் - இந்திராகாந்தி**

- குடியரசுத் தலைவர் வருமானம் ரூ. 1,50,000
- 2008ஆம் ஆண்டு நாடாளுமன்றம் குடியரசுத்தலைவரின் சம்பளத்தை 50% உயர்த்தியது

**பதவி விலகல்: சரத்து (61)**

- பதவிக்காலம் முடியும் முன்னரே குற்ற விசாரணை மூலமாக இவரை பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்றத்தினால் முடியும் **(சரத்து 61)**
- குடியரசுத் தலைவர் தனது ராஜினாமா கடிதத்தை துணை குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும்.
- துணை குடியரசுத்தலைவர் மக்களவைத் தலைவருக்கு உடனடியாக குடியரசுத் தலைவர் ராஜினமாவை பற்றி அறிவிப்பர்.

**குடியரசுத் தலைவரின் பதவிபிரமாணம்**

**பதவிக்காலம்:**

- **குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.**

**பதவிப்பிரமாணம்:**

- குடியரசுத் தலைவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி. அவர் இல்லையெனில் உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி.

**குடியரசுத் தலைவரின் பதவி நீக்கம்**

- **சரத்து (61) :** குற்றவிசாரணை மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும் பொழுது பதவிநீக்கம் செய்யலாம்.
- குடியரசுத் தலைவரை பதவிநீக்க 14 நாட்கள் முன்னதாக அறிவிப்பு அனுப்ப வேண்டும்.
- நாடாளுமன்றத்தின் ஏதேனும் ஒரு அவையில், மொத்த உறுப்பினர்களில் ¼பங்கு உறுப்பினர் கையெழுத்துடன் தீர்மானம் கொண்டு வந்து,**2/3** பங்கு ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அடுத்த அவையில் விசாரணை நடைபெறும். விசாரணையின்போது அவர் அவையில் நேரில் விளக்கம் அளிக்கலாம்.
- விசாரணைக்குப் பின் அந்த அவையின் **2/3 பங்கு உறுப்பினர்** ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் குடியரசுத் தலைவர் பதவி இழப்பார்.

**குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1. நிர்வாக அதிகாரம்
2. சட்டமன்ற அதிகாரம்
3. நிதி அதிகாரம்
4. நீதி அதிகாரம்

5. இராஜாங்க அதிகாரம்
6. இராணுவ அதிகாரம்
7. நெருக்கடி நிலை அதிகாரம்

**நிர்வாக அதிகாரங்கள்**

- அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்வாக செயல்களும் இவரது பெயரிலேயே மேற்கொள்ளப்படுகிறது.
- இவரது பெயரில் வழங்கப்படும் உத்தரவுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விதிகள் வகுக்கலாம்.
- மத்திய அரசாங்கத்தின் எளிதான நடைமுறைக்கு விதிகள் வகுக்க முடியும் மற்றும் அமைச்சர்களுக்கு தனது வேலைகளை ஒதுக்கீடு செய்யலாம்.
- இவர் பிரதமர் மற்றும் அமைச்சர்களை நியமிக்கிறார். அவர்கள், இவரின் விருப்பத்தின் பேரில் பதவியில் இருக்கின்றார்.
- இந்திய தலைமை வழக்கறிஞர் நியமனம் செய்கிறார். அவருடைய சம்பளம் மற்றும் இதர படிகளையும் முடிவு செய்கிறார். இவர் குடியரசுத் தலைவர் விருப்பத்தின் பெரிய விருப்பத்தின் பதவி வகிப்பார்.
- இந்திய தலைமை கணக்குத் தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டாளர், தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் ஆணையர்கள், மத்திய பணியாளர் தேர்வாணைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநில ஆளுநர்கள், நீதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரை நியமிக்கிறார்.
- பிரதமரிடம் மத்திய அரசின் நிர்வாக விவகாரங்களையும் சட்டமன்ற அறிக்கைகளையும் பற்றிய தகவல்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
- தாழ்த்தப்பட்ட பழங்குடியின் மற்றும் பின்தங்கிய பிரிவுகளுக்காக குழுவை அமைத்து அவர்களின் நிலைகளை ஆராயும்படி கேட்டுக் கொள்ளலாம்.
- இவர் மத்திய-மாநில உறவை வளர்க்கவும் ஒத்துழைப்பைப் பெருக்கவும் குழுவை அமைக்கலாம்.
- யூனியன் பிரதேசங்களில் நிர்வாகத் -தினை நேரடியாக நடத்தலாம். இவர் நிர்வாகிகளையும் நியமிக்கிறார். அவர்கள் ஆளுநர் அல்லது ஆணையாளர் ஆவர்.
- எந்த பகுதியையும் அட்டவணைப் -படுத்தப்பட்ட பகுதியாகவும் பழங்குடியின் பகுதியாகவும் அறிவிக்கலாம்.

**சட்டமன்ற அதிகாரம்:**

- குடியரசுத் தலைவர் என்பவர் நாடாளுமன்றத்தில் அதிகமாக

இருக்கிறார். இவருக்கு கீழ்கண்ட அதிகாரங்கள் உள்ளன.

1. நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் கூட்டவும் அல்லது ஒத்திவைக்கவும் மற்றும் மக்களவையை கலைக்கவும் இவரால் இயலும். மேலும் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தினை இவர் சுட்டுகிறார். மக்களவை சபாநாயகர் அதனை வழி நடத்துகிறார்.
2. நாடாளுமன்ற பொதுத்தேர்தல் முடிந்து முதல் கூட்டத்தின் முதல் நாளிலும், வருடத்தில் முதல் கூட்டத்தின் முதல் நாளிலும் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.
3. மசோதா நாடாளுமன்றத்தில் நிலுவையில் இருக்கும் பட்சத்தில் தனது தகவலை இரண்டு அவைகளுக்கும் தெரிவிக்கலாம்.
4. மக்களவை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் இடம் காலியாக இருக்கும் பட்சத்தில் அமைப்பின் ஏதேனும் ஒரு உறுப்பினர் அவையை வழி நடத்துபவர் கேட்டுக் கொள்ளலாம். அதேபோல் மாநிலங்களையின் தலைவர் மற்றும் அவைத்தலைவர் இடம் காலியாக இருக்கும் போது அவையின் ஏதேனும் ஒரு உறுப்பினரை அமையவும் வழிநடத்துபவர் கேட்டுக் கொள்ளலாம்.
5. இவர் 12 உறுப்பினர்களை மாநிலங்களவையில் நியமனம் செய்கிறார். அவர்கள் இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளின் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
6. 2 ஆங்கிலோ இந்தியன் உறுப்பினர்களாக மக்களவையில் நியமனம் செய்கிறார்.
7. தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்துப் பின் நாடாளுமன்ற உறுப்பினரின் தகுதியிழப்பை முடிவு செய்கிறார்.
8. நாடாளுமன்றத்தில் சிலவகையான மசோதாக்களை தாக்கல் செய்வதற்கு இவரது முன் அனுமதி தேவை. (எ.கா) இந்தியாவின் தொகுப்புத் திரள் நிதியிலிருந்து செலவு செய்தல். புதிய மாநிலங்கள் உருவாக்குதல்.
9. நாடாளுமன்றத்தில் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற ஒரு மசோதா இவரிடம் வந்தால்
   - அம்மசோதாவிற்கு சம்மதம் தெரிவிக்கலாம்
   - அம்மசோதாவினை சம்மதம் தெரிவிப்பதை நிறுத்திவைக்கலாம்.
   - நாடாளுமன்றத்திற்கே மறுபரி -சீலனைக்காக திருப்பி அனுப்பலாம் (பணமசோதாவாக இல்லாத பட்சத்தில்)

- இங்கு நாடாளுமன்றம் மீண்டும் குடியரசுத் தலைவருக்கு சம்மதம் பெற அனுப்பினால் அதற்கு அவர் கட்டாயம் சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

10. மாநில ஆளுநரால், மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்பப்படுமாயின் குடியரசுத் தலைவர் அதற்கு
    - அனுமதி வழங்கலாம்
    - அனுமதி வழங்குவதனை நிறுத்திவைக்கலாம்.
    - மாநில சட்டப்பேரவைக்கு மறுசீலனைக்காக மாநில ஆளுநர் திருப்பி அனுப்பும்படி வழி காட்டலாம்.

- ❖ இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று மாநில சட்டசபை மீண்டும் அரசு மசோதாக்களை நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு குடியரசுத் தலைவர் அனுமதி வழங்க வேண்டும் என்று கட்டாயம் கிடையாது. மீண்டும் மறுபரிசீலனைக்கு அனுப்பலாம்.
- ❖ நாடாளுமன்றம் கூட்டம் இல்லாத நேரத்தில் அவசரச்சட்டம் இயற்றலாம். அந்த அவசரச்சட்டம் நாடாளுமன்றம் தொடங்கியதில் இருந்து ஆறு வாரத்துக்குள் ஒப்புதல் பெற வேண்டும். இந்த அவசர சட்டத்தினை எந்த நேரத்திலும் திரும்பப் பெறுவர்.
- ❖ இந்திய கணக்கு தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டாளர், மத்திய பணியாளர் தேவைகளையும், நிதி ஆணையம் போன்றவைகளின் அறிக்கைகளை நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிப்பார்.
- ❖ அமைதி, வளர்ச்சி மற்றும் நவீன அரசு ஆகியவைகள் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், லட்சத்தீவு, தாத்ரா மற்றும் நாகர்ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஆகிய பகுதிகளில் வர ஒழுங்குமுறைகளை உருவாக்கலாம். இதேபோல் புதுச்சேரியிலும் உருவாக்கலாம். ஆனால் அப்போது சட்டசபை கலைந்து இருந்தால் மட்டும்.

**நிதி அதிகாரம்**

- ❖ பண மசோதா இவருடைய ஒப்புதலை பெற்ற பின்பு தான் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- ❖ மத்திய நிதியை அறிக்கையை நாடாளு -மன்றத்தின் முன் சமர்பிக்கிறார்.
- ❖ இவருடைய ஒப்புதல் இல்லாமை எந்த மாநில கோரிக்கையும் எழுப்ப முடியாது.
- ❖ தவிர்க்க முடியாத அல்லது எதிர்பாராத செலவுக்காக எதிர்பாரா செலவு நிதியத்தில் பணம் இவரின் பெயரில் வைக்கப்படுகிறது.

❖ நிதி ஆணையத்தை ஐந்து வருடத்திற்கு ஒருமுறை அமைக்கிறார். மத்திய மாநில அரசுகளுக்கிடையே வருவாய் பகிர்வு பற்றிய அறிக்கை சமர்பிக்கிறார்.

**நீதி அதிகாரம்**

❖ உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை நியமிக்கிறார்.
❖ சட்டத்தில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் உச்ச நீதிமன்றத்தில் ஆலோசனை கேட்கலாம். ஆனால் அந்த ஆலோசனை குடியரசுத் தலைவரை கட்டுப்படுத்தாது.
❖ இவர் குற்றவாளியை மன்னிக்கலாம், தண்டனை மாற்றம் செய்யலாம். தண்டனை குறைப்பு செய்யலாம். தண்டனை வழங்குவதை தாமதிக்கலாம் அல்லது ஒத்திவைக்கலாம் மற்றும் தண்டனையை நிறுத்திவைக்கலாம்.

**கீழ்க்கண்டவற்றில் குற்றம் சாட்டப்பட்டர்வளுக்கு இது பொருந்தும்:**

1. இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்.
2. மத்திய அரசின் சட்டத்தினால் தண்டிக்கப்பட்டவர்
3. மரண தண்டனை பெற்றவர்.

**இராஜாங்க அதிகாரம்**

வெளிநாட்டு ஒப்பந்தங்கள் குடியரசுத் தலைவரின் சார்பாக கையெழுத்தாகிறது. இருப்பினும் அவை நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியம் உள்ள விவகாரங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் இந்தியாவின் பிரதிநிதியாக செயல்படுகிறார். தூதர்களையும், உயர்ஆணையர்களையும் நியமிக்கிறார்.

**இராணுவ அதிகாரம்**

இந்தியாவின் பாதுகாப்பு படைகளின் தலைவர் ஆவார். இவர் கப்பற்படை, விமானப்படை மற்றும் போர்ப்படைத் தளபதிகளை நியமிக்கிறார். நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் போரை அறிவிக்கவும் போரை நிறுத்தவும் செய்கிறார்.

**நெருக்கடிநிலை அதிகாரங்கள்**

- இதுவரையில் குடியரசுத் தலைவரின் பொதுவான அதிகாரங்களை பார்த்தோம். இது அவருடைய சிறப்பு அதிகாரமாகும். அரசியலமைப்புச் சட்டம் அபரிமிதமான அதிகாரத்தினை வழங்கியுள்ளது.

1. தேசிய நெருக்கடி நிலை (சரத்து 352)
2. குடியரசுத் தலைவர் ஆட்சி (சரத்து 356 மற்றும் 365)
3. நிதி நெருக்கடி (சரத்து 360)

**குடியரசுத் தலைவரின் வீட்டோ (ரத்து) செய்யும் அதிகாரம்**

நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கையொப்பம் பின்னர்தான் அது சட்டமாகிறது. அவ்வாறு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பும் பொழுது அவருக்கு மூன்று மாற்று வழிமுறைகள் உள்ளன. (அரசியலமைப்பின்படி சரத்து 111ன் கீழ்)

1. அனுமதி அளிக்கலாம்
2. நிறுத்தி வைக்கலாம்
3. பண மசோதாவாக இல்லாத பட்சத்தில் மறுபரிசீலனை செய்யுமாறு நாடாளுமன்றத்திற்கு திருப்பி அனுப்பலாம்.

- இருப்பினும், அவ்வாறு மறுபரிசீலனை செய்ய திருப்பி அனுப்பும்போது, நாடாளுமன்றம் அந்த மசோதாக்களின் மாறுதல் செய்தோ, செய்யாமலோ ஒப்புதலுக்கு அனுப்பினால் அதற்கு ஒப்புதல் வழங்கியாக வேண்டும்.
- மசோதா நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படலாம், பின்பும் அதை ரத்து செய்ய குடியரசுத்தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. நாடாளுமன்றத்தால் அவசர அவசரமாகவும் சரியான முறையில் விவாதம் நடந்தாலும் நிறைவேற்றப் -பட்ட சட்டத்தினை தடுத்தல்
2. அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக இருக்கும் சட்டத்தினை தடுத்தல்.

**நான்கு விதமாக ரத்து அதிகாரம் வகைப்படுத்தப்பட்டுள்ளது.**

1. முழுமையான ரத்து: நாடாளுமன்றத் -தால் நிறைவேற்றப்பட்ட மசோதா -விற்கு அனுமதி அளிப்பதை நிறுத்திவைத்தல்.
2. வரையறுக்கப்பட்ட ரத்து: நாடாளு -மன்றத்தில் அதிகபட்சபெரும்பான்மை பெறுவதன் மூலம் ரத்து செய்யக் -கூடியது.
3. தற்காலிக ரத்து: நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை பெறுவதன் மூலம் ரத்து செய்யக்கூடியது.
4. தாமதப்படும் ரத்து: நாடாளுமன்றத் -தால் நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காது இருத்தல்

மேற்கண்ட நான்கில் இந்திய குடியரசுத் தலைவர் மூன்று மட்டுமே பெற்றுள்ளார். இதில் வரையறுக்கப்பட்ட ரத்து இந்திய குடியரசுத் தலைவருக்குக் கிடையாது. ஆனால் இது அமெரிக்க குடியரசுத் தலைவருக்கு உண்டு. மீதம்

மூன்று ரத்து அதிகாரங்களும் கீழ் வருமாறு:

### முழுமையான ரத்து அதிகாரம்

நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்திவைத்தலை இது குறிப்பிடுகின்றது. இந்த மசோதா சட்டமாகாமலேயே முடிவு பெறும். பொதுவாக இரண்டு தருணங்களில் இவ்வாறு செய்யப்படும்.

1. தனிநபர் மசோதாவாக இருந்தால் (அமைச்சர் அல்லாத ஏதேனும் நாடாளுமன்ற உறுப்பினர்).
2. மத்திய அமைச்சரவை இராஜினாமா செய்யும் நேரத்தில் உள்ள அரசாங்க மசோதாக்களால் இருந்தால் புதிய அமைச்சரவை, குடியரசுத் தலைவர் அந்த மசோதாக்களில் ஒப்புதல் அளிக்க வேண்டாம் என்று ஆலோசனை வழங்கும்.

### தற்காலிக ரத்து அதிகாரம்

- நாடாளுமன்றத்திற்கு மசோதாவை திருப்பி அனுப்பி மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளுதல். இருப்பினும் நாடாளுமன்றம் அந்த மசோதாவில் ஏதேனும் மாற்றம் செய்தாலோ அல்லது செய்யாமலோ மீண்டும் குயடிரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பினால் அதற்கு கட்டாயம் ஒப்புதல் தந்தே ஆகவேண்டும். இங்கு குடியரசுத் தலைவரின் ரத்து அதிகாரம் நாடாளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையால் ரத்து செய்யப்படுகிறது.
- இதில் பண மசோதாவில் குடியரசுத்தலைவர் இந்த ரத்து அதிகாரத்தினை பயன்படுத்த முடியாது. பண மசோதாவைப் பொறுத்த வரையில் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்காமலேயே வைத்துக் கொள்ளலாம் அல்லது ஒப்புதல் அளிக்க வேண்டும். திருப்பி மறுபரிசீலனைக்கு அனுப்ப முடியாது. காரணம் இவருடைய ஒப்புதலினால் தான் இம்மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

### தாமதப்படுத்தும் அதிகாரம்

- குடியரசுத் தலைவர் மசோதாவை ரத்தும் செய்யாமல் மறுபரிசீலனைக்கு திருப்பியும் அனுப்பாமல் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இதற்கு காலக்கெடு ஏதும் நிர்ணயிக்கவில்லை. அமெரிக்காவில் இவ்வகை ரத்து அதிகாரத்திற்கு குடியரசுத் தலைவர் 10 நாட்களுக்குள் மறுபரிசீலனைக்கு அனுப்ப வேண்டும்.

- இந்த தாமதப்படுத்தும் ரத்து அதிகாரத்தில் அமெரிக்க குடியரசுத் தலைவரை விட இந்திய குடியரசுத் தலைவருக்கு மிகுந்த அதிகாரம் உண்டு.

**மாநில சட்டப்பேரவையின் மீது குடியரசுத் தலைவரின் ரத்து அதிகாரம்:**

- மாநில சட்டப்பேரவை இயற்றும் சட்டங்களின் மீதும் குடியரசுத் தலைவருக்கு ரத்து அதிகாரம் உள்ளது. ஒரு மசோதா மாநில சட்டசபையினால் நிறைவேற்றப்பட்ட பின்பு ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் ஆகியோரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அது சட்டமாகிறது.
- மாநில சட்டசபையில் நிறைவேற்றப் -பட்ட மசோதா ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பின்பு சட்டமாகிறது. இங்கு சரத்து 200 ன்படி ஆளுநருக்கு நான்கு மாற்று அதிகாரங்கள் உள்ளன.
  - ஒப்புதல் அளிக்கலாம்.
  - ஒப்புதல் வழங்குவதை நிறுத்தி வைக்கலாம்.
  - பண மசோதாவாக இல்லாமல் இருந்தால் மறுபரிசீலனைக்கு திருப்பி அனுப்பலாம்.
  - குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம்.

1. அவசரச் சட்டம் இயற்றும் பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அமர்வில் இருத்தல் வேண்டும். அவசரச் சட்டம் ஏதேனும் ஒரு அவை அமர்வில் இருந்தாலும் குடியரசுத்தலைவரால் இயற்ற முடியும். ஏனெனில் இரண்டு அவைகளில் நிறைவேற்றினால் மட்டுமே அது சட்டமாகும். இரண்டு அவைகளும் அமர்வில் இருக்கும்போது அவசரச் சட்டம் இயற்றினால் அது செல்லாதாகிவிடும்.

2. தற்போதைய சூழ்நிலை உடனடியாக அவசரச் சட்டம் இயற்ற வேண்டிய சூழ்நிலை என்று குடியரசுத்தலைவர் மனநிறைவு கொள்ள வேண்டும். கூப்பர் வழக்கில் (1970) உச்ச நீதிமன்றம் குடியரசுத் தலைவர் மனநிறைவு என்பதனை நீதிமன்றம் கேள்வி எழுப்ப முடியும் என்றது. காரணம் குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் இயற்ற வேண்டும் என்பதற்காகவே நாடாளுமன்றக் கூட்டத் தொடரினை முடிவுக்கு கொண்டு வந்தால் அது நாடாளுமன்ற நடைமுறைகளை மீறிய செயலாகும் என்றது. 1975 ல் 38 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் குடியரசுத்தலைவரின் மனநிறைவு **இறுதியானது** மற்றும் அதனை

நீதிமன்ற மறு ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் 1978-ல் 44-வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தில் இது ரத்து செய்யப்பட்டது. இப்பொழுது குடியரசுத் தலைவரின் மனநிறைவு என்பது நீதிமன்ற மறு ஆய்வுக்கு உட்பட்டதாகும்.

3. இவருடைய அவசரச்சட்டம் இயற்றும் அதிகாரம், நாடாளுமன்றத்தின் **சட்டமியற்றும்** அதிகாரத்தினை ஏற்றது. ஆனால் இரண்டு நிபந்தனைகள் உண்டு.
   - அவசர சட்டம் என்பது நாடாளுமன்றத்தால் சட்டமியற்றும் பிரிவுகளுக்குள் இருக்க வேண்டும்.
   - அவசரச் சட்டத்திற்கு சில அரசியலமைப்பு வரையறைகள் உள்ளது. அவசரச் சட்டத்தால் அடிப்படை உரிமைகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படக் கூடாது.

❖ அனைத்து அவசரச் சட்டங்களுமே நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடப்பில் இல்லாத பொழுது கொண்டுவரப்படுகிறது.

❖ கூட்டத்தொடர் ஆரம்பித்தவுடன் நாடாளுமன்றம் முன் அவசரச் சட்டம் சமர்பிக்கப்படும். நாடாளுமன்றம் இதை சம்மதித்தால் அது சட்டமாகும். ஒருவேளை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஆறுவாரங்களில் இது காலாவதியாகிவிடும். இங்கு ஆறு வாரங்கள் என்பது இரு அவைகளும் கூடிய தேதி ஆகும். இரண்டாவது அவை தாமதமாக தொடங்கினாலும் அத்தேதியையே கணக்கில் கொள்ளப்படுகிறது. நாடாளுமன்றம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தீர்மானம் கொண்டு வந்தால், இது காலாவதியாகும். ஒரு அவசரச் சட்டத்தின் அதிக பட்ச செயல்நாட்கள் ஆறு மாதமும், ஆறு வாரங்களும் ஆகும். ஆறுமாதங்கள் என்பது இரண்டு கூட்டத்தொடருக்கு இடையே உள்ள இடைவெளி.

❖ குடியரசுத் தலைவர் எந்த நேரத்திலும் அவசரச் சட்டத்தினை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அவசரச் சட்டம் இயற்றும் அதிகாரம் குடியரசுத் தலைவரின் எதேச்சதிகாரம் கிடையாது. அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைப்படி செயல்படுகிறார்.

❖ மற்ற சட்டங்களைப் போன்று பின்தேதியிட்ட சட்டமாக செல்லக் கூடியது. நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களை திருத்தம் செய்யலாம். வரி சம்மபந்தமான சட்டங்களை கொண்டு வரலாம். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் கொண்டு வரமுடியாது.

❖ இத்தகைய அவசரச் சட்டமியற்றும் அதிகாரம் இங்கிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ இல்லை. இதில் அவசரச் சட்டம் இயற்றும் அதிகாரத்திற்கும் நெருக்கடி நிலை பிரகடத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

❖ இதுநாள் வரையில் அவசர சட்டத்தினை மீண்டும் மீண்டும் இயற்றியதற்கு எந்த வழக்கும் உச்சநீதிமன்றத்திடம் வரவில்லை.

❖ இருப்பினும் வத்வா வழக்கில் (1987) நீதிமன்றம் கூறியதாவது" அவசரச் சட்டத்தில் எவ்வித திருத்தமும் இல்லாமல் மீண்டும் மீண்டும் இயற்றி சட்டசபையில் நிறைவேற்றாமல் இருப்பின், அது அரசியலமைப்புச் சட்டத்தினை மீறியதாகும்.

**குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரம்:**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சரத்து 72 குடியரசுத் தலைவருக்கு மன்னிக்கும் அதிகாரத் -தினை வழங்கியுள்ளது.

1. மத்திய சட்டத்தினால் தண்டனை பெற்றவரின் குற்றம்.
2. இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப் பெற்றவரின் குற்றம்.
3. மரண தண்டனை பெற்றவரின் குற்றம்

❖ குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரம் என்பது நிர்வாக அதிகாரம் இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழங்குத் தொடர முடியாது. இந்த அதிகாரத்தின் நோக்கம் இரண்டாகும்.

- நீதிமன்ற தவறுகளைச் சரிசெய்தல்
- கடுமையான தண்டனைகளிலிருந்து விலக்கு அளித்தல்.

**1. மன்னித்தல்**

தண்டனைகளையும் குற்றங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு மன்னித்தல்

**2. தண்டனை மாற்றம்**

மிகக்கடுமையான தண்டணையிலிருந்து எளிமையான தண்டனைக்கு மாற்றுதல் எ.கா. மரண தண்டனையிலிருந்து கடுங்காவல் தண்டனையாக குறைத்து மாற்றுதல்

**3. தாமதித்தல் அல்லது ஒத்திவைத்தல்**

❖ குற்றவாளியின் உடல் நலம் குறைவு அல்லது பெண் குற்றவாளியின் கர்ப்பம் போன்ற காரணங்களால் தண்டனையை தற்பொழுது அளிக்காமல் சில காலம் தாமதித்தல் அல்லது ஒத்திவைத்தல்

**4. நிறுத்திவைத்தல்**

❖ தண்டனை நிறைவேற்றுவதை (குறிப்பாக மரண தண்டனையை) தற்காலிகமாக நிறுத்திவைத்தல். இது

குற்றவாளி குடியரசுத் தலைவரிடம் மன்னித்தல் அல்லது தண்டனை மாற்றம் கோர வசதியாக அமையும்.

- ❖ இதேபோல் அரசியலமைப்புச் சட்டம் சரத்து 161 ல் ஆளுநர் மாநில சட்டங்களினால் தண்டிக்கபெற்ற ஒரு குற்றவாளியை மன்னிக்கலாம். தண்டனை மாற்றம் செய்யலாம், தண்டனை குறைப்பு செய்யலாம். தாமதித்தால் அல்லது ஒத்திவைக்கலாம் மற்றும் நிறுத்திவைக்கலாம்.
- ❖ இதனால் ஆளுநரின் மன்னிக்கும் அதிகாரமானது குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரத்திலிருந்து வேறுபடுகிறது.

- இராணுவ நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற குற்றவாளியை குடியரசுத் தலைவரால் மட்டுமே மன்னிக்க முடியும். ஆளுநரால் மன்னிக்க முடியாது.
- குயடிரசுத் தலைவர் மரணதண்டனை கைதியை மன்னிக்கலாம். ஆனால் ஆளுநரால் அது முடியாது ஆனால் ஆளுநர் மரணதண்டனை கைதியின் தண்டனையை குறைக்கலாம் அல்லது மாற்றலாம்.

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் குடியரசுத்தலைவரின் நிலை**

- ❖ இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு நாடாளுமன்ற முறையிலான அரசாங்கத்தை வழங்கியுள்ளது. இதில் குடியரசுத் தலைவர் என்பவர் பெயரளவையிலான நிர்வாகத் தலைவராவார். உண்மையான நிர்வாகத் தலைவர் என்பது பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவாகும். இங்கு குடியரசுத் தலைவர் அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைபடியே தனது அதிகாரத்தினை செய்கிறார்.
- ❖ சரத்து 53, 74 மற்றும் 75 ஆகியவை குடியரசுத் தலைவரின் நிலையை தெளிவாக வகுத்துள்ளது.

- சரத்து 53 ன்படி மத்திய நிர்வாக அதிகாரம் அனைத்தும் குடியரசுத் தலைவரிடம் உள்ளது. அவர் அதனை நேரடியாகவோ அல்லது அதிகாரிகள் வழியாகவோ செயல்படுத்தலாம்.
- சரத்து 74 ன்படி பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவின் ஆலோசனை மற்றும் உதவியின்படி குடியரசுத் தலைவர் செயல்படவேண்டும்.
- சரத்து 75ன்படி அமைச்சர்கள் குழு மக்களவைக்கும் பொறுப்பானவர்கள் ஆவர். இது நாடாளுமன்ற முறையிலான அரசாங்கத்திற்கு அடித்தளமாகும்.

- ❖ 1976ல் 42வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் குடியரசுத் தலைவர் பிரதமர் தலைமையிலான

அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைபடியே நடக்க வேண்டும் என்று சேர்க்கப்பட்டது. 1978ல் 44வது அரசியலமைப்புச் சட்டத்தின் குடியரசுத் தலைவர் அமைச்சர்கள் குழுவின் முடிவை மறுபரிசீலனை செய்ய பரிந்துரைக்கலாம் என்று சேர்க்கப்பட்டது. ஆனால் மீண்டும் அமைச்சர்கள் குழு அனுப்பினால் அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

❖ குடியரசுத் தலைவருக்கு அரசியலமைப்பு ரீதியாக எதேச்சியதிகாரம் கிடையாது. ஆனால் சூழ்நிலை ரீதியாக எதேச்ச அதிகாரம் உண்டு. அவையாவன,

- மக்களவையில் பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் பிரதமரை நியமித்தல் அல்லது பிரதமர் பதவியில் இருக்கும் பொழுது இறந்தால் புதிய பிரதமரை தேர்ந்தெடுத்து நியமித்தல்
- மக்களவையில் அமைச்சர்கள் குழு நம்பிக்கைப் பெறவில்லை என்றால் ஆட்சியை விட்டு நீக்குதல்
- மக்களவையில் பெரும்பான்மையை அமைச்சர்கள் குழு இழந்தால் அவையைக் கலைத்தல்.

**இந்திய குடியரசுத் தலைவர்கள்:**

| 1. டாக்டர் இராஜேந்திர பிரசாத் | 1950 - 1962 | அதிக நாட்கள் இருந்தவர் |
|---|---|---|
| **2. டாக்டர் இராதா கிருஷ்ணன்** | 1962 - 1967 | |
| **3. டாக்டர் ஜாகீர் ஹுசைன்** | 1967 - 1969 | குறைந்த நாட்கள் இருந்தவர், முதல் முஸ்லீம் குடியரசுத் தலைவர் முதல் பொறுப்பு குடியரசுதலைவர் |
| **4. வி.வி. கிரி** | மே 1969 - ஜுலை 1969 | |
| **5. ஜஸ்டிஸ் முகம்மது இதயதுல்லா (பொறுப்பு)** | ஜுலை 1969 - ஆகஸ்டு 1969 | அலுவலகத்தில் இறந்தவர் |
| **6. வி.வி. கிரி** | 1969 - 1974 | எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கபட்டவர், |
| **7. பக்ருதீன் அலி அகமது** | 1974 - 1977 | குறைந்த வயதில் ஆனவர் |
| **8. பி.டி. ஜாட்டி (பொறுப்பு)** | மே 1977 - ஜுலை 1977 | முதல் சீக்கியர் வயதானவர் |

| | | |
|---|---|---|
| 9. நீலம் சஞ்சீவ ரெட்டி | 1977 - 1982 | |
| 10. கியானி ஜெயில் சிங் | 1982 - 1987 | |
| 11. ஆர். வெங்கட்ராமன் | 1987 - 1992 | |
| 12. டாக்டர் சங்கர் தயாள் சர்மா | 1992 - 1997 | |
| 13. கே. ஆர். நாராயணன் | 1997 - 2002 | |
| 14. டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் | 2002 - 2007 | |
| 15. பிரதீபா தேவி சிங் பாட்டீல் | 2007 - 2012 | முதல் அறிவியல் அறிஞர் முதல் பெண் குடியரசு தலைவர் |
| 16.பிரணாப் முகர்ஜி | 2012 - தற்போது வரை | |

**துணை குடியரசுத் தலைவர்**

- **சரத்து (63):** இந்திய துணை குடியரசுத் தலைவர் ஒருவர் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.
- **சரத்து (64):** துணை குடியரசுத் தலைவர் மாநிலங்களவையின் தலைவராக இருக்க வேண்டும்.

**துணைக்குடியரசு தலைவராவதற்கான தகுதிகள்:**

பின்வரும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்

1. இந்திய குடிமகனாக, குடிமகளாக இருத்தல் வேண்டும்.
2. 35 வயது பூர்த்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
3. இராஜ்யசபாவில் உறுப்பினராவதற்-குரிய தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.
4. மத்திய மற்றும் மாநில அரசின் கீழ் ஊதியம் பெறும் பதவியில் இருக்கக் கூடாது.
5. சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

**குடியரசுத் துணைத்தலைவரின் உறுதிமொழி**

குடியரசுத் தலைவரோ அல்லது குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஒருவரோ இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். தனது உறுதிமொழியில் அரசியலமைப்பு சட்டத்திற்கு உண்மையாகவும் அதனை பின்பற்றி நடப்பதாகவும், தன் அலுவலகத்திற்கு உண்மையாகவும் இருப்பதாகவும் உறுதி கூறுகிறார்.

| இந்திய துணைக் குடியரசுத்தலைவர்கள் | |
|---|---|
| 1. டாக்டர் இராதா கிருஷ்ணன் | 1952 - 1962 |
| 2. டாக்டர் ஜாகீர் ஹுசைன் | 1962 - 1967 |
| 3. வி.வி. கிரி | 1967 - 1969 |
| 4. ஜி.எஸ். பதக் | 1969 - 1974 |
| 5. பி.டி. ஜாட்டி | 1974 - 1979 |
| 6. முகமது இதயதுல்லா | 1979 - 1984 |
| 7. ஆர். வெங்கட்ராமன் | 1984 - 1987 |
| 8. சங்கர் தயாள் சர்மா | 1987 - 1992 |
| 9. கே. ஆர். நாராயணன் | 1992 - 1997 |
| 10. கிருஷ்ண காந்த் | 1997 - 2002 |
| 11. பைரோவன்சிங் செகாவத் | 2002 - 2007 |
| 12. முகமது ஹமீது அன்சாரி | 2007 - இன்று வரை |

## அலுவலகத்தின் வரையறைகள்

அரசியலமைப்புச் சட்டத்தின்படி துணை குடியரசுத் தலைவர் இரண்டாவது உயர்ந்த இடத்தை பெறுகிறார். இதன்படி,

1. நாடாளுமன்றத்திலோ மாநில சட்ட-மன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது
2. வேறு எங்கும் அரசு ஆதாயம் தரும் பணியில் இருக்கக் கூடாது

- குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். மேலும் மறு தேர்தலுக்கும் போட்டியிடலாம். இவர் தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசு தலைவரிடம் கொடுத்த பின்னரே பதவி விலக இயலும் (இவர் விருப்பப்படின்)
- மாநிலங்களவையில் தீர்மானம் இயற்றி அதன் மூலம் இவரை பதவி நீக்கம் செய்யலாம். ஆனால் இத்தீர்மானத்-திற்கு பெரும்பான்மையான ஆதரவு இராஜ்யசபாவில் அளிக்கப்பட வேண்டும். பிறகு மக்களவைக்கும் அனுப்பப்படும்.

### துணைக் குடியரசுத் தலைவர்

1. மாநிலங்களவையின் முன்னாள் உத்தியோகத் தலைவராகச் செயல்படுகிறார். மக்களவை சபாநாயகராகச் செயல்படுகிறார்.
2. மாநிலங்களவை கூட்டத் தலைவரா-கவோ (அல்லது) மக்களவை சபாநாயகராகவோ செயல்படுவ-தில்லை.
3. அரசியலமைப்பு வழங்கப்பட்ட வழிகளின் கீழ் நீக்கப்பட முடியும்.

## பிரதமர்

- பிரதம அமைச்சர் அரசாங்கத்தின் உண்மையான தலைவர். அவர்தான் நிர்வாகத்துறையின் தலைவராவார்.
- இவர் திட்டக்குழுவிற்கும், தேசிய வளர்ச்சிக் குழுவிற்கும் தலைவராக விளங்குகிறார்.
- **சரத்து (75):** இந்திய குடியரசுத் தலைவர் இந்தியாவின் பிரதம அமைச்சரை நியமிக்கிறார்.
- பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுபவர் பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு அவையில் உறுப்பினராக இருந்தால் போதுமானது.
- பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினர் அல்லாதவர்கூட பிரதமராக தேர்வு செய்யப்படலாம். ஆனால் அவர் **ஆறு மாத காலத்திற்குள்** பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். இந்தியாவில் முதன்முதலாக இராஜ்ய சபாவிலிருந்து இந்திரா காந்தி 1966ம் ஆண்டு பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- பிரதமர் மக்களவையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை ஆட்சியில் தொடரலாம்.
- நாடாளுமன்றத்தையும், நிர்வாகத் துறையையும் ஒரு சேரக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் மிக்கவராகப் பிரதமர் திகழ்கிறார்.
- இந்தியாவின் முதல் துணைப் பிரதமர் சர்தார் வல்லபாய் பட்டேல்.

**கடமைகள் சரத்து (78):**

- இந்தியாவின் பிரதமர் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகம் தொடர்பாகவும், பாராளுமன்றத்தின் முன் கொண்டு வரப்பட வேண்டிய மசோதாக்களைப் பற்றியும் அமைச்சரவை எடுத்த முடிவுகளை குடியரசுத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். மேற்கண்ட நிர்வாகம், சட்டமியற்றல் தொடர்பாக குடியரசுத் தலைவர் கேட்கக் கூடிய விவரங்களை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஏதேனும் ஒரு விஷயத்தில் ஓர் அமைச்சர் மேற்கொண்ட முடிவை, அமைச்சரவையின் முன் வைக்க வேண்டுமென குடியரசுத் தலைவர் கோரும் போது அவ்வாறே செய்ய வேண்டும்.

**அதிகாரங்கள்:**

- குடியரசுத் தலைவரால் அமைச்சர் -களாக நியமிக்கப்படும் நபர்களை பிரதமர் பரிந்துரைக்கிறார். பிரதமர் பரிந்துரைக்கும் நபர்களை மட்டுமே குடியரசுத் தலைவர் அமைச்சர்களாக நியமனம் செய்ய முடியும்.
- பிரதமர் அமைச்சர்களிடையே துறைகளைப் பகிர்ந்து அளிக்கிறார்.
- அமைச்சரவையை மாற்றி அமைக்கவும், மறுமாற்றம் செய்யவும்

அதிகாரம் உடையவர். பின்வரும் அலுவலர்களின் நியமனம் தொடர்பாக குடியரசுத் தலைவருக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

1. இந்திய அரசுத் தலைமை வழக்கறிஞர்
2. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர்
3. மத்திய பொதுப்பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
4. தேர்தல் ஆணையாளர்கள்
5. நிதி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
4. திட்டக்குழு, தேசிய வளர்ச்சி மன்றம், தேசிய ஒருமைப்பாடு மன்றம் மற்றும் மாநிலங்களுக்கிடையிலான மன்றம் ஆகியவற்றின் தலைவராக செயல்படுகிறார்.

**இந்தியப் பிரதமர்கள் மற்றும் அவர்களின் பதவிக்காலம்**

| | |
|---|---|
| 1. ஜவஹர்லால் நேரு | 1947 - 1964 |
| 2. குல்சாரிலால் நந்தா | மே 1964 - ஜுன் 1964 |
| 3. லால் பகதுார் சாஸ்திரி | 1964 - 1966 |
| 4. குல்சாரிலால் நந்தா | 11.01.1966 - 24.01.1966 |
| 5. இந்திரா காந்தி | 1966 -1977 |
| 6. மொராஜி தேசாய் | 1977 - 1979 |
| 7. சரண் சிங் | 1979 - 1980 |
| 8. இந்திரா காந்தி | 1980 - 1984 |
| 9. இராஜிவ் காந்தி | 1984 - 1989 |
| 10. வி.பி. சிங் | 1989 - 1990 |
| 11. சந்திர சேகர் | 1990 - 1991 |
| 12. நரசிம்மராவ் | 1991 - 1996 |
| 13. அடல் பிஹாரி வாஜ்பாய் | 16.5.1996 - 01.6.1996 |
| 14. தேவகௌடா | 1996-1997 |
| 15. ஐ.கே. குஜ்ரால் | 1997-98 |
| 16. அடல் பிஹாரி வாஜ்பாய் | 1998-2004 |
| 17. டாக்டர் மன்மோகன் சிங் | 2004-2014 |
| 18. நரேந்திர மோடி | 2014 - இன்று வரை |

**ஊதியங்கள் மற்றும் இதர படிகள்**

| | | | |
|---|---|---|---|
| **குடியரசுத் தலைவர்** | **1,50,000** | **துணைக் குடியரசுத் தலைவர்** | **1,25,000** |
| **பிரதமர்** | 1,00,000 | ஆளுநர் | 1,10,000 |
| **உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி** | 1,00,000 | மற்ற உச்சநீதி மன்ற நீதிபதிகள் | 90,000 |
| **உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி** | 90,000 | மற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் | 80,000 |
| **தலைமை தணிக்கை அதிகாரி** | 90,000 | | |

**மத்திய அமைச்சரவை**

- **சரத்து (74):** :இந்திய குடியரசுத் தலைவருக்கு உதவிபுரியவும், ஆலோசனை வழங்கவும் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை ஒன்று இருக்கும். அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு குடியரசுத் தலைவர் செயல்பட்டாக வேண்டும் என்பது 42 மற்றும் 44வது அரசியலமைப்புத் திருத்தங்களுக்குப் பின்னர் திட்டவட்டமாகத் தெளிவு -படுத்தப்பட்டுள்ளது. அமைச்சரவை பாராளுமன்றத்திற்குக் குறிப்பாக மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பாகும். அமைச்சர்கள் குடியரசுத் தலைவருக்கு தனிப்பொறுப்பாவார்கள்.
- **சரத்து (74):** அமைச்சர்கள் மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பாவார்கள்.

**அமைச்சர்கள் வகை:**

**கேபினேட் அமைச்சர்கள்:** முக்கிய துறைகளான நிதி உள்நாட்டு விவகாரம் வெளிநாட்டு விவகாரம், இரயில் போக்குவரத்து போன்றவற்றை இவர்களின் பொறுப்பில் ஒதுக்கப் -பட்டுள்ளது. அமைச்சர்களிலேயே முக்கியமான தகுதி பெற்றவர்கள். அதிக அதிகாரமுள்ள குழுவாகும். அமைச்சரவை -யில் ஒரு உட்குழுவாக இது செயல்படுகிறது. கேபினெட் குழுக்களில் கலந்து கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பார்கள்.

**இணை அமைச்சர்கள்:** இவர்கள் கேபினட் மற்றும் ராஜாங்க அமைச்சர்களுக்கு உதவியாக அமைச்சங்களில் செயல்படுகின்றனர்.

**ராஜாங்க அமைச்சர்கள்:** ராஜாங்க அமைச்சர்கள் பல்வேறு துறைகள் அல்லது இலக்காக்களுக்கு பொறுப்பாளராக திகழ்கின்றனர். இவர்கள் சிறப்பு அழைப்பில்லாமல் கேபினெட் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது.

# பாராளுமன்றம்

**மாநிலங்களவை (ராஜ்ய சபை - சரத்து 80)**

- ❖ மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பு. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள மக்களின் மறைமுக பிரதிநிதித்துவ அமைப்பாக திகழ்கிறது.
- ❖ மாநிலங்களவையில் 250க்கும் மிகாத



உறுப்பினர்கள் இருப்பர். இவர்களில் 12 பேர் நியமன உறுப்பினர்கள் (குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர்), 238 பேர் மாநிலங்களில் இருந்தும், யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- ❖ தற்பொழுது 245 உறுப்பினர்கள் உள்ளனர். (12 பேர் + 229 பேர் + 4 பேர்)

**தேர்தல்**

- ❖ மாநிலங்களவை உறுப்பினர்கள் மாநில சட்டப் பேரவைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் ஒற்றை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ❖ ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த மாநிலங்களின் மக்கள் தொகையைப் பொறுத்து அமையும்.

**பதவிக்காலம்**

- ❖ உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டப்படி, மாநிலங்களவை உறுப்பினர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஒவ்வோர் இரண்டாண்டு முடிவிலும் ஒய்வு பெறுகிறார்.
- ❖ மாநிலங்களவை நிரந்தரமான அமைப்பாகும், அதனை குடியரசுத் தலைவராலும்கூட கலைக்க முடியாது.

**தகுதிகள்:**

- ❖ இந்திய குடிமகனாக இருக்க வேண்டும். மாநிலங்களவை

உறுப்பினராக 30 வயது நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.

- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ ஊதியம் பெறும் எந்த ஒரு பதவியிலும் இருக்கக் கூடாது.
- குற்றவழக்கில் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டணை பெற்றிருக்கக் கூடாது.

**மக்களவை (லோக் சபா - சரத்து 81)**

- மக்களவை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது.
- 18 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவராவர்.
- அரசியலமைப்பின்படி, மாநிலங்களிலுள்ள தொகுதிகளில் இருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 530க்கு மிகாமலும், யூனியன் பிரதேசங்களில் இருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும்
- உறுப்பினர்கள் 20க்கு மிகாமலும் மக்களவை இருக்க வேண்டும். ஆங்கிலோ - இந்திய சமூகத்தைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்யலாம். மக்களவையில் அதிகபட்சமாக 552 உறுப்பினர்கள் இருக்கலாம்.
- ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மக்கள்தொகைக்கு ஏற்றவாறு மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை மாறுபடும். (2001 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி).
- தற்போது மக்களவையில் 545. உறுப்பினர்கள் (530 + 13 + 2) உள்ளனர். பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

**நாடாளுமன்ற உறுப்பினராவதற்கான தகுதிகள் சரத்து (84):**

- இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.
- மக்களவை உறுப்பினராக 25 வயது நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ ஊதியம் பெறும் எந்த ஒரு பதவியிலும் இருக்கக் கூடாது.
- குற்றவழக்கில் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டணை பெற்றிருக்கக் கூடாது.

**மக்களவையின் பதவிக்காலம்:**

- மக்களவை முதல் கூட்டநாளிலிருந்து 5 ஆண்டுகள் கொண்டிருக்கும். நெருக்கடி கால நிலையின் போது அவை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்க முடியும். ஆனால் நெருக்கடி காலநிலை
- முடிவுற்ற பிறகு ஆறு மாதத்திற்கு மேல் அந்த பதவி நீடிக்க கூடாது.

**மக்களவை உறுப்பினர்களின் தகுதி நீக்கம் (சரத்து 102):** இரண்டு வழிகளில் நீக்கம் செய்யப்படுகிறது.

1. 1951 ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி கீழ்க்கண்ட தகுதியின்மை 5 ஆண்டுகளுக்கு செயலில் இருக்கும்.

- ❖ தேர்தலின்போது தவறான நடவடிக்கையில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டு இருத்தல்,
- ❖ இரண்டு ஆண்டிற்கு மேல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுதல்,
- ❖ தேர்தல் செலவு கணக்குகளை உரிய காலத்தில் காட்டாமல் இருத்தல்.
- ❖ ஊதிய பதவி கொண்டிருத்தல்

❖ கட்சித்தாவல் : 1985 ல் 52வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் வாயிலாக கொண்டுவரப்பட்டது. இது கட்சித்தாவல் காரணமாக பதவி தகுதி நீக்கம் செய்கிறது. கட்சித்தாவல் காரணமாக பதவி நீக்கம் செய்யும் தகுதி சபாநாயகருக்கே உண்டு.

**காபந்து அரசு (Care-taker Government) என்றால் என்ன?**

- ❖ ஒரு அரசின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் புதிய அரசு பொறுப்பேற்கும் வரை அவ்வரசு பதவியில் இருக்கலாம்.
- ❖ எனவே ஒரு அரசின் பதவிக்காலம் முடிந்த பின்னரும் புதிய அரசு பொறுப்பேற்றுக் -கொள்ளும் வரை அவ்வரசு பதவியில் இருந்தால் அது காப்பந்து அரசு எனப்படும்.
- ❖ காப்பந்து அரசுக்கென சில ஒழுக்கக் கட்டுப்பாடுகள் உள்ளன. மேலும் இது பெரிய கொள்கை முடிவுகளை எடுக்கக்கூடாது.
- ❖ ஆனால் குடியரசுத் தலைவர் காபந்து அரசால் நிறைவேற்றப்படும் அத்தகைய மசோதாக்களை திருப்பி அனுப்பலாம்.

**சட்டம் இயற்றுவதற்கான நடைமுறை**

மசோதாக்கள் இருவகைப்படும்.

**1. சாதாரண மசோதா:**

❖ மாநிலங்கள் அவையிலோ அல்லது மக்களவையிலோ கொண்டு வரப்படலாம். இந்த மசோதாக்கள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட பின்னர் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

❖ நாடாளுமன்றத்தின் இரு அவை -களிலும் கருத்து ஒற்றுமை ஏற்படாவிடின் குடியரசுத்தலைவர் கூட்டுக்கூட்டத்தை (Joint Sitting) ஏற்படுத்துவார்.

**2. பண மசோதா(Money Bill):**

(சரத்து 110 ல் வரையறுக்கப்பட்டுள்ளது).

i. மக்களவையில் தான் முதலில் கொண்டுவரப்படும்.

ii. இதற்கு குடியரசுத்தலைவரின் அனுமதி தேவை.

iii. ஒரு மசோதா பண மசோதாவா அல்லது இல்லையா என்பதை தீர்மானம் செய்வது மக்களவையின் சபாநாயகர் ஆவார். இவரது முடிவே இறுதியானது.

iv. மக்களவையில் பண மசோதா இயற்றப்பட்ட பிறகு மாநிலங்கள் அவைக்கு அதன் பரிந்துரைகளுக்காக அனுப்பப்படும். இதனை மாநிலங்கள் அவை தன் பரிந்துரைகளுடன் 14 நாட்களுக்குள் மக்களவைக்கு திரும்ப அனுப்புதல் வேண்டும். மக்களவை இந்த பரிந்துரைகளை ஏற்கலாம் அல்லது ஏற்காமல் போகலாம்.

v. பின்னர் இந்த மசோதா குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

**ஆண்டு நிதிநிலை அறிக்கை (சரத்து 112):**

❖ ஒவ்வொரு நிதி ஆண்டு குறித்தும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அந்த நிதி ஆண்டிற்கான இந்திய அரசின் வரவு மற்றும் செலவு மதிப்பீட்டு அறிக்கையை கொண்டு வரவேண்டும். (ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை)

❖ 2018 முதல் ஜனவரி 1லிருந்து டிசம்பர் 31 வரை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

**கூறுகள்**

❖ வருவாய் மற்றும் செலவினங்கள்
❖ வருவாய் பெருக்கும் வழிவகைகள்
❖ சென்ற ஆண்டின் வரவு செலவு, உபரி பற்றாக்குறை
❖ வரும் ஆண்டிற்கான நிதிதிட்டங்கள்

**பட்ஜெட் அடிப்படை கொள்கைகள்:**

❖ ஆண்டின் அடிப்படை
❖ துறைரீதியிலான மதிப்பீடுகள்
❖ பணத்தின் அடிப்படையில்
❖ சமச்சீரான பட்ஜெட்
❖ காலாவதி சரத்து

**அமைப்புகள்**

- ❖ நிதி அமைச்சகம்
- ❖ நிர்வாக அமைச்சகம்
- ❖ திட்டக்குழு
- ❖ கணக்கு (ம) தணிக்கை

**பட்ஜெட் சமர்பித்தல்**

- ❖ குடியரசு தலைவர் வருடாந்திர நிதி அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டும்.

**பட்ஜெட் தயாரித்தல்**

- ❖ 6 நிலைகள்

**பட்ஜெட் அறிமுகம்**

**ரயில்வே பட்ஜெட் - 1921 (அக்வொர்க் கமிட்டி)**

- ❖ ரயில்வே அமைச்சர்
- ❖ பிப். 3வது வாரம்

**பொது கலந்தாய்வு**

- ❖ 3-4 நாட்கள் வரை
- ❖ இரு அவைகளிலும்

**நிர்வாக கமிட்டி சோதனை**

- ❖ பாராளுமன்றத்தின் துணைக் குழுக்கள் 3-4 வாரங்கள்
- ❖ ஒவ்வொரு அமைச்சகத்தின் **மானியக் கோரிக்கைகள்** மீது கலந்தாய்வு செய்யும்

**மானிய கோரிக்கை:**

- ❖ மக்களவை மட்டும் வாக்களிக்கும் உரிமை
- ❖ பொருளாதார / கொள்கை / அடையாள - வெட்டுத் தீர்மானம்

**கையாடல் மசோதா தாக்கல்:**

- ❖ இந்திய தொகுப்பு நிதி மீதான செலவுகள்
- ❖ பாராளுமன்ற சட்ட மூலம் மட்டும் எடுக்க முடியும்.

**நிதிமசோதா தாக்கல்**

- ❖ வரும் ஆண்டிற்கு இந்திய அரசிற்கு நிதி தேவையை பெறுவதற்காக தாக்கல்.

**பட்ஜெட் செயல்பாடு :**

- ❖ நிதி அமைச்சகத்தின் கட்டுபாட்டில் உள்ள அமைச்சகங்கள் துறைகளின் கீழ், நிதி நிர்வாக நடைபெறுக.

**தணிக்கை :**

- ❖ CAG ஆல் தணிக்கை செய்யப்படும்.

**மக்களவைத் தலைவர்(சபாநாயகர்)**

- ❖ **சரத்து (93):** மக்களவைத் தலைவர், துணைத் தலைவரை சபையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- **பதவிக்காலம்:** மக்களவை பதவிக்காலம் வரை செயல்படுவார்.
- **சரத்து (94)** சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் பதவிநீக்கம் செய்யலாம். தீர்மானம் நிறைவேற்றப் -படுவதற்கு 14 நாட்கள்முன்பாகவே தெரிவிக்கப்பட வேண்டும்.
- அவைத் தலைவர், அவை கூட்டங்களுக்கு தலைமைதாங்குவார்.
- அவைத் தலைவர், கூட்டம் நடைபெறும்பொழுது பத்தில் ஒரு பங்கு உறுப்பினர் இல்லாத போது கூட்டத்தை ஒத்தி வைப்பார்.
- ஒரு மசோதா சாதாரண மசோதாவா, நிதி மசோதாவா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மக்களவை தலைவரிடமே உள்ளது.
- மசோதாக்கள், தீர்மானங்கள் மீது சபை வாக்களிக்கும் போது சமநிலை ஏற்பட்டால் வாக்களிக்கும் உரிமை உடையவர். பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒன்றாகக் கூடும்போது அக்கூட்டுக் கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர்.
- அவை உறுப்பினர்களின் கட்சித் தாவல் நடவடிக்கையினால் ஏற்படும் தகுதியிழப்பினை முடிவு செய்பவர்.
- பாராளுமன்றக் குழுக்களின் தலைவர்களை முடிவு செய்கிறார்.
- மக்களவைத் தலைவர் இல்லாதபோது அவையை நடத்துவது மக்களவைத் துணைத்தலைவர் ஆவார். மக்களவை தலைவர் தேர்விற்குப் பிறகு அவர் குறித்த தேதியில் துணைத்தலைவர் சரத்து (93) அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

| மக்களவைத் தலைவர் | மாநிலங்களவைத் தலைவர் |
|---|---|
| 1. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் | நாடாளுமன்ற உறுப்பினர்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் |
| 2. மக்களவையின் உறுப்பினர் | எந்த அவையிலும் உறுப்பினர் இல்லை |
| 3. “பணமசோதா சரத்து (110)” எது என்பதை வரையறை செய்கிறார். இவரின் முடிவே இறுதியானது. | அத்தகைய அதிகாரம் இவரிடம் இல்லை |
| 4. இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தை தலைமையேற்று நடத்துகிறார். | கூட்டுக்கூட்டத்திற்கு தலைமை ஏற்பதில்லை |
| 5. தனக்கெதிரான பதவி நீக்கத் தீர்மானத்தின்போது முதல் கட்டத்தில் வாக்களிக்கலாம் | எந்த நிலையிலும் வாக்களிக்க இயலாது. |

- மக்களவையின் பதவிக்காலம் வரை இவர் பதவியில் இருப்பார்.
- இவரை பதவிநீக்கம் செய்ய 14 நாள் முன்னறிவிப்புக்குப்பின் மக்களவையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மூலம் நிறைவேற்றலாம்.

(**குறிப்பு:** சுதந்திர இந்தியாவின் முதல் மக்களவை சபாநாயகர் - ஜி.வி. மாவ்லங்கர் 1952 - 1956, தற்போதைய சபாநாயகர் - சுமித்ரா மகாஜன் இவர் இந்தியாவின் இரண்டாவது பெண் சபாநாயகர் ஆவார். தற்போது மக்களவையின் துணை சபாநாயகர் - திரு. தம்பிதுரை ஆவார்)

**மாநிலங்களவைத் தலைவர்** சரத்து (89)

- இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் பதவி வழியே மாநிலங்களவைத் தலைவராகிறார்.
- இரு அவை உறுப்பினர்களால் இவர் தேர்வு செய்யப்படுகிறார்.
- இவர் குடியரசுத் தலைவராக செயல்படும்போது மாநிலங்களவை தலைவராக செயல்படமாட்டார்.
- இவர் குடியரசுத் துணைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் மட்டுமே மாநிலங்களவை தலைவர் பதவியை இழப்பார்
- வாக்கெடுப்பின்போது முதல் கூட்டத்தில் வாக்களிக்க மாட்டார். சமநிலை நிழவும்போது வாக்களிக்க முடியும்.

**மாநிலங்களவைத் துணைத்தலைவர்:**

- இவர் மாநிலங்களவை உறுப்பினர் -களால் தமக்குள்ளே தேர்வு செய்யப்படுகிறார்
- மாநிலங்களவை தலைவர் இல்லாதபோது அவருடைய பணியைச் செய்கிறார்.
- இவரை பதவிநீக்கம் செய்ய 14 நாட்கள் முன்னறிவிப்புடன் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்படும்.
- இவருடைய ஊதியம் மற்றும் படிகள் இந்திய திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.
- தற்போது மாநிலங்கள் அவையின் துணைத்தலைவர் - திரு. குரியன் ஆவார்.

**பாராளுமன்ற குழுக்கள்**

- பாராளுமன்ற குழுக்கள் மூன்று வகைக்குள் அடங்கும். அவையாவன,

1. பொதுவான குழுக்கள்
2. சட்டமியற்றுதல் சார்ந்த குழுக்கள்
3. நிதிக்குழுக்கள்

**பொதுவான குழுக்கள்:**

**1. விதிகள் பற்றிய குழு:**

- ❖ சபை நடவடிக்கைகளில் பின்பற்றப்படும் நடைமுறைகளையும் பணி நடைபெறுதலையும் ஆய்வு செய்து தேவைப்படும் மாற்றங்களை பரிந்துரை செய்யும்

**2. அலுவல் ஆலோசனைக் குழு:**

- ❖ மசோதாக்கள், மற்ற பணிகள் பரிசீலனை செய்யப்படும்போது, ஒவ்வொரு நிலையிலும் அதற்கென சபையில் ஒதுக்கப்பட வேண்டிய நேரம் குறித்து இக்குழு பரிந்துரை செய்யும்.

**3. உரிமைக் குழு:**

- ❖ சபையின் உரிமை மீறல்களையும், உறுப்பினர்களின் உரிமை மீறல்களையும் பரிசீலனை செய்து, அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரை செய்யும்.

**4. சபை கூட்டத்திற்கு வராத உறுப்பினர்களை தணிக்கை செய்யும் குழு:**

- ❖ 60 நாட்களுக்கு மேல் சபைக்கு வராத உறுப்பினர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்குழு பரிந்துரை செய்யும்.

**5. அரசாங்க உறுதிமொழிகள் குழு:**

- ❖ அமைச்சர்கள் அரசாங்கத்தின் சார்பாக கொடுத்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று ஆய்வு செய்கிறது.

**6. நெறிமுறைக் குழு:**

- ❖ அவை உறுப்பினர்களின் நடத்தைகளைக் கண்காணிப்பது, ஒழுங்கீனத்திற்கு தண்டனை வழங்குவது பற்றி பரிந்துரை செய்கிறது.

**சட்டம் இயற்றுதல் சார்ந்த குழுக்கள்:**

**1. மசோதாக்கள் மீதான ஆய்வுக்குழு:**

- ❖ சபை அனுப்பியுள்ள மசோதாக்களை பரிசீலனை செய்து, அதன் மீதான தன் கருத்துக்களை அறிக்கை மூலம் சமர்ப்பிக்கிறது.

**2. மனுக்கள் மீதான குழு:**

- ❖ இக்குழு சபையிடம் அளிக்கப்படும் மனுக்களைப் பரிசீலனை செய்து அதனை சபைக்கு அளிக்கிறது.

**நிதி நிர்வாகம் பற்றிய குழுக்கள்:**

**1. மதிப்பீட்டுக் குழு:**

- ❖ 1950 ல் ஜான் மத்தாய் அவர்களின் பரிந்துரைப்படி இக்குழு உருவாக்கப் -பட்டது. மக்களவை உறுப்பினர்களில் 30 பேர் விகிதப் பிரதிநிதித்துவ,

ஒற்றை மாற்று வாக்கு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- ❖ எல்லா கட்சி உறுப்பினர்களும் இடம் பெறுவர். ஆளுங்கட்சி உறுப்பினரே தலைவராக இருப்பார். பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்களுக்கு உரிய முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளதா என கவனித்தல். தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளைப் பொறுத்து சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்கிறது.

**2. பொதுக் கணக்குக்குழு:**

- ❖ இக்குழுவில் 15 பேர் மக்களவையில் இருந்தும், 7 பேர் மாநிலங்களவையில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர். எதிர்க்கட்சி தலைவர் இக்குழுவின் தலைவராக இருப்பார்.
- ❖ அரசாங்க கணக்கில் செலவுத் தொகை யாவும் பாராளுமன்ற நோக்கங்களுக்கு மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளதா என ஆய்வு செய்கிறது.
- ❖ செலவு செய்ய அதிகார வரம்பு இடமளித்துள்ளதா என ஆராய்தல்.
- ❖ இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையை ஆய்வு செய்தல்.

**3. பொதுத் துறை நிறுவனங்கள் மீதான குழு:**

- ❖ கிருஷ்ண மேனன் குழுவின்படி 1964இல் அமைக்கப்பட்டது. 15 பேர் மக்களவையில் இருந்தும், 7 பேர் மாநிலங்களவையில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ❖ குழுத்தலைவராக மக்களவை உறுப்பினரே நியமிக்கப்படுவார்.
- ❖ பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல்
- ❖ பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பான இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கையினை ஆய்வு செய்தல்.

**கேள்வி நேரம் (Question Hour)**

- ❖ பாராளுமன்ற கூட்டங்களின் முதல் ஒரு மணி நேரம் (பொதுவாக காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை) உறுப்பினர்கள் கேள்விகளை கேட்கவும் அமைச்சர்கள் அக்கேள்விகளுக்கு பதிலளிக்கவும் ஒதுக்கப்படும்.
- ❖ இதுவேகேள்வி நேரம் எனப்படும். பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கு 10 நாட்கள் முன்னதாக நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும்.

# மாநில அரசு மற்றும் சட்டமன்றம்

- அரசியலமைப்பு சட்டத்தின் பகுதி VI சரத்து 153 - 167 முடிய சரத்துக்கள் மாநில நிர்வாகிகள் பற்றி கூறுகிறது. மாநில நிர்வாகிகள் என்பது ஆளுநர், முதலமைச்சர்கள், அமைச்சரவை, அரசு தலைமை வழக்கறிஞரை ஆகியோரை குறிக்கும்.

**ஆளுநர்:**

- மாநிலத்தினுடைய நிர்வாகத்துறை அதிகாரம் மாநில ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- அவர் அரசியலமைப்புக்கு உட்பட்டு நேரடியாகவோ அவருக்கு கீழ் பணிபுரியும் அலுவலர் வாயிலாகவோ பயன்படுத்தலாம்.
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருப்பார் என்று **சரத்து 153** கூறுகிறது.
- சில சமயங்களில் ஒருவரே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக நியமிக்கப்படலாம். (7வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி 1956).
- ஆளுநரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். ஆளுநரின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.
- எனினும் குடியரசுத் தலைவர் **"விரும்பும் வரை"** அவர் பதவி வகிக்கலாம்.
- எனவே, ஆளுநர் எப்போது வேண்டுமானாலும் குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம் அல்லது அவராகவே பதவியை விட்டு விலகலாம்.

**தகுதிகள்:**

- ஒரு நபர் ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு அவர் இந்தியக் குடிமகனாகவும், 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
- வழக்காற்றின்படி மாநில முதலமைச்சரோடு கலந்து ஆலோசனை செய்வதும், அம்மாநிலம் சாராதவரை ஆளுநராக நியமிப்பதும் நடைமுறையில் உள்ளது.
- அதிகாரப் பிரிவினைக் கொள்கையை மனதிற்கொண்டு அரசியலமைப்பு சில நிபந்தனை களையும் விதித்துள்ளது.

**சமூகவியலில் தந்தை என அழைக்கப்பட்டவர் - அகஸ்தே காம்தே**

- நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றங்களில் ஆளுநர் உறுப்பினராக இருக்கக் கூடாது.
- அவ்வாறு இருந்தால் ஆளுநர் பதவி ஏற்றவுடனே அவ்வுறுப்பினர் பதவி காலியானதாகக் கருதப்படும்.
- ஊதியம் தரும் வேறு எந்தப் பதவியையும் ஆளுநர் வகிக்கக் கூடாது.
- ஆளுநரின் அதிகாரப் பூர்வ இருப்பிடம் இலவசமாகத் தரப்படும்.
- பாராளுமன்றம் நிர்ணியிக்கின்றபடி ஆளுநருக்கு ஊதியம் மற்றும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.
- ஒரே நபரே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்பட்டால், அவருடைய ஊதியமும், படிகளும் குடியரசுத் தலைவர் நிர்ணயிக்கின்ற விகிதத்தில் அந்த மாநிலங்களால் பகிர்ந்தளிக்கப்படும்.
- ஆளுநரின் பதவிக் காலத்தில் அவருடைய ஊதியமோ படிகளோ குறைக்கப்பட முடியாது.
- ஆளுநர் மத்திய அரசின் முகவராக செயல்பட்டு, மாநில விவகாரங்களின் மீது 15 நாட்களுக்கொருமுறை மத்திய அரசுக்கு அறிக்கையை சமர்பிப்பார்.
- அடுத்த ஆளுநர் பதவியேற்கும்வரை பதவியில் நீடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படலாம்.
- ஆளுநர் குடியரசுத் தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம்.
- அவர் குடியரசுத் தலைவருக்கு தனது கைப்பட ஒரு கடிதத்தை அளிப்பதன் மூலம் தனது பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம்.
- ஆளுநரை பதவி நீக்கம் செய்வதில் மாநில சட்டசபைக்கோ உயர்நீதி மன்றத்திற்கோ எந்தவித பங்கமும் இல்லை.
- ஒரு நபர் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆளுநராக நியமிக்கப்படலாம்.
- மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது அவர் இல்லாத நேரங்களில் மூத்த நீதிபதி ஆளுநருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.
- ஆளுநராக நியமிக்கப்படுபவர் நியமிக்கப்படும் மாநிலத்தைச் சார்ந்தவராக இருக்கக்கூடாது.

**ஆளுநரின் சம்பளமும், செலவுப்படிகள் மற்றும் பாதுகாப்பு: (Salary, Allowances & Immunitiers to the Governor)**

- ஆளுநரின் சம்பளமும் செலவுப்படிகளும் மாநிலத் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும்.
- ஆளுநர் (சம்பளம் மற்றும் செலவுப்படிகள்) சட்டம் 1982ன் படி ஆளுநருக்கு மாதச்சம்பளமாக

1,10,000 ரூபாயும், வாடகை இல்லாத அரசாங்க மாளிகையும் வழங்கப்படும்.

- 1986ல் இருந்து ஆளுநரின் சம்பளமும் செலவுப்படிகளும் அவரது பதவிக் காலத்தில் குறைக்கப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.
- **361வது** சரத்தின் கீழ் ஆளுநர் தனது அதிகாரங்களை பயன்படுத்தியதற்-காகவும், கடமைகளை செய்வதற்-காகவும் எந்த நீதிமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை.
- ஆளுநருக்கு எதிராக எந்த வித குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க முடியாது.
- ஆனால் இத்தகைய பாதுகாப்பு சமூகவியல் நடவடிக்கைகளில் ஆளுநருக்கு வழங்கப்படவில்லை.
- ஆனால் இரு மாதங்களுக்கு முன்பாகவே குற்றச்சாட்டினை தீர்மான வடிவத்தில் ஆளுநருக்கு அளிக்கப்பட வேண்டும்.
- ஆளுநரின் பதவிக்காலத்தில் அவருக்கு எதிராக கைது உத்தரவோ அல்லது பிற தண்டனைகளோ அளிக்க முடியாது.

**<u>அதிகாரங்களும் பணிகளும்</u> : (சரத்து 163)**

**நிர்வாக அதிகாரங்கள்**

- மாநில நிர்வாக நடிவடிக்கைகள் ஆளுநர் பெயரில் எடுக்கப்பட எடுக்கப்பட வேண்டும் - சரத்து 162.
- மாநில முதல்வர் மற்றும் பிற அமைச்சர்களை நியமிக்கிறார் - சரத்து 164.
- மாநில தேர்தல் ஆணையர், அட்வகேட் ஜெனரல், மாநில பணியாளர், பல்கலைக்கழக துணைவேந்தர், தேர்வாணைய உறுப்பினர்களை நியமிக்கிறார்.

**<u>நிதிநிலை</u>**

- பண மசோதாவை அறிமுகம் செய்ய ஆளுநர் பரிந்துரைக்கலாம்.
- ஆண்டு பட்ஜெட்டை ஆளுநர் சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க - சரத்து 202.
- அவசரகால நிதியிலிருந்து பணம் எடுக்க உரிமை
- மானிய கோரிக்கைக்கு ஆளுநர் பரிந்துரை அவசியம்

**சட்டத்துறை அதிகாரம்:**

- சட்டமன்றக் கூட்டத்தொடரை கூட்ட, கலைக்க, ஒத்திவைக்க அதிகாரம் - சரத்து 174.
- ஒரு ஆங்கிலோ இந்தியரை சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கலாம் - சரத்து 333
- சட்ட மேலவையில் 1/3 பங்கு உறுப்பினரை நியமிக்கலாம்.
- அவசர சட்டங்களை பிறப்பிக்கலாம் - சரத்து 213.

**மன்னிப்பளிக்கும் அதிகாரம்**

❖ சரத்து 161ன் படி தண்டனை பெற்றவரின் தண்டனை குறைக்க, ஒத்திவைக்க மன்னிக்க அதிகாரமுண்டு.

**தனிவருவாய்**

❖ மசோதாவை ஜனாதிபதி பரிசீலனைக்கு அனுப்பலாம்.
❖ மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சிக்கு பரிந்துரைக்கலாம். சரத்து 356.
❖ மாநில நிர்வாக, சட்டதகவல்களை முதல்வரிடம் கேட்டுப் பெறலாம்.

**இதர அதிகாரங்கள்**

❖ மாநில பொதுப்பணி ஆணைய அறிக்கையை பெறுதல்
❖ மாநில அரசின் பல்வேறு துறைகளின் வரவு செலவு தொடர்பான CAG அறிக்கையை பெறலாம்.
❖ மாவட்ட நீதிபதிகளை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பரிந்துரைப்படி நியமிக்கிறார்.

**சிறப்பியல்புடைய பொறுப்பு**

**(Special Responsibillities)**

1. **மகாராஷ்டிரா** - விதர்பா மற்றும் மராத்வாடா பகுதிகளுக்கென்று தனியான மேம்பாட்டு வாரியம் அமைத்தல்.
2. **குஜராத்** - சௌராஷ்டிரா மற்றும் கட்ச் பகுதிகளுக்கென்று தனியான மேம்பாட்டு வாரியம் அமைத்தல்.
3. **நாகலாந்து** - உள்நாட்டுக் கலகங்கள் தொடரும் வரை சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது தொடர்பானவை.
4. **அஸ்ஸாம்** - பழங்குடியினர் பகுதிகளை நிர்வகித்தல்.
5. **மணிப்பூர்** - மலைப் பகுதிகளை நிர்வகித்தல்.
6. **சிக்கிம்** - பலதரப்பட்ட மக்களின் அமைதியையும் மற்றும் சமூக பொருளாதார மேம்பாடுகளையும் உறுதிப்படுத்துதல்.
7. **அருணாச்சல பிரதேசம்** - சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரித்தல்.

**அரசியலமைப்பின் படி ஆளுநரின் நிலை :**

❖ இந்திய அரசியலமைப்பு மத்தியிலும், மாநிலங்களிலும், பாராளுமன்ற முறை அரசாங்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அதன் விளைவாக, ஒரு பெயரளவு நிர்வாகியாக மட்டுமே ஆளுநர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.
❖ முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை உண்மையான நிர்வாகத் துறையின் உதவி மற்றும் ஆலோசனையுடன் ஆளுநர் தனது அதிகாரங்களையும், பணிகளையும் செயல்படுத்தக் கடமைப்பட்டவர்.

❖ மேலும் குடியரசுத் தலைவரால் அவர் நேரடியாக நியமனம் செய்யப்பட்டு, அவராலேயே பதவி நீக்கம் செய்யப்படுகிறார்.

❖ ஆகவே, இந்தியக் கூட்டாட்சி முறையில் மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர், மத்திய அரசின் பிரதிநிதி என்ற இரட்டைத் தன்மையான பங்கினை ஆளுநர் பதவிக்கு அரசியலமைப்பு வழங்கி உள்ளது.

❖ ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருப்பார் என்றும் **(சரத்து 153)** அவர் இந்தியக் குடியரசுத் தலைவரால் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமிக்கப்படுவார் என்றும், அவர் குடியரசுத் தலைவர் விரும்புகின்ற வரையில் மட்டுமே பதவியில் இருப்பார் என்றும் அரசியலமைப்புச் சட்டம் கூறுகின்றது.

❖ மேலும் ஆளுநர் தமது பணிகளை நிறைவேற்றும் போது, ஒரு சில விதிவிலக்குகள் தவிர, அனைத்திலும் அமைச்சரவையின் உதவியுடனும் ஆலோசனையுடனும் செயல்பட வேண்டும் என்றும் அரசியலமைப்பு கூறுகிறது.

❖ மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் ஆளுநரின் கையிலேயே உள்ளது. அந்த அதிகாரங்களை அரசியல -மைப்பில் சொல்லப்பட்டுள்ளவாறு அவரே நேரிடையாகவோ, தமக்குக் கீழ்படிந்துள்ள அதிகாரிகள் மூலமாகவோ செயல்படுத்த வேண்டும் என்ற சரத்து 154 தெரிவிக்கிறது.

❖ முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை சட்டப் பேரவைக்கு கூட்டுப் பொறுப்புடையதாக விளங்குகிறது.

**குடியரசுத் தலைவர் - மாநில ஆளுநர் வேறுபாடுகள் :**

❖ குடியரசுத் தலைவரும், மாநில ஆளுநரும் அரசியலமைப்பின் படியான தலைவர்கள் என்றாலும் இருவருக்கும் இடையில் அடிப்படையான சில வேறுபாடுகள் உள்ளன. அவை,

1. குடியரசுத் தலைவர் மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப் -படுகிறார், ஆனால் ஆளுநரோ நியமிக்கப்படுகிறார்.
2. குடியரசுத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமானால் சிக்கலான குற்றச்சாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். ஆனால் ஆளுநரோ குடியரசுத் தலைவர் விரும்பும் வரையில் பதவியில் இருக்கலாம்.
3. குடியரசுத் தலைவரின் அனைத்து செயல்பாடுகளும் அமைச்சரைவயின்

ஆலோசனைப்படியே அமைய வேண்டும்.

4. ஆனால் ஆளுநர் தன் விருப்புரிமையின் படி செயல்பட வேண்டிய தருணங்கள் தவிர பிற சமயங்களில் மட்டும் அமைச்சரவையின் உதவியுடனும், ஆலோசனைப்படியும் செயல்பட வேண்டும்.
5. அரசியலமைப்பின் "42வது திருத்தத்தின்" மூலம் அமைச்சரவையின் "ஆலோசனைப்படியே" குடியரசுத் தலைவர் செயல்பட வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டது.
6. அதே போலவே ஆளுநரும் செயல்பட வேண்டும் என்ற **சரத்து 163** - ல் உரிய திருத்தங்கள் செய்யப்பட வில்லை.

- மேற்கண்ட நிலையை நோக்கும் போது, ஆளுநர் எப்பொழுதும் அமைச்சரைவையின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டவரல்ல என்பது புலனாகிறது. அதாவது ஆளுநர் தன் விருப்புரிமையின் படி செயல்படும் போது அவர் அமைச்சரவையின் அறிவுரையைப் பெற வேண்டிய அவசியமோ அதன்படி செயல்பட வேண்டிய அவசியமோ இல்லை.
- மேலும் **சரத்து 163(2)** ன் படி எந்தவொரு விஷயத்திலும் ஆளுநர் தன் விருப்புரிமையின் படி செயல்படும் போது, அந்த விஷயம் ஆளுநரின் தன் விருப்புரிமை அதிகாரத்திற்குள் அடங்குமா என்பதை ஆளுநரே முடிவு செய்வார் என்றும் அவருடைய முடிவே இறுதியானது என்றும் தெரிவிக்கிறது.
- மேலும் ஆளுநரின் எச்செயலின் செல்லும் தன்மை குறித்தும், அவர் தன்விருப்புரிமையின் படி செயல்பட்டார் அல்லது செயல்பட வில்லை என்ற அடிப்படையில் வினவ முடியாது.
- ஆனால் குடியரசுத் தலைவரைப் பொறுத்தவரை, அவர் எச்செயலையும் தன்விருப்புரிமைப்படி செய்ய அரசியலமைப்பு அவருக்கு அதிகாரம் அளிக்க வில்லை.
- ஆளுநர் தமது சொந்த அறிவையும் தன் விருப்புரிமையையும் பயன்படுத்தி செயல்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் மட்டுமின்றி, குடியரசுத் தலைவரின் கட்டளைப்படி செயல்பட வேண்டிய சில சிறப்பியல்புடைய பொறுப்புகளிலும் அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்றாலும் கூட இறுதியில் தன் விருப்பம் போல் செயல்படலாம்.
- ஆகவே, இந்தியக் கூட்டாட்சி முறையில் மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர் மற்றும் மத்திய அரசின் பிரதிநிதி என்ற இரட்டைத் தன்மையான பங்கினை ஆளுநர் பதவிக்கு இந்திய

அரசியலமைப்பு வழங்கியுள்ளது என்பது புலனாகும்.

## முதலமைச்சர் (The Chief Minister)

- பாராளுமன்ற முறை அரசாங்கம் மாநில அளவிலும் இயங்குவதால் மாநில நிர்வாகத் துறையின் பெயரளவுத் தலைவராக ஆளுநரும், **உண்மையான தலைவராக** முதலமைச்சரும் உள்ளனர்.
- இவ்வாறு மாநில அளவில் முதலமைச்சரின் நிலை மத்தியில் பிரதம மந்திரியின் நிலை போன்றதாகும்.

## முதலமைச்சரின் நியமனம் மற்றும் பதவிக்காலம்:

- முதலமைச்சரை நியமிப்பது தொடர்பான நடைமுறைகள் ஏதும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட வில்லை.
- **சரத்து 163**-ல் தன் விருப்ப அதிகாரங்களைத் தவிர, மற்ற அதிகாரங்களையும் பணிகளையும் செயல்படுத்துவதில், ஆளுநருக்கு உதவியும், ஆலோசனையும் கூறுவதற்கு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஓர் அமைச்சரவை இருக்கும் என்றும், சரத்து **164**-ல் முதலமைச்சர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது. பாராளுமன்ற முறை வழக்காற்றின் படி சட்ட சபையில் பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியின் தலைவரே முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார்.
- ஆனால் எந்தவொரு கட்சியும் இறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில்,தனிப்பட்ட பெரிய கட்சியை ஆளுநர் ஆட்சி அமைக்க கோருவதுடன் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கவும் கோரலாம்.
- சட்ட மன்றத்தின் எந்தவொரு அவையின் உறுப்பினரும் முதலமைச்சராகலாம். மேலும் உறுப்பினர் அல்லாதவரும் பதவியேற்கலாம். ஆனால் ஆறு மாதகாலத்திற்குள் அவர் சட்ட மன்ற உறுப்பினராதல் வேண்டும்.
- ஆளுநரின் விருப்பம் உள்ளவரை முதலமைச்சர் பதவி வகிப்பார். அதாவது சட்ட மன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ள வரை அவர் ஆட்சியில் தொடரலாம்.
- இருப்பினும் முதலமைச்சரின் இயல்பான பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.
- ஆனால் சட்டமன்றத்தின் நம்பிக்கையை இழப்பதன் மூலமாக -வோ, இராஜினாமா செய்வதாலும், **சரத்து 356ன்** கீழ் மாநில அரசை

அவசர நிலை அமலாக்கப்படுவதாலும் முதலமைச்சர் பதவி இழக்கலாம்.

**முதலமைச்சரின் அதிகாரங்கள் :**

❖ முதலமைச்சர் மாநில நிர்வாகத்தின் உண்மையான தலைவராக இருக்கிறார். அதனால் அதிகமான அதிகாரங்களையும், பணிகளையும், பெற்றுள்ளார். அவையானவன.

1. அமைச்சரவை தொடர்பானவை.
2. ஆளுநர் தொடர்பானவை.
3. மாநில சட்ட மன்றம் தொடர்பானவை.
4. மற்ற பணிகளும் அதிகாரங்களும்.

**அமைச்சரவைத் தொடர்பான அதிகாரங்கள் (Related to Council of Ministers) :**

❖ அமைச்சர்களாக நியமிக்கப்படும் நபர்களை முதலமைச்சர் ஆளுநருக்கு பரிந்துரைக்கிறார்.

❖ முதலமைச்சர் அமைச்சர்களிடையே துறைகளைப் பகிர்ந்தளிக்கிறார்.

❖ அவர் அமைச்சரவையை மாற்றி அமைக்கிறார் மற்றும் மறுமாற்றமும் செய்கிறார்.

❖ கருத்து வேறுபாட்டின் காரணமாக அவர் ஓர் அமைச்சரை ராஜினாமா செய்ய வேண்டுகிறார். அல்லது அவரை அமைச்சரவையிலிருந்து பதவி விலக்க ஆளுநருக்கு ஆலோசனை கூறுகிறார்.

❖ அவர் அமைச்சரவை கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கிறார். மற்றும் அதன் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்துகிறார்.

❖ அவர் தனது பணியினை ராஜினாமாச் செய்வதன் மூலம் அமைச்சரவையை முடிவுக்கு கொண்டு வரலாம்.

❖ அவர் அனைத்து அமைச்சர்களின் செயல்பாடுகளை வழி நடத்துகிறார், இயக்குகிறார்,கட்டுப்படுத்துகிறார் மற்றும் ஒருங்கிணைக்கிறார்.

**ஆளுநர் தொடர்பான அதிகாரங்கள் : (Related to Governor )**

❖ **சரத்து** 164ன் படி ஆளுநருக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்பின் பிரதான வழியாக முதலமைச்சர் உள்ளார்.

❖ மாநில தலைமை வழக்கறிஞர், மாநிலத் தேர்தல் ஆணையர், மாநிலப் பொதுப்பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகிய அலுவலர்களின் நியமனம் தொடர்பாக ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை கூறுகிறார்.

**தமிழ்நாட்டின் முதல் ஆளுநர் (சுதந்திரற்குப் பிறகு) - பிரகாசா**

**மாநில சட்டமன்றம் தொடர்பானவை (Related to Legistlature)**

- மாநில சட்டமன்றக் கூட்டத் தொடரைக் கூட்டுவது மற்றும் தள்ளிப் போடுவது தொடர்பாக முதலமைச்சர் ஆளுநருக்கு ஆலோசனை கூறுகிறார்.
- சபையின் அரசாங்கக் கொள்கைகளை அறிவிக்கிறார். சட்ட சபையில் அவர் மசோதாக்களை அறிமுகம் செய்யலாம். எந்த நேரத்திலும் சட்ட சபையைக் கலைப்பதற்காக ஆளுநரிடம் முதல்வர் பரிந்துரை செய்யலாம்.

**மற்ற பணிகளும், அதிகாரங்களும்:**

- ஆளுங்கட்சியின் தலைவராக, கட்சியைக் கட்டுப்படுத்தவும், நன்னெறிகளை வளர்க்கவும் முதலமைச்சர் கடமைப்பட்டுள்ளார்.
- மாநிலத்தின் தலைவராக, பல்வேறு பிரிவு மக்களின் கோரிக்கைகளை கவனமாகப் பரிசீலிக்கவும் அவர் கடமைப்பட்டவர்.
- பல்வேறு அரசுப் பணிகளின் அரசியல் தலைவராக, மாநில அளவில் உள்ள பல்வேறு துறைகளின் செயல்களை மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் அவர் கடமைப்பட்டவர்.
- மாநில அரசின் சீரான செயல்பாடு மற்றும் சிறந்த மத்திய மாநில உறவுகளுக்காக மத்திய அரசுடன் ஒரு நல்லுறவை வளர்க்க அவர் கடமைப்பட்டவர்.
- இவ்வாறாக மாநில நிர்வாகத்தில் மிக முக்கியமான மற்றும் உயர்ந்த பங்கில் முதலமைச்சர் செயல்படுகிறார்.
- இருப்பினும், ஆளுநர் சிறப்பு நிலையைப் பெற்றுள்ள மாநிலங்களில், அவரின் தன் விருப்ப அதிகாரங்கள் முதலமைச்சரின் பங்கு மற்றும் முக்கியத்துவத்தை சிறிதளவு குறைத்துள்ளன.

**ஆளுநர் மற்றும் முதலமைச்சருக்கு இடையிலான உறவு:**

- ஆளுநருக்கும், முதலமைச்சருக்கும் இடையில் இருக்க வேண்டிய உறவுகள் பற்றி அரசியலமைப்பு **சரத்துகள் 163, 164 மற்றும் 167** ஆகியவை குறிப்பிடுகின்றன. அவையாவன.
- **சரத்து 163:** ஆளுநர் தமது பணிகளை நிறைவேற்றும் போது, ஒரு சில விதி விலக்குகள் தவிர,அனைத்திலும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவையின் உதவியுடனும் ஆலோசனையுடனும் செயல்பட வேண்டும்.
- **சரத்து 164:** முதலமைச்சரையும், முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஏனைய அமைச்சர்களையும் ஆளுநர் நியமிக்கிறார்.

- ❖ அமைச்சர்கள் அனைவரும் ஆளுநர் விரும்பும் வரை பதவியில் நீடிப்பர்.
- ❖ ஆனால் அமைச்சரவை மாநிலச் சட்டப் பேரவைக்கு கூட்டுப் பொறுப்புடையதாகும்.
- ❖ அதாவது சட்டப் பேரவையின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவரே முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் பேரவையின் நம்பிக்கை நீடிக்கும் வரை அமைச்சரவையும் பதவியில் நீடிக்கும் என்றும் பொருளாகும்.
- ❖ **சரத்து 167** : இதன் படி மாநில நிர்வாகம், சட்டம் இயற்றல் சம்பந்தமான எல்லா முடிவுகளையும் ஆளுநருக்கு முதலமைச்சர் தெரிவிக்க வேண்டும் என்றும், இவை சம்பந்தமாக ஆளுநர் கேட்கக் கூடிய விவரங்களை அவருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், ஏதேனும் ஒரு விஷயத்தில் ஓர் அமைச்சர் மேற்கொண்ட முடிவை அமைச்சரவை முன் வைக்க வேண்டுமென ஆளுநர் கோரும் பொழுது அவ்வாறே செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சருக்கு கடமை விதிக்கப்பட்டுள்ளது.

**ஆளுநரின் பதவி மீதான சர்க்காரியா குழுவின் அறிக்கை (1988)**(Sarkaria commission Report on the Office of the governor)

- ❖ ஒரு நபரை ஆளுநராக நியமிக்கும் போது பின்வருவனவற்றை மத்திய அரசு பின்பற்ற வேண்டும் என்று **சர்க்காரியா குழு** கூறியது.
- ❖ ஆளுநரை நியமிக்கும் முன் சம்பந்தப்பட்ட மாநில அரசை கலந்து ஆலோசிக்க வேண்டும்.
- ❖ ஆளுநர் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடாது.
- ❖ அவர் ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் நபராக இருக்க வேண்டும்.
- ❖ அவர் தன்னை மாநில கட்சிகளில் இருந்து துண்டித்துக் கொள்ள வேண்டும்.
- ❖ அவர் சமீப காலத்தில் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருக்கக் கூடாது.
- ❖ அவர் மாநிலத்தில் வேறு கட்சிகள் ஆட்சி புரியும் போது மத்தியில் உள்ள ஆளுங்கட்சியினை சேர்ந்த அரசியல் வாதியாக இருக்கக் கூடாது.
- ❖ சிறுபான்மையினத்தை சார்ந்தவர் -களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- ❖ **15 நாட்களுக்கொரு** முறை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அளிக்கும் முறையை தொடர வேண்டும்.

**பாராளுமன்றங்களின் தாய் என்று அழைக்கப்படுவது - இங்கிலாந்து**

- ❖ ஒரு மசோதாவை குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்ப ஆளுநருக்குள்ள அதிகாரம் தொடரப்பட வேண்டும்.

**மாநில அமைச்சரவை (Council of Ministers)**

- ❖ ஒவ்வோர் மாநிலத்திலும் ஆளுநருக்கு உதவி மற்றும் ஆலோசனை கூறுவதற்கு முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை இருக்கும் என்று இந்திய அரசியலமைப்பின் **சரத்து 163** கூறுகிறது.
- ❖ பாராளுமன்ற முறைக்கு இணங்க ஆளுநர் பெயரளவுத் தலைவராக இருக்கிறார், மற்றும் மாநில அரசாங்கத்தின் உண்மையான அதிகாரம் அமைச்சரவையிடம் உள்ளது.
- ❖ ஆளுநர் தன் விருப்ப அதிகாரங்-களைப் பெற்றுள்ள போதிலும், அவர் எப்போதாவது அவைகளைச் செயல்படுத்துகிறார்.
- ❖ மேலும் ஆளுநர் முதலமைச்சரை நியமிக்கிறார் மற்றும் அவரின் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர்.
- ❖ அமைச்சர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட பதவிக் காலம் இல்லை.
- ❖ மேலும் அவர்கள் ஆளுநரின் விருப்பம் உள்ளவரை பதவி வகிப்பர்.
- ❖ இருப்பினும், அமைச்சர்களின் இயல்பான பதவிக்காலம் **5 ஆண்டுகள்** ஆகும். அவ்வப்போது மாநில சட்ட சபையால் அமைச்சர்களின் ஊதியம் மற்றும் படிகள் நிர்ணயிக்கப்படும்.
- ❖ மத்திய அரசாங்கத்தில் உள்ளதைப் போல், மாநிலங்களில் பாராளுமன்ற முறை அரசாங்கம் பின்பற்றப்படுவதால், அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும், மாநிலச் சட்டசபைக்கு பொறுப்புடையவர்களாகவும் உள்ளனர்.
- ❖ அதன் விளைவாக அமைச்சர்கள் ஒரு குழுவாக செயல்படுகின்றனர். **"ஒருவருக்காக அனைவரும் மற்றும் அனைவருக்காக ஒருவர்"** என்ற கொள்கையில் அமைச்சரவை செயல்படுகிறது.
- ❖ அமைச்சரவையின் கூட்டு முடிவிலிருந்து ஓர் அமைச்சர் தன்னைப் பார்க்க முடியாது.
- ❖ சட்டசபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில் அமைச்சர-வை அதிகாரத்தில் இருக்கிறது.
- ❖ சட்டசபையில் ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், முதலமைச்சரால் தலைமை வகிக்கப்-படும் அமைச்சரவை ராஜினாமாவை

சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளது. இதற்கு கூட்டுப் பொறுப்பு என்றுப் பெயர்.

- அமைச்சரவை எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. அது தொடர்புடைய மாநில முதலமைச்சரைச் சார்ந்துள்ளது. எனினும் அரசியலமைப்புத் திருத்தத்திற்கிணங்க, மாநில சட்ட -சபையின் மொத்த உறுப்பினர்களில் 15 **சதவீதத்திற்கு மேல் அமைச்சர்களின் எண்ணிக்கை** செல்லக் கூடாது.
- ஒவ்வொரு அமைச்சரும் மாநில சட்ட சபையில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். இல்லையென்றால் **ஆறு மாதத்திற்குள்** அதன் உறுப்பினராகி விட வேண்டும்.

**அமைச்சரவையின் பணிகளும் அதிகாரங்களும்:**

1. மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு, மக்களின் பாதுகாப்பு மற்றும் மக்களின் சொத்துப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பராமரித்தல்.
2. மாநிலத்தின் கொள்கைகள் உருவாக்குவது, தீர்மானிப்பது மற்றும் அவைகளை சிறப்பாக அமல்படுத்துவது.
3. சட்ட சபையின் சட்டமியற்றும் திட்டங்களை தீர்மானித்தல் மற்றும் அனைத்து முக்கிய மசோதாக்களையும் அறிமுகப்படுத்துதல்.
4. நிதிக் கொள்கையை முடிவு செய்தல் மற்றும் மாநிலத்தின் பொது நலத்திற்காக வரியமைப்பை வடிவமைத்தல்.
5. சமூக, பொருளாதார மாற்றங்களுக் -காக திட்டங்களைத் தீட்டுதல், பல்வேறு துறைகளில் மாநிலத்தை தலையெடுக்கச் செய்தல்.
6. துறைத் தலைவர்களின் முக்கியமான நியமனங்களைச் செய்தல்.
7. மற்ற மாநிலங்கள் உடனான சிக்கல்கள் மீது விவாதித்து முயற்சிகள் மேற்கொண்டு முடிவெடுப்பது.
8. துணை நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் பற்றி ஆளுநருக்கு ஆலோசனை கூறுதல்.
9. ஐந்தாண்டுத் திட்டங்களில் மாநிலப் பணியின் பங்கை பரிசீலித்தல் மற்றும் அதன் கடமைப்பாடுகளைத் தீர்மானித்தல்.
10. மாநில நிதி இருப்புகளில் இருந்து செய்கின்ற செலவீனத்திற்காக முன்வரைவை உருவாக்குவது.
11. சட்ட சபையில் அறிமுகப்படுத்தப் -படவுள்ள சாதாரண மசோதாக்கள் அல்லது பண மசோதாக்கள் ஆகிய அனைத்து மசோதாக்களையும் தீர்மானித்தல்.

12. அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரும் தொடர்புடைய துறையை மேற்பார்வையிடுகிறார், ஒருங்கிணை -க்கிறார் மற்றும் கட்டுப்படுத்துகிறார்.
13. வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படுகிற ஆண்டு நிதிநிலை அறிக்கை அமைச்சரவையால் இறுதி செய்யப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.
14. மாநிலத்தின் சட்டத் துறையில் குறிப்பாக சட்ட சபையின் வழிகாட்டியாகவும் எஜமானாகவும், அமைச்சரவை இருக்கிறது.
15. அது தவிர மாநிலத்தின் பொதுக் கொள்கைகளை உருவாக்குபவர் -களாகவும், அமல்படுத்து பவர்களாகவும் அமைச்சர்கள் உள்ளனர்.
16. இருப்பினும், அமைச்சரவைக்கு எதிராக ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இயற்றும் உரிமையை மாநில சட்டசபை பெற்றுத் திகழ்கிறது.
17. எனவே, மாநில சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது சீரிய விமர்சனத்திற்கு அமைச்சர்கள் உட்படுத்தப்படுகிறார்கள்.
18. சுருக்கமாகச் சொன்னால் முதலமைச்சரை தலைவராகப் பெற்றுள்ள அமைச்சரவை மாநிலத்தின் மக்கள் நலனுக்காக எதையும் அல்லது ஒவ்வொன்றையும் தீர்மானிக்கிறது.

**<u>மாநில அரசுத் தலைமை வழக்கறிஞர் (Advocate - General):</u>**

- ❖ மாநில அரசாங்கத்திற்கு சட்டம் சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை வழங்கவும், சட்டம் சம்பந்தமாக இடப்படும் பணிகளைச் செய்யவும் மாநில அரசு தலைமை வழக்கறிஞரை நியமனம் செய்கிறது. (சரத்து 165) இவர் மாநிலத்தின் உயர்ந்த சட்ட அலுவர் ஆவார்.

**தகுதிகள் :**

- ❖ நியமிக்கப்படுபவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும் மற்றும் நீதிப் பணியில் **10 ஆண்டுகள்** பணியாற்றி இருக்க வேண்டும் அல்லது உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பத்து ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.

**பதவிகாலம்:**

- ❖ மாநில அரசு தலைமை வழக்கறிஞர்கள் பதவிக்காலம், பதவி நீக்கம் குறித்து அரசியலமைப்பு ஏதுவும் குறிப்பிட வில்லை.
- ❖ ஆளுநர் விரும்பும் வரை அவர் பதவி வகிக்கலாம். எனவே எந்நேரத்திலும் அவர் விலக்கப்படலாம்.

- ❖ மேலும் பதவி விலகல் கடிதத்தை ஆளுநருக்கு அளிப்பதன் மூலம் ராஜினாமா செய்யலாம்.
- ❖ ஆட்சி மாறியவுடன் தலைமை வழக்கறிஞர் பதவி விலகுவது ஒரு மரபாகும்.

**கடமைகளும், பணிகளும் :-**

- ❖ மாநில ஆளுநரால் ஒப்படைக்கப்படும் சட்ட விஷயங்களில் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.
- ❖ மேலும், சட்டத் தன்மை வாய்ந்த பிற கடமைகளைச் செய்தல் வேண்டும்.
- ❖ இவை மட்டுமல்லாது அரசியலமைப் -பாலோ அல்லது பிற சட்டங்களாலோ அவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை ஆற்ற வேண்டும்.

**உரிமைகள் :-**

- ❖ இவர் தனது வாதத்தினை மாநில எல்லைக்குள் உள்ள எந்த நீதிமன்றத்திலும் எடுத்துரைக்க உரிமை படைத்தவர் ஆவார்.
- ❖ சட்டமன்றத்தின் இரண்டு அவைகளிலும் அதன் குழுக்களிலும் கலந்து கொண்டு பேசுகிற உரிமையும் அவருக்கு உண்டு. எனினும் தீர்மானங்களின் மீது அவருக்கு உரிமை கிடையாது.
- ❖ சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகளைப் பெறவும் உரிமை உடையவர் ஆவார்.

## மாநில சட்டமன்றம்

- ❖ அரசியலமைப்பின் அதிகாரப் பங்கீட்டின் வாயிலாக, மாநிலங்கள் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள துறைகள் மீது சட்டமியற்றும் **அதிகாரத்தைப்** பெறுகின்றன.
- ❖ மாநிலங்களின் இச்சட்டம் இயற்றும் பணியினை மாநிலச் சட்டசபைகள் செய்கின்றன.அரசியலமைப்பு நாடு முழுவதும் ஒரே மாதிரியான சட்டசபைகளைத் தோற்றுவிக்க வில்லை.
- ❖ மாறாக சில மாநிலங்களில் இரு சபைகளைக் கொண்ட சட்டசபை -களையும் மற்ற மாநிலங்களில் ஒரே ஒரு சபையைக் கொண்ட சட்ட சபைகளையும் அரசியலமைப்பு தோற்றுவித்துள்ளது. எல்லா மாநிலங்களிலும் சட்ட சபையின் அங்கமாக மாநில ஆளுநர் உள்ளார்.
- ❖ இரு சபைகளைக் கொண்ட சட்ட மன்றத்தின் ஒரு சபை சட்ட மேலவை என்றும், மற்றொரு சபை சட்டப் பேரவை அல்லது கீழவை என்றும் வழங்கப்படுகின்றன.
- ❖ ஓரவைச் சட்டமன்றம் சட்டப்பேரவை என்றே வழங்கப்படுகின்றன.

- தற்போது, பீகார், கர்நாடகம், மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர்,ஆந்திரா, தெலுங்கனா போன்ற 7 மாநிலங்கள் மட்டுமே இரு சபைகளுடைய சட்டமன்றத்தைப் பெற்றுள்ளன. மேலவை இருக்கின்ற இடங்களில் அதனை நீக்கி விடலாம் என்றோ, சட்ட மேலவை இல்லாத இடங்களில் அதனை உருவாக்க வேண்டும் என்றோ சட்டப் பேரவை சிறப்பு பெரும்பான்மை மூலம் தீர்மானம் இயற்றி நாடாளுமன்றத்திற்குப் பரிந்துரைக்கலாம்.
- அப்பரிந்துரையின் அடிப்படையில் நாடாளுமன்றம் ஒரு மாநிலத்தில் உள்ள சட்டமேலவையைக் நீக்கி விடலாம் அல்லது புதிதாக உருவாக்கலாம். (சரத்து 169).
- ஆக, மேலவை வேண்டுமா வேண்டாமா என்பதனை முடிவு செய்யும் அதிகாரம் மாநிலச் சட்டப் பேரவையிடமே உள்ளது.

## The legislative Assembly

### கீழ்சபை, சட்டப்பேரவை(விதான் சபா)

- சட்டப்பேரவை மத்திய அரசாங்கத்தில் உள்ள மக்கள் அவையின் அடிப்படையிலே அமைக்கப் -பட்டுள்ளது.
- அதாவது மக்களவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்ற வாக்காளர்கள் மாநிலச் சட்டப் பேரவைக்கான உறுப்பினர் களையும் தேர்ந்தெடுக்கின்றனர்.
- வயது வந்தோர் வாக்குரிமை என்ற அடிப்படையிலும் இரகசிய தேர்தல் முறையிலும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- அரசியலமைப்பின் **சரத்து 170க்கு** இணங்க ஒரு மாநில சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை **500க்கு மிகாமலும் 60க்கு குறையாமலும்** மாநிலத்தின் தொகுதிகளில் இருந்து நேரிடையாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்டு இருக்க வேண்டும்.
- எனினும் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமாக ஒரு சட்டசபையின் குறைந்த பட்ச பலத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெற்றுள்ளது.
- மாநில சட்டப்பேரவையில் ஆங்கிலோ இந்தியருக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை என ஆளுநர் கருதினால் அச்சமுதாயத்தில் இருந்து ஒருவரை ஆளுநர் நியமிக்கலாம்.
- மேலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்காகவும் அவையில் இடங்கள் ஒதுக்கப்படும்.

**தகுதிகள்:**

- சட்டசபை உறுப்பினர் பதவிக்காக போட்டியிடும் ஒரு நபர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருருக்க வேண்டும்.
- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 25 வயது நிறைவடைந்தவர்கள் தேர்தலில் பங்கேற்கலாம்.
- பாராளுமன்றச் சட்டத்தால் வரையறை செய்யப்பட்ட மற்ற தகுதிகளையும் அவர் பெற்றிருக்க வேண்டும்.

**தகுதியின்மைகள்:**

- மாநிலச் சட்டசபை உறுப்பினர்கள் பெறத் தகாத தகுதிகள் சிலவற்றை அரசியலமைப்பு குறிப்பிடுகிறது.
- ஒருவர் சட்டசபைகளின் இருசபை -களிலும் உறுப்பினராக இருக்க முடியாது.
- மாநில சட்டசபையிலும் மத்திய பாராளுமன்றத்திலும் ஒருவர் ஒரே நேரத்தில் உறுப்பினராக இருக்க முடியாது.
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலச்சட்டபேரவையிலோ அல்லது சட்டமேலவையிலோ உறுப்பினராக இருக்க முடியாது.

  (மேலும் கீழ்க்காணும் வகையினர் மாநிலச் சட்டப் பேரவையிலோ அல்லது சட்ட மேலவையிலோ உறுப்பினராக இருக்க முடியாது.)

- இந்திய அரசாங்கத்திலோ ஏதாவது மாநில அரசாங்கத்திலோ ஊதியம் தரும் பதவியில் இருப்பவர்கள்.
- நீதிமன்றத்தால் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என அறிவிக்கப் -பட்டவர்கள். பட்டக்கடனைத் தீர்க்காமல் திவாலாகிப் போனவர்கள்.
- பிற அரசின் குடியுரிமை பெற்றவர்கள் வேறு அரசிடம் விசுவாசம் உள்ளவர்கள். பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெறாதவர்கள்.
- கட்சித்தாவல் தடைச்சட்டப்படியும் ஓர் உறுப்பினர் தகுதியிழப்புக்கு உள்ளாகலாம்.

**பதவிக்காலம்**

- இயல்பாகவே சட்டசபையின் பதவிக்காலம் **5 ஆண்டுகள்** ஆகும்.
- ஆனால் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் அதன் பதவிக்காலம் **ஆறு ஆண்டுகள்** என்பது விதிவிலக்காகும்.
- இருப்பினும், **சரத்து 356** ன் படி குடியரசுத்தலைவரால் மாநில நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப் -படும்போது எந்த நேரமும் ஆளுநரால் சட்டசபை கலைக்கப்படலாம்.
- **சரத்து 352ன்படி** தேசிய நெருக்கடி நிலை அமலில் உள்ளபோது சட்டசபையின் பதவிக்காலம்

ஓராண்டுவரை பாராளுமன்றத்தால் நீட்டிக்கப்படலாம்

- எனினும் நெருக்கடி நிலைப்பிரகடனம் திரும்பப் பெறப்பட்ட **ஆறு மாத காலத்திற்குள்** புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.
- இவை தவிர பதவிக்காலம் முடிவதற்கு முன்பே முதலமைச்சர் சட்டசபை கலைக்க ஆளுநருக்கு பரிந்துரை செய்யலாம்.

**இடங்கள் காலியாதல்**

- சட்டபேரவையில் ஓர் உறுப்பினரின் இடம் கீழ்க்கண்ட முறைகளில் காலியாகலாம்.
- இரட்டை உறுப்பினர் பதவி ஒருவர் சபையில் இரு அவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட முடியாது.
- ஏதேனும் ஒரு அவையின் பதவியை இழப்பதால் மற்றொரு அவையில் காலியிடம் ஏற்படும்.
- தகுதியிழப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஏதோவொரு காரணத்தால் தகுதியிழப்புக்கு உள்ளாகும் போதும்,
- பதவி விலகல் உறுப்பினர் தம் பதவி விலகலை அவைத் தலைவரிடம் அளித்து அவரும் ஏற்றுக்கொண்ட போதும்,
- வருகையின்மை உறுப்பினர் அவையின் முன் அனுமதி இன்றி தொடர்ச்சியாக **60 நாட்கள் அவைக்கு** வராமல் இருந்தாலும்.

**பிற வகைகள்:**

அ. உறுப்பினரின் தேர்தல் செல்லாது என நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டால்,

ஆ.அவை உறுப்பினர் பதவி அவையால் பறிக்கப்பட்டால்.

இ.குடியரசுத் தலைவர் அல்லது குடியரசுத்துணைத்தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால்

ஈ. மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டால், மேற்கண்ட காரணங்களினால் ஓர் உறுப்பினரின் இடம் சட்டமன்றத்தில் காலியாகும்.

**உறுப்பினர்களின் உரிமைகளும், சலுகைகளும்:**

- மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், மத்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் போலவே பேச்சுச் சுதந்திரம், கைது செய்யப்படுவதற்குத் தடை, சாட்சியளிக்க மறுப்பு, சட்டமன்ற அவை நடவடிக்கைகளை பிரசுரம் செய்யும் உரிமை, ஆகிய எல்லாவிதமான உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுள்ளனர்.

**சட்டப் பேரவையின் அதிகாரங்களும், பணிகளும்:**

- அரசியலமைப்பால் விதிக்கப்பட்ட வரையறைகளைத் தவிர, மாநிலப்

பட்டியல் மற்றும் பொதுப்பட்டியலில் உள்ள எந்தத் துறைகளிலும் சட்டம் இயற்றுதல்.

- ❖ அரசாங்கத்தை உருவாக்குதல் மற்றும் கலைத்தல்.மாநிலத்தின் நிதிகளைக் கட்டுப்படுத்துதல்.
- ❖ பண மசோதாக்களை அறிமுகப்படுத்தி அவைகளை நிறைவேற்றுதல்.
- ❖ பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புத் திருத்த மசோதா ஒப்புதலுக்காக வந்தால் அதற்கு ஒப்புதல் அளித்தல் அல்லது மறுத்தல்.
- ❖ மாநிலப் பொதுப்பணி ஆணையம், இந்தியக் கணக்காய்வர் மற்றும் தணிக்கையாளர் மற்றும் பிறரால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளைப் பரிசீலித்தல்.
- ❖ பல்வேறு நடவடிக்கைகளுக்காக பல்வேறு குழுக்களை அமைத்தல்.
- ❖ சபா நாயகரையும், துணை சபாநாயகரையும் தேர்ந்தெடுத்தல்.
- ❖ ஆளும் அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டுவருதல்.
- ❖ இந்தியக் குடியரசுத் தலைவரின் தேர்தலில் பங்கேற்றல்.
- ❖ மேலே கூறப்பட்ட அதிகாரங்கள் சட்டப் பேரவைக்கு மட்டுமே உரித்தானதாகும். சட்ட மேலவையை ஒப்பீடு செய்யும் போது கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியில் சட்ட சபை மிகுந்த அதிகாரங்களைப் பெற்றுள்ளது.
- ❖ எனவே சட்டசபை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்களை விட அதிக அதிகாரங்களும் பணிகளும் பெற்றுள்ளனர்.
- ❖ விதான் சபாவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை (அடைப்புக்குறிக்குள்) (Strength of vidhan sabha in the States)

ஆந்திரா (175), தெலுங்கானா (119), அருணாச்சலப் பிரதேசம் (60), அஸ்ஸாம் (126), பீகார் (243), கோவா (40), குஜராத் (182), அரியானா (90), இமாச்சலப் பிரதேசம் (68), ஜம்முகாஷ்மீர் (87), கர்நாடகா (224), கேரளா (140), மத்தியப் பிரதேசம் (230),மகாராஷ்டிரா (288), மணிப்பூர் (60), மேகலாயா (60), மிசோராம் (40), நாகலாந்து (60), ஒரிஸ்ஸா (147), பஞ்சாப் (117), ராஜஸ்தான் (200), சிக்கிம் (32), தமிழ்நாடு (234), திரிபுரா (60), உத்திரப் பிரதேசம் (403), மேற்குவங்காளம் (294), சட்டிஸ்கர் (90), ஜார்கண்ட் (81), உத்தரகாண்ட் (70), யூனியன் பிரதேசங்கள் : பாண்டிச்சேரி (30), டெல்லி (70).

- ❖ ஜம்மு காஷ்மீர் விதான் சபாவிற்கு 100 இடங்கள் உள்ளன. ஆனால் அவற்றுள் 24 இடங்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரைச் சார்ந்தவை.

- ❖ அனைத்து யூனியன் பிரதேசங்களுக்-கும் கீழ்சபை சட்டப் பேரவை இல்லை. மொத்த முள்ள 7 யூனியன் பிரதேசங்களுள் **டெல்லிக்கும் பாண்டிச்சேரிக்கும்** மட்டுமே உள்ளது.

**சட்ட மேலவை (விதான் பரிஷத்)**

**(Legislative Council)**

- ❖ மேலவை ஓர் அலங்கார சபையாக மட்டுமே உள்ளது. மேலும் அது நிலைத்திருப்பது என்பது கீழவையின் விருப்பத்தைச் சார்ந்திருக்கிறது.
- ❖ அரசியலமைப்பின் **சரத்து** 169 ன் படி தொடர்புடைய மாநிலத்தின் சட்டப் பேரவை ஒரு தீர்மானம் நிறைவேற்றி பரிந்துரை செய்தால் பாராளுமன்றம் ஒரு சாதாரணச் சட்டத்தின் மூலம் சட்ட மேலவையை ஏற்படுத்தலாம் அல்லது ஏற்கனவே இருக்கின்ற மேலவையை நீக்கலாம்.
- ❖ சட்ட சபையின் பரிந்துரையின் படி பாராளுமன்றம் செயல்பட முடியும். மேலும் இப்பரிந்துரை மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

**அமைப்பு :**

- ❖ மேலவையின் உறுப்பினர்கள் சட்ட சபையின் உறுப்பினர்களில் **மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும்** ஆனால், **நாற்பதுக்குக் குறையாமலும்** இருப்பார்கள்.
- ❖ இயல்பாகவே, நேரடித் தேர்தல் மறைமுகத் தேர்தல் மற்றும் நியமனம் அடங்கிய ஒரு கலப்பு பிரதிநிதித்துவத்தால் அது அமைக்கப்-படுகிறது.
- ❖ மேலவைக்ககான தேர்தல்கள் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையால் ஒற்றை மாற்று வாக்கு முறையில் பின்வருகிற வகையில் நடத்தப்படுகின்றன.

- ❖ $\frac{1}{3}$ **பங்கு** உறுப்பினர்கள் சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- ❖ $\frac{1}{3}$ **பங்கு** உறுப்பினர்கள் பாராளுமன்றச் சட்டத்தில் குறிப்பிட்டதைப் போல நகராட்சிகள், மாவட்ட வாரியங்கள் மற்றும் பிற உள்ளாட்சி ஆணையங்கள் போன்றவற்றால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- ❖ $\frac{1}{12}$ **பங்கு** உறுப்பினர்கள் மாநில பல்கலைக்கழகப் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- ❖ $\frac{1}{12}$ பங்கு உறுப்பினர்கள் ஆசிரியர்-களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ❖ $\frac{1}{6}$ உறுப்பினர்கள், இலக்கியம், கலை அறிவியல், சமூக சேவை மற்றும்

கூட்டுறவு இயக்கம் போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைக் கொண்டு ஆளுநரால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**தகுதிகள் :**

- ❖ அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- ❖ அவர் 30 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
- ❖ பாராளுமன்றத்தில் வரையறுக்கப்பட்டுள்ள மற்ற தகுதிகளையும் அவர் பெற்றிருக்க வேண்டும்.

**பதவிகாலம் :**

- ❖ சட்டமேலவை கலைப்பிற்கு உட்படாத ஒரு தொடரும் அமைப்பாக உள்ளது. பாராளுமன்றத்தின் மாநிலங்களவையைப் போல, மேலவையின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டாண்டு முடிவிலும் பதவி விலகுவார்கள்.
- ❖ மேலவை உறுப்பினர் **ஆறு வருட** பதவிக் காலத்தைப் பெற்றுள்ளார். மேலும் அவர் மேலவைக்கு மறுமுறை தேர்ந்தெடுக்கப்படலாம்.
- ❖ தமிழ்நாட்டில் **1986 நவம்பர் 1** அன்று சட்டமேலவை ஒழிக்கப்பட்டது. (முதலமைச்சர் எம்.ஜி.ஆர்)

**பணிகள் மற்றும் அதிகாரங்கள் :**

- ❖ சாதாரண மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்படலாம்.
- ❖ சட்ட சபையால் இயற்றப்பட்ட பண மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.
- ❖ சட்ட சபையால் இயற்றப்படுகின்ற பண மசோதாக்களை **14 நாட்களுக்கும்** சாதாரண மசோதாக்களை **4 மாதங்களுக்கும்** அது தாமதப்படுத்தலாம்.
- ❖ மேலவையின் தலைவரையும், துணைத் தலைவரையும் உறுப்பினர்களிடம் இருந்தே தேர்ந்தெடுக்கிறது.
- ❖ பல்வேறு வகையான நடடிவக்கைகளுக்காக பல்வேறு குழுக்களை அது அமைக்கிறது.
- ❖ ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்ட இடைக்காலச் சட்டங்களுக்கு மேலவை ஒப்புதல் அளிக்கிறது.
- ❖ பொதுவாகவே, மேலவை ஒரு அலங்கார சபையாக மட்டுமே திகழ்கிறது. அதனால் அது ஒரு நலிந்த அவையாக கருதப்படுகிறது. குடியரசுத் தலைவர் தேர்தலில், அல்லது அரசியலமைப்பு திருத்த மசோதாக்களில் அது பங்கேற்பதில்லை. கீழவையுடன் ஒப்பிடுகையில் மேலவை அதிகாரமற்றதாக உள்ளது.

**சட்டமன்ற அலுவர்கள் :**

- மாநில சட்டமன்றத்தின் ஒவ்வொரு அவையும் அதற்கென தனியே அவைத் தலைவரைக் கொண்டு செயல்படுகின்றன.
- கீழவையான சட்டப் பேரவைக்கு சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகரும் மேலவைக்கு மேலவைத் தலைவர் மற்றும் மேலவைத் துணைத் தலைவரும் அவையை தலைமை தாங்கி நடத்திச் செல்ல அந்தந்த அவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**பேரவைத் தலைவர் (Speaker)**

- பேரவையின் தலைவரான சபாநாயகரை கீழவையின் உறுப்பினர்கள் தமக்குள் தேர்வு செய்கின்றனர். புதிய பேரவையின் முதல் கூட்டத் தொடரின் முதல் கூட்டத்தில் அவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.
- பேரவைத் தலைவர் பொதுவாக பேரவையின் பதவிக்காலம் வரை செயல்படுவார். எனினும், கீழ்க்கண்ட காரணங்களால் அவர் முன்னதாகவே பதவியிழக்கலாம்.
- அவர் தனது பேரவை உறுப்பினர் பதவியை இழக்கும் போது.
- தாமாகவே தனது பதவி விலகலை எழுத்து மூலம் பேரவைத் துணைத் தலைவருக்கு அளிக்கும் போது .
- சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் **14 நாட்கள்** முன்னறிவிப்பிற்குப் பிறகு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் பேரவைத் தலைவர் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

**அதிகாரங்களும் கடமைகளும்**

- பேரவைத் தலைவர் பேரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார். பேரவையின் கூட்டம் நடக்கும் போது அதற்கான விதிகளைப் பின்பற்றி ஒழுங்கையையும், அமைதியையும் நிலைநாட்டுகிறார்.
- சபை விதிகளை அமல் செய்யும் போது அவர் கூறும் விளக்கங்கள் இறுதியானது.
- அவை கூடும் போது, அவை நடைபெற நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவு உறுப்பினர் எண்ணிக்கை இல்லாவிட்டால் கூட்டத்தை தலைவர் ஒத்தி வைப்பார்.
- அவை அலுவல்களுக்கு இடையூறாக இருக்கும் உறுப்பினர்களை எச்சரிக்கவும், அவையிலிருந்து வெளியேற்றவும் அதிகாரம் பெற்றுள்ளார்.
- அவையின் மாண்பு, உரிமைகளைப் பாதுகாக்கவும் காவலராகவும், அவை உறுப்பினர்களின் உரிமைகளையும்,

சலுகைகளையும் பாதுகாப்பவராகவும் விளங்குகிறார்.

- ஒரு மசோதா சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என முடிவு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். இவ்விஷயத்தில் பேரவைத் தலைவரின் முடிவே இறுதியானது.
- மசோதாக்கள், தீர்மானங்கள் மீது சபை வாக்கெடுப்பு நடத்துவதும் அவரே. வாக்களிப்பில் அவர் முதலில் கலந்து கொள்ள முடியாது. வாக்களிப்பின் முடிவில் எதிர்ப்பு மற்றும் ஆதரவு வாக்குகள் சமஎண்ணிக்கையில் உள்ள போது பேரவைத் தலைவர் வாக்களித்து தீர்மானத்தை முடித்து வைப்பார்.
- எல்லாச் சட்டமன்றக் குழுக்களின் தலைவர்களையும் நியமனம் செய்கிறார். மேலும் அவரே விதிகள் பற்றிய குழு, அலுவல்ஆலோசனைக் குழு, பொதுவான குழு ஆகியவற்றின் தலைவராகவும் விளங்குகிறார்.
- உறுப்பினர்களின் **கட்சித்தாவல்** நடவடிக்கையினால் ஏற்படும் தகுதியிழப்பினை முடிவு செய்கிறார்.

**பேரவைத் துணைத் தலைவர் (Deputy speaker)**

- பேரவைத் தலைவர் போலவே, சபை உறுப்பினர்களால், தேர்ந்தெடுக்கப்படு -கிறார். பேரவைத் தலைவர் அவையில் இல்லாத போது அவையை நடத்தும் பொறுப்பினை ஏற்கிறார். அவையின் பதவிக்காலம் வரை இவரும் பதவியில் தொடர்கிறார். எனினும்,
- பேரவையின் உறுப்பினர் பதவியை அவர் இழக்கும் போதும்,
- பேரவைத் தலைவரிடம் எழுத்து மூலமான தனது பதவி விலகலை அளிக்கும் போதும்,
- பெரும்பான்மை உறுப்பினர்களால் 14 நாட்கள் முன்னறிவிப்பிற்குப் பின் அவருக்கெதிரான தீர்மானம் கொண்டு நிறைவேற்றும் போதும் பேரவைத் துணைத் தலைவர் தனது பதவியை இழக்கிறார்.

**மேலவைத் தலைவர்**

- மேலவையின் உறுப்பினர்களால் மேலவைத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார். மேலவைத் தலைவர் கீழ்க்கண்ட முறைகளில் பதவி இழக்கலாம்.
- மேலவையின் உறுப்பினர்பதவியை இழக்கும் போதும்,
- மேலவைத் துணைத் தலைவரிடம் தனது எழுத்து மூலமான பதவி விலகலை அளிக்கும் போதும்,
- மேலவையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றி பதவி நீக்கம் செய்யும் போது

மேலவைத் தலைவர் தனது பதவியை இழக்கிறார்.

- ❖ மேலவையை நடத்திச் செல்லும் போது பேரவைத் தலைவருக்குரிய அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டுள்ளார்.
- ❖ **பண மசோதா** பற்றிய அதிகாரம் இவருக்கில்லை.
- ❖ மேலவைத் தலைவர் அவையில் இல்லாத போது மேலவைத் துணைத் தலைவர் அவையை நடத்திச் செல்வார்.

**சட்டமியற்றும் முறைகள்**

- ❖ மாநிலச் சட்ட சபையின் முக்கியப் பணி சட்டமியற்றுவது. மாநிலச் சட்டசபைகளில் மசோதாக்கள் நிறைவேற்றப்படும் போது பாராளுமன்றத்தின் மக்கள் சபையின் மசோதாக்கள் நிறைவேற்றப்படும் போது பின்பற்றப்படும் முறையே பின்பற்றப்படுகின்றன. அதாவது, சபையில் மசோதா அறிமுகம் செய்யப்பட்டு, குழு பரிசீலனைக்காக அனுப்பப்படுகிறது.
- ❖ பொதுவாக மக்கள் சபையில் உள்ளதைப் போலவே மாநிலச் சட்ட சபைகளிலும் குழுக்கள் இயங்கு -கின்றன. குழுவின் அறிக்கையோடு மசோதா சபையினால் பரிசீலிக்கப் -படுகிறது. பின்பு திருத்தங்கள் விவாதிக்கப்பட்டு, மசோதா நிறைவேற்றப்படுகின்றது.

**சாதாரண மசோதாக்கள் நிறைவேற்றம்**

- ❖ பண, நிதி மசோதா அல்லாத இதர சாதாரண மசோதாக்கள் சட்ட சபையின் எந்தச் சபையிலும் அறிமுகப்படுத்தப்படலாம்.
- ❖ ஒரு மசோதா சட்டசபையின் இரு சபைகளிலும் தனித்தனியாகத் திருத்தங்கள் இல்லாமலோ அல்லது இரு சபைகளும் ஏற்றுக் கொண்ட திருத்தங்களுடனோ நிறைவேற்றப் -பட்டால், அம்மசோதா மாநிலச் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். அம்மசோதா ஆளுநரின் இசைவோடு சட்டமாகின்றது.
- ❖ இரு சபைகள் உள்ள மாநிலத்தில் ஒரு மசோதா சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு சட்ட மேலவைக்கு அனுப்பப்படுகிறது. சட்ட மேலவை அம்மசோதாவை நிராகரிக்கலாம் அல்லது மூன்று மாதங்கள் முடியும் வரை அம்மசோதாவை நிறை -வேற்றாமல் வைத்திருக்கலாம் அல்லது சட்டப் பேரவை ஏற்றுக் கொள்ளாத திருத்தங்களுடன் சட்டமேலவை அம்மசோதாவை நிறைவேற்றலாம்.
- ❖ மேற்கண்ட மூன்று செயல்களில் சட்ட மேலவை எதைச் செய்தாலும், சட்டப்

பேரவை மீண்டும் மசோதாவைச் சட்ட மேலவை பரிந்துரை செய்த அல்லது ஒப்புக் கொண்ட திருத்தங்களுடனோ, அல்லது இல்லாமலோ நிறைவேற்றிச் சட்ட மேலவைக்கு அனுப்பி வைக்கும்.

- ❖ இவ்வாறு இரண்டாவது முறை சட்டப் பேரவையினால் நிறைவேற்றி, அனுப்பி வைக்கப்பட்ட மசோதாவை மேலவை நிராகரிக்கலாம் அல்லது ஒரு மாதம் முடியும் வரை மசோதாவை நிறைவேற்றாமல் வைத்திருக்கலாம் அல்லது சட்டப்பேரவை ஒத்துக் கொள்ளாத திருத்தங்களுடன் மசோதாவை நிறைவேற்றலாம்.
- ❖ மேற்கண்ட முறைகளில் சட்ட மேலவை எதைச் செய்தாலும் சட்டப் பேரவை நிறைவேற்றிய மசோதா அதே வடிவில் அல்லது சட்டமேலவை பரிந்துரை செய்து சட்டப் பேரவை ஒத்துக் கொண்ட திருத்தங்களுடன் மாநில சட்டசபையால் (அதாவது இரு சபைகளாலும்) நிறைவேற்றப் -பட்டதாகக் கருதப்படுகின்றது.
- ❖ சட்ட சபையினால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு மாநில ஆளுநர் இசைவை அளித்தால் சட்டமாகின்றது.
- ❖ ஆளுநர் அம்மசோதாவை இந்தியாவின் குடியரசுத் தவைலரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது மசோதாவிற்கு சம்மதம் தர மறுக்கலாம்.
- ❖ ஆளுநர் சம்மதம் தர மறுத்த மசோதாவை சட்டசபையின் மறுபரிசீலனைக்குத் திருத்தங்களுக்கான பரிந்துரையுடன் அனுப்பி வைப்பார்.
- ❖ அம்மசோதாவை சட்ட சபை மீண்டும் ஆளுநரின் பரிந்துரைகளின் பேரிலான திருத்தங்களுடனோ அல்லது இல்லாமலோ நிறைவேற்றி ஆளுநருக்கு மீண்டும் அனுப்பும். இவ்வாறு இரண்டு முறை சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு ஆளுநர் சம்மதம் தர மறுக்க முடியாது.
- ❖ மாநில ஆளுநர் மாநிலச் சட்டசபை நிறைவேற்றிய ஒரு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கும் போது, குடியரசுத் தலைவர் அம்மசோதாவிற்கு சம்மதம் தரலாம் அல்லது அம்மசோதாவை சில திருத்தங்களுக்கான பரிந்துரையுடன் மீண்டும் சட்டசபையின் பரிசீலனைக்கு அனுப்பும் படி ஆளுநரைப் பணிக்கலாம்.
- ❖ மாநிலச் சட்டசபை அம்மசோதாவை மீண்டும் குடியரசுத் தலைவர் சிபாரிசு செய்த திருத்தங்களோடோ அல்லது திருத்தங்கள் இல்லாமலேயே நிறைவேற்றி மீண்டும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் அம்மசோதா இரண்டு தடவைகள் சட்டசபையால்

நிறைவேற்றப்பட போதிலும் குடியரசுத் தலைவர் அதற்குச் சம்மதம் தர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

**பணமசோதா நிறைவேற்றம்**

- ❖ பண மசோதாக்கள் மாநிலச் சட்ட மேலவையில் அறிமுகம் செய்ய முடியாது.
- ❖ பண மசோதாக்கள் **சட்டப் பேரவையில் மட்டுமே** அறிமுகம் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.
- ❖ பேரவையில் நிறைவேறிய மசோதா பின் மேலவையில் அறிமுகம் செய்யப்படும்.
- ❖ அந்நிலையில் மேலவை திருத்தங்கள் ஏதுமின்றி நிறைவேற்றலாம் அல்லது **14 நாட்கள்** வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வைத்திருக்கலாம் அல்லது **14 நாட்களுக்குள்** திருத்தங்களை முழுமையாகவோ அல்லது ஒரு சில பகுதிகளையோ ஏற்றுக் கொள்ளவும் அல்லது நிராகரிக்கவும் சட்டப் பேரவைக்கு அதிகாரம் உண்டு.
- ❖ மசோதாவை மேலவை **14 நாட்களுக்குள்** திருப்பி அனுப்பவில்லை என்றால் அம்மசோதா இரு சபைகளாலும் நிறைவேற்றப் -பட்டதாக கருதப்படும்.
- ❖ பின்னர் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப் -படும். மாநிலச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பண மசோதாக் -களுக்கு ஆளுநர் சம்மதம் தர மறுக்க முடியாது.
- ❖ ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரை பராளுமன்றத்தில் பின்பற்றப்படும் முறையே இங்கும் பின்பற்றப்படுகிறது.
- ❖ பண மசோதா குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் போது அவர் அதனை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஒப்புதலை நிறுத்தி வைக்கலாம். ஆனால் மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்ப இயலாது.

**சட்டமியற்றலில் சட்டப் பேரவைக்கும் மேலவைக்கும் இடையிலான உறவுகள்**

- ❖ பணமசோதாக்களைப் பொறுத்த வரை, அவற்றை நிறைவேற்றுவதற் -கான முழு அதிகாரத்தையும் சட்டப் பேரவையே பெற்றுள்ளது.
- ❖ சட்ட மேலவை திருத்தங்கள் மட்டுமே பரிந்துரை செய்யலாம். அதைப் அப்படியே நிராகரிக்கும் அதிகாரம் சட்டப் பேரவைக்கு உள்ளது.
- ❖ ஆனால் சட்டமேலவை பண மசோதா நிறைவேற்றுவதை **14 நாட்கள்** வரை தாமதப்படுத்தலாம்.
- ❖ ஆயினும் **15ம் நாள்** அம்மசோதா சட்டமன்றத்தின் இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகவே கருதப்படுகிறது.

❖ சாதாரண மசோதாக்களை நிறைவேற்றுவதிலும் சட்டப் பேரவையின் அதிகாரமே முடிவானது. அவ்வகை மசோதாக் -களை சட்ட மேலவை முதல் கட்டத்தில் **3 மாதங்களும், இரண்டாவது கட்டத்தில் 1 மாதமும்** தாமதப்படுத்தலாம்.

**சட்டமியற்றல்:**

❖ திருத்தங்களைப் பரிந்துரைக்கும் அதிகாரத்தை சட்ட மேலவை பெற்றிருந்தாலும் 4 மாதத்திற்குப் பிறகு சட்டப் பேரவையின் விருப்பமே நிறைவேறும் நிலை உள்ளது.

❖ இரு சபைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டால் அதனைத் தீர்க்க இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தை கூட்டுவதற்கான ஏற்பாடு ஏதும் இல்லை.

**பாராளுமன்றத்திற்கும், மாநிலச் சட்டமன்றத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள்**

| | பாராளுமன்றம் | மாநில சட்டமன்றம் |
|---|---|---|
| 1. | மத்தியப் பட்டியலிலும், பொதுப் பட்டியலிலும் மற்றும் எஞ்சிய அதிகாரங்களிலும் சட்டம் இயற்ற அதிகாரம் படைத்தது. சிற்சில சூழ்நிலைகளில் மாநிலப் பட்டியலிலும் கூட சட்ட மியற்றலாம். | மாநிலப் பட்டியலிலும், பொதுப் பட்டியலிலும் மட்டுமே சட்டம் இயற்ற இயலும். பொதுப் பட்டியலில் சட்டம் இயற்றும் போது பாராளுமன்றமும் சட்டம் இயற்றினால் பாராளுமன்றச் சட்டமே மேலோங்கி நிற்கும். |
| 2. | மாநிலங்களவை, மக்களவை நிறைவேற்றிய ஒரு சாதாரண மசோதாவை 6 மாதங்கள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வைத்து இருக்கலாம். | சட்ட மேலவை, சட்டப் பேரவையின் சாதாரண மசோதா மீது மூன்று மாதங்கள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வைத்து இருக்கலாம். |
| 3. | இரு அவைகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் அதனைத் தீர்க்க இரு அவையின் கூட்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யலாம். | அத்தகைய நடைமுறை ஏதும் இங்கு பின்பற்றப்படுவதில்லை. |
| 4. | மக்களவை இரண்டாவது, முறையாக மசோதாவை நிறைவேற்றிடும் ஏற்பாடு இங்கு இல்லை. முரண்பாடு ஏற்பட்டால் | சட்டமேலவை, சட்டப் பேரவை இயற்றிய ஒரு மசோதாவை நிராகரிக்கும் பட்சத்தில் சட்டப் |

| | | |
|---|---|---|
| | கூட்டுக் கூட்டத்தை கூட்டி தீர்வு காண வேண்டும். | பேரவை மீண்டும் இரண்டாவது முறையாக அம்மசோதாவை நிறைவேற்றி மேலவைக்கு அனுப்பும். அம்மசோதாவிற்கு மேலவை ஒரு மாதத்திற்குள் ஒப்புதல் அளிக்கவில்லை என்றால் இரு சபைகளிலும் அம்மசோதா நிறைவேற்றப்பட்டதாகவே கருதப்படும். மசோதாவின் தொடக்கம் பேரவையாக இருக்கும் போது மட்டும் தான் முரண்பாடு தீர பேரவை இரண்டாவது முறையாக அம்மசோதாவை நிறைவேற்றும். மேலவையின் மசோதாவிற்கு இந்த வாய்ப்பு இல்லை. |

**சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவை உறவுகள்**

**சம அதிகாரம் உடைய விஷயங்கள் :-**

- ❖ சாதாரண மசோதாக்கள் இரு அவைகளிலும், அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படலாம். ஆனால் முரண்பாடு ஏற்பட்டால் சட்டப் பேரவையின் விருப்பமே மேலோங்கி இருக்கும்.
- ❖ ஆளுநரின் அவசரச் சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்.
- ❖ முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் இரு அவைகளில் ஏதேனுமொன்றில் இருந்து தேர்வு செய்யப்படலாம். எனினும் அவர்கள் சட்டப் பேரவைக்குக் கூட்டுப் பொறுப்புடையவர்கள்.
- ❖ மாநில நிதி ஆணையம், பொதுப் பணி ஆணையம், இந்திய அரசுக் கணக்காய்வாளர் மற்றும் தணிக்கை -யாளர் ஆகியோரின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தல்.
- ❖ மாநில பொதுப் பணி ஆணையத்தின் பணி வரம்பினை நீட்டித்தல்.

**சம அதிகாரம் இல்லாத விஷயங்கள் :**

- ❖ பண மசோதாவை சட்டப் பேரவையில் மட்டுமே அறிமுகப்படுத்த இயலும். **மேலவையில் அறிமுகப்படுத்த இயலாது.**
- ❖ பணமசோதாவை மேலவை திருத்தவோ, நிராகரிக்கவோ முடியாது. **14 நாட்களுக்குள்** பரிந்துரைகளுடன் அல்லது பரிந்துரை இல்லாமல் பேரவைக்கு திருப்பி

அனுப்பி விட வேண்டும். சட்டப் பேரவை மேலவையின் பரிந்துரைகளை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்கலாம். அல்லது நிராகரிக்கலாம். அந்த வகையிலும் பண மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகவே கருதப்படும்.

- ஒரு மசோதா பண மசோதாவா இல்லையா என்பதை சட்டப் பேரவைத் தலைவரே தீர்மானிப்பார்.
- சாதாரண மசோதாக்களைப் பொறுத்த மட்டில் பேரவையின் விருப்பமே வெற்றி பெறும்.
- சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு மேலவைக்கு அனுப்பப்பட்ட மசோதா நிறைவேற்றுவதை முதல் கட்டத்தில் 3 மாதமும், இரண்டாவது கட்டத்தில் ஒரு மாதமுமாக நான்கு மாத காலம் தாமதப்படுத்த மட்டுமே மேலவையால் இயலும்.
- பட்ஜெட் அறிக்கையின் மீது மேலவை விவாதம் நடத்தலாம். ஆனால் மானியக் கோரிக்கைகள் மீது வாக்களிக்க முடியாது.
- அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றி பதவி நீக்கம் செய்ய முடியாது. ஏனெனில் அமைச்சரவை சட்டப் பேரவைக்கு மட்டுமே கூட்டுப் பொறுப்பு உடையதாகும்.
- சட்டமேலவையில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஒரு சாதாரண மசோதா. சட்டப் பேரவையால் நிராகரிக்கப்பட்டு விட்டால் அத்துடன் அம்மசோதா முடிவிற்கு வந்து விடும். முரண்பாட்டை தீர்த்து அம்மசோதாவை இரு அவைகளும் நிறைவேற்ற வழியில்லை.
- குடியரசுத் தலைவர் தேர்தலிலும், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலிலும் சட்டமேலவை பங்கேற்பதில்லை. இறுதியாக, சட்ட மேலவை தொடர்ந்து இருப்பதே சட்டப் பேரவையின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.பேரவை விரும்பினால் ஒரு தீர்மானத்தின் மூலம் மேலவையை நீக்கி விடுமாறோ அல்லது உருவாக்குமாறோ பாராளுமன்றத்தைக் கேட்டுக் கொள்ளலாம்.சட்ட மேலவையின் மேற்கண்ட நிலையினை நோக்கும் போது அது, அதிகாரமற்ற, முக்கியத்துவம் அற்ற, ஓர் அலங்கார அமைப்பாக, சட்ட நிறைவேற்றத்தை தாமதப்படுத்துகிற அமைப்பாக மட்டுமே விளங்குவதை உணரலாம்.

# ஜம்மு காஷ்மீரின் அதிகார நிலை

## ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து

- இந்திய அரசியலமைப்பில் உறுப்பு 1ன் மூலம் ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஓர் அங்கமே.
- சரத்து 370 மற்றும் பகுதி 21ன்படி ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின்படி நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் அனைத்து சட்டங்களும் ஜம்மு காஷ்மீருக்கு பொருந்தாது.
- இந்திய மாநிலங்களில் தனி அரசியலமைப்பை கொண்ட ஒரே மாநிலம்.

**இந்தியா மற்றும் ஜம்மு காஷ்மீர் உறவுகள்**

1. ஜம்மு காஷ்மீர் இந்தியா ஒன்றியத்தின் ஒரு பகுதி என்று பகுதி 1 மற்றும் அட்டவணை 1 மூலம் தெளிவாகிறது. ஆயினும் ஜம்மு காஷ்மீர் மாநில சட்டமன்றத்தின் ஒப்பதலின்றி அதன் எல்லை மற்றும் அதன் பெயர் மாற்றத்தை பாராளுமன்றம் மேற்கொள்ள இயலாது.
2. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரை மாநிலப்பட்டியல் உள்ள எந்த தலைப்பின் மீதும் பாராளுமன்றம் சட்டமியற்ற இயலாது.
3. மூன்று பட்டியல்களிலும் குறிப்பிட்ட எஞ்சிய அதிகாரம் மாநில அரசாங்கத்திடம் உள்ளது. மற்ற மாநிலத்தை பொறுத்தவரை இவ்வதிகாரம் பாராளுமன்றத்தில் உள்ளது.
4. பாராளுமன்றம் இயற்றும்தடுப்பு காவல் தடுப்பு சட்டங்கள் ஜம்மு காஷ்மீருக்கு தானாகவே பொருந்தாது. அத்தகைய சட்டங்கள் அம்மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே செல்லத்தக்கவை.
5. சொத்துரிமை இந்திய அரசியல -மைப்பில் சாதாரண சட்ட உரிமையாக உள்ளது. (300A பகுதி XII) (44வது திருத்தம் 1978), ஆனால் ஜம்மு காஷ்மீரில் அடிப்படை உரிமையாகவே நடைமுறையில் உள்ளது. அது -போலவே அங்கு சொத்துக்களை வாங்கவும் விற்கவும் ஜம்மு காஷ்மீர் மாநிலப் பிரஜைகளுக்கு மட்டுமே உரிமையுண்டு.
6. இந்திய அரசியமைப்பின் பகுதி IV மற்றும் IVA சொல்லப்பட்டுள்ள

அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை -களை கோட்பாடுகள் மற்றும் அடிப்படை கடமைகள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை கட்டுப்படுத்தாது.

7. தேசிய நெருக்கடி நிலையைப் பொறுத்தவரை போர் அல்லது அயல்நாட்டு ஆக்கிரமிப்பு காரணமாக மட்டுமே ஜம்மு காஷ்மீரில் பிரகனடப்படுத்த இயலும். ஆயுத -மேந்திய உள்நாட்டுக் கலவரம் காரணமாக கொண்டு வரப்படும் நெருக்கடி நிலையை ஜம்மு காஷ்மீரில் பிரகனடப்படுத்த இயலாது.
8. ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு நிதி நெருக்கடி நிலையை ஜனாதிபதி அறிவிக்க இயலாது.
9. மாநில நெருக்கடியை ஜம்மு காஷ்மீருக்கு அமல்படுத்தலாம். ஆயினும் ஜம்மு காஷ்மீர் அரசியலமைப்பை மீறப்பட்டதாக மட்டும் இருக்க வேண்டும். (இந்திய அரசியலமைப்பை அல்ல)
10. இரண்டு வகையிலான மாநில நெருக்கடி உள்ளது. இந்திய அரசியலமைப்புபடி ஜனாபதிபதி ஆட்சியும் மாநில அரசியலமைப்புப்படி ஆளுநர் ஆட்சியும் அமல்படுத்தலாம்.
11. சர்வதேச உடன்பாடுகள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் தொடர்புடையது எனில் அம்மாநிலத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.
12. இந்திய அரசியலமைப்பில் கொண்டு -வரப்படும் சட்டத்திருத்தம் குடியரசுத் தலைவர் கட்டளை இல்லையென்றால் பொருந்தாது.
13. இந்திய அரசியலமைப்பின் அட்ட -வணை பகுதி V மற்றும் VI ஜம்மு காஷ்மீருக்கு பொருந்தாது.
14. உச்ச நீதிமன்றம் / மத்திய தேர்தல் ஆணையம் தலைமை தணிக்கை அதிகாரி போன்றவர்களின் சட்ட -வரையறை ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தும்.
15. ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகளை மட்டும் அமலாக்கம் செய்யப்படும்.
16. பகுதி II ன்படி ஜம்மு காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தால் ஜம்மு காஷ்மீரின் நிரந்தர குடியுரிமை மறுக்கப்படுகிறது. ஆனால் மறுபடியும் ஜம்மு காஷ்மீருக்கு திரும்பினால் இந்திய குடியுரிமை வழங்கப்படுகிறது.
17. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தன்னிச்சை அதிகாரம் அதிகம் கொண்ட மாநிலம் மத்திய அரசின் சட்டவரையறை கட்டுப்படுத்தப் -படுகிறது.

**தற்போதைய இந்தியா மற்றும் ஜம்மு காஷ்மீர் உறவுகள்**

1. ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகும்.

2. சமூக நீதி பொதுவுடமை சமத்துவம் சகோதரத்துவம் ஜம்மு காஷ்மீரில் நெறியப்படுத்தப்படுகிறது.
3. ஜம்மு காஷ்மீரின் எல்லைகள் ஆகஸ்ட் 15, 1947ல் வரையறுக்கப் -பட்டதாகும்.
4. ஜம்மு காஷ்மீரில் நிரந்தர குடியுரிமை பெற்றவர் (14 மே 1954)

   மாநிலத்தின் வகுப்பு I அல்லது வகுப்பு II க்கு உட்பட்டவர்கள்

- சொத்துக்களை வைத்திருத்திருத்தல் வேண்டும்.
- வகுப்பு I அல்லது வகுப்பு II சார்ந்தவர்கள் மே 14 1954ல் குடிபெயர்ந்து பாகிஸ்தானுக்கு சென்று மார்ச் 1, 1957க்குள் திரும்ப வந்தவர்களுக்கு வழங்கப்படும்.

5. இம்மாநிலத்தின் நிரந்தர குடியுரிமை பெற்ற அனைவருக்கும் இந்திய அரசியலமைப்பின் படி அனைத்து உரிமைகளும் வழங்கப்படுகின்றன.
6. ஆனால் நிரந்தர குடிமகன் வரையறை செய்யும் அதிகாரம் மாநில அரசாங்கத்திடமே உள்ளது.
7. அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் மாநில அரசின் அடிப்படையாக கொண்டுள்ளது. ஆயினும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல இயலாது.
8. மாநில சட்டமன்றம் இரு அவைகளை கொண்டுள்ளது. சட்டமன்ற கீழவையில் 100 (24 இடங்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு இடங்களில் உள்ளது) மேலவையில் 26 இடங்கள் உள்ளது.
9. உயர் நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி மற்றும் இரண்டு மேற்பட்ட நீதிபதிகளை ஜனாதிபதி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் ஆளுநரிடம் கலந்து ஆலோசித்து நியமனம் செய்கிறார். உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமையின் நீதிப்பேராணையை மட்டும் அமலாக்கம் செய்ய முடியும்.
10. மாநில அரசாங்கம் ஜம்மு காஷ்மீரின் அரசியலமைப்பை மீறினால் மட்டும் ஆளுநர் ஆட்சி இந்திய அரசியலமைப்பை மீறினால் ஜனாதிபதியின் ஆட்சி நடைமுறைப் -படுத்தப்படும் (முதல் முறையாக 1977)
11. உருது மாநில மொழியாகவும், ஆங்கிலம் அலுவலக மொழியாகவும் உள்ளது.
12. சட்ட திருத்தம் மசோதா சட்டமன்ற கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த வேண்டும் மற்றும் இரு அவைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும். ஆனால் இந்தியா காஷ்மீர் உறவுகள் தொடர்பான சட்ட திருத்த மசோதா கொண்டுவர இயலாது.

**முக்கியக் குறிப்பு :**

- 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் போது ஜம்மு காஷ்மீர் மாநிலம் இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ சேர வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டது.
- இதற்கிடையில் ஜம்மு காஷ்மீர் மகாராஜா இந்தியாவுடன் இணையும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். ஆனால் தன்னாட்சிக்கான சில சலுகைகளும் வழங்கப்பட்டன.
- இம்மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து அரசியல் அமைப்பின் சரத்து 370-ல் கூறப்பட்டுள்ளது. இச்சிறப்பு அந்தஸ்தின் முக்கிய இயல்புகள்.

1. இம்மாநிலத்திற்கென தனியான அரசியலமைப்பு உள்ளது. மேலும் இம்மாநிலத்தில் **"இரட்டை குடியுரிமை கொள்கையும்"** பின்பற்றப்படுகின்றன.
2. மற்ற மாநிலங்களைப்போல் அல்லாமல் மீதமுள்ள அதிகாரங்கள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சட்டசபையிடமே இருக்கும். (பாரளுமன்றத்திடம் அல்ல)
3. போர் அல்லது வெளிநாட்டவரின் தாக்குதலின் மீது தேசிய நெருக்கடி நிலையை பிரகடனம் செய்யும் போது மட்டுமே அது ஜம்மு காஷ்மீருக்கும் பொருந்தும்.
4. ஆனால் ஆயுதமேந்திய போராட்டத்தின் மீதான தேசிய நெருக்கடி நிலை ஜம்மு காஷ்மீருக்குப் பொருந்தாது.

- அம்மாநிலத்திற்கென முதலமைச்சரை கலந்தாலோசித்த பின்னரே அதன் ஆளுநரை நியமிக்க முடியும்.
- எந்த சூழ்நிலையிலும் ஜம்மு காஷ்மீரின் மாநிலப்பட்டியல் (7வது அட்டவணை) கூறப்பட்டுள்ள விவகாரங்களின் மீது பாராளுமன்றம் சட்டங்களை இயற்ற முடியாது.
- நிதி நெருக்கடி பிரகனடத்தை (சரத்து 360) இம்மாநிலத்தில் அமலாக்க முடியாது.
- குடியரசுத் தலைவரின் ஆட்சியை தவிர ஆளுநரின் ஆட்சியையும் இம்மாநிலத்தில் அதிகபட்சமான **6 மாத காலத்திற்கு** கொண்டு வர முடியும்.
- பாராளுமன்றத்தின் தடுப்புக்காவல் சட்டங்கள் **(சரத்து 22)** இம்மாநிலத்திற்கு பொருந்தாது.
- மாநில சட்டசபையில் ஒப்புதல் இல்லாமல் பாராளுமன்றத்தினால் இம்மாநிலத்தின் பெயர் எல்லை மற்றும் பரப்பு ஆகியவற்றை மாற்ற முடியாது.

**சரத்து 19(1) (f)** மற்றும் **சரத்து 31(2)** ஆகியவை இம்மாநிலத்தில் நீக்கப்படவில்லை எனவே இம்மாநில மக்களுக்கு சொத்துரிமை இன்னும் வழங்கப்பட்டுள்ளது.

# உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு

- ❖ இதுவே மாநில அரசின் நரம்பு மண்டலமாகும்.
- ❖ இது மாநில அரசின் பல துறைகளை உள்ளடக்கியது.
- ❖ இத்துறைகள் அரசியல் அமைச்சர் -களாலும், நிர்வாகத்தின் செயலர் -களாலும் தலைமை வகிக்கப்படுகின்றன.
- ❖ மாநில தலைமை செயலகத்தின் தலைவர் தலைமை செயலர் ஆவார்.
- ❖ ஒரு செயலர், ஒன்று அல்லது இரண்டு தலைவர்களின் தலைவர் ஆவார்.
- ❖ வழக்கமாக ஒரு செயலர் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பார். ஆனால் பொதுப்பணித்துறைக்கு மட்டும் தலைமைப்பொறியாளர் தலைவராக இருப்பார்.
- ❖ ஒரு செயலர் மாநில அரசுக்கான செயலர் ஆவார். அவர் தனிப்பட்ட ஒரு அமைச்சருக்கான செயலர் ஆவார்.

**அமைப்பு (Organisation)**

- ❖ தலைமை செயலக துறைகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்.
- ❖ அனைத்து மாநிலங்களிலும் பொதுவாக இருக்கும் துறைகளாவன.
- ❖ பொது நிர்வாகம், உள்துறை, நிதி, சுகாதாரம், வருவாய், வனத்துறை, கல்வித்திட்டம், சிறை, வேளாண்மை, பஞ்சாயத்து ராஜ்ஜியம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, பொதுப்பணி, கூட்டுறவு, தொழில், சுரங்கம் மற்றும் விரிவிதிப்பு, நீர்பாசனம், மின்சாரவட்டம், போக்குவரத்து, விளம்பரம் மற்றும் தகவல், உள்நாட்டு அரசு, சிவில் சப்ளைஸ், வீட்டுவசதி மற்றும் சமூக வாழ்வு.

**ஊழியர்கள் (Personnel)**

- ❖ ஒரு தலைமைச் செயலகத்துறை குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்டது. தலைமைச் செயலக அலுவலர்களின் அடுக்கு முறை பின்வருமாறு.
- ❖ செயலர்
- ❖ சிறப்பு செயலர் அல்லது கூடுதல் செயலர்
- ❖ இணைச்செயலர்
- ❖ துணைச்செயலர்
- ❖ கீழ்ச் செயலர்
- ❖ உதவிச் செயலர்

**மாநில நிர்வாகத்தின் தலைவர் - ஆளுநர்**

- தலைமைச் செயலக அலுவலகம் பின்வரும் ஊழியர்களை உள்ளடக்கியது.
- பிரிவு அலுவலர் அல்லது கண்காணிப்பாளர்
- உதவி அலுவலர் அல்லது துணைக்கண்காணிப்பாளர்
- மேல்பிரிவு குமாஸ்தா
- கீழ்பிரிவு குமாஸ்தா
- தட்டச்சாளர்
- ஊழியர்கள்

**பணிகள் (Functions)**

- தலைமைச் செயலகம் ஒரு அலுவலர்களின் நிறுவனமாகும்.
- இதன் முக்கிய பணி அமைச்சர்களுக்கு அவர்களின் பணிகளில் உதவுவதே ஆகும்.

**இதன் முக்கிய பணிகளாவன**

- மாநில அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்தல்.
- அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஒருங்கிணைத்தல்.
- சட்டங்களையும் விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் வகுத்தல்.
- மத்திய, மாநில அரசுக்கிடையேயான தொடர்பையும், ஒருங்கிணைப்பையும் பாதுகாத்தல்.
- பட்ஜெட் தயாரிப்பதும் பொதுச்செலவு -களை கட்டுப்படுத்துதல், கொள்கைகளையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதலை மேற்பார்வை -யிடுதல், அமைப்பு சார்ந்த போட்டியை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்தல்.
- கேள்விகளுக்கு பதில் அளித்தல் உள்ளிட்ட அமைச்சர்களின் கடமைகளை சரிவர நிறைவேற்ற அவர்களுக்கு உதவி செய்தல்,
- துறைத் தலைவர்களை நியமித்தலும், சம்பள நிர்வாகத்தினை கவனித்தலும்,
- மாநில அரசுக்கு யோசனைத் தொட்டியாக செயல்படுதல்.
- மாநிலத்தின் நிதி நிலையை மேம்படுத்த வாய்ப்புகளை உருவாக்குதல்
- பொதுமக்களின் மனுக்களை பெற்று அவர்களின் குறைகளைத் தீர்த்தல்,
- பணிகளின் விதிகளையும், அவற்றின் திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ளுதல்

**தலைமைச் செயலர் (Chief Secretary)**

- தலைமைச் செயலரின் பதவி இங்கிலாந்தின் ஆட்சிகாலத்தில் மத்திய அரசில் தோன்றியது.
- இது இந்தியாவின் ஆளுநர் **வெல்லெஸ்லி பிரபு** அவர்களால் 1799 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

**நுகர்வோரியலின் தந்தை - இரால்ப் நடால்**

- இப்பதவியில் முதன் முதலில் **ஜி.ஹெச். பார்லோ** நியமிக்கப்பட்டார்.
- இப்பதவி சுதந்திரத்திற்கு முன் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- தலைமைச் செயலரே மாநில தலைமைச் செயலகத்தின் நிர்வாகத் தலைவராவார்.
- இவரே மாநில நிர்வாகத்தின் தலைவரும், மாநில நிர்வாக அடுக்குமுறையின் சிகரமும் ஆவார்.
- இவரது நிலை மற்ற செயலர்களின் நிலைகளை விட முதலானதாகும்.
- இவர் அனைத்து செயலர்களுக்கும் தலைவராவார். இவர் அனைத்து தலைமைச் செயலக துறைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரமுடையவர்.
- இவர் மாநில நிர்வாகம் முழுவதையும் கட்டுப்படுத்தி தலைமை தாங்கி வழி நடத்துகிறார்.
- **1973ல் இருந்து** தலைமை செயலரே அனைவருக்கும் மூத்த சமூகப்பணியாளர் ஆவார்.
- இப்பதவிக்கு எந்தவித கால நிர்ணயமும் கிடையாது.
- தலைமைச் செயலரின் பதவிக்காலம் 3 லிருந்து 4 வருடங்கள் வரை இருக்க வேண்டும் என்று இந்திய நிர்வாக சீர்திருத்தக்குழு பரிந்துரை செய்தது.

**அதிகாரங்களும் பணிகளும் (Powers and Functions)**

- தலைமைச் செயலர் மாநில நிர்வாகம் தொடர்பான அனைத்து விவகாரங்களிலும் முதலமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் முதல் ஆலோசகராக உள்ளார்.
- மாநில கேபினெட்டிற்கு செயலராக உள்ளார்.
- இவர் கேபினெட் தலைமைச் செயலகத்தின் தலைவராவார். மேலும் தேவைப்பட்டால் கேபினெட் மற்றும் அதன் உட்குழுக்களின் கூட்டங்களிலும் கலந்து கொள்வார்.
- கேபினெட் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதோடு அக்கூட்டங்களின் நடைமுறைகளையும் பதிவு செய்வார்.
- மாநில சமூகப்பணிகளின் தலைவராக செயல்படுவார்
- மூத்த மாநில சமூகப்பணியாளர்களின் நியமனம், பணியிடமாறுதல் மற்றும் பதவி உயர்வு தொடர்பான விவகாரங்களை கையாளுதல்,
- அனைத்து சமூகப் பணியாளர்களையும் மனசாட்சிப்படி செயல்பட வைத்தல்.
- மாநில நிர்வாகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஆவார்.
- துறைகளுக்கிடையேயான ஒத்துழைப்பை உறுதி செய்தல்

- துறைகளுக்கிடையேயான ஒத்துழைப்-பிற்காக அமைக்கப்பட்ட குழுக்களின் தலைவராவார்.
- பல துறைகளின் செயலர்களின் கூட்டங்களை தலைமையேற்று நடத்துவார்.
- மண்டல ஆணையாளர்கள் மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட நிர்வாக துறைகளின் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டங்களுக்கு தலைமையேற்பார்.
- சில தலைமைச் செயலகத் துறைகளின் நிர்வாக தலைவராக செயல்படுவார்.
- பொதுவாக பொது நிர்வாகத்துறை, தொழிலாளர் துறை, திட்டத்துறை, நிர்வாக சீர்திருத்தத்துறை போன்றவை தலைமைச்செயலரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- பொது நிர்வாகத்துறைதான் தலைமை செயலக துறைகளுள் மிகவும் முக்கியமானதாகும். இதன் அரசியல் தலைவர் மாநில முதலமைச்சராவார்.
- அனைத்து மாநிலங்களிலும் தொழிலாளர் துறை தலைமைச்-செயலரின் நேரடித் தலைமையின் கீழ் இருக்க வேண்டும் என்று **இந்திய நிர்வாக சீர்த்திருத்தக்குழு** பரிந்துரை செய்தது.
- இவர் நெருக்கடியான சூழ்நிலைகளில் உயர்நிலை கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்-களின் தலைவராகவோ அல்லது முக்கிய உறுப்பினராகவோ இருப்பார்.
- இவர் நிவாரணப்பணிகளில் அனைத்து அலுவலர்களுக்கும் மாநில அரசின் பிரதிநிதியாக செயல்படுவார்.
- மற்ற செயலர்களின் அதிகார வரம்பிற்குள் வராத விவகாரங்களை தலைமை செயலரே கவனிப்பார்.
- சம்பந்தப்பட்ட மாநிலம் எந்த மண்டலக்குழுவில் உறுப்பினராக உள்ளதோ அக்குழுவின் செயலராக சுழற்சி முறையில் செயல்படுவார்.
- இவர் மாநில அரசின் தலைமை மக்கள் தொடர்பு அதிகாரியாக செயல்படுவார்.
- இவர் தேசிய மேம்பாட்டு குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்வார்.
- இவர் மாநில அரசின் சார்பாக பேசுபவராக செயல்படுவார்.
- சட்டம் ஒழுங்கு மற்றும் திட்ட நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றார்.
- மாநில தலைமைச்செயலகம் முழுவதுமாக இவரது மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- தலைமைச் செயலக கட்டிடம், அமைச்சர்களின் ஊழியர்கள், மத்திய கோப்புப் பிரிவு, தலைமைச் செயலக நூலகம் பாதுகாப்பு. கண்காணிப்பு மற்றும் வார்டு அலுவர்கள் மீது

இவருக்கு நிர்வாக கட்டுப்பாடு உண்டு.

- இவர் சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கும்,மத்திய அரசுக்கும் மற்றும் மற்ற மாநில அரசுகளுக்கு இடையே ஒரு தொடர்பு பாலமாக விளங்குகின்றார்.
- கேபினட் செயலரால் தலைமை வகித்து நடத்தப்படும் தலைமைச் செயலர்களின் ஆண்டு கூட்டத்தில் கலந்து கொள்வார்.
- மத்திய ஆலோசகர்கள் நியமிக்கப்படாத போதும் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் போதும் இவர் ஆளுநருக்கு ஆலோசகராக செயல்படுவார்.
- மாநில தலைமைச் செயலருடன் ஒப்பிடக்கூடிய எந்த பதவியும் மத்திய அரசில் இல்லை.
- மத்தியில் உள்ள கேபினெட் செயலரை மாநில தலைமைச்செயலருடன் ஓரளவு ஒப்பிடலாம்.
- மாநில தலைமை செயலரின் பணிகளும், பங்கும் மிகவும் அதிகமானதும், அகலமானதும், வேறுபட்டதும் ஆகும். ஆனால் மத்திய அவை கேபினெட் செயலர், உள்துறை செயலர், நிதிச் செயலர் மற்றும் தொழிலாளர் செயலர் ஆகியவர் -களால் பகிர்ந்து கொள்ளப் -பட்டுள்ளன.

**தலைமைச் செயலருக்கும் கேபினெட் செயலருக்குமுள்ள ஒற்றுமைகள்:**

**(Similarities between the Chief Secretary and the Cabinet Secretary)**

- இருவரும் தங்களது நிர்வாகத் தலைமைக்கு தலைமை ஆலோசகர் -களாகவும்,
- தங்களது நிர்வாகத்திற்கு தலைமை ஒருங்கிணைப்பாளராகவும்,
- கேபினெட்டிற்கு செயலராகவும் உள்ளனர்.
- இருவரது பதவிகளும் மத்திய அரசில் உருவானவை.
- இருவரும் தங்களது சமூகப் பணிகளுக்கு தலைவர்களாவர்.
- இருவரும் தங்களது கேபினெட் எடுக்கும் முடிவுகள் அமலாக்கப்படு -வதை மேற்பார்வையிடுவர்.

**தலைமைச் செயலருக்கும் கேபினெட் செயலருக்குமுள்ள வேறுபாடுகள்**

**(Difference between the Chief Secretary and the Cabinet Secretary)**

- தலைமைச் செயலர் மாநில செயலர்களுக்கு தலைவராவார். ஆனால் கேபினட் செயலர் மத்திய செயலர்களின் தலைவர் அல்ல.
- தலைமைச் செயலரின் அதிகாரங் -களும், பணிகளும் கேபினட் செயலரின் அதிகாரங்களையும்,

பணிகளையும் விட அதிகமானவை -யாகும்.

❖ தலைமைச் செயலர் மாநில தலைமை செயலகத்தின் நிர்வாக தலைவராவார். ஆனால் கேபினட் செயலர் மத்திய தலைமை செயலகத்தின் நிர்வாகத் தலைவர் அல்ல.

❖ தலைமைச் செயலர் மாநில அளவில் மீதமாய் இருக்கும் அதிகாரங்களை தன்னிடமே வைத்திருப்பார். ஆனால் மத்தியில் இருக்கும் கேபினட் செயலர் அப்படி இருக்க முடியாது.

❖ மாநிலத்தின் சில துறைகள் தலைமைச்செயலரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். ஆனால் கேபினட் தலைமைச் செயலகத்தை தவிர எந்த துறையும் கேபினட் செயலரின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்காது.

## மாவட்ட ஆட்சியர் (District Collector)

❖ மாவட்ட ஆட்சியர், மாவட்ட நிர்வாகத்தின் தலைவரும், மாநில அரசின் பிரதிநிதியுமாவார்.

❖ மாவட்ட ஆட்சியர் பதவி ஒப்பற்றதாகும். பிரான்ஸ் நாட்டில் Perfect பதவியைத் தவிர வேறு எந்த நிர்வாக முறையை இதனுடன் ஒப்பிட முடியாது.

❖ மாவட்ட ஆட்சியர், உத்திரப்பிரதேசம், பீகார் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மாவட்ட நீதிபதி என்றும் அஸ்ஸாம், ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், அரியானா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் துணை ஆணையர் என்றும் அழைக்கப்படுகிறார்.

❖ பொதுநிர்வாகத் துறைகள் மாவட்ட ஆட்சியரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இவரைச் சுற்றியே மாவட்ட நிர்வாகம் முழுவதும் சுழலும்.

❖ மாவட்ட ஆட்சியர், அரசியல் முறையில் முதல்வராலும், நிர்வாக முறையில் தலைமைச்செயலராலும் தலைமை வகிக்கப்படுவார். மாநில அரசின் பொது நிர்வாகத்துறையை சேர்ந்தவர் ஆவார்.

❖ மாவட்ட ஆட்சியர் மண்டல ஆணையர்களை கட்டுப்படுத்தி மேற்பார்வையிடுவர்.

## தோற்றம் (Evolution)

❖ மாவட்டம் என்பது இந்தியாவின் நிர்வாகத்தினுடைய அடிப்படை புவியியல் அலகு ஆகும்.

❖ மாவட்டம் என்ற சொல்லுக்கு நிர்வாக காரணத்திற்காக குறிக்கப்பட்ட பிரதேசம் என்றும் ஆக்ஸஃபோர்டு அகராதி பொருள் கூறுகிறது.

❖ மொகலாய நிர்வாகத்தின் போது மாவட்டம் சர்க்கார் என்று அழைக்கப்பட்டு சுபேதாரின் மாவட்ட

கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும், கரோரி/பாஜ்தார் எனப்படும் ராணுவ அதிகாரியின் தலைமையின் கீழ் இருந்தது.

❖ தற்பொழுதுஉள்ள மாவட்ட ஆட்சியர் பதவி 1772 ஆம் ஆண்டு இந்திய ஆளுநராக இருந்த **வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபு** அவர்களால் உருவாக்கப்பட்டது.

❖ அவர் மிகவும் அதிகாரம் உடையவராக இருந்து சிறிய நெப்போலியன் என்று அழைக்கப்பட்டார்.

**பணிகள் (Role and Function)**

❖ வருவாய் நிர்வாகம்: வரலாற்றின் அடிப்படையில் வருவாய் வசூலிப்பதே மாவட்ட ஆட்சியரின் முதல் மற்றும் முக்கியமான பணியாக இருந்தது.

❖ ஆனால் அவர் இப்பொழுதும் மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் தலைவராவார்.

❖ மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் உள்ள வருவாய் வாரியம் அல்லது வருவாய் ஆணையம் அல்லது பஞ்சாப், அரியானா மற்றும் ஜம்முகாஷ்மீரில் உள்ள நிதி ஆணையர் மூலம் வருவாய் வசூலிக்க மாநில அரசுக்கு மாவட்ட ஆட்சியர் பொறுப்புடையவராவர்.

❖ மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் தலைவர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியருக்கு பின் வரும் பணிகள் உண்டு.

❖ நில வருவாய் வசூலித்தல்.

❖ அரசாங்கத்திற்கு வரவேண்டிய மற்ற வருவாய்களை வசூலித்தல்.

❖ TACCAVI கடன்களை வழங்குதல் மற்ற வருவாய்களை வசூலித்தல்.

❖ நில கோப்புகளை பராமரித்தல்.

❖ கிராமப்புற புள்ளி விவரங்களை சேகரித்தல்.

❖ தொழில் நிறுவனம் அமைத்தல் கட்டுமானம், சேரி ஒழிப்பு போன்ற காரணங்களுக்காக நிலங்களை கையகப்படுத்துதல்.

❖ நிலச்சீர்திருத்தங்களை அமல்படுத்துதல்.

❖ விவசாயிகளின் நலவாழ்வினை கவனித்தல்.

❖ நெருப்பு, பஞ்சம் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் போது வழங்கவேண்டிய நிவாரணம் குறித்து பரிந்துரை செய்தல் மற்றும் பயிர் இழப்பினை மதிப்பீடு செய்தல்,

❖ கருவூலத்தையும், துணைக் கருவூலத்தையும் மேற்பார்வையிடல்,

❖ ஸ்டாம்ப் சட்டத்தை அமலாக்குதல்.

❖ புலனாய்வு மானியங்களை வழங்குதல்.

❖ அரசின் எஸ்டேட்டுகளை நிர்வகித்தல்,

❖ கீழ் அதிகாரிகளால் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிராக வருவாய் முறையீடுகளை கேட்டல்.

- ஜமீன்தாரி முறை ஒழிப்பிற்கான நஷ்டஈட்டினை வழங்குதல்.

**மாநிலத்தின் கீழான நிர்வாகம்:**

- மாநில அரசு - முதலமைச்சர்
- மாநில தலைமை செயலகம் - தலைமைச் செயலர்
- மண்டலம் - மண்டல அலுவலர்
- மாவட்டம் - மாவட்ட ஆட்சியர்

**சட்டம் ஒழுங்கு (Law and Order)**

- மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதே மாவட்ட ஆட்சியரின் முதல் கடமையாகும்.
- இதற்காக காவல்துறை கண்காணிப்பாளர்களின் தலைமையி -லான மாவட்ட காவல் துறை, மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் கீழ் இயங்கும்.
- சுதந்திரத்துக்கு முன் மாவட்ட ஆட்சியர் நிர்வாக மற்றும் சட்ட மாஜிஸ்ட்ரேட்டாக செயல்பட்டார்.
- **நிர்வாக மாஜிஸ்ட்ரேட்** என்ற முறையில் அவருக்கு சட்ட ஒழுங்கை பாதுகாக்கும் கடமை உள்ளது.
- **சட்ட மாஜிஸ்டிரேட்** என்ற முறையில் அவர் சமூக மற்றும் குற்றவியல் வழக்குகளுக்கு பொறுப்புடையவராவர்.
- சுதந்திரத்திற்குப் பிறகு அரசுக் கொள்கையின் வழிகாட்டி நெறிமுறையில் உள்ள சரத்து 50ன் படி நிர்வாகம் மற்றும் சட்டம் தனித்தனியாக பிரிக்கப்பட்டது.
- இதன் தொடர்ச்சியாக சட்ட மாஜிஸ்ட்ரேட் என்னும் மாவட்ட ஆட்சியரின் பங்கு முடிவடைந்தது.
- மாவட்ட மாஜிஸ்டிரேட் என்னும் முறையில் மாவட்ட ஆட்சியர் பின்வரும் பணிகளை கவனிக்கிறார்.
- தனக்கு கீழ் உள்ள நீதிபதிகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்,
- குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் 144வது விதியின் கீழ் சமூக அமைதிக்கும், சட்டம் ஒழுங்கிற்கும், ஆபத்து ஏற்படும் போது உத்தரவுகளை வெளியிடுதல்.
- அரசிடமிருந்தும் மற்றவர்களிட -மிருந்தும் பெற்ற மனுக்களின் மீதான கோரிக்கையை நிறைவேற்றல்.
- கைதிகளை பரோலில் விடுவித்தல்.
- சிறைகளில் ஆய்வு நடத்துதல்,
- அரசுக்கு ஆண்டு குற்றவியல் அறிக்கை அளித்தல்
- ஆயுதங்கள், உணவுவிடுதி, வெடிபொருட்கள் மற்றும் பெட்ரோலியம் போன்ற பல வகையான உரிமைகளை வழங்குதல், தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மற்றும் ரத்து செய்தல்.
- சிறைக் கைதிகளுக்கு வசதியான வகுப்புகளை வழங்குதல்.

- உள் அமைப்புகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்,
- கேளிக்கை வரி மற்றும் பத்திரிக்கை சட்டங்களை அமலாக்குதல்,
- அசாதாரணமான சூழ்நிலைகளில் சமூக நிர்வாகத்தில் உதவ ஆயுதப் படைகளை அழைத்தல்.
- தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் வர்த்தக குறியீட்டு சட்டத்தின் கீழ் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்,
- யாரும் உரிமை கோராத சொத்தினை விற்க உத்தரவிடுதல்.
- காடுகளை மேம்படுத்தும் திட்டங்களை பரிந்துரை செய்தல்.

**மேம்பாட்டு நிர்வாகம் (Development Administration)**

- சுதந்திரத்திற்குப் பின் மேம்பாட்டு திட்டங்கள் தொடங்கப்பட்ட பின்னர் அத்தகைய திட்டங்களை அமலாக்குவதில் மாவட்ட ஆட்சியருக்கு முக்கிய பங்கு உண்டு.
- பல மாநிலங்களில் மாவட்ட ஆட்சியர் மாவட்ட மேம்பாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் இந்திய சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் **1980 ஆம் ஆண்டு** அமைக்கப்பட்ட மாவட்ட கிராமப்புற மேம்பாட்டு அமைப்பின் தலைவராவார்.
- மேம்பாட்டு நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சியரின் முக்கிய பங்கு ஒருங்கிணைப்பே ஆகும்.
- 73வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் 1992, 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் பஞ்சாயத்து ராஜ்ஜிய சட்டங்கள் மேம்பாட்டு நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சியரின் பங்கினை குறைத்தன.

**மற்ற அதிகாரங்களும் பணிகளும் (Other Powers and Function)**

- மாவட்ட திட்ட அமலாக்க குழுவிற்கு தலைமையேற்றல்,
- மாவட்ட தலைமை அதிகாரியாக செயல்படுதல்,
- நிர்வாக மற்றும் குடிமக்களுக்கிடை -யேயான தொடர்பு பாலமாக செயல்படுதல்,
- மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுதல்,
- மாவட்டத்தில் நடைபெறும் விழாக்களில் மாநில அரசின் பிரதிநிதியாக கலந்து கொள்ளுதல்.
- இயற்கை சீற்றங்கள் மற்றும் பிற அவசர நிலைகளின் போது தலைமை நிர்வாகியாக செயல்படுதல்.
- மாவட்ட தொழிலாளர்களின் விவகாரங்களை கையாளுதல்,

- சிவில் சப்ளைக்கு (வட்ட வழங்கல்) பொறுப்புடையவராக இருத்தல்,
- சமூக பாதுகாப்பு தொடர்பான வேலைகளை கையாளுதல்,
- இராணுவ அதிகாரிகளுடனான தொடர்பை பராமரித்தல் மற்றும் பணியிலுள்ள, ஓய்வு பெற்ற ஆயுதப்படை வீரர்களின் நலனை காத்தல்,
- பாராளுமன்றம் மற்றும் சட்டசபை தேர்தல்களுக்கு தகவலனுப்பும் அதிகாரியாக செயல்படுதல்,
- மாவட்ட அளவில் தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்தல்,
- மாவட்ட கணக்கெடுப்பு அதிகாரியாக செயல்படுதல்.

**மாவட்டத்தின் கீழான நிர்வாகம்:**

- மாவட்டம் - மாவட்ட ஆட்சியர்
- துணை மண்டலம் - துணை மண்டல அதிகாரி
- தாலுகா - தாசில்தார்
- வட்டம் - வருவாய் ஆய்வாளர்
- கிராமம் - பட்வாரி

**துணை மண்டலம் (Sub – Division)**

- நில வருவாய் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் வருவாய் மற்றும் குற்றவியல் நிர்வாகத்திற்காக ஒரு மாவட்டம் சிறு சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டது.
- துணை மண்டல அதிகாரியாக ஒரு இந்திய நிர்வாக பணிகள் அல்லது மாநில சமூகப்பணிகளின் உறுப்பினர் ஒருவரை மாநில அரசு நியமித்து தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கலாம்.
- மாவட்ட ஆட்சியரைப் போன்றே அவரும் அப்பிரதேசத்தின் அதிகாரி, நிர்வாகி மற்றும் பல பணிகளை செய்யக் கூடியவர் ஆவார்.
- அவருக்கு வருவாய், நீதி மற்றும் நிர்வாகம் சார்ந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.
- தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் மாநில அரசின் பிரதிநிதி என்ற முறையில் துணை மண்டலத்தில் உள்ள அரசு அலுவலர்களின் செயல்பாடுகளுடன் இவர் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்.
- இவர் வருவாய் தொடர்பான விவகாரங்களில் மாவட்ட ஆட்சியருக்கும் தாசில்தாருக்கும் இடையேயான இணைப்பாகவும் சட்டம் ஒழுங்கு தொடர்பான விவகாரங்களில் மாவட்ட நீதிபதிக்கும், காவல் நிலைய அதிகாரிகளுக்கும் இடையே இணைப்பாகவும் செயல்படுகின்றார்.
- இவர் மாவட்ட ஆட்சியரின் தலைமை ஆலோசகராவார். இவர் துணை மண்டலத்தில் நிர்வாகம் தொடர்பான

அம்சங்களில் மாவட்ட ஆட்சியருக்கு பொறுப்புடையவராவார்.

- துணை மண்டலம் இரு வகைப்படும். அலுவலக வகை, சுற்றுப்பயண வகை.
- இதன் பெயர்களும், தலைவரின் பெயர்களும் மாநிலத்திற்கு மாநிலம் பின்வருமாறு வேறுபடும்.

**தாலுகா:** (Tehsil)

- ஒவ்வொரு துணை மண்டலமும் மேலும் சிறுசிறு பிரிவுகளாக பிரிக்கப்படும்.
- நிலவருவாய், நிலக்கோப்புகள், கருவூலம், நீதிமன்றம் போன்ற அம்சங்களுக்கு தாலுகாவே அடிப்படை அலகாகும்.
- பல்வேறு துறைகளின் அலுவலகங்களும் இதனுள் அமைந்திருப்பதால் இது ஒரு சிறிய மாவட்டமாக கருதப்படுகிறது.
- தாசில்தார் மாநில சமூகப்பணிகளை சார்ந்தவரும் கெஸட் அந்தஸ்தில் உள்ள அதிகாரியும் ஆவார்.
- இவர் தாலுகாவில் வருவாய் வசூலிப்பதற்கும் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கும் பொறுப்புடையவராவார்.

**வட்டம்:** (Circle)

- வருவாய் நிர்வாகத்திற்காக ஒவ்வொரு தாலுகாவும் சிறுசிறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- வட்ட ஆய்வாளர் வருவாய் நிர்வாக சங்கிலியில் முதல்நிலை மேற்பார்வையாளராக உள்ளார்.இவர் வருவாய் நிர்வாகத்தையும் நிலகோப்புகளையும் மேற்பார்வை இடுவார்.
- இவர் பொதுவாக மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படுவார்.

**கிராமம்** (Village)

- அனைத்து மாநிலங்களிலும் நிர்வாக மற்றும் நிதி சார்ந்த காரணங்களுக்காக பிரிக்கப்பட்டிருக்கும் அனைத்துக்கும் கீழான அமைப்பு கிராமமேயாகும்.
- தமிழ்நாட்டில் கிராமத்தின் மிக முக்கியமான பதவியின் பெயர் **கிராமத்தலைவர்** ஆகும்.
- இவருக்கு இணையான பதவி மகாராஷ்டிராவில் **படேல்** எனப்படுகிறது.

| மாநிலங்கள் | பிரிவுகள் | தலைவர்கள் |
|---|---|---|
| **உத்திரப்பிரதேசம்** | துணை மண்டலம் | துணை மண்டல நீதிபதி |
| **தமிழ்நாடு** | வருவாய் மண்டலம் | வருவாய் மண்டல அதிகாரி |
| **மகாராஷ்டிரா** | பிராண்ட் | பிராண்ட் அதிகாரி துணை ஆட்சியர் |

| மாநிலங்கள் | பிரிவுகள் | தலைவர்கள் |
|---|---|---|
| **உத்திரப்பிரதேசம்** | தாசில் | தாசில்தார் |
| **தமிழ்நாடு** | தாலுகா | தாசில்தார் |
| **மகராஷ்டிரா** | தாலுகா / மஹால் | மாம்லத்தார் / மஹால்கர் |

- இதற்கு இணையான பதவி எதுவும் உத்திரப்பிரதேசத்தில் இல்லை.
- பஞ்சாப், இமாச்சலப்பிரதேசம், ஹரியானா மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பட்வாரி எனப்படுபவர் தான் வருவாய் கணக்குகளையும், நில கோப்புகளையும் பராமரிப்பார்.
- இவர் பல மாநிலங்களில் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். உதாரணமாக உத்திரப்பிரதேசத்தில் லோக்பால் எனவும், தமிழ்நாட்டில் கர்ணம் அல்லது கணக்குப்பிள்ளை மகாராஷ்டிரத்தில் தலாத்தி எனவும் அழைக்கப்படுகின்றார்.
- இவர் மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் அடிப்படை என அழைக்கப்படுகிறார்.
- ஊர் மன்றக் கூட்டங்கள் **ஆண்டுக்கு நான்கு முறை** கூடுகின்றன. 1. ஜனவரி 26 குடியரசு நாள், 2. மே 1 தொழிலாளர் நாள், 3. ஆகஸ்ட் 15 விடுதலை நாள், 4. அக்டோபர் 2 மகாத்மா காந்தி பிறந்த நாள்.

## உள்ளாட்சி அரசாங்கம்

- ஒரு குறிப்பிட்ட சிறிய நிலப்பரப்பில் வாழும் மக்கள் தங்களது சில தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், தல விவகாரங்களைக் கவனிக்கவும் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் ஓர் அமைப்பை உள்ளாட்சி அரசாங்க அமைப்பு என வழங்கலாம்.
- அவ்விடத்தில் வாழும் மக்களே அந்த ஆட்சி அமைப்பின் விவகாரங்களைக் கவனித்தால் அது உள்ளாட்சி அல்லது **தலசுய ஆட்சி** எனப்படுகிறது.
- கிராமங்களிலும் நகரங்களிலும் வாழும் மக்களின் நல்வாழ்வை உயர்த்துவதற்கான வழிமுறைகளை வகுத்து அவற்றைச் செயல்படுத்துவதே தலசுய ஆட்சி நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

**தலசுய ஆட்சியின் பணிகள்:**

- தலசுய ஆட்சியின் பணிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
- ஒன்று கட்டாயப்பணிகள் (Obligatory) மற்றொன்று விருப்பப்பணிகள் (Discretionary).

> 1688 ஆம் ஆண்டில் தான் இந்தியாவின் முதலாவது உள்ளாட்சி அமைப்பான **சென்னை மாநகராட்சி** ஏற்படுத்தப்பட்டது.

- ❖ தெருக்கள், பொது இடங்களுக்கு விளக்கு போடுதல், தண்ணீர் வசதி, பிறப்பு இறப்பு பதிவு, தொடக்கக் கல்வி மருத்துவமனை, தீயணைப்பு போன்ற பொதுநலத்திற்கு அவசியமானவை கட்டாயப் பணிகளாகும்.
- ❖ பூங்கா அமைத்தல், பொது தோட்டங்கள், நூலகங்கள், நீச்சல் குளங்கள், மனமகிழ் மன்றங்கள் போன்ற வசதிகள் செய்து தருவது விருப்ப பணிகள் ஆகும்.

**இந்தியாவின் உள்ளாட்சி அரசாங்கம்**

- ❖ பண்டைகால இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டதை மனுநூல், அர்த்த சாஸ்திரம் வாயிலாகவும், சோழர் கால குடவோலை முறை பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு மூலமும் அறியலாம்.
- ❖ ஆனால் தற்போதைய உள்ளாட்சி அமைப்புகள் ஆங்கிலேயர் காலத்தில் தான் தோன்றி வளர்ந்தன.
- ❖ உள்ளாட்சியில் முக்கியமான சீர்த்திருத்தங்களை ரிப்பன் பிரபு மேற்கொண்டார். தற்போதைய இந்திய அரசியலமைப்பின் நெறிசெய் விதிகளின் **சரத்து 40** "அரசு கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி அவை சுய ஆட்சி அமைப்புகளாக இயங்குவதற்கு தேவையான அதிகாரங்களை வழங்க வேண்டும்" எனக் கட்டளை இடுகிறது.
- ❖ இதனடிப்படையில் இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

**பஞ்சாயத்து ராஜ்ஜியம் (Panchayat Raj)**

- ❖ பஞ்சாயத்து ராஜ்ஜியம் என்னும் சொல் கிராமப்புற உள்நாட்டு சுய அரசினை குறிக்கின்றது.
- ❖ வேர் (அடி மட்ட அளவில் இருந்து) அளவிலிருந்து ஜனநாயகத்தை அமைப்பதற்காக இவை அந்தந்த மாநிலத்தின் சட்டசபைகள் இயற்றிய சட்டங்களின் மூலம் உருவாக்கப்பட்டன.
- ❖ இதற்கு கிராமப்புற மேம்பாட்டுத் -துறையின் கடமைகளும் பணிகளும் உள்ளன.
- ❖ 73வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1992ன் மூலம் இது அரசியல் அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.
- ❖ மத்திய அளவில் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளின் செயல்பாடுகளை கவனிக்கிறது.
- ❖ உள்நாட்டு அரசாங்கம் என்பது மாநிலங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு அம்சமாகும்.
- ❖ இந்திய அரசியலமைப்பின் 7வது அட்டவணையில் மாநிலங்களின் பட்டியல் உள்ள 5வது பிரிவு இதனைக் கையாளுகிறது.

**பல்வந்த்ராய் மேத்தா குழு (Balwanthray Metha Committee)**

- சமூக மேம்பாட்டு திட்டம் (1952) மற்றும் தேசிய நீட்டிக்கப்பட்ட பணிகள் (1953) ஆகியவற்றின் செயல்பாடுகளை பற்றி ஆராயவும், அவை மேலும் சிறந்த முறையில் செயல்பட ஆலோசனைகளை வழங்கவும், இந்திய அரசு 1957 ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு குழுவினை அமைத்தது.
- இக்குழு தனது அறிக்கையை 1957ம் ஆண்டு நவம்பர் மாதம்அளித்தது. மேலும் இது பஞ்சாயத்து ராஜ்ஜிய முறை அமைக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தது. அதன் குறிப்பிடத்தக்க பரிந்துரைகளாவன.
- மாவட்ட அளவிலான ஜில்லா பரிஷத், ஒன்றிய அளவிலான பஞ்சாயத்து சமிதி கிராம அளவிலான கிராம பஞ்சாயத்து ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்றடுக்கு முறையை அமைத்தல்.
- இம்மூன்று அடுக்குகளிலும் மறைமுக தேர்தல்களின் மூலம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- கிராமப் பஞ்சாயத்து நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் பஞ்சாயத்து சமிதியும், ஜில்லா பரிஷத்தும் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் அமைக்கப்பட வேண்டும்.
- அனைத்து திட்ட மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளையும் இந்த அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும்.
- பஞ்சாயத்து சமிதி நிர்வாக அமைப்பாகவும், ஜில்லா பரிஷத் ஆலோசனை கூறும், ஒருங்கிணைக்கும், மற்றும் மேற்பார்வையிடும் அமைப்பாகவும் இருக்கும்.
- மாவட்ட ஆட்சியர் ஜில்லா பரிஷத்தின் தலைவராக இருப்பார்.
- இத்தகைய ஜனநாயக அமைப்பு -களுக்கு அதிகாரங்களும் கடமைகளும் உண்மையிலேயே வழங்கப்பட வேண்டும்.
- இத்தகைய அமைப்புகள் தங்களது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்ற அவைகளுக்கு போதுமான மூல வளங்களை வழங்க வேண்டும்.
- எதிர்காலத்தில் வருபவர்கள் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் இம்முறையை அமைக்க வேண்டும்.
- இப்பரிந்துரைகள் தேசிய மேம்பாட்டு குழுவினால் 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

- இக்குழு ஒரே முறையை பின்பற்றுமாறு வலியுறுத்தவில்லை. உள்நாட்டு சூழ்நிலைகளுக்கு தக்கவாறு ஒரு முறையினை மாநில அரசுகளே ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று கூறியது.
- ஆனால் இதன் அடிப்படைக் கொள்கைகள் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.
- பஞ்சாயத்து ராஜ்ஜியத்தை முதன் முதலில் அமைத்த மாநிலம் ராஜஸ்தான்.
- இத்திட்டம் நாகவுர் மாவட்டத்தில் 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ராஜஸ்தானை தொடர்ந்து ஆந்திரப்பிரதேசமும் 1959 ஆம் ஆண்டு இம்முறையை ஏற்றுக் கொண்டது.
- விதி விலக்குகள்: **தமிழ்நாடு இரண்டடுக்கு முறையை** ஏற்றுக் கொண்டது. மேற்கு வங்கம் நான்கடுக்கு முறையை ஏற்றுக்கொண்டது.

**அசோக் மேத்தா குழு (Ashok Metha Committee)**

- 1977, டிசம்பரில் பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளின் மீதான ஒரு குழுவினை அசோக் மேத்தா அவர்களின் தலைமையில் ஜனதா அரசு அமைத்தது.
- இக்குழு தனது அறிக்கையை 1978, ஆகஸ்ட்டில் அளித்தது. மேலும் இது நாட்டில் குறைந்து வரும் பஞ்சாயத்து ராஜ்ஜிய முறையை வலிமையாக்க 132 **பரிந்துரைகளை** அளித்தது. அதன் பரிந்துரைகளாவன.
- மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ்ஜிய முறைக்கு பதிலாக **இரண்டடுக்கு முறையை** அமைக்க வேண்டும்.
- மாவட்ட அளவிலான ஜில்லா பரிஷத் மற்றும் அதற்கு கீழ் 15000லிருந்து 20000வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் இணைந்த குழுவினை கொண்ட மண்டல பஞ்சாயத்து.
- அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் மாநிலத்திற்கு அடுத்தபடியாக மாவட்டமே முதல் நிலையாக இருக்க வேண்டும்.
- ஜில்லா பரிஷத் நிர்வாக அமைப்பாகவும் மாவட்ட அளவிலான திட்டமிடுதலுக்கு பொறுப்பானதாகவும் இருக்கும்.
- பஞ்சாயத்து தேர்தல்களின் அனைத்து நிலைகளிலும் அரசியல் கட்சிகள் பங்கேற்க வேண்டும்.
- பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகள் தங்களது நிதி ஆதாரங்களை மேம்படுத்துவதற்கான வரிகளை விதிக்க அதிகாரம் பெற்றதாகும்.

- சமூக மற்றும் பொருளாதார குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அவைகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்க மாவட்ட அளவிலான அமைப்பு ஒன்றினால் தணிக்கை செய்யப்படும்.
- பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளை மாநில அரசு நீக்க முடியாது.
- அவசரமான சிறப்பு கூட்டத்தொடரின் போது அக் கூட்டம் நடைபெற்ற நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
- நியாய பஞ்சாயத்துக்கள், மேம்பாட்டு பஞ்சாயத்துகளிலிருந்து பிரிக்கப்பட்டு தனியான அமைப்புகளாக இருக்க வேண்டும். அவற்றுக்கு தகுதிபெற்ற நீதிபதி ஒருவர் தலைவராக இருக்க வேண்டும்.
- தலைமை தேர்தல் ஆணையருடன் கலந்தாலோசித்து தலைமை தேர்தல் அதிகாரி பஞ்சாயத்து தேர்தல்களை நடத்த வேண்டும்.
- மேம்பாட்டு பணிகள் ஜில்லா பரிஷத்துக்கு மாற்றப்பட்டு அனைத்து மேம்பாட்டு ஊழியர்களும் இதன் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின் கீழ் செயல்பட வேண்டும்.
- பஞ்சாயத்து ராஜ்ஜியத்திற்கு மக்களின் ஆதரவை திரட்டுவதில் தன்னார்வ குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளை கவனிப்பதற்காக அமைச்சரவையில் ஒரு அமைச்சர் நியமிக்கப்பட வேண்டும்.
- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான இடங்கள் அவர்களது மக்கள் தொகையில் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- ஜனதா அரசு தனது பதவிக்காலம் முடியும் முன்னரே கலைக்கப்பட்டதால் அசோக் மேத்தா குழுவின் பரிந்துரைகளின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
- கர்நாடகா, மேற்கு வங்கம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அசோக் மேத்தா குழுவின் பரிந்துரைகளை மனதில் கொண்டு பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளுக்கு புத்துயிர் அளிக்க முடிவு செய்தன.

## G.V.K ராவ் குழு (G.V.K. Rao Committee)

- கிராமப்புற மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான நிர்வாகத்திற்காக G.V.K ராவ் தலைமையிலான ஒரு குழுவினை

**1985 ஆம் ஆண்டு** திட்டக்குழு அமைத்தது.

- இக்குழு மேம்பாட்டு நடைமுறையானது பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளிடம் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வந்தது.
- பஞ்சாயத்து ராஜ்ஜிய முறைக்கு புத்துயிர் அளிக்கவும், வலிமை வழங்கவும் இக்குழு பின்வரும் பரிந்துரைகளை வழங்கியது.
- ஜனநாயக அதிகாரப் பகிர்வில் ஜில்லா பரிஷத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- மாநில அளவிலான சில திட்டப்பணிகளை, மாவட்ட அளவிலான திட்ட அமைப்புகளுக்கு மாற்ற வேண்டும்.
- மாவட்ட திட்ட ஆணையர் என்ற பதவி உருவாக்கப்பட வேண்டும். அவர் ஜில்லா பரிஷத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், மாநில அளவிலான திட்டத்துறைக்கு பொறுப்புடையவராகவும் விளங்குவார்.
- இந்த அடிப்படையில் G.V.K ராவ் அவர்களின் அறிக்கை (1986) ஒன்றிய அளவிலான திட்டத்தின் மீதான **தனந்வாலா குழுவின்** அறிக்கையில் இருந்தும் (1978), மாவட்டத்தின் மீதான **அனுமந்தா ராவ்** குழுவின் அறிக்கையிலிருந்தும் (1984) வேறுபட்டுள்ளது.
- அனுமந்தா ராவ் குழுவின் அறிக்கை, பல்வந்த்ராய் மேத்தா குழு, நிர்வாக சீர்த்திருத்தக் குழு, அசோக் மேத்தா குழு,G.V.K ராவ் குழு ஆகியவற்றின் அறிக்கையிலிருந்து வேறுபட்டு, மேம்பாட்டு நிர்வாகத்தின் மாவட்ட ஆட்சியரின் பங்கைக் குறைத்து பஞ்சாயத்து ராஜ்ஜியத்திற்கு அதிக பங்களிக்க வேண்டும் என்று கூறியது.

**L.M சிங்வி குழு (L.M. Singhvi Committee)**

- 1986 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி அரசு, ஜனநாயகம் மற்றும் மேம்பாட்டிற்காக பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளுக்கு மீண்டும் முக்கியத்துவம் வழங்க L.M சிங்வி தலைமையிலான ஒரு குழுவினை நியமித்தது. இதன் முக்கியப் பரிந்துரைகளாவன.
- பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகள் அரசியலமைப்பின்படி அங்கீகரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக ஒரு புதிய அத்தியாயத்தை இந்திய அரசியல் அமைப்பில் இணைக்க வேண்டும்.
- பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளுக்கு முறையான நியாயமான தேர்தல்களை நடத்தவும் இக்குழு சில அரசியலமைப்பு உடன்படிக்கைகளை பரிந்துரைத்தது.

- ❖ பல கிராமங்கள் இணைந்த குழுவிற்கு நியாய பஞ்சாயத்துகள் அமைக்கப்பட வேண்டும்.
- ❖ கிராமப் பஞ்சாயத்துக்கள் மேலும் வலுப்பெறும் வகையில் கிராமங்களை ஒன்றிணைக்க வேண்டும்.
- ❖ மேலும் இது கிராம சபாவின் முக்கியத்துவத்தையும் கூறுகிறது. இது கிராம சபாவை நேரடி ஜனநாயக உரு கொடுக்கக் கூடியது என்று கூறுகின்றது.
- ❖ கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிக நிதி ஆதாரங்கள் இருக்க வேண்டும்.
- ❖ பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளின் தேர்தல், கலைப்பு மற்றும் பணிகள் தொடர்பான சர்ச்சைகளை நீக்க ஒவ்வொரு மாநிலத்திலும் நீதித் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**73வது மற்றும் 74வது சட்டத்திருத்தங்-களின் பொதுவான கூறுகள்:**

- ❖ சீரான ஐந்தாண்டுப் பதவிக்காலத்துடன் அனைத்து கிராமப்புற மற்றும் நகர்ப்புற அமைப்புகளுக்கு நேர்முகத்தேர்தல் நடத்துதல் 21 வயதுடைய எவரும் இத்தேர்தலில் போட்டியிடலாம்.
- ❖ தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு மக்கள் தொகை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்தல்.
- ❖ பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்குக்கு குறைவில்லாத இட ஒதுக்கீடு செய்தல்.
- ❖ அனைத்து அடுக்குகளின் தலைவர் பதவிகளிலும் மேற்கண்ட தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பெண்கள் இட ஒதுக்கீட்டினை செயல்படுத்துதல்.
- ❖ உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி நிலையினை வலிமை செய்யும் பொருட்டு ஒரு நிதி ஆணையத்தை அமைத்தல்.
- ❖ இந்த ஆணையம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலவரத்தை ஆய்வு செய்யும். மேலும், மாநில இருப்பு நிதியிலிருந்து இவற்றிற்கு வழங்கப்பட வேண்டிய தொகையினையும் முடிவு செய்யும்.
- ❖ உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கென ஏற்பாடு செய்தல்.
- ❖ ஏதேனும் உள்ளாட்சி அமைப்பு கலைக்கப்படுமானல் ஆறுமாத காலத்திற்குள் கட்டாயமாகத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடு செய்தல்.
- ❖ கட்சி வேட்பாளர்களாகவோ அல்லது சுயேட்சை வேட்பாளர்களாகவோ போட்டியிடலாம்.

**73வது அரசியலமைப்புச்திருத்தச் சட்டம்:**

- இச்சட்டத்தின்படி இந்திய அரசியலமைப்பில் புதிதாக "பஞ்சாயத்துகள்" என்ற தலைப்பில் **பகுதி IX** இணைக்கப்பட்டுள்ளது.
- இது **சரத்துகள் 243 - 243-O** வரையிலான வகைமுறைகளைக் கொண்டுள்ளது. மேலும், பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள **29 வகையான** பணிகளைக் குறிப்பிடும் **(சரத்து 243-G) 11வது அட்டவணையும்** இச்சட்டத்தால் அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.
- இச்சட்டம் அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளின் **சரத்து 40ல்** உள்ள பஞ்சாயத்துக்களை உருவாக்கும் அரசின் கடமையை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளது.
- இதனால் பஞ்சாயத்துகள் அரசியல் சட்டப் பாதுகாப்பையும், தொடர்ச்சியாக தேர்தல் நடத்தப்பட்டு உருவாக்கப்படுவதையும் சட்டப்படி பெற்றுள்ளன.
- இச்சட்டம் கட்டாய வகை முறைகளையும், விருப்ப வகைமுறைகளையும் பெற்றுள்ளன. கட்டாய வகைமுறைகள் நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியான அமைப்பை உருவாக்க வழி செய்கின்றன.
- இவற்றை மாநில அரசுகள் மாற்றங்கள் இன்றி செய்தே ஆக வேண்டும். விருப்ப வகைமுறைகளை மாநில அரசுகள் விரும்பினால் அம்மாநிலத்தின் புவியியல், அரசியல், நிர்வாக சூழ்நிலைகளின் தன்மைக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.
- மாநிலப் பட்டியலில் இயற்றப்பட்டுள்ள இந்த மத்திய அரசுச் சட்டம் கீழ்மட்ட அளவில் மக்களாட்சி மலர வழி செய்கிறது.

**73வது சட்டத்திலிருந்து முக்கியக் கூறுகள்:**

**கிராம சபை:**

- இது ஒரு கிராமத்தில் உள்ள வாக்குரிமை படைத்த அனைத்து நபர்களையும் உள்ளடக்கிய சபையாகும்.
- கிராமச் சட்டமன்றமாக, மாநில அரசு அளித்துள்ள அதிகாரம், உரிமைகளுக்கு உட்பட்டு இது செயல்படும்.

**மூன்றடுக்கு பஞ்சாயத்து (Three tier Panchyat):**

- இச்சட்டம் கிராம அளவில், ஒன்றிய அளவில் மற்றும் மாவட்ட அளவில் என மூன்று அடுக்கு பஞ்சாயத்து முறையை தோற்றுவிக்கிறது.

- ஒவ்வொரு அடுக்கிற்கும் உறுப்பினர்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் மாவட்ட மற்றும் ஒன்றியப் பஞ்சாயத்துகளின் தலைவர்கள் மட்டும் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- கிராமப் பஞ்சாயத்து தலைவர்களுக்கு மாநில அரசு விரும்பினால் நேரடி அல்லது மறைமுகத் தேர்தலை நடத்தலாம்.
- மக்கள் தொகை 20 லட்சத்திற்கு குறைவாக உள்ள மாநிலங்களில் ஒன்றியப் பஞ்சாயத்து அமைக்கத் தேவையில்லை.

**நிதி (Finance)**

**மாநில சட்டசபை :**

- வசூல் செய்யவும், பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் வழங்கலாம்.
- மாநில அரசால் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்ட வரிகள் கட்டணங்கள் போன்றவற்றை வழங்கலாம்.
- மாநில தொகுப்பு நிதியிலிருந்து மானியங்கள் வழங்கலாம்.
- நிதிகளை அமைத்து அவற்றிலிருந்து தனது நிதி தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள அதிகாரமளிக்கலாம்.

**மாநில நிதிக்குழு (State Finance Committee)**

- பஞ்சாயத்துக்களின் நிதிநிலையை ஆய்வு செய்ய மாநில ஆளுநர் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கொருமுறையும் ஒரு நிதிக்குழுவினை அமைக்கலாம்.இது பின்வரும் பரிந்துரைகளை ஆளுநருக்கு வழங்கலாம்.
- மாநில அரசால் விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் கட்டணங்களை மாநில அரசுக்கும், பஞ்சாயத்துக்குமிடையே பகிர்ந்து கொள்வது தொடர்பிலான கொள்கைகள்.
- மாநில தொகுப்பு நிதியிலிருந்து பஞ்சாயத்துகளுக்கு வழங்க வேண்டிய மானியம் தொடர்பான கொள்கைகள்.
- பஞ்சாயத்துக்களின் நிதி தொடர்பாக ஆளுநரால் நிதிக்குழுவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட விவகாரங்கள்.
- மாநில சட்டசபை குழுவின் உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் அவர்கள் தேர்ந்தெடுக்கபட வேண்டிய முறை போன்றவற்றை வழங்கும்.
- ஆளுநர் அக்குழுவின் பரிந்துரையோடு அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையையும் மாநில சட்டசபையின் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

- மாநிலத்திலுள்ள பஞ்சாயத்துகளுக்கு நிதி ஆதாரங்கள் வழங்க மாநில தொகுப்புநிதியினை மேம்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளை மத்திய நிதி ஆணையரும் வழங்கலாம். (மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில்).
- இந்தியக் குடியரசுத் தலைவர் தான் கூறும் விதிவிலக்குகள் மற்றும் திருத்தங்களுக்குட்பட்டு இச்சட்டம் எந்த ஒரு யூனியன் பிரதேசத்திற்கும் பொருந்தும் என்றும் உத்தரவிட உரிமை உண்டு.
- ஜம்மு காஷ்மீர், நாகலாந்து, மேகலாயா, மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கும் இன்னும் சில பகுதிகளுக்கும் இச்சட்டம் பொருந்தாது.
- இந்தப் பகுதிகள் அரசியலமைப்பின் 244வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பகுதிகள் மாவட்ட சபை உள்ள மணிப்பூரின் மலைப்பகுதிகள், டார்ஜிலிங் கோக்ரா மலை சபை உள்ள மேற்கு வங்க மாநிலத்தின் டார்ஜிலிங் மாவட்டம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.
- பஞ்சாயத்துகளின் கணக்குகளை பராமரிக்கவும், தணிக்கை செய்யவும் மாநில சட்டசபை விதிகளை வகுக்கலாம்.இச்சட்டம் தொடங்கப் -பட்ட நாள் 1993, ஏப்ரல் 24 ஆகும்.

**கிராமப்புற மேம்பாட்டு திட்டம்**

**(Rural Dvelopment Programmes)**

- 1952 - சமூக மேம்பாட்டு திட்டம்.
- 1953 - தேசிய விரிவாக்கத் திட்டம்
- 1960 - மலைப்பிரதேச மேம்பாட்டு திட்டம்.
- 1962 - பழங்குடியின பிரதேச மேம்பாட்டு திட்டம்.
- 1965 - அதிக மகசூல் வகை திட்டங்கள்.
- 1969 - சிறிய விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கான அமைப்பு
- 1972 - துரிதப்படுத்தப்பட்ட கிராம குடிநீர் வழங்கல் திட்டம்
- 1973 - வறட்சிக்குட்பட்ட கிராம குடிநீர் வழங்கல் திட்டம்
- 1974 - குறைந்தபட்ச சேவைகள் திட்டம்
- 1975 - இருபது அம்ச திட்டம்
- 1977 - அந்த்யோதயா திட்டம்
- 1977 - பாலைவன மேம்பாட்டத் திட்டம்
- 1978 - மாவட்ட தொழில் மையம்
- 1978 - ஒருங்கிணைந்த கிராமப்புற

மேம்பாட்டுத் திட்டம் (1980ல் இந்தியா முழுவதும்)

- 1978 - சுயவேலை வாய்ப்புக்காக கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி
- 1980 - தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்.
- 1982 - கிராமப்பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்
- 1983 - கிராமப்புற நிலமில்லாதவர் -களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டம்
- 1983 - படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு திட்டம்
- 1986 - இந்திர அவாஸ் திட்டம்
- 1986 - கிராமப்புற தொழில் நுட்பம் மற்றும் மக்களின் செயல்பாட்டை முன்னேற்றுவதற்கான கவுன்சில்
- 1989 - ஜவகர் ரோஜ்கார் யோஜனா
- 1992 - கிராமக் கைவினைஞர்களுக்கு உபகரணங்கள் அளிப்பு திட்டம். இந்த திட்டம் 1999 ஆம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி பொன்விழா கிராம வேலைவாய்ப்புத் திட்டத்துடன் இணைக்கப்பட்டது.
- 1993 - வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம்.
- 1994 - முதலீட்டு மேம்பாட்டு திட்டம்
- 1995 - ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்
- 1997 - கங்கா கல்யாண் யோஜனா
- 2000 - பிரதான் மந்திரி கிராமோதாய யோஜனா
- 2000 - அன்னபூர்ணா திட்டம்
- 2001 - அந்த்யோதயா அன்ன யோஜனா
- 2001 - மகாவீர் கிராமகல்யாண யோஜனா
- 2001 - சம்பூர்ணா கிராமின் ரோஜ்கார் யோஜனா

**நகர்ப்புற உள்நாட்டு அரசாங்கம்**

**(Urban Local Government)**

- இச்சொல் நகர்ப்புற பகுதிகளில் **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின்** மூலம் நடத்தப்படும் அரசை குறிக்கும்.
- இந்த அரசின் அதிகாரம் மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட நகர்ப்புற எல்லைகளுக்குட்பட்டது.
- இவை எட்டு வகைப்படும். மாநகராட்சி, முனிசிபாலிட்டி, நோட்டிபைடு , ஏரியா கமிட்டி, டவுன் ஏரியா கமிட்டி, கண்டோன்மெண்ட் போர்டு, டவுன்ஷிப், போர்ட் டிரஸ்ட் மற்றும் ஸ்பெஷல் பர்பஸ் ஏஜன்ஸி.
- நகர்ப்புற உள்நாட்டு அரசு முறையானது 74வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் 1992ன் மூலம் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

❖ மத்தியில் 3 அமைச்சகங்கள் இதை கையாள்கின்றன. 1985ஆம் ஆண்டு தனி அமைச்சகமாக தொடங்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் கண்டோன்மென்ட் போர்டு விவகாரத்-தில் பாதுகாப்பு அமைச்சகம், யூனியன் பிரதேசங்கள் தொடர்பான விவகாரத்தில் உள்துறை அமைச்சகம்.

**அரசியலமைப்புடன் இணைப்பு (Constitutionalisation)**

❖ இது 74வது அரசியலமைப்பு திருத்தச் **சட்டம் 1992** ஆக தோன்றி 1993 ஜீன் 1 முதல் அமலாக்கப்பட்டது.

❖ **74வது** அரசியலமைப்பு திருத்தச் **சட்டம் 1992**

❖ இது நகராட்சிகள் என்று தலையிடப்பட்டு **243 P**முதல் **243 ZG** வரையிலான விதிகளை கொண்டது.

❖ இச்சட்டம் அரசியலமைப்பில் 12வது அட்டவணையையும் இணைத்தது.

❖ இது நகராட்சிகள் தொடர்பான **18** விவகாரங்களையும் சரத்து **243w** கையாள்கின்றது.

❖ இச்சட்டம் நகராட்சிகளை அரசியலமைப்பின் சட்டத்திற்குட்பட்ட பகுதியின் கீழ் கொணர்கின்றது.

❖ இச்சட்டம் அனைத்து மாநிலங்களிலும் பின்வரும் 3 வகையிலான நகராட்சி-களை அமைக்க வழி செய்கிறது.

1. மாற்றப்பட்ட பகுதிக்கான நகர பஞ்சாயத்து

| துறையின் பெயர் | மாவட்ட தலைவரின் பதவியின் பெயர் |
|---|---|
| **வருவாய் மற்றும் நீதித்துறை** | மாவட்ட ஆட்சியர், ஆணையர்-மாவட்ட பொது நிர்வாகத்துறை, நீதிபதி |
| **காவல் துறை** | காவல் துறை கண்காணிப்பாளர். |
| **சுங்கம்** | சுங்கவரி கண்காணிப்பாளர். |
| **மருத்துவம்** | சிவில் சர்ஜன் - மாவட்ட மருத்துவர் அலுவலகம். |
| **வனம்** | மாவட்ட வன அலுவலர் |
| **கல்வி** | பள்ளி ஆய்வாளர் - மாவட்ட கல்வி பதிவாளர் |
| **கூட்டுறவு** | கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் |
| **வேளாண்மை** | வேளாண்மை துணை இயக்குநர், மாவட்ட வேளாண் அலுவலர் |
| **சட்டம்** | மாவட்ட நீதிபதி, மாவட்ட செஷன்ஸ் நீதிபதி |
| **பொதுப்பணிகள்** | நிர்வாகப் பொறியாளர். |

2. சிறிய நகர்ப்புற பகுதிக்கான நகராட்சி கவுன்சில்.
3. பெரிய நகர்ப்புற பகுதிக்கான நகராட்சி கார்ப்பரேசன்

**முக்கியக் கூறுகள்:**

- ஒவ்வொரு மாநிலத்திலும் மூன்று வகையான நகராட்சி அமைப்புகளை ஏற்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது. அவை,
  1. நகரப்பஞ்சாயத்து - கிராம நிலையில் இருந்து நகர்ப்புறமாக மாறும் பகுதி.
  2. நகராட்சி - சிறப்பு நகர்ப்புற பகுதி.
  3. மாநகராட்சி - பெரு நகரப்பகுதி

**வகைப்பாட்டு முறை (Classification):**

- மேற்கண்ட வகைபாடுகள் சில காரணிகளை அடிப்படையாக கொண்டு பிரிக்கப்படுகின்றன. உதாரணமாக,

1. அப்பகுதியின் மக்கள்தொகை.
2. மக்கள் நெருக்கம்
3. ஆண்டு வருமானம் (உள்ளாட்சி அமைப்புகள் வரி மூலம் பெறல்).
4. வேளாண்மையில் ஈடுபடாத மக்களின் விகிதாச்சாரம்
5. பொருளாதார முக்கியத்துவம் அல்லது அரசின் பிற விருப்பங்கள்

**நகராட்சியின் அமைப்பு :**

- சரத்து 243Q நகராட்சி அமைப்பை கூறுகின்றது.
- உள்ளாட்சிகளின் அனைத்து உறுப்பினர்களும் நகராட்சிக்கு உட்பட்ட மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- இதன் பொருட்டு நகராட்சி பல்வேறு வட்டங்களாக (Wards) பிரிக்கப்படுகிறது. நகராட்சி பிரதிநிதிகள் இவ்வட்டத்தில் இருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- நகராட்சிகளின் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட துறை வல்லுநர்கள் மற்றும் குழுத்தலைவர் ஆகியோரை நகர்மன்றத்தில் இடம்பெறச் செய்தல் முதலியவற்றை மாநில அரசுகளே முடிவு செய்து கொள்ளலாம்.1,00,000 அதிகமான மக்கள் தொகையுள்ள பேரூர்கள் நகராட்சிகள் ஆகச் செயல்படுகின்றன.

**வட்டக்குழுக்கள் (Wards Committee)**

- **மூன்று லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட** மக்கள் தொகைகளைக் கொண்ட நகராட்சிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களை உள்ளடக்கிய வட்டக் குழுக்கள் (Ward Committees) அமைக்கப்படும். மாநில அரசு இது

போக, வேறு குழுக்களையும் அமைக்கலாம்.

**மாவட்ட திட்டக்குழு (District Planning Committee)**

- ஒரு மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்து -களின் திட்ட அறிக்கைகளைத் தொகுத்து மாவட்ட அளவிலான திட்டமாக மாநில அரசுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு மாவட்டத் திட்டக்குழு அமைக்கப்படுகிறது.
- இதன் அமைப்பு, உறுப்பினர் தேர்தல், பணிகள் ஆகியவற்றை மாநில அரசுகளே முடிவு செய்யும்.

**ஐந்தில் நான்கு பங்கு உறுப்பினர்கள்**

- மாவட்ட பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் அவர்களிடத்தி லிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மாவட்டத்தின் கிராம, நகர மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப இதிலும் உறுப்பினர்களின் விகிதாச்சாரம் அமைந்திருக்கிறது.
- மாவட்டத் திட்டக்குழுவின் தலைவர் மாவட்ட வளர்ச்சித் திட்டங்களை மாநில அரசுக்கு அனுப்பி வைப்பார்.

**மாநகரத் திட்டக்குழு (Metropoltion Planning Committee)**

- ஒரு மாநகரத்தின் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கென்று மாநகரத் திட்டக்குழு உருவாக்கப்படு -கின்றது.
- மாநில அரசு இதன் அமைப்பு, உறுப்பினர் மற்றும் தலைவர் தேர்தல், பணிகள் ஆகியவற்றை முடிவு செய்யும். இதன் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் மாநகரப் பகுதிக்கு உட்பட்ட நகராட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சிகளின் தலைவர்களால் அவர்களிடமிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மாநகரத்தின் நகராட்சி மற்றும் ஊராட்சிகளின் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப இக்குழுவிலும் உறுப்பினர்கள் இடம் பெறுவர்.
- இக்குழுவின் தலைவர் வளர்ச்சித் திட்டங்களை மாநில அரசுக்கு அனுப்பி வைப்பார்.

# நீதித்துறை

## இந்திய நீதித்துறை

- நிர்வாகம் மற்றும் சட்ட அதிகாரங்கள் மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது போல் அல்லாமல் இந்திய நீதித்துறையின் அதிகாரங்கள் ஒரே மாதிரியான ஒருங்கிணைந்த அதிகாரங்களாகும்.
- மாநிலத்தில் உள்ள மூன்று அங்கங்களில் நீதித்துறையே அரசியல் அமைப்பின்படி முதன்மையானதாகும்.
- அரசியலமைப்பின் தலைமைத் தன்மையை காப்பாற்றுவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுக்கிடை -யேயான அல்லது மாநில அரசுக்கிடையேயான பிரச்சினைகளை தீர்த்து வைக்க ஒரு சுதந்திரமான பாரபட்சமற்ற அதிகாரமுடைய அமைப்பு தேவை.

### உச்சநீதிமன்றம்

### (The Supreme court )

- இது **124 லிருந்து 147 வரையிலான விதிகளில்** இந்திய நீதித்துறை சம்பந்தமான உடன்படிக்கைகளை கொண்டுள்ளது.



- ஆரம்பத்தில் உச்ச நீதி மன்றத்தில் **ஒரு தலைமை நீதிபதியும், 7 நீதிபதிகளும்** இருந்தனர்.
- தற்போது உச்ச நீதிமன்றத்தில் **ஒரு தலைமை நீதிபதியும் 30 மற்ற நீதிபதிகளும்** உள்ளனர்
- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை கூட்டவோ குறைக்கவோ பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
- குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்திற்கு தற்காலிக நீதிபதிகளை நியமிக்கலாம்.
- உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி இந்தியாவின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுவார்.
- உச்ச நீதிமன்ற தலைமை மற்றும் உச்ச நீதிமன்ற மூத்த நீதிபதிகளுடன் கலந்தாலோசித்தபின்னர் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பார்.

- தலைமை நீதிபதி அல்லாத வேறு ஒரு நீதிபதியை நியமிக்கும் போது இந்தியாவில் தலைமை நீதிபதியை அவசியம் கலந்தாலோசிக்க வேண்டும்
- அரசியலமைப்பின் சரத்து **129வது உச்ச நீதி** மன்றத்திற்கு ஒரு நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களும் நீதிமன்ற அவமதிப்பிற்கு தண்டனையளிக்கும் அதிகாரமும் உள்ளது என்று அறிவிக்கின்றது.

**தகுதிகள்**

- உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு தேவையான தகுதிகள் அரசியலமைப்பின்படி உச்சநீதிமன்ற நீதிபதிக்கு பின்வரும் தகுதிகள் அவசியமென கருதப்படுகிறது.

1. அவர் இந்தியாவின் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
2. ஓர் உயர் நீதிமன்றத்திலோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட நீதிமன்றங்களிலோ தொடர்ந்து **ஐந்தாண்டுகளுக்குக்** குறையாமல் நீதிபதியாக இருந்தவராக இருக்க வேண்டும்

(அல்லது)

- ஓர் உயர்நீதிமன்றத்திலோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட நீதிமன்றங்களிலோ குறைந்தது **பத்தாண்டுகள்** வழக்கறிஞராக இருந்தவராக இருக்க வேண்டும்.

(அல்லது)

- குடியரசுத் தலைவரின் கருத்தின்படி அவர் தனிச்சிறப்பு வாய்ந்த சட்டவியல் நிபுணராக இருத்தல் வேண்டும். எனினும் குறைந்தபட்ச வயது ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

**பதவிக்காலம்**

1. உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் 65 வயதுவரை பதவியில் இருக்கலாம்.
2. பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவர்க்கு அனுப்பி இராஜினாமா செய்யலாம்.
3. பாராளுமன்ற பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்யலாம்.

**பதவிநீக்குதல்**

- குடியரசுத் தலைவரின் ஆணையின் பேரிலேயே உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரைப் பதவிலிருந்து நீக்க முடியும்.
- குடியரசுத் தலைவர் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட நீதிபதிக்கு திறமை இல்லை என்றோ அவர் முறைகேடாக நடந்து கொண்டார் என்றோ மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அஜராகி வாக்களித்துப்

பெருன்பாண்மை ஆதரவுடன் தனித்தனியாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதனை நாடாளுமன்றத்தின் அந்தக் கூட்டத் தொடரிலேயே குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

- ❖ இதற்கான நடைமுறையை பிற சட்டம் இயற்றுவதன் மூலம் நாடாளுமன்றம் நெறிப்படுத்த முடியும்.

**ஊதியமும் படிகளும் (salary and Allowances)**

- ❖ உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மாதச் சம்பளமாக 1,10,000 ரூபாயும் மற்ற நீதிபதிகள் 1,00,000 ரூபாயும் பெறுவார்கள்.
- ❖ சம்பளம் தவிர அவர்களுக்கு வாடகை இல்லாத தங்குமிடமும் மற்ற செலவும்படிகளும் உண்டு.
- ❖ பாராளுமன்றத்திற்கு நீதிபதிகளின் சம்பளத்தையும் செலவுப்படிகளையும் ஒழுங்குபடுத்த அதிகாரம் உண்டு.
- ❖ ஆனால் அவர்களது பதவிக் -காலத்தில் இவற்றை குறைக்க முடியாது.
- ❖ நிதி நெருக்கடி நிலையின் போது மட்டும் இவர்களது சம்பளத்தையும் படிகளையும் குறைக்கலாம்.
- ❖ நீதிபதிகளின் சம்பளமும், படிகளும் இந்திய தொகுப்பு நிதியின் (Consolidated Fund of India) மீதான செலவினங்களாகும்.
- ❖ உச்ச நீதி மன்ற நீதிபதி ஒய்வு பெற்றபின் இந்திய பிரதேசத்தில் உள்ள எந்த நீதிமன்றத்திலும் தொழில் புரியவோ அரசுக்கு கீழ் உள்ள அதிகாரிகளை எதிர்த்து வாதாடவோ கூடாது.

**நடைமுறை விதிகள்**

**(Rules of Procedure)**

பின்வரும் நடைமுறை விதிகள் உச்சநீதிமன்றத்தின் பணிகளில் பின்பற்றவேண்டும் என்று அரசியலமைப்பு கூறுகிறது.

- ❖ உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் திறந்த நிலை நீதிமன்றத்திலேயே வெளியிடப்படவேண்டும்.
- ❖ உச்ச நீதி மன்றத்தின் ஆலோசனை அறிக்கைகளும் திறந்த நிலை நீதிமன்றத்திலேயே வெளியிடப்பட வேண்டும்.
- ❖ உச்ச நீதி மன்றத் தீர்ப்புகள் வழக்கு விசாரிக்கப்படும் போது ஆஜராகி இருந்த பெரும்பான்மையான நீதிபதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தான் வழங்கப்பட வேண்டும்.
- ❖ பெரும்பான்மையான நீதிபதிகளால் ஒத்துக்கொள்ளப்பட்ட தீர்ப்பை ஒரு நீதிபதி ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர் தனது அதிருப்தி கருத்தை

வெளியிட உரிமை உள்ளது. வழக்குகளில் 5க்கு குறையாத நீதிபதிகளை கொண்ட பெஞ்ச் முடிவெடுக்கும்.

a. அரசியலமைப்பை மீறிய வழக்குகள்
b. குறிப்பிட்டத்தக்க சட்டகேள்வி -யினை கொண்ட வழக்குகள்
c. குடியரசுத் தலைவரால் உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வழங்கப்பட்ட வழக்குகள்

**தற்காலிக நீதிபதிகள் (Acting Judges)**

- ஏதேனும் ஒரு சமயத்தில் உச்ச நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய நீதிபதிகள் இல்லை என்றால் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவதற்காக உயர்நீதிமன்ற நீதிபதிகளிடையே உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற தகுதியுடையவர்களை தேவையான காலத்திற்கு தற்காலிக நீதிபதிகளாக நியமிக்கும் அதிகாரம் தலைமை நீதிபதிக்கு உண்டு.
- எனினும் சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை கலந்தாலோசித்த பின்னரும், குடியரசுத் தலைவரின் முன் அனுமதியைப் பெற்ற பின்னருமே இத்தகைய தற்காலிக நியமனங்களைச் செய்யலாம்.
- மேலும் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகளையும் அல்லது உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகளையும் அவர்களுக்கு உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி வகிக்க தகுதி இருந்தால் தேவையான காலத்திற்கு உச்சநீதிமன்றத்தின் தற்காலிக நீதிபதியாக பொறுப்பு வகிக்கும்படி அழைக்க தலைமை நீதிபதிக்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு நியமிக்கப்படுவதற்கும் குடியரசுத் தலைவரின் முன் அனுமதி தேவை.

**நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள்(Immunities of judge)**

நீதித்துறைக்கு பாரபட்சமின்மையே முக்கியமான இயல்பாகும். இதற்கு நீதபதிகளின் சுதந்திரம் அவசியம். உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் சுதந்திரம் பின்வரும் வழிகளில் அரசியல் அமைப்பால் பாதுகாக்கப்படுகிறது.

- ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதியை நியமிக்கும் முன் குடியரசுத் தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியை கலந்தாலோசிக்க வேண்டும்.
- உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஒருவரை தவறான நடத்தை மற்றும் தகுதியின்மை ஆகியவற்றின் அடிப்படையில் குடியரசுத்தலைவர் பதவி நீக்கம் செய்யலாம்.

- ஆனால் இதற்கான தீர்மானம் பாராளுமன்ற இரு அவைகளில் சபைக்கு வந்திருந்து ஓட்டளிக்கும் உறுப்பினர்களின் **மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை** பெற்று நிறைவேற்றப்பட வேண்டும்.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளமும் செலவுப்படிகள் மற்றும் நீதிமன்றத்தின் நிர்வாகச் செலவுகள் போன்றவை இந்திய தொகுப்பு நிதியின் மீதான செலவினங்களாகும்.
- நிதி நெருக்கடி நிலையில் போது தவிர மற்ற சமயங்களில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் மற்றும் செலவுப்படிகளை அவர்களது பதவிக் காலத்தில் குறைக்க இயலாது.
- ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் போது அல்லாமல் பிற நேரங்களில் அவரின் நடத்தையைப் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்கக் கூடாது.
- ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதி தனது ஓய்வுக்குப்பின் இந்தியாவின் எந்த ஒரு நீதிமன்றத்திலோ அல்லது இந்திய அதிகாரிக்கு முன்பாகவோ நீதிபதியாக செயல்படக் கூடாது.
- இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு உண்டு. இந்தியாவின் தலைமை நீதிபதியினை உச்ச நீதிமன்றத்திற்கு தற்காலிக நீதிபதியாக நியமிக்கும் போது மட்டும் அவர் அவ்வாறு செயல்படலாம்.

**உச்ச நீதிமன்றத்தின் இருப்பிடம்**

- உச்சநீதிமன்றத்தின் தலைமை இடம் **டெல்லியில்** இருக்கும் என்று அரசியலமைப்பு அறிவிக்கிறது.
- எனினும் இந்தியாவின் தலைமை நீதிபதி இந்தியக் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தைப் பிற இடத்திலோ அல்லது இடங்களிலோ தற்காலிக இருப்பிடமாகக் கொண்டு செயல்படுத்தலாம்.

**உச்ச நீதிமன்றத்தின் சுதந்திரம் (independence of supreme court)**

- நிர்வாகத் தலையீட்டிற்கு எதிராகவும் சட்டமன்ற தலையீட்டிற்கு எதிராகவும் தனிநபர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியிருப்பதால் பிரதிநித்துவ மக்களாட்சி அமைப்பில் நிதி பரிபாலனம் முக்கியத்துவம் வாய்ந்தது.
- அரசாங்கத்தின் மற்ற இரண்டு உறுப்பினர்களிடமிருந்தும் சுதந்திரம் பெற்ற அமைப்பாகவும் நீதித்துறையை ஆக்குவதன் மூலம் அந்த உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.
- கூட்டரசுக்கு அதன் உறுப்புகளான மாநில அரசுகளுக்கும்

அரசியலமைப்பின் படி அதிகாரங்கள் சட்டமியற்றும் துறை நீதித்துறை ஆகியவற்றுக்கு தனித்தனியே அதிகாரங்கள் பகுக்கப்பட்டு உள்ளதாலும் சுதந்திரமான நீதித்துறை மேற்கண்ட அமைப்புகளின் அதிகார எல்லை மீறலைத் தடுக்க அவசியமாகிறது.

- ❖ சுதந்திரமான நீதித்துறையை தனிமனித உரிமை மற்றும் அரசியலமைப்பின் பாதுகாவலனாகச் செயல்பட முடியும். நீதிமன்றங்களின் சுதந்திரமான போக்கை உறுதி செய்ய இந்திய அரசியமைப்பில் பல ஏற்பாடுகள் உள்ளன அவை

**1. நியமன முறை :**

- ❖ உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கிறார்.
- ❖ இவ்வாறு ஆலோசனையைப் பெறாமல் குடியரசுத் தலைவரே தன் விருப்பப்படி நீதிபதிகளை நியமிக்க முடியாது இதன் மூலம் நிர்வாகத்துறை அரசியல் காரணங்களுக்காக நீதிபதிகளை நியமிப்பது இயலாததாகிறது.

**2. பணிக்கால பாதுகாப்பு**

- ❖ உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் பணிகாலத்திற்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ அவர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டாலும் அவரால் பணியிலிருந்து நீக்கப்பட முடியாது.
- ❖ அப்படி நீக்கப்பட வேண்டுமானால் நீதிபதிகளின் தவறான நடத்தை அல்லது தகுதியின்மை நிரூபிக்கப்பட வேண்டும்.
- ❖ பாராளுமன்ற நடைமுறைகள் யாவும் பின்பற்றப்பட வேண்டும்.

**3. நிர்ணயிக்கப்பட்ட ஊதியம்**

1. இதில் பாராளுமன்றத்தின் வாக்கெடுப்புக்கு உட்பட்டதல்ல. நீதிபதிகள் தங்கள் பணியில் உள்ளபோது அவர்களின் ஊதியம் மற்றும் படிகளைக் குறைக்க முடியாது நிதி நெருக்கடி காலங்களில் மட்டுமே குறைக்கப்படலாம்.
2. பாராளுமன்றம் உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பையும் அதிகாரத்தையும் நீட்டிக்கலாமே ஒழிய அதனைக் கட்டுப்படுத்த முடியாது.
3. நீதிபதிகளின் நடத்தை குறித்து பாராளுமன்றத்தில் எவ்வித விவாதத்தையும் மேற்கொள்ள முடியாது. பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வரும்போது மட்டுமே விவாதிக்க முடியும்.
4. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் தங்களை அவமதித்த

குற்றத்திற்காக எந்த நபரையும் தண்டிக்க அதிகாரம் பெற்றுள்ளன.

5. நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறை பிரிக்கப்பட்டு உள்ளது. நிர்வாகத் துறையின் தலையீட்டில் இருந்து நீதித்துறையினை பாதுகாப்பது நீதியின் நிலைத்த வாழ்விற்கு அவசியமாகிறது.
6. நீதிபதிகள் தங்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு வழக்கறிஞராக பணியாற்றுதல் தடை செய்யப் -பட்டுள்ளது.
7. உச்சநீதிமன்றம் தனது பணியாளர்களை தானே நியமனம் செய்து கொள்ளலாம். அவர்களின் பணிகளையும் வரையறை செய்யலாம்.

❖ மேற்கண்ட வகைமுறைகளால் உச்சநீதிமன்றம் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தனித்தன்மையோடும் விளங்க முடிகிறது.

**உச்சநீதிமன்றத்தின் அதிகாரங்கள் (Jurisdication of the supreme court)**

**1. மூல வழக்கு விசாரணை அதிகாரம் (Original Jurisdiction)**

❖ உச்சநீதிமன்றத்தின் மூல வழக்கு விசாரணை அதிகாரம் முற்றிலும் கூட்டாட்சி இயல்பை சேர்ந்தது.

❖ மத்திய மற்றும் மாநில அரசுக்கு இடையேயான அல்லது மாநில அரசுகளுக்கு இடையேயான பிரச்சனைகளின் மீது முடிவெடுக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு.

❖ அரசியலமைப்பு **(ஏழாவது சட்டதிருத்தம் 1956)** ன்படி உச்ச நீதிமன்றத்தின் **மூலவழக்கு** விசாரணை அதிகாரம் 1950 ஜனவரி 26க்கு முன் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை வரம்பில் வராத பிரச்சனைகளுக்கும் இத்தகைய அதிகார வரம்பில் வராத பிரச்சனைகளுக்கும் பொருந்தாது.

❖ மூல வழக்கு விசாரணையில் வராத சில உடன்படிக்கைகளும் அரசியலமைப்பில் உள்ளன. சில பிரச்சனைகளை தீர்மானிக்கும் அதிகாரம் தீர்ப்பாயங்களுக்கு உண்டு அவையாவன

1. **சரத்து 363** (1)ல் உள்ள உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ள விவகாரங்கள்
2. சரத்து 262ல் குறிப்பிட்டுள்ள மாநிலங்களுக்கிடையேயான நீர் வழங்குதலின் தலையீடு தொடர்பாக சட்டதீர்ப்பாயங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை (மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பிரச்சனை சட்டம் **1956யை** பாராளுமன்றம் இயற்றியதிலிருந்து) நிதிக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள விவகாரங்கள்

3. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே சில செலவினங்களை சரிசெய்தல்.

**2. அடிப்படை உரிமைகளைக் காத்தல் (Writ Jurisdiction)**

- ❖ சரத்து 32 உச்ச நீதிமன்றத்திற்கு அடிப்படை உரிமைகளை அமலாக்கும் கடமையை வழங்குகின்றது.
- ❖ இவ்விதியின்படி எந்த ஒரு தனி மனிதரும் தனது அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது நேரடியாக உச்ச நீதிமன்றத்தை அணுக உரிமை பெற்றவராவார்.
- ❖ இது சில சமயங்களில் மூலவழக்கு விசாரணை என்றும் கூறப்படும். ஆனால் மூலவழக்கு விசாரணை அரசியலமைப்பின் கூட்டாட்சி இயல்புகளுடன் தொடர்புடையது.

**3. மேல் வழக்கு விசாரணை (Appellate Jurisdication)**

உச்ச நீதிமன்றத்தின் இந்த அதிகாரம் **மூன்று விதமானது.**

- ❖ அரசியலமைப்பு சார்ந்த வழக்குகள் (Constitutional) அரசியலமைப்பு சட்டம் ஒன்றின் விளக்கத்தை பொறுத்து வழக்காக இருந்து அவ்வழக்கை முன்பு விசாரித்த உயர்நீதிமன்றம் அது அரசியலமைப்பு சார்ந்த வழக்கு என்று சான்றிதழ் வழங்கினால் மட்டுமே உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடியும்.
- ❖ அது போன்ற சான்றிதழை வழங்க உயர்நீதிமன்றம் மறுத்தாலும் உச்ச நீதிமன்றம் அந்த வழக்கு அரசியலமைப்பின் விளக்கத்தை நாடியது என்று கருதினால் தன்னிடம் முறையிட்டுக் கொள்ள அனுமதி வழங்கலாம்.
- ❖ (Civil) சிவில் வழக்குகளில் மாநில உயர்நீதி மன்றங்களில் இருந்து உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீட்டுக்கு செல்ல வேண்டுமானால் சிவில் வழக்கின் மதிப்பு 20,000 ரூபாய்க்கு குறையாமலோ அல்லது அவ்வழக்கு மேல்முறையீட்டுக்கு தகுதியுடைய வழக்காகவோ இருப்பதாக உயர்நீதி -மன்றத்திட மிருந்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- ❖ **கிரிமினல் வழக்குகள்** குற்ற வழக்குகளில் மாநில உயர்நீதி மன்றகளிலிருந்து உச்சநீதி மன்றத்திற்கு மேல் வழக்காக செல்ல வேண்டுமானால் கீழ் நீதிமன்றத்தில் விடுதலையான வழக்கில் உயர்நீதி -மன்றம் மரண தண்டனை கொடுத்திருந்தால் அல்லது கீழ்நீதி மன்றத்திலிருந்து வழக்கை தானே எடுத்துக் கொண்டு உயர்நீதி மன்றம் மரணதண்டனை கொடுத்திருந்தால் அல்லது உச்ச நீதிமன்றத்தில் மேல்

வழக்காக செல்ல தகுதியுடையது என்று சான்றிதழ் பெற்றிருந்தால் உச்ச நீதி மன்றத்தில் முறையீடு செய்து கொள்ளலாம்.

❖ நிபந்தனைகளுக்கும், எல்லைகளுக் -கும் உட்பட்டு உச்சநீதிமன்றத்தின் குற்ற வழக்குகள் மேல் விசாரணை அதிகாரத்தை பாராளுமன்றம் விஸ்தரிக்கலாம்.

❖ சரத்து 136ன் படி உச்ச நீதிமன்றத்திற்கு ராணுவ நீதிமன்றங்கள் இல்லாத பிற நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பு உத்தரவு கட்டளை அல்லது தண்டனை ஆகியவற்றுக்கு எதிராக தன்னிடம் முறையிட்டு கொள்ள அனுமதி வழங்கலாம்.

**4. ஆலோசனை வழங்கும் அதிகாரம் (Advisory Jurisdication )**

❖ இந்திய உச்ச நீதிமன்றத்தின் குறிப்பிடத்தக்க இயல்பு அதன் ஆலோசனை அளிக்கும் பங்காகும் (சரத்து 143)

❖ சமூக முக்கியத்துவம் வாய்ந்த சட்டத்தைப்பற்றிய ஐயப்பாடுகளைக் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பி அதன் கருத்தை கேட்டுக்கொள்ளலாம்.

❖ ஆனால் உச்ச நீதிமன்றம் கட்டாயம் ஆலோசனை வழங்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை

❖ அரசியலமைப்பு தொடங்குவதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் மீதான பிரச்சனை களையும் உச்ச நீதி மன்றத்திற்கு அதன் கருத்தைப் பெற குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

❖ அத்தகைய வழக்குகளில் இந்திய அரசியலமைப்பின் கீழ் உச்சநீதிமன்றம் குடியரசுத் தலைவருக்கு தனது கருத்தை அளிக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை.

**5. நீதிப்புனராய்வு அதிகாரம் ( Judicial Review)**

❖ சரத்து 137ன் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு தான் வழங்கிய தீர்ப்புகளில் உள்ள தவறுகளை நீக்கவோ அவற்றை சரி செய்வதற்காகவோ தான் வழங்கிய தீர்ப்புகளையே நீதிப்புனராய்வு செய்ய அதிகாரம் உள்ளது.

❖ அதாவது உச்சநீதி மன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் அனைத்து நீதி மன்றங்களையும் கட்டுப்படுத்தினாலும் உச்ச நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது என்று பொருள்.

## 6. பதிவு செய்துகொள்ளும் நீதிமன்றம் (court of records)

- ❖ இந்திய உச்ச நீதிமன்றம் ஒரு பதிவு செய்து கொள்ளும் நீதிமன்றமாக இருக்க வேண்டும் என்று **பிரிவு 129** கூறுகிறது.
- ❖ இதன் மூலம் உச்ச நீதிமன்றத்தின் பதிவேடுகளை சாட்சியப் பதிவேடு -களாக எங்கும் பயன்படுத்தலாம். அச்சாட்சியத்திற்கான நிரூபணத்தை எந்த நீதிமன்றமும் கோர முடியாது.
- ❖ இந்நீதிமன்றம் பதிவேடுகளை முறைப்படுத்தும் நீதிமன்றமாக விளங்குவதால் இதனை அவமதிப்பவர் -களை தண்டிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

## 7. இன்னபிற அதிகார வரம்பு

- ❖ உச்சநீதிமன்றம் தான் வெளியிட்ட தீர்ப்புகளையோ அல்லது உத்தரவு - களையோ மறுசீராய்வு செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
- ❖ உச்சநீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட தீர்ப்புகள் இந்திய எல்லைக்குட்பட்ட எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
- ❖ குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று நீதித்துறை நடவடிக்கைகளையும் செயல்முறை களையும் ஒழுங்குபடுத்து வதற்காக விதிகளை இயற்ற உச்சநீதிமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

## உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பதவி நீக்கம் (Removal of the judges of the supreme court)

- ❖ உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர் தவறான நடத்தை அல்லது திறமையின்மைக்காக பதவி நீக்கம் செய்யப்படலாம்.
- ❖ நீதிபதிக்கு எதிரான தீர்மானம் பாராளுமன்ற இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட வேண்டும். ஒவ்வொரு சபையிலும் சபையின் மொத்த உறுப்பினர்களில் பாதிக்கும் மேலானவர்களாலும் சபைக்கு வந்திருந்து வாக்களிப்போரில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையின - ராலும் அத்தீர்மானம் ஏற்றுக் -கொள்ளப்பட வேண்டும். சபைகளில் தீர்மானம் குடியரசுத் தலைவரை அடைந்ததும் அவர் நீதிபதியை பதவி நீக்கம் செய்வார்.

- ❖ **சரத்து 125 (5)**ன் கீழ் பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் உச்சநீதிமன்றம் நீதிபதிகளை பதவிநீக்கம் செய்யும் நடைமுறை மற்றும் தவறான நடத்தை திறமையின்மை பற்றிய ஆதாரங்கள் மற்றும் அதற்கான விசாரணை போன்றவற்றை ஒழுங்குப்படுத்தலாம்.
- ❖ இதன்படி **1968ஆம் ஆண்டு** நீதிபதிகள் (விசாரணை) சட்டத்தினை பாரளுமன்றம் இயற்றியது.

- இச்சட்டத்தின் கீழ் நீதிபதியினை பதவிநீக்கம் செய்யும் தீர்மானம் இரு அவைகளின் முன்பும் வைக்கப்படும்.
- இதனை மக்களவையில் தாக்கல் செய்தால் மக்களவை உறுப்பினர்கள் 100 பேருக்கு குறையாமல் கையெழுத்திட வேண்டும்.
- இதனை மாநிலங்கள் அவையில் தாக்கல் செய்தால் மாநிலங்களை உறுப்பினர்கள் 50 பேருக்கு குறையாமல் அதில் கையெழுத்திட வேண்டும்.
- குற்றச்சாட்டினை திட்ட வடிவமாக 14 நாட்களுக்கு முன்னர் நீதிபதிக்கு வழங்கிய பின்னரே இத்தீர்மானத் -தினை கொண்டுவரமுடியும்.
- இதற்கான தீர்மானம் முறைப்படி தாக்கல் செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட அவையின் தலைவர் குற்றம் சாட்டப்பட்ட நீதிபதியின் தவறான நடத்தை மற்றும் தகுதியின்மை குறித்து விசாரிக்க மூன்று உறுப்பினர்களை கொண்ட நீதிக்குழுவினை அமைப்பார்.
- இக்குழுவின் தலைவராக உச்சநீதிமன்றத்தின் பணியிலுள்ள நீதிபதி நியமிக்கப்படுவார்.
- மற்ற இரண்டு உறுப்பினர்களின் ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் பணிபுரியம் ஒருவராகவும் மற்றொருவர் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் ஜுரியாகவும் இருப்பார்.
- இக்குழுவின் முன் குற்றம் சாட்டப்பட்ட நீதிபதி தனக்காக வாதாடவோ அல்லது தனது கவுன்சில் மூலம் வாதாடவோ உரிமை உடையவராகிறார்.
- இதற்ககான தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட அவையின் தலைவரிடம் இக்குழு தனது அறிக்கையை அளிக்கும்.
- இக்குழுவின் அறிக்கை மீது பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது எடுக்காமலும் இருக்கலாம்.
- இக்குழு நீதிபதியின் தவறான நடத்தை (provedmisbehaviour) அல்லது தகுதியன்மைக்கான (Incapacity) ஆதாரங்களைத்தர தவறினால் இத்தீர்மானத்தை பாராளு -மன்றம் எடுத்துக் கொள்ள இயலாது.
- இத்தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட அவையின் தேவையான பெரும்பான்மை பெற்று நிறை வேற்றப்பட்டால் அடுத்த அவைக்கு அனுப்பப்படும் அந்த அவையும் அதே பெரும்பான்மையில் இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.
- இதன் பிறகு இத்தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப் -படும். பின்னர் இது நிறைவேற்றப்

-பட்டால் குற்றம் சாட்டப்பட்ட நீதிபதி குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படுபவார்.

**உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை கூறும் அதிகாரங்கள் இயல்பு (Nature of SC's Advisory Jurisdication)**

- சரத்து 143ன் கீழான ஆலோசனை கூறும் அதிகாரம் உச்சநீதிமன்றத் -தின் மேல் வழக்கு விசாரணை அதிகாரமல்ல சரத்து (143 (2)) ன் கீழ் உச்ச நீதிமன்றம் தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியின் மீதான தனது கருத்தை தெரிவிக்க மறுக்கலாம்.
- இது வரை குடியரசுத் தலைவர்கள் 10முறை உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்டுள்ளனர்.
- ஆனால் உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் செயல்படத் தேவையில்லை.
- அது அவரை கட்டுப்படுத்தாது இது அரசியலமைப்பு முக்கியவத்தும் வாய்ந்த விஷயங்களில் நிபுணர்கள் கருத்தை பெறுவதற்கான ஒரு நடைமுறையாகும் இதற்காகவே குடியரசுத் தலைவர் ஆலோசனையை கோருவார்.

**இந்தியத் தலைமை நீதிபதிகள்**

- முதல் : **ஹீராலால் ஜெ. கானியா**
- தற்போது : **தீபக் மிஸ்ரா (45)**
- முதல் சீக்கிய நீதிபதி : **ஜெகதீஷ் சிங்கேஹர் (44)**
- **T.S. தாகூர் (43)**
- முதல் பெண் நீதிபதி : **பாத்தீமா பீவி (முஸ்லீம் பெண்)**

**இந்திய அரசுத் தலைமை வழக்கறிஞர் - சரத்து (76)**

- இந்திய அரசாங்கத்திற்கு சட்ட சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை வழங்கவும், சட்ட சம்பந்தமாக இடப்படும் பிற பணிகளைச் செய்யவும் குடியரசுத் தலைவர் இந்திய அரசுத் தலைமை வழக்கறிஞரை நியமனம் செய்கிறார்.
- **தகுதிகள்:** உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கான தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். உச்சநீதி மன்றம் டெல்லியில் அமைந்துள்ளது.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்தியாவில் வேறு எந்த ஒரு பகுதியிலும்
- அமர்வுகளை நடத்த முடிவெடுக்கும் உரிமை உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு.
- இந்திய குடிமகனாக இருக்க வேண்டும், உயர்நீதிமன்றத்தில் **5 ஆண்டுகளுக்கு** குறையாமல் நீதிபதியாக பணியாற்றி இருக்க வேண்டும் அல்லது **10 ஆண்டுகள்** வழக்கறிஞராக பணியாற்றி இருக்க வேண்டும் அல்லது குடியரசுத் தலைவரின் பார்வையில் அவர் சிறந்த

நீதிமானாக இருக்க வேண்டும். தலைமை நீதிபதிக்கு உண்டு

- **பதவிக்காலம்:** குடியரசுத் தலைவர் விரும்பும்வரை அவர் பதவியில் இருப்பார்.
- உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் பதவி காலம் **65 வயது**

**ஊதியம்:**

- பாராளுமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது

**கடமைகள் (சரத்து 76(2))**

- மத்திய அரசின் சார்பில் எல்லா வழக்குகளுக்கும் ஆஜராகுதல்.
- சரத்து 143ன் படி ஜனாதிபதிக்கு அனுப்பியவற்றில் அரசிற்கு ஆலோசனை வழங்கல்.
- அரசியலமைப்பு, பிற சட்டங்களால் தரப்பட்ட பணிகளை செய்தல்.

**அதிகாரங்கள்**

- இந்திய எல்லைக்குள் எந்த நீதிமன்றத்திலும் வாதிடலாம்.
- பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் வாக்குரிமையின்றி கலந்து கொள்ளலாம்.
- பாராளுமன்ற உறுப்பினர்க்குரிய சலுகை, பாதுகாப்புகளைப் பெறலாம்.
- பாராளுமன்ற குழுக்களிலும் கலந்து கொள்ளலாம்.

**தற்போது**
**கே.கே.வேணுகோபால்**

**உயர்நீதிமன்றங்கள்**

- உயர் நீதிமன்றம் மாநில நீதித்துறையின் தலைமையாகும்.
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றம் இருக்கும் **(சரத்து 214)**
- ஒரு மாநிலத்தின் நீதித்துறை உயர்நீதி மன்றத்தினையும் கீழ் நீதிமன்றங்களையும் உள்ளடக்கியது.
- பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குமோ யூனியன் பிரதேசங்களுக்குமோ சேர்த்து பொதுவான ஒரு உயர்நீதிமன்றத் -தினை அமைக்கலாம். **(சரத்து 231)**
- ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் ஒரு பதிவு நீதிமன்றமாகும். (Court of record) **(சரத்து 215)**

**அமைப்பு**

- உயர்நீதிமன்றம் ஒவ்வொன்றும் ஒரு தலைமை நீதிபதியையும் குடியரசுத் தலைவர் நிர்ணயிக்கின்ற எண்ணிக்கையில் மற்ற நீதிபதி -களையும் கொண்டிருக்கும். இதனால் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அரசியலமைப்பு வரையறுக்கவில்லை என்பது புலனாகும்.

**நீதிபதிகள் நியமனம் :**

- உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும் மற்ற நீதிபதிகளையும் குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார்.
- தலைமை நீதிபதியை நியமனம் செய்யும் போது அவர் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும் அம்மாநில ஆளுநரையும் கலந்தாலோசிப்பர் மற்ற நீதிபதிகளை நியமனம் செய்யும் போது மேற்குறிப்பிட்டவர்களுடன் அந்த உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியையும் கலந்தாலோசனை செய்வார்.

**தகுதிகள் :**

1. உயர்நீதி மன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்ட ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
2. குறைந்தது பத்து ஆண்டுகள் நீதித்துறை பணியாளராக இருந்திருக்க வேண்டும் (அல்லது)
3. குறைந்தது பத்து ஆண்டுகள் உச்சநீதிமன்ற வழக்கறிஞராகப் பணியாற்றி இருக்க வேண்டும்.
4. அரசியலமைப்பில் குறைந்தபட்ச வயது வரம்பு ஏதும் குறிப்பிடபடவில்லை. மேலும் உச்சநீதிமன்றத்தைப் போல சிறப்புமிக்க சட்டவியல் நிபுணரை நீதிபதியாக நியமிக்க இங்கு வழி இல்லை.

**பதவிக்காலம்**

- 1963-ம் ஆண்டு 15-வது சட்டமன்றத் திருத்தத்தின்படி 62 ஆக உள்ளது.

1. உயர்நீதிமன்ற நீதிபதியை பதவிநீக்கம் செய்வதற்கான நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலமே உயர்நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்ய இயலும்.
2. குடியரசுத்தலைவருக்குத் தனது இராஜினமா கடிதத்ததை எழுதுவதன் மூலம் பதவி விலகலாம்.
3. வேறெந்த உயர்நீதிமன்றத்திற்கோ அல்லது உச்ச நீதிமன்றத்திற்கோ அவர் நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டாலும் அவர் இடம் காலியாகி விடும்.

**உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சுதந்திரம் (Provision for Independence of the Judges of theHigh Court) :**

- இந்திய அரசியலமைப்பு உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சுதந்திரத்தை பின்வரும் வழிகளில் உறுதி செய்கின்றது.
- உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை தவறான நடத்தை மற்றும் தகுதியின்மை ஆகியவற்றின் அடிப்படையில் குடியரசுத்தலைவர்

பதவி நீக்கம் செய்யலாம். ஆனால் இதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் சபைக்கு வந்திருந்து ஓட்டளிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பாண்மை பெற்று நிறைவேற்றப்பட வேண்டும்.

- ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி ஒய்வு பெற்றபின் உச்ச நீதிமன்றம் மற்றும் அவர் பதவியில் இருந்த உயர்நீதிமன்றம் அல்லாத வேறு ஒரு உயர்நீதிமன்றம் ஆகியவற்றை தவிர வேறு எந்த நீதிமன்றங்களிலோ அல்லது எந்த ஒரு இந்திய அதிகாரியின் முன்பாகவோ பணியாற்ற முடியாது.
- அவர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு நிதி நெருக்கடி நேரத்தை தவிர பிற நேரங்களில் அவர்களது சம்பளம் மற்றும் செலவுப்படிகள் ஆகியவற்றை குறைக்க இயலாது.
- அவர்களது சம்பளமும் செலவுப்படிகளும் மாநில தொகுப்பு நிதியின் மீதான செலவினங்களாகும். சட்டசபையின் ஓட்டெடுப்பிற்கு உட்பட்டவையல்ல.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீது அல்லாமல் வேறு எந்த நேரங்களிலும் அவர்களின் நடத்தையைப் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்கக் கூடாது.

**ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றுக்கு ஒரு நீதிபதியை மாற்றுதல் (Transfer of the judge from one High court to another ) :**

- ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியினை அவருடைய அனுமதி இல்லாமலேயே குடியரசுத்தலைவர் ஒரு உயர் நீதி மன்றத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றலம் **(சரத்து 222)**
- இதற்கு இந்திய தலைமை நீதிபதியினை முழுமையாக கலந்தாலோசிக்க வேண்டும்.
- ஒரு உயர்நீதிமன்ற நீதிபதிக்கு பணியிட மாறுதல் வழங்குவது தொடர்பான அனைத்து உண்மைகளும் இந்தியாவின் தலைமை நீதிபதிக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

| பெயர் | வருடம் | அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள் | இடம் |
|---|---|---|---|
| அலகாபாத் | 1866 | உத்திரப்பிரதேசம் | அலகாபாத் (பெஞ்ச் - லக்னோ) |
| ஆந்திரப் பிரதேசம் | 1954 | ஆந்திரப்பிரதேசம் | ஹைதராபாத் |
| பம்பாய் | 1862 | மகராஷ்டிரம், தாதர் நகர் ஹவேலி, கோவா, டாமன், டையூ | மும்பை (நாக்பூர்,பாஞ்சி, ஔரங்கபாத் ஆகிய இடங்களில் பெஞ்ச்) |
| கல்கத்தா | 1862 | மேற்குவங்களாம், அந்தமான், நிக்கோபர் | கொல்கத்தா (பெஞ்ச் - போர்ட்பிளேயர்) |
| டெல்லி | 1966 | டெல்லி | டெல்லி |
| கவுகாத்தி | 1948 | அஸ்ஸாம், நாகலாந்து, மிசோராம், அருணாச்சல பிரதேசம் | கவுகாத்தி (கோஹிமா, இம்பால், அகர்தலா, ஷில்லாங்கில் பெஞ்ச்) |
| குஜராத் | 1960 | குஜராத் | அஹமதபாத் |
| இமாச்சலப் பிரதேசம் | 1966 | இமாச்சலப்பிரதேசம் | சிம்லா |
| ஜம்மு காஷ்மீர் | 1928 | ஜம்மு காஷ்மீர் | ஸ்ரீநகர், மற்றும் ஜம்மு |
| கர்நாடகா | 1884 | கர்நாடகா | பெங்களூர் |
| கேரளா | 1958 | கேரளா, லட்சத்தீவுகள் | எர்ணாகுளம் |
| மத்திய பிரதேசம் | 1956 | மத்தியபிரதேசம் | ஜபல்பூர் (பெஞ்ச் இந்தூர், குவாலியர்) |
| மெட்ராஸ் | 1862 | தமிழ்நாடு, பாண்டிச்சேரி | மெட்ராஸ் |
| ஓரிஸ்ஸா | 1948 | ஓரிஸ்ஸா | கட்டாக் |
| பட்னா | 1916 | பீகார் | பாட்னா (பெஞ்ச் ராஞ்சி) |
| பஞ்சாப் அரியானா | 1975 | பஞ்சாப், அரியானா, சண்டிகர் | சண்டிகர் |
| ராஜஸ்தான் | 1949 | ராஜஸ்தான் | ஜோத்பூர் (பெஞ்ச் ஜெயப்பூர்) |
| சிக்கிம் | 1975 | சிக்கிம் | காஸ்டாக் |
| சட்டிஸ்கர் | 2000 | சட்டிஸ்கர் | பிலாஸ்பூர் |
| உத்தராஞ்சல் | 2000 | உத்தராஞ்சல் | நைனிடால் |
| ஜார்கண்ட் | 2000 | ஜார்கண்ட் | ராஞ்சி |
| மணிப்பூர் | 2013 | மணிப்பூர் | இம்பால் |
| மேகலாயா | 2013 | மேகலாயா | ஷில்லாங் |
| திரிபுரா | 2013 | திரிபுரா | அகர்தலா |

- இந்திய தலைமை நீதிபதியின் கருத்தினை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் மேலும் அவரது கருத்து குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தும்.

**உயர்நீதிமன்ற அதிகாரங்கள் (Jurisdication of the High Court) :**

**1. மூல வழக்கு விசாரணை அதிகாரம் (Original Jurisdication)**

- பெரு நகரங்களில் உயர்நீதிமன்றங்-களுக்கு மூலவழக்கு விசாரணை மற்றும் மேல் வழக்கு விசாரணை ஆகிய அதிகாரங்கள் உண்டு. ஆனால் மற்ற உயர் நீதிமன்றங்களுக்கு பெரும்பாலும் மேல் வழக்கு விசாரணை அதிகாரமே உண்டு.
- கடற்படை நிர்வாகக் குழு, நீதிமன்ற அவமதிப்பு மற்றும் திருமண சம்பந்தமான வழக்குகள் போன்ற விவகாரங்களில் மட்டுமே இந்நீதிமன்றங்களுக்கு மூல வழக்கு விசாரணை அதிகாரம் உள்ளது.

**2. மேல் வழக்கு விசாரணை அதிகாரம் (Appellate Jurisdication)**

- அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கும் தனக்கு கீழ் உள்ள நீதிமன்றங்களில் இருந்து வரும் **குற்றவியல்** மற்றும் **சமூகவியல்** வழக்குகளிலும் தானே மேல் விசாரணைக்காக எடுத்துக்-கொள்ளும் வழக்குகளிலும் மேல் உயர்நீதிமன்றங்களுக்கு அதிகாரம் உள்ளது.

**3. அடிப்படை உரிமைகள் காத்தல் (Writ Jurisdication)**

- அரசியலமைப்பின் **226 விதியின்** கீழ் அடிப்படை உரிமைகளை அமலாக்குவதற்கு மட்டுமின்றி மற்ற காரணங்களுக்காகவும் உத்தரவுகளை பிறப்பிக்கும் உரிமை உயர்நீதிமன்றங்களுக்கு உண்டு.
- இந்த அதிகாரத்தின்படி உச்சநீதிமன்ற சரத்து **32ன் கீழ்** பிறப்பிக்கும் அதே வகையான உத்தரவுகளையும் கட்டளைகளையும் பிறப்பிக்கும் உரிமை உயர்நீதி மன்றத்திற்கு உள்ளது.
- உயர்நீதி மன்றங்களின் இந்த அதிகாரம். உச்சநீதிமன்றத்தின் அதிகாரத்தை விட பெரியதாகும்.
- உச்ச நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது மட்டுமே உத்தரவுகளை பிறப்பிக்க அதிகாரம் பெற்றுள்ளது. ஆனால் உயர்நீதி மன்றம் அடிப்படை உரிமைகள் மட்டுமல்லாது சாதாரண சட்ட உரிமைகள் மீறப்படும் போது கூட உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

**உயர்நீதிமன்ற அதிகார வரம்பு**

❖ மாநில நீதித்துறையானது ஓர் நீதிமன்றத்தினையும் அதன் கீழ் உள்ள பல கீழமை நீதிமன்றங்களையும் கொண்டுள்ளது. அதன் அதிகார வரம்புகளாவன.

**1. பதிவு செய்து கொள்ளும் நீதிமன்றம் :**

❖ ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் ஒரு பதிவு செய்து கொள்ளும் ஆவண நீதிமன்றம் ஆகும். தன்னை அவமதித்தவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் உள்ளிட்ட எல்லா அதிகாரங்களையும் அது பெற்றுள்ளது.

**2. அனைத்து நீதிமன்றங்களையும் மேற்பார்வையிடும் அதிகாரம் :**

❖ தனது அதிகார வரம்பிற்குள் வருகின்ற அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை மேற்பார்வை இடும் அதிகாரத்தை ஒவ்வோரு உயர்நீதிமன்றமும் பெற்றுள்ளது.

**3. வழக்குகளைத் தானே எடுத்துக்கொள்ளும் அதிகாரம் :**

❖ தனக்கு கீழுள்ள கீழமை நீதிமன்றத்தில் உள்ள வழக்கொன்றில் அரசியலைமப்பின் பொருள் விளக்கம் குறித்து பொருளார்ந்த சட்டப் பிரச்சனை ஒன்று உள்ளது என்று உயர்நீதிமன்றம் திருப்தியுற்றால் அவ்வழக்கை அக்கீழமை நீதிமன்றத்திலிருந்து தானே விசாரணைக்காக எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

**4. நீதிப்பேராணைகள் வெளியிடும் அதிகாரம் :**

❖ உயர்நீதிமன்றம் அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்துவதற்காகவும் மற்ற சில நோக்கங்களுக்காகவும் ஐந்து வகையான நீதிப் பேராணைகளை வெளியிட அதிகாரம் படைத்துள்ளது. இந்த வகையில் உச்ச நீதிமன்றத்தை விட அதிக அதிகாரம் பெற்றுள்ளது.

**5. பொது அதிகார வரம்பு :**

❖ உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு மற்றும் அதிகாரங்கள், அரசியலமைப்பு தொடங்கப் படுவதற்கு முன்பு எப்படி இருந்தனவோ அப்படியே இருக்கும்.

**6. அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமிக்கும் அதிகாரம்:**

❖ உயர் நீதிமன்றத்தின் ஊழியர்களையும் அதிகாரி களையும் நியமிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் உள்ளது.

**கீழ்நிலை நீதிமன்றங்கள் (Suboridnate Court)**

உயர் நீதிமன்ற கட்டுப்பாட்டின் கீழ், கீழ்நிலை நீதிமன்றங்கள் இயங்குகின்றன. மாவட்ட அளவில் இயங்கும் இவ்வகை நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் பெற்றவை கீழ்நிலை நீதிமன்றங்களின் படிநிலைகளாவன

| **சிவில் பக்கம்** | **குற்றவியல் பக்கம்** |
| --- | --- |
| ↓ | ↓ |
| மாவட்ட நீதிபதி | செசன்ஸ் நீதிபதி |
| ↓ | ↓ |
| கூடுதல் மாவட்ட நீதிபதி | கூடுதல் செசன்ஸ் நீதிபதி |
| ↓ | ↓ |
| சிவில் நீதிபதி (முதுநிலை பிரிவு) | முதன்மைநீதித்துறை நடுவர் |
| ↓ | ↓ |
| சிவில் நீதிபதி (இளநிலைப் பிரிவு) | நீதித்துறை நடுவர் |

**மாவட்ட நீதிபதியின் நியமனம் :**

- ❖ மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் ஆளுநரால் மாநில உயர்நீதிமன்றத் -தின் ஆலோசனையுடன் நியமிக்கப்படுகின்றார்.
- ❖ இவர்கள் ஏழாண்டுகளுக்கு குறையாமல் வழக்கறிஞராகவோ அரசாங்க வழக்கறிஞராகவோ பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**மற்ற நீதிபதிகளின் நியமனம்:**

- ❖ மாவட்ட நீதிபதிகள் தவிர ஒரு மாநிலத்தின் மற்ற நீதித்துறை பதவிகளுக்கு ஆளுநர் மாநில அரசுப்பணியாளர் தேர்வாணையத் -துடன் உயர்நீதிமன்றத்தையும் கலந்தாலோசித்து பணி நியமனம் செய்வார்.

**கீழ்நிலை நீதிமன்றங்களின் மீதான கட்டுப்பாடுகள்**

மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் ஏனை கீழ்நிலை நீதிமன்றங்களின் மீது உயர்நீதிமன்றத்திற்கு முழுமையான நிர்வாகக் கட்டுப்பாடு உள்ளது.

- ❖ மாவட்ட நீதிபதி பதவிக்குக் குறைவான அந்தஸ்துடைய நீதித்துறை பதவி வகிக்கும் அனைவருடைய பணியமர்த்தும் பதவி உயர்வு விடுப்பு வழங்கல் போன்ற எல்லா விஷயங்களையும் கவனிக்கும் அதிகாரம் உயர்நீதி மன்றத்திடமே உள்ளது.

**குடும்ப நீதிமன்றங்கள் (Family Courts)**

- ❖ முறையான நீதிமன்றங்களின் படிநிலைகளுடன், இந்தியாவில்

பல்வேறு மாநிலங்களில் குடும்ப நீதிமன்றங்களும் அமைக்கப்படுகின்றன.

❖ 1984 ஆம் ஆண்டின் குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்திற்கிணங்க அதிகச் செலவினம் இல்லாமல் வழக்குகளைத் தீர்ப்பது மற்றும் முறையான நீதிமன்றங்களில் அதிகச் செலவு ஏற்படுவது போன்றவற்றை கருத்தில் கொண்டு திருமணங்கள் மற்றம் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு குடும்ப நீதிமன்றங்கள் அதிகாரங்களையும் அதிகார வரம்பையும் பெற்றுள்ளன.

❖ குடும்பம் விவாகரத்து வரதட்சணை போன்றவற்றின் பிரச்சனைகள் தொடர்பான விவகாரங்களும் இவ்வித நீதிமன்றங்களால் கவனிக்கப்படுகின்றன. இவ்வித நீதிமன்றங்கள் உரிமையியல் சட்டத்தைப் பின்பற்றுகின்றன.

**உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஓாஒப்பீடு(Comparision between the supreme court and the High Court):**



**உயர்நீதிமன்றங்களின் நிர்வாகப்பணிகள் (Administrative function of the High Court)**

உச்ச நீதிமன்றங்கள் தனக்கு கீழ் உள்ள நீதிமன்றங்களின் பணிகளை கட்டுப்படுத்தவும் மேற்பார்வையிடவும் செய்கின்றது. மேலும் அந்நீதி மன்றங்களுக்கான விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் வகுக்கிறது.

| வ.எண் | உச்சநீதிமன்றம் | உயர்நீதிமன்றம் |
|---|---|---|
| 1. | உச்சநீதிமன்றம் ஒரு கூட்டாட்சி நீதிமன்றமாகும். இது டெல்லியில் அமைந்துள்ளது. இதன் பெஞ்சுகள் மற்ற இடங்களில் அமைக்கப்படலாம். ஆனால் அமைக்கப்படவில்லை. | உயர்நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் யூனியன் பிரதேசத்தி -லும் இடமுள்ளது. ஆனால் இரண்டு அதற்கு மேற்பட்ட மாநிலங்களிலோ யூனியன் பிரதேசங்களிலோ இணைந்து ஒரு பொதுவான உயர் நீதிமன்றத்தை அமைக்கலாம் |
| 2. | உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குடியரசுத் தலைவரால் நியமிக்கிறார். | உயர்நீதிமன்ற நீதிபதிகள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். |
| 3 | உச்ச நீதிமன்ற நீதிபதியாவதற்கு தேவையான தகுதிகள் :<br>1. அவர் தொடர்ந்து குறைந்தது 5 வருடங்களுக்கு உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்திருக்க வேண்டும்.<br>2. தொடர்ந்து குறைந்தது 10 வருடங்களுக்கு உயர்நீதிமன்ற வழக்கறிஞராக இருந்திருக்க வேண்டும்.<br>3. குடியரசுத் தலைவரின் கருத்துப்படி புகழ்பெற்ற ஜுரியாக இருக்க வேண்டும். | உயர் நீதிமன்ற நீதிபதியாவதற்கு தேவையான தகுதிகள்<br>1.இந்தியப் பிரதேசத்தில் குறைந்தது 10 வருடங்களுக்கு நீதித்துறை அலுவலராக இருந்திருக்க வேண்டும்.<br>2.ஒரு உயர்நீதிமன்ற வழக்கறிஞராக குறைந்தது 10 வருடங்களுக்கு பணியாற்றி இருக்க வேண்டும். |
| 4. | உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 65 வயது பூர்த்தியடையும் போது ஓய்வு பெறுவார் | உயர்நீதிமன்ற நீதிபதி 62 வயது பூர்த்தி அடையும் போது ஓய்வு பெறுவார். |
| 5 | குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியையும் மற்ற நீதிபதிகளையும் பதவி நீக்கும் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் | உச்ச நீதிமன்றத்திற்கு உள்ள அதே முறையின் மூலமே உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியையும் மற்ற நீதிபதிகளையும் குடியரசுத் தலைவர் |

| | | |
|---|---|---|
| | நிறைவேற்றுவதன் மூலம் பதவியிலிருந்து நீக்கலாம் | பதவி நீக்கம் செய்யலாம். |
| 6. | உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி 1,10,000 ரூபாயும் மற்ற நீதிபதிகள் 1,10,000 ரூபாயும் | உயர்நீதிமன்றம் தலைமை நீதிபதி 1,00,000 ரூபாயும் மற்ற நீதிபதிகள் 90,000 ரூபாயும் மாதச் சம்பளமாகப் பெறுகின்றனர். |
| 7. | உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தனது ஒய்வுக்குப் பின்னர் மற்றும் பதவிக்காலத்தில் இந்தியப் பிரதேசத்திலுள்ள எந்த நீதிமன்றத்திலோ அல்லது அதிகாரி முன்பாகவோ வாதாட முடியாது. | உயர் நீதிமன்ற நீபதிகள் தனது பதவிக்காலத்தில் எந்த நீதிமன்றத்திலும் வாதாட முடியாது. அவர்களது ஒய்வுக்கு பின்னர் உயர்நீதிமன்றத்திற்கு கீழுள்ள நீதிமன்றத்தில் வாதாட முடியாது அதாவது அவர்கள் மற்ற உயர்நீதமன்றங்களிலும் வாதாடலாம் |
| 8 | உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு பதவி இறக்கவோ பணியிடமாறுதலோ வழங்கப்படாது | உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாற்றப்படலாம் அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு வழங்கப்படலாம். |

❖ **சரத்து 227ன்** கீழ் உயர்நீதிமன்றத்தின் அதிகாரப் பகுதிக்குள் செயல்படும் ஆயுதப்படைகளின் விவகாரங்களை கையாளும் தீர்ப்பாயங்களையும் மேற்பார்வையிடும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு. இவ்வதி -காரம் மூலம் ஒரு உயர்நீதிமன்றம்

1. அத்தகைய நீதிமன்றங்களிலிருந்து அறிக்கை கோரலாம்
2. அந்நீதிமன்றங்களின் நடைமுறைகளை ஒழுங்குப்படுத்துவதற்காக விதிகளையும் கட்டுப்பாடுகளையும் வகுக்கலாம்.
3. அந்நீதிமன்றங்களின் அலுவலர் -களினால் பராமரிக்கப்படும் கணக்குகளை பராமரிக்க வேண்டிய முறைகளை வகுக்கலாம்.
4. ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றுக்கு வழக்குகளை மாற்றலாம்.

❖ **சரத்து 235ன்** கீழ் நியமனம் மற்றும் பணியிடமாறுதல் போன்ற விவகாரங்

-களில் உயர்நீதிமன்றம் தனக்கு கீழுள்ள நீதிமன்றங்களையும் மாவட்ட நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்த முடியும்.

- அரசியலமைப்பின் **229வது** விதியின் கீழ் ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திற்கும் அதன் பணியாளர்களின் மீது முழுமையான கட்டுப்பாடு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- நீதிமன்ற அலுவலர்களின் பணிகளுக்கான நிபந்தனைகளை ஒழுங்குபடுத்தவும் அவர்களை பணியிலிருந்து நீக்கவும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு அதிகாரம் உண்டு.
- ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் உச்ச நீதிமன்றத்தை போன்றே பதிவு நீதிமன்றமாகும். மேலும் உயர்நீதி மன்றங்கள் ஒரு நீதிமன்றத்திற்கும் உரிய அனைத்து அதிகாரங்களையும் நீதிமன்ற அவமதிப்பிற்கு தண்டனை வழங்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளன.

## நீதிபதிகள் கல்லூரி அமைப்பு மற்றும் தேர்வுமுறை

- கொலீஜியம் முறை என்பது உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் மற்றும் மாறுதல் போன்ற நடவடிக்கைகளை செய்யும் அமைப்பு ஆகும். இந்திய தலைமை நீதிபதி, நான்கு மூத்த உச்சநீதின்ற நீதிபதிகள் மற்றும் மூன்று உறுப்பினர்கள், உயர்நீதிமன்றம் சார்பாக (உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட) இவர்கள் அனைவரையும் உள்ளடக்கியது கொலீஜியம் ஆகும்.

## தேசிய நீதிமன்ற நியமன குழு (சரத்து 124 A)

- தேசிய நீதிமன்ற நியமன குழு என்ற அமைப்பு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமிக்க மற்றும் இடமாறுதல் செய்வதற்கு பொறுப்பாகும். இவ்வமைப்பு, கொலீஜிய அமைப்பிற்கு மாற்றான அமைப்பாகும் தேசிய நீதிமன்ற நியமன குழு மசோதா மற்றும் அரசமைப்பு திருத்தச்சட்ட மசோதா ஆகியவை 16 மாநிலங்களில் உறுதிப்படுத்தப்பட்டு 31 டிசம்பர் 2014 அன்று குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெற்றது.

**அமைப்பு:**

- இந்திய தலைமை நீதிபதி
- இரண்டு மூத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள்
- மத்திய சட்ட அமைச்சர்
- இரண்டு சிறப்பு நபர்கள்

(இந்த நபர்களைத் தேர்வு செய்வது இந்திய தலைமை நீதிபதி, இந்திய பிரதமர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் அல்லது எதிர்க்கட்சி இல்லாத பட்சத்தில் தனிபெரும்பான்மை எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் கொண்ட அமைப்பு ஆகும்).

**பணிகள்:**

- ❖ இந்திய தலைமை நீதிபதி, உச்சநீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆட்சிப் பதவிகளுக்கு நபர்களை பரிந்துரை செய்தல்.
- ❖ உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை உயர்நீதி மன்றத்தில் இருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்ய பரிந்துரைத்தல்.
- ❖ நியமிக்கப்படும் நபர்களின் தகுதி, திறமை மற்றும் ஏனைய நடைமுறைகளை சட்டத்தில் உள்ளது போல் முறைப்படுத்தி நபர்களை பரிந்துரைத்தல்.

**உயர்நீதிமன்ற நீதிபதிகளை தேர்வு செய்யும் உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள்**

- ❖ இந்த அமைப்பு உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை அவருடைய பணி மூப்பை பொறுத்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமனம் செய்ய பரிந்துரை செய்ய முடியும். தகுதி, திறமை மற்றும் ஏனைய நெறிமுறைகள் சட்டத்தில் கூறியபடி நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம்**

- ❖ இந்த அமைப்பு சம்பந்தப்பட்ட மாநில நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிட -மிருந்து நியமன நபர்களின் பட்டியலைக் கோரும், அவ்வாறு கோரும் போது, தலைமை நீதிபதி தனதுக் கருத்தினை தெரிவிப்பார். இந்த இரண்டு நடவடிக்கைகளிலும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மூத்த இரண்டு நீதிபதிகளை கலந்தா -லோசிக்க வேண்டும். மேலும் ஆளுநர் மற்றும் முதலமைச்சர் கருத்தையும் கேட்டறிய வேண்டும். இவ்வமைப்பில் ஏதேனும் இரண்டு உறுப்பினர் கருத்தில் மாறுபாடு கொண்டால் அந்த நபரை நியமிக்க பரிந்துரை செய்யமுடியாது.

## நிர்வாகத் தீர்ப்பாயங்கள்

- ❖ 42வது அரசியலமைப்பு திருப்புச்சட்டம் **1976**ன் மூலம் **சரத்து 323A & 323 B** அறிமுகப்படுத்தப்பட்டது. **323A** விதியின்படி மத்திய மற்றும் மாநில பொதுப்பணிகளில் நியமிக்கப்படும்.

- நபர்களின் தேர்வு பதவி உயர்வு பணியிட மாறுதல் மற்றும் பணியிடங்களுக்கான நிபந்தனைகள் போன்ற வழக்குகளை தீர்ப்பதற்காக மத்திய மற்றும் மாநில நிர்வாக தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டன.
- இவ்விதிப்படியின் குறிப்பிடப்பட்ட நகரங்களில் கிளைகளுடன் கூடிய மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தை அமைப்பதற்காக **நிர்வாக தீர்ப்பாய சட்டம் 1985யை** பாராளுமன்றம் இயற்றியது.
- பல மாநிலங்களில் மாநில நிர்வாக தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டன.
- பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளர்களின் பணிகளுடைய விவகாரங்கள் மத்திய அல்லது மாநில தீர்ப்பாயங்களின் கீழ் ஒரு அறிக்கையின் மூலம் கொண்டு வரப்பட்டன. தீர்ப்பாயத்தின் தலைவரும், துணைத்தலைவரும் ஒரு உயர்நீதிமன்ற நீதிபதிக்கு சமமான அந்தஸ்தினை உடையவர்களாவர்.
- மேலும் இவர்களது ஒய்வு பெறும் **வயது 65** ஆகும். மற்ற உறுப்பினர்களின் ஒய்வு பெறும் **62** ஆகும்.
- **பின்வருபவர்கள் நிர்வாக தீர்ப்பாயங்களின் அதிகார வரம்பிற்கு உட்படாதவர்களாவர்.**
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் ஊழியர்கள் ஆயுதப் -படை ஊழியர்கள் மக்களவை மற்றும் மாநிலங்களவையின் தலைமைச் செயலக ஊழியர்கள்.
- தீர்ப்பாயங்கள் நீதி மன்றங்களின் வேலைப்பளுவை குறைப்பதற்காகவும் சட்ட நடைமுறையை துரிதப்படுத்து -வதற்காகவும் அமைக்கப்பட்டவை -யாகும்.
- 42வது சட்டத்திருத்ததின்படி பணிகள் தொடர்பான விவகாரங்களை உச்ச நீதிமன்றம் மட்டுமே கவனிக்க இயலும். இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து விட்டு குடியரசுத்தலைவர். மத்திய மற்றும் மாநில நிர்வாக தீர்ப்பாயங்களின் தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் நியமிப்பார்.
- ஒரு உயர் நீதி மன்ற நீதிபதி அல்லது குறைந்தது 2 வருடங்களுக்கு உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்தவர்கள் அல்லது தீர்ப்பாயத்தின் துணைத்தலைவர்கள் ஆகியோரையே தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்க முடியும்.

## நீதித்துறை மறு ஆய்வு
## (JUDICIAL REVIEW)

- அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் தோன்றி வளர்ந்த நீதித்துறை மறு ஆய்வு என்னும் கருத்து ஒரு நாட்டின் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் மற்றும் நிர்வாகத்துறை செயல்கள் அந்நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒத்திசைவாக உள்ளதா இல்லையா என்பதை அந்நாட்டின் தலைமை நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பளிப்பதைக் குறிக்கும். இதன்படி நாட்டின் அரசியலமைப்புக்கு முரணாக இயற்றப்படும் சட்டங்கள் நிர்வாக செயல்கள் யாவற்றையும் செல்லாது என அறிவிக்க தலைமை நீதிமன்றம் அதிகாரம் பெறுகிறது.

### நீதித்துறை மறு ஆய்வின் தேவை :

- அரசியலமைப்பின் மேலாண்மையை காப்பதற்கும்
- மத்திய - மாநில உறவுகளை அரசியலமைப்பு அமைந்துள்ளபடி சமநிலையில் வைத்திருப்பதற்கும்
- குடிமக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பதற்கும் நீதித்துறை மறு ஆய்வு அவசியமாகிறது.

### இந்திய அரசியலமைப்பின் நிலை

- இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் நீதித்துறை மறுஆய்வு என்னும் சொல் குறிப்பிடப்படவில்லை எனினும் பல்வேறு பிரிவுகளில் இது தொடர்பான வகைமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- அடிப்படை உரிமைகளுடன் ஒத்திசையாத அல்லது அவ்வுரிமை -களை ஒடுக்குகின்ற எல்லாச் சட்டங்களும் ஒத்திசையாத அளவிற்கு செல்லும்படி ஆகாது என்று **பிரிவு 13** கூறுகிறது.
- அடிப்படை உரிமைகள் **பிரிவு 32** நீதித்துறை மறு ஆய்வு அதிகாரத்ததை குறிப்பாக உச்சநீதிமன்றத்திடம் அளிக்கிறது.
- இதன்படி அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட உச்சநீதிமன்றத்தை அணுக ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு.
- இதன்படி உச்சநீதிமன்றம் நீதிப் பேராணைகளை பிறப்பிக்கலாம்.
- **பிரிவு 226**ன்படி மாநில உயர்நீதிமன்றங்களும் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்காக நீதிப்பேராணைகளை பிறப்பிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன.

**நீதித்துறை மறு ஆய்வு செய்வதற்கான அடிப்படைகள் (Reasons for judicial review) :**

❖ இந்தியாவில் உச்சநீதிமன்றத்திற்கும், மாநில உயர்நீதி மன்றங்களுக்கும் நீதித்துறை மறு ஆய்வு அதிகாரம் கீழ்கண்ட இனங்களில் வழங்கப்-பட்டுள்ளது.

1. மத்திய மாநில அரசுகளுக்கு இடையே ஏற்படும் சச்சரவுகள் மற்றும் தாவாக்கள்
2. அரசியலமைப்பில் உள்ள பிரிவுகள் ஏதேனும் பற்றி சந்தேகங்களோ அல்லது வேறுபாடுகளோ அல்லது வேறுபட்ட கருத்துக்களோ நிலவுமானால் அதை விளக்குவது அல்லது விமர்சிப்பது
3. அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு
4. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள் இயற்றும் அரசியலமைப்பிற்கு முரணான சட்டங்கள்.

**நீதித்துறை மறு ஆய்வின் நிறைகள்**(Merits of Judical review)

1. அறிவு மற்றும் அனுபவ அடிப்படையில் நீதிபதிகள் நீதி மறுஆய்வு செய்யத் தகுதியுடையவர்கள்.
2. அரசியலமைப்பின் பாதுகாவலனாக கூட்டாட்சி நீதிமன்றம் செயல்பட வகை செய்கிறது.
3. மக்களுடைய குறிப்பாக சிறுபான்மை-யினரின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.
4. வரம்புக்கு உட்பட்டு சுதந்திரமான அரசாங்கம் செயல்பட வகை செய்கிறது.

❖ சட்டமன்றங்கள் அவசர அவரசமாக சட்டங்கள் இயற்றுவதில் இருந்து பாதுகாப்பு தருகிறது.

**குறைகள் :**

1. அதிகாரப் பிரிவினைக் கொள்கைக்கு எதிரானதாக இருக்கக்கூடும்
2. நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை-களுக்கிடையில் பிணக்குகளும் மோதலும் ஏற்பட வழிவகுக்கிறது.
3. சிறந்த சமுதாயத்தை உருவாக்கு-வதற்குத் தேவையான கொள்கை-களையும், திட்டங்களையும் இக்கொள்கைப் பாதிக்கக் கூடும்.
4. நீதித்துறை சட்டத்துறையை மிஞ்சிய அதிகாரம் பெற வகை செய்யும்.
5. நீதிபதிகள் சில சமயங்களில் காலத்திற்குத் தகுந்தாற் போலவும் மாறுபட்ட சூழ்நிலைக்கு ஏற்பவும் நடந்து கொள்ளாமல் பழமைவாதி-களாக இருக்கின்றனர்.
6. நீதிபதிகள் சில சமயங்களில் சட்டங்களில் உள்நோக்கம் என்ன என்பதைப் பாராமல் அவற்றில் உள்ள சொற்களின் பொருளுக்கு ஏற்ப

தீர்ப்பு வழங்குகின்றனர். இதனால் அவர்கள் கடின நோக்கம் உடையவர்களாக மாறுகிறார்கள்.

**பொதுநல வழக்கு**

- பொதுவாக ஒரு சட்டம் தனது உரிமைகளைப் பாதித்துவிட்டதாகக் கூறி அச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என்று பாதிக்கப்பட்ட நபரே நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய வேண்டும்.
- ஆனால் "நீதிபதிகள் இடமாற்ற வழக்கில்" தீர்ப்பளிக்க உச்சநீதி மன்றம் ஒரு விஷயத்தில் ஒருவருக்கு நேரடியாக தொடர்பு இல்லாவிட்டாலும் போதிய அக்கறை இருந்தாலேயே **சரத்து 226**ன்படி உயர்நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் வறுமை உதவியின்மை இயலாமை அல்லது சமூக ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ பின்தங்கிய நிலைமை போன்ற காரணங்களால் எந்த ஒரு நபரும் அல்லது பிரிவினரும் தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை எதிர்த்து நீதிமன்றம் சென்று வழக்காட முடியாத நிலையில் அவர்களுக்காக வேறு எவரேனும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம் என்று தீர்ப்பளித்தது.
- இம்மாதிரியான வழக்குகள் பொதுநலனுக்காக மற்றவர்களால் தொடரப்படுவதால் இவை பொதுநல வழக்குகள் எனப்படுகின்றன.
- இம்மாதிரியான வழக்குகளுக்காக ஒரு கடிதம் எழுதுவதன் மூலமே உச்ச நீதிமன்றத்தை அணுகலாம். இந்தத் தீர்ப்புக்குப் பின்னர் பொதுநலன் நாடும் குடிமக்களும், சமூக அமைப்புகளும் தன்னார்வ நிறுவனங்களும் பொதுமக்களின் நலனுக்காக நீதிமன்றங்களில் நிவாரணம் தேடும் வாய்ப்பு உருவானது.

**நீதித்துறையின் செயல்பாடு**

- நாட்டின் மற்ற அங்கங்களுக்கு வழங்கப் பட்டுள்ள கடமைகளை அவை சரிவர நிறைவேற்றுமாறு செய்யும் நீதித்துறையின் செயல்பாடு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் பொறுப்பற்ற முறையில் நடைபெறும் நிர்வாகத்தின் மீது நீதித்துறை தனது அதிகாரத்தை பயன்படுத்த முடியும்.
- நிர்வாகம் மற்றும் சட்டம் இயற்றும் சபை ஆகிய இரு அங்கங்களின் புறக்கணிப்பால் ஒரு நாட்டின் நிர்வாகம் பாதிக்கப்படகூடாது. இதனை உச்ச நீதிமன்றம் சமீப காலங்களில் வலியுறுத்தி வருகின்றது.

- இது நீதிப்புணராய்வில் மட்டுமே வரவேற்கப்படக் கூடியது. நீண்ட காலத்திற்கு இதை நடைமுறைப்படுத்தினால் மூன்று அங்கங்களுக்கிடையே அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் முறையையே இது அழித்து விடும்.
- ஏனெனில் இதன்படி நீதித்துறைக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும். எனவே இதன் மீது நீதித்துறை தானாகவே சுயக்கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதோடு இதை செயல்படுத்தும் நீதிபதிகளுக்கு நடத்தை விதிகளை வகுக்க வேண்டும். மேலும் இதனை கடைசி வழியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**நீதிமன்ற பெஞ்சுக்களின் வகைகள்**
**(Types of Judical Benches)**

**உச்ச நீதிமன்றம்**

1. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஐந்து பேர் அல்லது அதற்கு மேல் கொண்ட அரசியலமைப்பு / முழுபெஞ்ச்

2. டிவிஷனல் பெஞ்ச் தலைமை நீதிபதி பங்கேற்றால் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகளையும் மற்ற நேரத்தில் இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் உள்ளடக்கியது.

**உயர் நீதிமன்றம்**

1. முழு பெஞ்ச் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள்
2. டிவிஷனல் பெஞ்ச் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள்

- ஒற்றை பெஞ்ச் : ஒரே ஒரு நீதிபதி

# மத்திய மற்றும் மாநில அரசு உறவுகள்

## மத்திய மாநில உறவுகள்

- இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி முறையை ஏற்படுத்தியிருப்பதால் நாட்டில் இரண்டு வகையான (மத்திய மாநில அரசுகள்) அரசாங்கங்கள் செயல்படுகின்றன.
- இவ்விரு அரசாங்கங்களுக்கிடையே அதிகாரங்கள் மிகவும் விரிவான முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளன.
- ஒரு அரசு அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள துறையில் மற்ற அரசுக்கு கீழ்ப்பட்டதாக விளங்காது. ஒரு அரசின் அதிகாரங்கள் மற்ற அரசின் அதிகாரங்களோடு ஒன்றுபட்டதாகும்.
- பாராளுமன்றம் இயற்றும் எந்த சட்டத்தினாலும் அல்லாமல் அரசியலமைப்புபடியே சட்ட, நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்கள் மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதே கூட்டாட்சியின் அடிப்படை கொள்கையாகும்.

**1. சட்டம் சார்ந்த உறவுகள் (The Legislative Relations)**

- நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் வலிமையான மத்திய அரசினை அமைக்கும் கனடா நாட்டின் முறையினை பின்பற்றினார்கள். ஆனால் அவர்கள் பொது அதிகாரப்பட்டியலையும் இணைத்துக் கொண்டார்கள்.
- தற்போதைய அரசியலமைப்பு இந்திய அரசாங்க சட்டம் 1935ல் கூறப்பட்டுள்ள முறையை பின்பற்றுகின்றது. மேலும் இது மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை 3 பட்டியல்களின் மூலம் பகிர்ந்தளிக்கின்றது. மத்திய அதிகாரப்பட்டியல், மாநில அதிகாரப்பட்டியல், பொது அதிகாரப்பட்டியல்.
- மத்திய அதிகாரப்பட்டியல் **99 பொருள்களைக்** கொண்டது. இதில் கூறப்பட்டுள்ள பொருள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை.
- அதாவது பாதுகாப்பு, வெளியுறவு, வங்கிகள்,ரூபாய், நாணயம், குடியுரிமை, தபால் மற்றும் தந்தி போன்றவை.

- மாநில அதிகாரப்பட்டியல் **61 பொருள்களைக்** கொண்டது. இவை உள்நாட்டு முக்கியத்துவம் வாய்ந்தவை.
- அதாவது பொது ஒழுங்கு மற்றும் காவல் உள்நாட்டு அரசாங்கம், பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், வேளாண்மை, நீதி, நீர்பாசனம் போன்றவை.
- பொது அதிகாரப்பட்டியல் **52 பொருள்களை** உள்ளடக்கியது. இவற்றின் மீது இரு அரசுகளும் சட்டங்களை இயற்றலாம்.
- ஆனால் பாராளுமன்றம் இயற்றிய சட்டத்திற்கும், மாநில சட்டசபை இயற்றிய சட்டத்திற்கும் இடையே முரண்பாடு காணப்பட்டால் பாராளுமன்றம் இயற்றிய சட்டம் தான் நடைமுறைக்கு வரும்.

## 2. நிர்வாகத்துறை சார்ந்த உறவுகள் (Administrative Relations)

- கூட்டாட்சி அரசியலின் வெற்றி மத்திய மாநில அரசுகளுக்கிடையே யான ஒத்துழைப்பையும் ஒருமைப் -பாட்டையும் சார்ந்துள்ளது.
- ஒரு கூட்டாட்சி அரசியல் நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரங்களை மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிப்பது மிகவும் சிக்கலான பணியாகும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகளுக் -கிடையே நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரங்களில் பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்க அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் விரிவான விதிகளைக் கூறியுள்ளனர்.
- இந்திய அரசியலமைப்பு மத்திய அரசை வலிமையானதாக்க விரும்புகிறது. எனவே மாநில நிர்வாகத்தின் மீது மத்திய அரசின் நிர்வாகம் செயல்படும்.
- மாநில அரசின் நிர்வாக அதிகாரங்கள் மத்திய அரசின் சட்டங்களுடன் ஒத்துப்போகும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும்.
- (சரத்து 256) மேலும் மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்களை தடை செய்யும் விதத்தில் செயல்படுத்தப்படக் கூடாது (சரத்து 257).
- ஒரு மாநில அரசு மத்திய அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றவில்லையென்றால் 356வது விதியினை பயன்படுத்தி மாநில அரசின் அதிகாரங்களை மத்திய அரசே எடுத்துக் கொள்ளும் (குடியரசுத் தலைவர் ஆட்சி).
- சரத்து 258 (2)ன் கீழ் மத்திய அரசின் சட்டங்கள் அமலாக்குவதற்காக மாநில அரசுகளைப் பயன்படுத்திக்கொள்ள பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

- விரும்பத்தகாத நிகழ்வுகளின்போது அகில இந்திய பணிகளின் கீழ் உள்ள அதிகாரிகளை மாநில அரசு தற்காலிக பணி நீக்கம் மட்டுமே செய்ய இயலும். அவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாது.
- ஒரு மாநில அரசின் விருப்பத்திற்கெதிராகக் கூட மத்திய அரசு இராணுவப்படைகளை அம்மாநிலத்திற்கு அனுப்பி வைக்கலாம்.
- மாநிலங்களுக்கிடையே நதிநீர் பங்கீடு தொடர்பாக எழும் பிரச்சனைகளையும் பாராளுமன்றம் தீர்த்து வைக்கலாம்.
- இந்த அதிகாரத்தின் கீழ் 3 உறுப்பினர்கள் அடங்கிய நதி நீர் தீர்ப்பாயத்தை பாராளுமன்றம் அமைத்துள்ளது.
- இதன் தீர்ப்பினை மத்திய அரசு தனது அறிக்கையில் வெளியிட்டால் அத்தீர்ப்பு சம்பந்தப்பட்ட மாநிலங்களை கட்டுப்படுத்தும் **(சரத்து 262).**
- விதி 263ன் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான அல்லது மாநில அரசுகளுக்கிடையேயான பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்-காக ஒரு குழுவினை அமைக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.
- இந்த அதிகாரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் மூன்று குழுக்களை அமைத்து உள்ளார். தேசிய சுகாதாரக் குழு, தேசிய உள்நாட்டு அரசாங்கக்குழு, போக்குவரத்து மேம்பாட்டுக்குழு.

### 3. நிதி சார்ந்த உறவுகள் (Financial Relations)

- பகுதி 12-ன் முதலாம் அத்தியாயம் நிதி பற்றிக் கூறுகின்றது.1935 ஆம் வருட இந்திய அரசாங்க சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடியே மத்திய மாநில அரசுகளுக்கிடையே நிதிப்பங்கீடு செய்யப்பட்டு உள்ளது.
- இந்திய அரசியலமைப்பு வரி விதிப்பிற்கு உள்ள சட்ட அதிகாரத்தையும், அவ்வரி வருவாயை பகிர்ந்து கொள்ள உள்ள நிதி அதிகாரத்தையும் வேறுபடுத்திக்காட்டுகிறது.
- வரிகள் தொடர்பான எஞ்சிய அதிகாரங்கள் பாராளுமன்றத்திடமே விடப்பட்டுள்ளன.
- வரி விதிப்பில் மாநில அரசுகளுக்கு குறைந்த அதிகாரங்களே உள்ளன. மேலும் அவை நிதி ஆதாரங்களுக்கு மத்திய அரசையே சார்ந்துள்ளன. எனவே மாநில அரசுகள் புகழ்வாய்ந்த நகராட்சிகள் எனப்படுகின்றன.
- சரத்து 265 - வரிகளுக்கு மட்டும் பொருந்தக் கூடியது. சரத்து 265 - சட்டத்தின் அதிகாரமின்றி எவ்வித

வரியையும் விதிக்கவோ (அ) வசூலிக்கப்படவோ கூடாது எனக் கூறுகின்றது.

❖ மத்திய அரசு வழங்கும் மானியங்களே மாநில அரசின் முக்கிய நிதி ஆதாரமாகும். எனவே மத்திய அரசு மாநிலங்களின் நிதியின் மீது அதிகப்படியான கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளது.

❖ வரிகளை வசூலித்தல் மற்றும் வரி வருவாயை மத்திய மாநில அரசுகளிடையே பகிர்ந்தளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் 4 வகைகளாக அரசியலமைப்பு பிரிக்கின்றது.

❖ மத்திய அரசால் விதிக்கப்பட்டு மாநில அரசால் வசூலிக்கப்பட்டு அதன் வருவாயை முழுவதையும் மாநில அரசே வைத்துக்கொள்ளும் வரிகள் சரத்து (268) அவை தபால் தலை செலவுகள் மற்றும் மருத்துவ, குளியலறை பொருள்களின் மீதான சுங்கவரி. **268 A**-சேவை வரி (88-வது திருத்தம் 2003)

❖ மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு ஆனால் அதன் வருவாய் முழுவதும் மாநில அரசுக்கு வழங்கப்படும் வரிகள் **(சரத்து 269)** அவையாவன,

1. விவசாய நிலம் தவிர பரம்பரையாக வரும் மற்ற சொத்துக்களின் மீதான வரி.
2. விவசாய நிலம் தவிர மற்ற சொத்துக்களின் மீதான எஸ்டேட் வரி.
3. பொருள்கள் மற்றும் பயணிகளின் மீதான இறுதி கட்ட வரி (ரயில்வே, கடல் மற்றும் வான்வழி)
4. ரயில்வே பயணிகள் கட்டணம் மற்றும் சரக்குக் கட்டணம் மீதான வரி.
5. பத்திரச் செலவுகள் தவிர பங்குச் சந்தை மீதான வரிகள்.
6. மாநிலங்களிடையே அனுப்பப்படும் பொருள்கள் மீதான வரிகள்.
7. செய்தித்தாள்கள் வாங்குதல் மற்றும் விற்றலின் மீதான வரிகள் மற்றும் அதிலுள்ள விளம்பரங்களின் மீதான வரிகள்.

❖ மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு அதன் வருவாயை மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ளும் வரிகள் **(சரத்து 270).**

❖ இது விவசாய வருமானத்தை தவிர மற்ற வருமானங்களின் மீதான வரிகளை உள்ளடக்கியது.

❖ இதன் வருவாயை குடியரசுத் தலைவர் ஒவ்வொரு 5 வருடங்களுக்கொரு -முறையும் அமைக்கும் நிதிக்குழு முடிவெடுத்தபடி 78:22 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்வர்.

- மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்படும் வரிகள் இவற்றை மாநில அரசுகளுக்கு பகிர்ந்தும் அளிக்கலாம்.
- இவை மருத்துவ மற்றும் குளியலறைப் பொருட்கள் தவிர மற்றப் பொருட்களின் மீதான சுங்க மற்றும் கலால் வரிகள்.
- இவை தவிர பழங்குடியினரின் நலவாழ்வுகளுக்காகவும், பழங்குடியினப் பகுதிகளின் நிர்வாகத்தை மேம்படுத்தவும், மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியங்கள் வழங்கலாம். **(சரத்து 275).**
- மாநில அரசு இந்திய தொகுப்பு நிதியின் உத்தரவாதத்தின் பேரில் கடன் பெறலாம்.
- ஆனால் மாநில அரசுகள் கடன்பெறுவதற்கு பாராளுமன்றத்தின் முன் அனுமதியினை பெற வேண்டும்.
- மாநில அரசுகளின் கணக்குகளை பராமரிக்கும் முறையினை தீர்மானிக்கவும் அவற்றை தணிக்கை செய்யவும் தலைமை தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு உரிமை உண்டு.
- 73வது மற்றும் 74வது திருத்தங்களுக்கு பிறகு பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகளின் கணக்குகளை தணிக்கை செய்யவும் தலைமை தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு உரிமை உண்டு.
- நிதி நெருக்கடி நிலையின்போது குடியரசுத் தலைவர், மாநில அரசுகளை அவற்றின் ஊழியர்களின் சம்பளங்களை குறைக்கும்படியும், ஆளுநரை அனைத்து பண மசோதாக்களையும் தனது ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக்கொள்ளலாம்.

8. எனவே சட்டம், நிர்வாகம் மற்றும் நிதி உறவுகளில் மத்திய அரசுக்கே பெரும் பங்கு உள்ளது. மாநில அரசு பெரும்பாலும் மத்திய அரசு சார்ந்தே உள்ளது.

# நெருக்கடி நிலை பிரகடனம்

## அவசரநிலை பிரகடனம்

**சுரத்து 352 - 360 :**

- இந்தியாவில் 3 வகையான நெருக்கடி நிலைகள் உள்ளன.
    1. தேசிய நெருக்கடி நிலை - சரத்து 352
    2. மாநில நெருக்கடி நிலை - சரத்து 356
    3. நிதி நெருக்கடி நிலை - சரத்து 360

### 1) தேசிய நெருக்கடி நிலை - சரத்து 352:

- போரினாலோ அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பினாலோ அல்லது ஆயுத கிளர்ச்சியினாலோ இந்தியாவிற்கு நெருக்கடி நிலவுவதாக குடியரசு தலைவர் மனநிறைவு கொள்ளும்போது, இந்தியா முழுமைக்கோ அல்லது ஏதாவது ஒரு பகுதிக்கோ குடியரசுத் தலைவர் தேசிய நெருக்கடி நிலையை பிறப்பிக்கலாம். ஆனால் கேபினெட் அமைச்சரவை எழுத்து வடிவில் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைக்கவேண்டும்.
- ஆனால் இதற்கு பாராளுமன்றத்தில் ஒரு மாத காலத்திற்குள் ஒப்புதல் பெற வேண்டும். ஒப்புதல் பெறப்பட்டால் அடுத்த **6 மாதத்திற்கு** தொடர்ந்து செயலில் இருக்கும்.

இதுவரை 3 முறை நெருக்கடிநிலை பிரகடனங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1. சீனப்போர் (1962-1968)
2. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு (1971)
3. உள்நாட்டு அமைதிக்குலைவு காரணமாக (1975-1977)

**நெருக்கடிநிலை பிரகடனத்தால் ஏற்படும் விளைவுகள்**

1. நெருக்கடி நிலை செயல்பாட்டில் இருக்கும்போது, மாநிலங்களுக்குக் கட்டளையிடுவதற்கு யூனியனின் நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.
2. நெருக்கடி நிலைப் பிரகடனம் செயல்பாட்டில் இருக்கும்போது, மாநிலப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தப் பொருள் குறித்தும் நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.
3. **சரத்து 19ன்** கீழ் உத்தரவாதம் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைக்கலாம். நெருக்கடி நிலையின்போது மக்களவையின் ஆயுள் காலத்தை ஓராண்டுக்குக் குடியரசுத் தலைவரால் நீட்டிக்கப் -படலாம்.

4. நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் -போது, **சரத்து 20 மற்றும் 21களில்** குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தவிர மற்ற குடியரசுத்தலைவரால் நிறுத்தி வைக்கப்பட்டுவிடும்.

## மாநில நெருக்கடி நிலை:

- சரத்து 356ன்படி மாநிலங்களில் அரசமைப்பு இயந்திரம் சரியாக செயல்படவில்லை என்று ஆளுநரிடமிருந்து ஒரு அறிக்கையை குடியரசுத்தலைவர் பெறும்போது, அல்லது குடியரசுத்தலைவர் மனநிறைவு கொள்ளும்போது மாநிலத்தில் நெருக்கடி நிலையை பிறப்பிக்கலாம்.
- சரத்து 356ன்படி சரத்து 365ல் உள்ளபடி ஒரு மத்திய அரசின் வழிகாட்டுதலை ஒரு மாநில அரசு பின்பற்றாத போதும் நெருக்கடி நிலையை குடியரசுத் தலைவர் பிறப்பிக்கலாம். ஆனால் இந்தப் பிரகடனம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் இரண்டு மாதங்களுக்குள் ஏற்கப்பட வேண்டும். அவ்வாறு ஏற்கப்பட்டால் **6 மாதங்களுக்கு செயலில்** இருக்கும். பாராளுமன்றத்தின் ஒப்புதல்படி அடுத்தடுத்து நீடிக்கப்படுவதன் வாயிலாக 3 ஆண்டுகளுக்கு செயலில் இருக்கச் செய்யலாம்.
- **1951ம் ஆண்டில் பஞ்சாப்** மாநிலத்தில் இப்பிரகடனம் அமல்படுத்தத் தொடங்கி இதுவரை நூற்றுக்கணக் -கான முறை இந்தியாவில் பயன் -படுத்தப்பட்டுள்ளது. அதிகமான முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## நிதி நெருக்கடி நிலை:

- சரத்து 360ன்படி இந்தியாவிலோ அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியிலோ நிதி நிலை நிலைப்புத் தன்மை அல்லது பொருளிருப்பு அச்சுறுத்தப்பட்டிருப்பதான சூழ்நிலை எழுந்துள்ளதாக குடியரசுத் தலைவர் மனநிறைவு கொள்ளும்போது இப்பிரகடனத்தை பிறப்பிக்கலாம். அவ்வாறு பிறப்பிக்கப்பட்டால் பாராளுமன்றத்தின் இரு அவை களிலும் **2 மாத காலத்திற்குள்** ஏற்கப்படவேண்டும். இந்தியாவில் இப்பிரகடனம் இதுவரை பயன்படுத்தப்படவில்லை.

# தேர்தல் மற்றும் தேர்தல் ஆணையம் கட்சித்தாவல் தடைச்சட்டம்

- ❖ பாராளுமன்றம், மாநில சட்டசபைகள், குடியரசுத்தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவரின் பதவிகள் ஆகியவற்றிற்கே உண்டு என்று **சரத்து 324** கூறுகின்றது.
- ❖ வாக்காளர்களின் தகுதிகள், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தொகுதிகளை நிர்ணயித்தல், பாராளுமன்றத்திலும், மாநில சட்ட சபைகளிலும் உள்ள இடங்களை ஒதுக்கீடு செய்தல், போன்றவற்றை மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 கையாள்கிறது.
- ❖ சரத்து -327 மக்கள் பிரதிநிதித்துவ (தேர்தல்களை நடத்துதல் மற்றும் தேர்தல் மனுக்கள்) விதிகள் 1951.
- ❖ குடியரசுத்தலைவர் மற்றும் துணைக் குடியரசுத்தலைவரால் தேர்தல் சட்டம் 1952.
- ❖ மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1950 ஆனது 1988 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது.
- ❖ இந்தியாவின் தேர்தல் முறை, இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ள தேர்தல் முறையிடமிருந்து பெறப்பட்டது.
- ❖ மாநிலங்களில் உள்ள பஞ்சாயத்துக் -கள் மற்றும் உள்ளாட்சிகளின் தேர்தல்கள் மாநில தேர்தல் ஆணையங்களினால் நடத்தப்படும்.
- ❖ தேர்தல் ஆணையம் ஒரு தலைமை தேர்தல் ஆணையரையும், 2 தேர்தல் ஆணையர்களையும் உள்ளடக்கியிருக்கும்.
- ❖ 1993 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஒரு அவசர சட்டத்தின் மூலமாக தேர்தல் ஆணையர்களின் அதிகாரங்கள், தலைமை தேர்தல் ஆணையருடைய அதிகாரத்திற்கு சமமாக கொண்டுவரப்பட்டன.
- ❖ இக்குழு தலைமை தேர்தல் ஆணையரின் மேற்பார்வையின் கீழ் செயல்படும்.
- ❖ இது தேர்தல்களையும், இடைத்தேர்தல் -களையும் நடத்தும் மற்றும் மேற்பார்வையிடும்.
- ❖ இது தேர்தல்களுக்கான தொகுதி -களின் எல்லைகளை நிர்ணயித்து, அவைகளுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்யும்.
- ❖ இது தேர்தல் நடைபெறும் தேதிகளை முடிவு செய்யும். வாக்குப்பதிவு மையங்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் மற்றும் முடிவுகளை அறிவிக்கும்.

- ❖ தேர்தல் ஆணையம், உறுப்பினர்களின் தகுதியிழப்பின் மீதான கேள்விகள் உட்பட அனைத்து தேர்தல் தொடர்பான விஷங்களிலும் குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநருக்கு அறிவுரைகள் வழங்கும்.
- ❖ வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வாக்காளர்களுக்கான நடத்தை விதிகளை இவ்வாணையம் வகுக்கும்.
- ❖ இது தேர்தல் செலவுகளுக்கு எல்லைகளை நிர்ணயிக்கும், மற்றும் தேர்தல் கணக்குகளை ஆய்வு செய்யும்.
- ❖ இது அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்திற்கும் அவற்றுக்கான தேர்தல் சின்னங்களை முடிவு செய்யவும் விதிகளை வகுக்கும்.
- ❖ இது தேர்தல் பிரச்சனைகளையும், குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரால் அதற்கு அனுப்பப்பட்ட மனுக்களின் மீதான பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கும்.
- ❖ தலைமை தேர்தல் ஆணையர் 6 வருடம் அல்லது 65 வயது இரண்டில் எது முன்னதாக நிறைவடையுமோ அதுவரை பதவியில் இருப்பார்.
- ❖ உச்ச நீதி மன்ற நீதிபதிகளைப் போலவே இவரையும் பதவி நீக்கம் செய்யலாம்.
- ❖ இவரை மீண்டும் பதவியில் நியமிக்கக் கூடாது.இவர் ஓய்வு பெற்ற பின்னர் அரசாங்க ஊதியம் பெறும் எந்த வேலையிலும் இருக்கக் கூடாது.
- ❖ இவரது சம்பளமும் செலவுப்படிகளும் இந்திய தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும்.

**இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையர்கள்**
**(Chief Election Commissioners of India)**

| 1. | சுகுமார் சென் | மார்ச் 21, 1950 | டிசம்பர் 19, 1958 |
|---|---|---|---|
| 2. | K.V.K. சுந்தரம் | டிசம்பர் 19, 1958 | செம்டம்பர் 30, 1967 |
| 3. | S.P. சென்வர்மா | செம்டம்பர் 30, 1967 | செம்டம்பர் 30, 1972 |
| 4. | டாக்டர். நாகேந்திர சிங் | செம்டம்பர் 30, 1972 | பிப்ரவரி 6, 1973 |
| 5. | T. சுவாமிநாதன் | பிப்ரவரி 6, 1973 | ஜூன் 18, 1977 |
| 6. | S.L. ஷாக்தர் | ஜூன் 18, 1977 | ஜூன் 18, 1982 |
| 7. | R.K. திரிவேதி | ஜூன் 18, 1982 | டிசம்பர் 31, 1985 |
| 8. | R.V.S. பெரிசாஸ்திரி | ஜனவரி 1, 1986 | நவம்பர் 15, 1990 |

| | | | |
|---|---|---|---|
| 9. | V.S. ரமாதேவி (செயல்) | நவம்பர் 15, 1990 | டிசம்பர் 12, 1990 |
| 10. | T.N. சேஷன் | டிசம்பர் 12, 1990 | டிசம்பர் 11, 1996 |
| 11. | M.S. கில் | டிசம்பர் 12, 1996 | ஜூன் 12, 2001 |
| 12. | J.M. லிங்டா | ஜூன் 14, 2001 | ஆகஸ்ட் 02, 2004 |
| 13. | T.S. கிருஷ்ணமூர்த்தி | ஆகஸ்ட் 02, 2004 | 2005 |
| 14. | P.P. டாண்டன் | 2005 | ஜூன் 23, 2006 |
| 15. | கோபாலசாமி | ஜூன் 23, 2006 | 2009 |
| 16. | நவீன் சாவ்லா | 2009 | 2011 |
| 17. | Y.M. குரோஷி | 2011 | 2012 |
| 18. | V.S.சம்பத் | 2013 – Till now | |

தேர்தல்களுக்கு மாநில நிதி வழங்குதலின் தேவையை ஆய்வு செய்ய **1998 ஆம் ஆண்டு மே** மாதம் இந்திரஜித் குப்தா குழு அமைக்கப்பட்டது.8 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழு தனது அறிக்கையை **1999, ஜனவரியில்** அறிவித்தது.

ஒவ்வொரு வருடமும் இந்த வாக்காளர் பட்டியல் அந்த ஆண்டின் **ஜனவரி 1 ஆம் தேதி** 18 வயது நிரம்பியவர்கள் மற்றும் தொகுதிக்குள் குடியேறியவர்களின் பெயர்களை சேர்ப்பதற்காகவும், இறந்தவர்கள் மற்றும் தொகுதியை விட்டு வெளியில் சென்றவர்களின் பெயர்களை நீக்குவதற்காகவும் திருத்தியமைக்கப்படும்.

**தேர்தல்கள் நடைபெறும் முறை**

1. பாராளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டசபைகளுக்கும் 5 வருடங்களுக்கொருமுறை தேர்தல் நடைபெறும்.
2. அரசு மக்களவையில் தனது நம்பிக்கை இழந்துவிட்டால் மற்றும் அதற்கு பதிலாக வேறொரு அரசை அமைக்க முடியாவிட்டால் குடியரசுத் தலைவர் மக்களவை கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் நடத்தச் சொல்லலாம்.
3. கலைக்கப்பட்ட மக்களவையின் கட்சிக் கூட்டத்தொடருக்கும் புதிய அவையின் கூட்டத்தொடருக்கும் இடையில் 6 மாத காலத்திற்கும் மேல் இடைவெளி இருக்கக் கூடாது என்று அரசியலமைப்பு கூறுகின்றது.

**தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தல் (Election Commision)**

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951ன் படி அரசியல் கட்சிகள்

இந்திய தேர்தல் ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**குறிப்பு :**

தமிழ்நாட்டில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உள்ளன.

சில எடுத்துக்காட்டு :

- அனைந்திய ஏழை மக்கள் முன்னேற்ற கழகம்
- அனைந்திய மக்கள் முன்னேற்ற -கழகம், அனைந்திய முஸ்லீம் லீக்
- ஜனநாயக பார்வர்டு பிளாக்
- இந்து மக்கள் கட்சி
- காமராஜர் ஆதித்தனார் கழகம்
- இந்திய கிறிஸ்தவ முன்னணி
- கொங்கநாடு மக்கள் கட்சி
- தமிழ் தேசிய கட்சி
- உழவர் உழைப்பாளர் கட்சி

**அங்கீகாரம் மற்றும் தேர்தல் சின்னம் ஒதுக்கீடு செய்தல் (Recognation & Reservation of Symbols)**

- ❖ தேர்தல் ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி தேர்தல்களில் அதன் செயல்பாட்டின் அடிப்படையில் தேசிய கட்சியாகவோ அல்லது மாநில கட்சியாகவோ அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- ❖ மற்ற கட்சிகள் பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளாக அறிவிக்கப்படும்.
- ❖ ஒரு கட்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து அக்கட்சிக்கு சில முன்னுரிமைகள் வழங்கப்படும்.
- ❖ வாக்காளர் பட்டியலை தெரிந்து கொள்ளுதல் அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் போன்ற அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சிகளிலும் வானொலி -களிலும் அரசியல் நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்புதல் தேர்தல் சின்னம் ஒதுக்கீடு செய்தல் போன்றவற்றில் முன்னுரிமை வழங்கப்படும்.

| கட்சியின் பெயர் | சுருக்கம் | சின்னம் | ஆண்டு | தலைவர் |
|---|---|---|---|---|
| அனைந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | AIADMK | இரட்டை இலை | 1972 | ஜெயலலிதா |
| திராவிட முன்னேற்றக்கழகம் | DMK | உதயசூரியன் | 1949 | மு. கருணாநிதி |
| தேசிய முற்போக்கு திராவிட கழகம் | DMDK | முரசு | 2005 | விஜயகாந்த் |

❖ படிப்பறிவு இல்லாத வாக்காளர்கள் தாங்கள் வாக்களிக்க விரும்பும் கட்சியின் வேட்பாளரை தெரிந்து கொள்ளவும் தேர்தல் சின்னம் உதவுகிறது.

❖ தேசிய கட்சிகளுக்கு நாடு முழுமைக்குமான தங்களது உபயோகத்திற்கு மட்டும் தேர்தல் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

❖ மாநில கட்சிகளுக்கு அந்தந்த மாநிலத்தில் அல்லது அக்கட்சி அங்கீகரிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் அக்கட்சி உபயோகத்திற்காக தேர்தல் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

❖ பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப் -படாத கட்சிகள் எந்த கட்சியாலும் உபயோகப்படுத்தப்படாத சின்னங் - களில் இருந்து ஒரு சின்னத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

**மாநில கட்சிகளின் அங்கீகாரம்**

**(Recognition of State Parties)**

❖ மாநில கட்சியாக அங்கீகாரம் பெறுவதற்கு மக்களவைத் தேர்தல் அல்லது சட்டசபை தேர்தலில் மொத்த செல்லத்தக்க வாக்குகளில் ஆறு சதவிகித வாக்குகளுக்கு குறையாமல் பெற்றிருக்க வேண்டும். மேலும், குறைந்தது இரண்டு உறுப்பினர் -களைக் சட்டசபையில் கொண்டிருக்க வேண்டும் (அல்லது) சட்டசபையில் மொத்த உறுப்பினர்களில் மூன்று சதவீதம் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். மாநில கட்சிகளின் அங்கீகாரத்தை இழந்திருந்தால் சின்னங்கள் ஒதுக்கப்படாது.

| பெயர் | சுருக்கம் | சின்னம் | ஆண்டு | தலைவர் |
|---|---|---|---|---|
| பாரதீய ஜனதா கட்சி | BJP | தாமரை | 1980 | அமித்ஷா |
| இந்திய தேசிய காங்கிரஸ் | INC | கை | 1885 | சோனியா காந்தி |
| இந்திய கம்யூனிஸ்கட்சி (மார்க்சிஸ்ட்) | CPI (M) | நட்சத்திரம் | 1964 | சீத்தாராம் யெச்சூரி |
| இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி | CPI | கதிர் அரிவாள் | 1925 | சுரவரம் சுதாகர் ரெட்டி |
| பகுஜன் சமாஜ் கட்சி | BSP | யானை | 1984 | மாயாவதி |
| தேசியவாத காங்கிரஸ் கட்சி | NCP | கடிகாரம் | 1999 | ஷரத் பவார் |

**தேசிய கட்சிகளின் அங்கீகாரம்**

**(Recognition of National Parties)**

- ❖ குறைந்தது நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் செல்லத்தக்க வாக்குகளில் ஆறு சதவிகித வாக்குகளைப் சட்டசபைத் தேர்தலிலோ அல்லது மக்களவைத் தேர்தலிலோ பெற்றிருக்க வேண்டும்.
- ❖ மேலும் குறைந்தது நான்கு உறுப்பினர்களை மக்களவையில் கொண்டிருக்க வேண்டும். (அல்லது) மக்களவை மொத்த உறுப்பினர்களில் இரண்டு சதவிகித உறுப்பினர்களை தனித்த மூன்று மாநிலங்களில் கொண்டிருக்க வேண்டும்.

**ஒற்றை உறுப்பினர் தொகுப்பு முறை (Signle Member Constituency System)**

- ❖ இம்முறையின் கீழ் பெரும்பாலான வாக்காளர்கள் வாக்களிக்கா-விட்டாலும் கூட பதிவான வாக்குகளில் ஒரு வாக்காவது மற்ற வேட்பாளர்களைவிட கூடுதலாக ஒரு வேட்பாளர் பெற்றால் அவரே வெற்றி பெற்றதாக தீர்மானிக்கப்படும்.
- ❖ இம்முறையே ஃபஸ்ட் பாஸ்ட் தி போஸ்ட் என்று அழைக்கப்படுகிறது.
- ❖ ஒரு ஜனநாயகத்தில் இதுவே மிக எளிதான தேர்தல் முறையாகும்.
- ❖ இம்முறை ஒரு பெரும்பான்மை அரசு அமைய உதவுகிறது. மத, இன, ஜாதி அடிப்படையில் மக்களை சுரண்டலாம் என்ற அரசியல்வாதிகளின் எண்ணங்-களுக்கு இம்முறை தடை விதிக்கிறது.

**குறைகள்**

- ❖ பதிவான வாக்குகளில் பெறப்படும் பெரும்பான்மையை பொறுத்தே இம்முறையின் கீழ் வெற்றி தீர்மானிக்கப்படும்.
- ❖ சில நேரங்களில் மேலிருந்து 40 சதவீத ஓட்டுக்கள் பெற்றவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
- ❖ அச்சமயங்களில் பெரும்பான்மையான வாக்காளர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காது.
- ❖ சிறுபான்மையினரின் வாக்குகளை பெறும் கட்சி பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றும்.
- ❖ இம்முறையில் சிறுபான்மை கட்சிகளின் பலம் சிதறுவதால் அவை அழிக்கப்படும்.
- ❖ எனவே சிறுபான்மையினருக்கு குறைந்த பிரதிநிதித்துவமும், பெரும்பான்மையினருக்கு அதிக பிரதிநிதித்துவமும் கிடைக்கும்.
- ❖ ஆனால் இம்முறை நமக்கு பொருந்துவதால் நமது அரசியலமைப்பு இதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

**ஒற்றை மாற்று வாக்கு (Signle Transferable Vote or Order of Choice)**

- ❖ இந்தியாவில் மாநிலங்களவை மாநில சட்ட மேலவை குடியரசுத் தலைவர்

மற்றும் துணைக்குடியரசுத் தலைவர் தேர்தல்களில் ஒற்றை மாற்று வாக்கு முறை பின்பற்றப்படுகின்றது.

- இம்முறை ஆஸ்திரேலியாவில் பிரதிநிதிகள் சபைக்கான தேர்தலில் பின்பற்றப்படுகிறது.
- இம்முறையில் ஒரு வாக்காளர் தாம் விரும்பும் எத்தனை வேட்பாளரின் பெயர்களையும் தங்களது விருப்பப்படி ஒரே வாக்குச் சீட்டில் குறிப்பிடலாம்.
- இம்முறையில் முதல் விருப்ப வாக்குகளை குறைவாகப் பெற்ற வேட்பாளரின் எஞ்சிய வாக்குகளை பகிர்ந்தளிக்க முடியும். மேலும் வேட்பாளர்களின் இரண்டாவது மற்றும் தொடர்ச்சியான விருப்ப வாக்குகளை மாற்றவும் இவ்வாக்குகளுடன் களத்தில் உள்ள வேட்பாளர்களை தொடர்ந்து வைத்திருக்கவும் இயலும்.
- தேவையான எண்ணிக்கைக்கு வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படும் வரை இம்முறை தொடர்ச்சியாக நடைபெறும்.

**விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை (System of Proportional Representation)**

- ஒரு வேட்பாளர் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனில் அவர் பதிவான ஓட்டுகளில் 50 சதவீதத்திற்கு மேல் பெற வேண்டும். இம்முறையின் கீழ் சட்டசபையில் உள்ள இடங்களின் எண்ணிக்கை இயன்ற அளவு அக்கட்சிக்கு அளிக்கப்படும் வாக்குகளின் விகிதத்தில் இருக்கும். ஒற்றை உறுப்பினர் தொகுதி முறையில் சிறுபான்மை கட்சிகளின் பலம் சிதறுவதால் அவை இம்முறைக்கு தங்களது முழு ஆதரவையும் தருகின்றன.
- ஆனால் இம்முறையிலும் சில குறைகள் உண்டு. இம்முறை பல அரசியல் கட்சிகள் உருவாகவும் கூட்டணி அரசு அமையவும் வழிவகுக்கும்.
- இம்முறை மிகவும் சிக்கலானதாகவும் எளிதில் கையாள முடியாததாகவும் உள்ளது. மேலும் இம்முறை ஜாதி, சமூகம், மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான விசுவாசத்தை மேலும் கூர்மையாக்குகின்றது.
- இம்முறை கட்சிகள் மேலும் துண்டாவதற்கு தூண்டுதலாக அமைகின்றது. இம்முறை பெரிய நாடுகளுக்கு பொருந்தாது.
- பிரான்ஸ், கிரீஸ், இஸ்ரேல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இம்முறை பின்பற்றப்படுகிறது.

### பட்டியல் முறை (List System)

- ❖ பட்டியல் முறை எனப்படும் இம்முறை ஜெர்மனியின் கீழ் சபைக்கான தேர்தலில் பயன்படுத்தப்படும் முறையாகும். இம்முறை 50 சதவீத இடங்களுக்கு நேரடித் தேர்தல்களும், 50 சதவீத இடங்களுக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைப்படி பட்டியல்கள் அடிப்படையாகக் கொண்டும் நடைபெறும் தேர்தல்களும் கலந்த கலவையாகும். இம்முறையின் கீழ் ஒவ்வொரு வாக்காளருக்கும் 2 வாக்குகள் இருக்கும். ஒன்று அவரது தொகுதியின் பிரதிநிதியை தேர்ந்தெடுக்கவும், மற்றொன்று கட்சி பட்டியல்களுக்கிடையே தேர்வு செய்யவும் வழங்கப்படும்.
- ❖ நேரடித் தேர்தல்களில் பெரும்பான்மை -யான வாக்குகளை பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுவார். பதிவு செய்யப்பட்ட இரண்டாவது வாக்குகளின் விகிதத்தில் அரசியல் கட்சிகளிடையே இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.
- ❖ ஆனால் கட்சி பட்டியலில் உள்ள ஒரு இடத்தை பெற வேண்டுமெனில் ஒரு கட்சி குறைந்தது 5 சதவீத கட்சிப்பட்டியல் வாக்குகளை பெற்றிருக்கவும் குறைந்த 3 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கவும் வேண்டும்.

**குறைகள்:**

- ❖ மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்பு கொள்ள முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி -களை சார்ந்தவர்களாக இருப்பர்.
- ❖ மக்களின் நலன் கருத்தில் கொள்ளப்படாது. ஏனெனில் அரசியல் கட்சிகள் பெரிய அளவிலான கொள்கைகளை பற்றி மட்டுமே விவாதிக்கும்.

### இரட்டை வாக்குச் சீட்டு முறை (Two Ballort System)

- ❖ பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவின் அதிபர் தேர்தலில் பின்பற்றப்படும் இம்முறைப்படி 50 சதவீதத்திற்கு மேல் ஓட்டுக்களை பெறுபவரே தேர்ந்தெடுக்கப்படுவார்.
- ❖ முதல் சுற்றில் எந்த வேட்பாளரும் 50 சதவீத வாக்குகளை பெறவில்லை -யெனில் இரண்டாவது சுற்று வாக்குப்பதிவு நடைபெறும்.
- ❖ இரண்டாவது சுற்றில் முதல் இரு இடங்களில் இருக்கும் வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிட அனுமதிக்கப் -படுவர். இம்முறை அரசியல் கட்சிகளின் குறுகிய எண்ணங்களை தடைசெய்கிறது.

**மின்னனு வாக்கு இயந்திரம் (EVM)**

- மின்னனு வாக்கு இயந்திரம், இந்தியாவில் முதன் முதலில் 1998 ஆம் ஆண்டு கேரளாவின் வடக்கு பரவூர்

சட்டசபை இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட்டது.

- 2004ஆம் ஆண்டு பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இந்தியா முழுவதும் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.

**இந்தியப் பொதுத் தேர்தல்கள்**

❖ இந்தியாவை உலக நாடுகள் ஆச்சரியத்தோடு பார்ப்பதற்கு கலை, ஆன்மீகம், கலாச்சாரம் போன்ற பல அம்சங்கள் இருந்தாலும், நவீன உலகத்தின் பார்வையில் இந்தியாவின் ஆச்சரியகரமான அம்சமாக இருப்பது இங்கு நிலவும் ஜனநாயகமாகும். 100 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

**முதல் பொதுத் தேர்தல் 1952**

❖ சுதந்திர இந்தியா 1950 ஆம் ஆண்டில் முழுமையான குடியரசு நாடான பிறகு 1952ல் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

❖ இதற்கான வாக்குப்பதிவு 1951 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கி 4 மாதங்கள் நடைபெற்றது. 26 மாநிலங்களில் 489 தொகுதிகளில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 245 இடங்களில் வெற்றி பெற்றது.

❖ இந்தியாவின் முதல் பிரதமராகப் பொறுப்பேற்றார் பண்டிதர் ஜவஹர்லால் நேரு.

**பதினாறாவது பொதுத் தேர்தல் 2013**

❖ இத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. பிரதமராக திரு. நரேந்திர மோடி அவர்கள் பதவியேற்றார்.

**NOTA - (None of the Above) in Election**

- 2014ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அறிமுகப்படுத்தப் பட்டது.
- 2013ல் 5 மாநிலங்களின் சட்டசபை தேர்தலில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**அரசியல் கட்சிகளின் தன்மைகள் (இயல்புகள்)**

1. பல கட்சி முறை
2. ஒரே கட்சி ஆதிக்கம் செலுத்துதல்
3. தெளிவான கொள்கையின்மை
4. தனிப்பட்ட நபரின் மீதான ஈர்ப்பு / ஆதக்கம்.
5. பழங்கால காரணிகள் - அடிப்படை
6. பிராந்திய கட்சிகளின் எழுச்சி
7. உட்கட்சி பூசல் - தாவல்
8. எதிர்க்கட்சியின் திறமையின்மை

**அழுத்தக் குழுக்கள் (Pressure Groups)**

❖ தோற்றம் - அமெரிக்க ஐக்கிய நாடுகளில்

❖ விளக்கம் : தங்கள் நலனுக்காக அரசின் மீதும், அதன் நிர்வாகத்தின் மீதும் பல்வேறு வழிகளில் அழுத்தம் செலுத்துதல்.

❖ நடைமுறைகள்:

1. தேர்தல் மூலம்
2. நலன் விளைவித்து சாதித்துக் கொள்தல்
3. கொள்கை பரப்புதல்

இந்தியாவின் அழுத்தக் குழுக்களின் பொதுவான வகைபாடுகள்:-

1. வியாபார குழுக்கள் : - எ.கா. FICCI, ASSOCHAM
2. தொழிலாளர் குழுக்கள்: (Trading Unions)
    - AITUC – CPI
    - INTUC – Congress (F)
    - HMS
    - UTUC- CPM
    - HMP – BJP
3. விவசாய குழுக்கள் எ.கா.

❖ அனைந்திந்திய கிசான் சபா (பழமையானது (1936) மற்றும் பெரியது)

❖ புரட்சிகர உழவர் இயக்கங்கள் (மார்க்ஸ்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் 1967 ல் தோற்றுவிக்கப்பட்டது) கம்யூனிஸ்ட் கட்சியால் 1967ல் நக்சல்பாரி இயக்கம் தோன்றியது எனலாம்).

❖ (நக்சல்பாரி என்னும் கிராமத்தில் தோன்றிய புரட்சியின் காரணமாக தோன்றியது).

4. அலுவலக ஊழியர் இயக்கங்கள்
5. மாணவர் குழுக்கள்
    - ABVP - BJP
    - AISF - CPI
    - NSVI - Congress
    - PSU – CPM

1. சாதிக் குழுக்கள்
2. பழங்குடியினர் குழுக்கள்:-எ.கா:
    - நாகலாந்தின் தேசிய சோசியலிச அமைப்பு NSCN – National Socialist council of Nagaland
    - மணிப்பூரின் மக்கள் விடுதலைப் படை Liberation Army in Manipur.

6. கருத்தியல் குழுக்கள்
7. அனாமிக் குழுக்கள் (சாதாரண சூழ்நிலையில் ஏற்படும் குழுக்கள்):- எ.கா.
    - நக்சல் இயக்கம்
    - அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி உல்பா
    - (ULFA) (United Liberation Front of Assam)

**மாநில தேர்தல் ஆணையம் (State Election Commission)**

❖ பஞ்சாயத்து தேர்தல்களை நடத்துவதும், அதற்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பதை கண்காணிப் -பதும், கட்டுப்படுத்துவதும், மாநில

தேர்தல் ஆணையத்தின் பணிகளாகும்.

- இது ஆளுநரால் நியமிக்கப்பட்ட மாநில தேர்தல் ஆணையரைக் கொண்டிருக்கும்.
- அவரது பணிகளுக்கான நிபந்தனை -களும், பதவிக்காலமும் ஆளுநரால் நியமிக்கப்படும்.
- மாநில உயர்நீதி மன்ற நீதிபதியினை பதவி நீக்கம் செய்யும் முறை மற்றும் காரணங்களின் அடிப்படையில் மட்டுமே மாநில தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய முடியும்.
- இவர் நியமனம் செய்யப்பட்ட பின்னர் இவரது பணிகளுக்கான நிபந்தனை -களை மாற்றக் கூடாது.
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தலைமைச் செயலகம் உண்டு.

## கட்சித்தாவல் தடைச்சட்டம்

- கட்சிதாவல் அரசியல் இந்திய அரசியல் அமைப்பின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக 1967ல் (4வது பொதுத் தேர்தல்) இருந்து வருகிறது.
- 1985ல் 52வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் பாராளுமன்றம் இதைக் கவனித்துக் கொண்டது.
- இச்சட்டம் அவையின் உறுப்பினர்கள் தகுதியிழக்கவும் வகை செய்கிறது.
- இச்சட்டத்தின்படி பின்வரும் அடிப்படையில் கீழ் ஒருவர் உறுப்பினர் தகுதி இழக்கலாம்.

1. ஒரு உறுப்பினர் எந்த கட்சி வழங்கிய இடத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப் -பட்டாரோ அக்கட்சியிலிருந்து தானாக முன்வந்து விலகுதல்.
2. ஒரு உறுப்பினர் தான் சார்ந்திருக்கும் கட்சிக் கொறடாவிற்கு எதிராக ஓட்டளித்தல், அவர் சார்ந்திருக்கும் கட்சி கூறும் வகையில் ஓட்டளிக்காமல் இருந்ததை அக்கட்சி ஓட்டெடுப்பு நடந்த 15 நாட்களுக்குள் மன்னிக்காமல் இருந்தல். 1992ல் உச்ச நீதிமன்றம் நம்பிக்கை மற்றும் நம்பிக்கையில்லா தீர்மானம், பண -மசோதாக்கள் மற்றும் நன்றியுரை ஆகியவற்றுக்கு மட்டுமே கொறடாவின் பங்கு அவசியம் என்று கூறியது. அதாவது மற்ற நேரங்களில் உறுப்பினர் கொறடாவிற்கு எதிராக வாக்களிக்கலாம். உச்சநீதி -மன்றத்தின்படி உறுப்பினருக்கு அபிப்பிராய பேதம் கொள்ள உரிமை உண்டு. ஒரு சுயேட்சை உறுப்பினர் எந்த கட்சியிலாவது சேருதல்.
3. அவைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் நியமிக்கப்பட்ட 6 மாத காலத்திற்கு பிறகு எந்த கட்சியலாவது சேர்தல், (அவர் 6 மாத காலத்திற்குள் எந்த

கட்சியலாவது சேர்ந்தால் தகுதியிழக்க மாட்டார்)

4. கட்சியல் பிளவு ஏற்படும் போது தனியே போன குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கை விட குறைவாக இருத்தல்.
5. ஒரு கட்சியோடு மற்றொரு கட்சி இணைக்கப்படும் போது இணைக்கப் -படும் கட்சியின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் இணைப்பிற்கு ஒத்துக் கொள்ளாதிருத்தல்.

- மக்களவை சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் மற்றும் விதான் சபாவின் சபாநாயகர் அல்லது துணைசபாநாயகர் மற்றும் விதான் பரிஷத் தலைவர் போன்றோர் தனது பதவிகளை விட்டுவிட்டு மீண்டும் தங்களது கட்சிகளில் இணைந்தாலும் தகுதியிழக்க மாட்டார்.
- இச்சட்டத்தின்படி கட்சித்தாவல் தொடர்பான விவகாரங்களில் சபாநாயகர் அல்லது மாநிலங்களவைத் தலைவரின் முடிவே இறுதியானது.
- இதை விசாரிக்க நீதிமன்றத்திற்கு எந்த உரிமையும் கிடையாது.
- 1991 நவம்பரில் அரசிலயமைப்பு அடிப்படை கட்டமைப்பான நீதிப்புரனாய்வு செய்யும் உரிமை எடுக்கப்பட்டுவிட்டது என்று கூறியது.
- எனவே, நீதிப்புரனாய்வுக்குட்பட்டு சபாநாயகர் அல்லது மாநிலங்களவைத் தலைவரின் தீர்ப்பே இறுதியானது.

**தோல்வியின் காரணங்கள் (Causes of Failure)**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் 6 மாத காலத்திற்குள் ஒரு அரசியல் கட்சியில் சேர்வதைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை
- கட்சிகளின் பிரிவில் மூன்றில் ஒரு பங்கு மற்றும் இணைப்பின் மூன்றில் பங்கு தேவை என்பது எந்த அடிப்படையில் செயல்படுகிறது என்று தெளிவாகக் கூறப்படவில்லை சட்டத்தில் ஓட்டைகள் இருப்பதால் பெரிய கட்சியாக இருந்து செய்ய முடியாததை பிரிந்த பிறகு செய்கின்றனர். கட்சித்தாவல் ஒருமுறை செய்கையா அல்லது தொடர்ச்சியான செய்கையா என தெளிவாக கூறப்படவில்லை.
- கட்சியிலிருந்து பிரிந்து செல்வதைத் தடுக்க அரசியல் கட்சிகள் தானாக அதன் உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்குவதைப் பற்றி ஏதும் கூறப்படவில்லை. சபாநாயகரே முடிவெடுக்கக்கூடிய அதிகார முடையவர். எனவே இந்த விவகாரத்திற்கு அரசியல் சாயம் பூசும் வாய்ப்புகள் அதிகம்.

# அரசியலமைப்பு சட்டத்திருத்தங்கள்

| அரசியல் அமைப்பு திருத்த எண். | வருடம் | பாதிக்கப்பட்ட சரத்துகள் | திருத்தப்பட்ட பொருள் |
|---|---|---|---|
| **1வது** | 1951 | 15, 19, 85, 87, 174, 341, 342, 372, 376 சரத்துகள் 31A, 31B, மேலும் 9வது அட்டவணையில் இணைக்கப்பட்டது. | பொதுநலனைக் கருத்தில் கொண்டு சமத்துவ உரிமை தன்னுரிமை மற்றும் சொத்துரிமை ஆகியவை வரையறுக்கப்பட்டன. நிலச்சீர்திருத்த சட்டத்தை நீதிமன்றங்களில் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாக செய்வதற்காக அது 9வது அட்டவணையில் இணைக்கப்பட்டது. சட்டசபைகளில் கூட்டத்தொடர்கள், நீதிபதிகளின் நியமனம் மற்றும் இட ஒதுக்கீடு தொடர்பான விதிகளும் பாதிக்கப்பட்டன. |
| **2வது** | 1952 | சரத்து 87 யை திருத்தியுள்ளது. | பாராளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் |
| **3வது** | 1954 | 7வது அட்டவணை | சுத்திகரிக்கப்படாத பருத்தி, உணவு உற்பத்தி, கால்நடை பராமரிப்பு போன்றவை பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. (33-யை மாற்றியமைத்துள்ளது) |
| **4வது** | 1955 | 31, 31A, 305 மற்றும் 9வது அட்டவணை திருத்தியுள்ளது. | சொத்தை கையகப்படுத்தும் போது அதற்கு பதிலாக வழங்கப்பட வேண்டிய நஷ்ட ஈட்டின் தொகை குறிப்பிடலாம். மேலும் நஷ்ட ஈட்டின் தொகை நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட சரத்து 305 திருத்தியுள்ளது. (9-அட்டவணையின் கீழ் புதிதாக சட்டங்காவல்) |
| **5வது** | 1955 | சரத்து 3 திருத்தப்பட்டுள்ளது | மாநிலங்களின் பெயர்கள் மற்றும் எல்லைகள் பாதிக்கும் வகையில் கொண்டுவரப்படப்போகும் சட்டத்தின் மீது மாநிலங்கள் தங்கள் கருத்தை தெரிவிக்க காலக்கெடு நிர்ணயிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 6வது | 1956 | 269, 286, 286(3)7வது அட்டவணை பட்டியல் I, II 92A சேர்த்துள்ளது | மாநிலங்களிடையே வர்த்தகத்தில் சம்பந்தப்பட்ட பொருள்களின் மீது வரி விதிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. |
| 7வது | 1956 | 49, 80, 81, 82, 131, 153, 158, 168, 170, 171, 216, 217, 220, 222, 224, 230, 231, 232, 239, 240, 253, 298, 371, சேர்க்கப்பட்ட சரத்துகள் : 385A, 290A, 350A, 350B, 372A, 378A, நீக்கப்பட்ட சரத்துகள் : 238, 242, 243, 259, 278, 306, 379, 80, 2வது, 4வது மற்றும் 7வது அட்டவணைகளும் | 1. 14 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் அங்கீகரிக்கப்பட்டன.<br>2. மக்களவை, மாநிலங்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் இடங்கள் மறு ஒதுக்கீடு செய்யப்பட்டன.<br>3. செயல் மற்றும் கூடுதல் நீதிபதிகளை நியமித்தல் மற்றும் உயர்நீதிமன்றங்களின் அதிகாரங்கள் பற்றிய சரத்து.<br>4. யூனியன் பிரதேசங்களுக்கான சரத்து<br>5. ஆந்திரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் பம்பாய் மாநிலங்களுக்கு சிறப்பு சரத்துகள். |
| 8வது | 1960 | 330, 332, 333, 334 (334- திருத்தப்பட்டு மேலும் பத்து ஆண்டுகள் ஒதுக்கீடு விரிவுப் படுத்தப்பட்டது. | தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்காக சட்டமன்றங்களில் ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீடு 1970 வரை நீட்டிக்கப்பட்டது. |
| 9வது | 1960 | முதல் அட்டவணை | பெருபரி யூனியன் பகுதிகளை பாகிஸ்தானுக்கு மாற்றுவது தொடர்பான சரத்துகள் |
| 10வது | 1961 | 240 முதல் அட்டவணை | தாதர் நாகர் ஹவேலி இந்தியாவில் இணைக்கப்பட்டது. |
| 11வது | 1961 | 66(1), 71(4) | குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான தேர்தல் குழு தொடர்பான சரத்துகள்.<br>வாக்காளர் குழாமில் ஒரு காலியிடம் இருப்பதாகக்கூறி இவர்கள் தேர்தலை எதிர்க்க முடியாது. |
| 12வது | 1962 | சரத்து 240 முதல் அட்டவணை | கோவா, டையு, டாமன் ஆகியவை இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **13வது** | 1962 | சரத்து 371A சேர்க்கப்பட்டது | நாகலாந்துக்கு மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது. மேலும் நாகலாந்து மாநிலத்திற்கு சிறப்பு விதிகள் உருவாக்கப்பட்டன. |
| **14வது** | 1962 | 239A, 240(1) முதல் 4வது அட்டவணை | பாண்டிச்சேரி இந்தியாவின் யூனியன் பிரதேசமாக இணைக்கப்பட்டது. மேலும் அந்த யூனியன் பிரதேச மாநில சட்டசபையும் அமைச்சரவையும் அமைக்க விதிகள் உருவாக்கப்பட்டன.<br>இமாச்சாலப் பிரதேசம், மணிப்பூர் திரிப்புரா, கோவா, டாமன். |
| **15வது** | 1962 | 124, 128, 217(3), 222, 224A, 226, 297, 311(2) ஏழாவது அட்டவணை | 1. உயர்நீதி மன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 60லிருந்து 62ஆக உயர்த்தப்பட்டது.<br>2. உயர்நீதிமன்றங்களின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் மீண்டும் வேலையில் அமர்வதற்கான விதிகள்.<br>3. உயர்நீதி மன்றங்களின் அதிகார விஸ்தரிப்பு.<br>4. 1963-ஆண்டு 15-வது பிரிவு திருத்தப்படி 60 வயதை 62-ஆக உயர்த்தப்பட்டது. |
| **16வது** | 1963 | 19, 84, 173, 3வது அட்டவணை | பேச்சுரிமை, ஆயுதமின்றி அமைதியாகக் கூடும் உரிமை, சங்கங்கள் அமைக்க இந்தியாவின் இறையாமை & ஒருமைப்பாடு ஆகியவற்றின் நலன்களுக்காக வரையறைகள் விதிக்க இது வழி வகுத்தது. தேசிய ஒற்றுமையை மேம்படுத்த நாடாளுமன்ற & மாநில சட்டமன்றத்திற்கு நிற்பவர் காப்பாற்ற உறுதியளிக்க வேண்டும். |
| **17வது** | 1964 | 31A 9வது அட்டவணை | நீதிப்புணராய்வு தொடர்பான விதிகள் மறுவரையறை செய்யப்பட்டன.<br>17-வது தனிப்பட்டமுறையில் பயிரிடப்படும் நிலமாக, நிலம் இருப்பின் சந்தை பதிப்பின் படி இழப்பீடு வழங்கப்பட்டாலன்றி அதை எடுக்க கூடாது என கூறியது. |
| **18வது** | 1966 | சரத்து 3 | மாநிலம் மறுவரையறை செய்யப்பட்டது. பஞ்சாப் மாநிலம் சீரமைக்க முடிந்தது. |

| | | | |
|---|---|---|---|
| **19வது** | 1966 | சரத்து 324 | தேர்தல் தீர்ப்பாயங்கள் அழிக்கப்பட்டன. தேர்தல் பிரச்சனைகள் தொடர்பான விதிகள், உயர்நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தது. |
| **20வது** | 1966 | சரத்து 233A சேர்க்கப்பட்டது | மாவட்ட நீதிபதிகளின் நியமனம் தொடர்பான விதிகள். |
| **21வது** | 1967 | 8வது அட்டவணை | இந்தி மொழி எட்டாவது அட்டவணையில் இணைக்கப்பட்டது. |
| **22வது** | 1969 | சரத்துகள் 244A மற்றும் 271B ஆகியவை சேர்க்கப்பட்டன | யூனியன் பிரதேசம் மேகலாயா உருவாக்கப்பட்டது. மேலும் அஸ்ஸாம் மாநிலத்திற்கான சில சிறப்பு விதிகள் அளித்தது. |
| **23வது** | 1969 | 331, 332, 333, 334 | சட்டசபையில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ இந்திய சமூகத்தினருக்கான இட ஒதுக்கீடு 1980 வரை நீட்டிக்கப்பட்டது. |
| **24வது** | 1971 | 13, 368 | அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட அரசியலமைப்பின் எந்த ஒரு பகுதியையும் திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. |
| **25வது** | 1971 | 31(2), 31C சேர்க்கப்பட்டது | விதி 39ல் கூறப்பட்டுள்ளபடி அடிப்படை உரிமைகள் வழிகாட்டி நெறிமுறைகளுக்கு கீழானவையாக வைக்கப்பட்டன. |
| **26வது** | 1971 | சரத்து 363A சேர்க்கப்பட்டது மேலும் 291&392 நீக்கப்பட்டது. | அரசர்களின் சலுகைகள் அழிக்கப்பட்டன |
| **27வது** | 1971 | 239B மற்றும் 371C ஆகியவை சேர்க்கப்பட்டன. | வடகிழக்கு மாநிலங்களின் மறு கட்டமைப்பு |
| **28வது** | 1972 | சரத்து 312A சேர்க்கப்பட்டது. சரத்து 314 நீக்கப்பட்டது. | இந்திய சமூகப்பணிகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் ஒழிக்கப்பட்டன. |
| **29வது** | 1972 | ஒன்பதாவது அட்டவணை | கேரள மாநில சட்டசபையினால் இயற்றப்பட்ட நிலச்சீர்திருத்தச்சட்டம் ஒப்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **30வது** | 1972 | 133 | சிவில் வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய அவ்வழக்கின் மதிப்பு 20,000 ரூபாய்க்கு மேல் இருக்க வேண்டும் என்ற வரையறை நீக்கப்பட்டது. |
| **31வது** | 1973 | 81, 330 மற்றும் 332 | மக்களவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 525லிருந்து 545 ஆக உயர்த்தப்பட்டது. |
| **32வது** | 1974 | சரத்து 371 பாதிக்கப் -பட்டது. 371D, 371E ஆகியவை சேர்க்கப்பட்டன | ஆந்திர பிரதேச மாநிலத்திற்கான சிறப்பு விதிகள் மற்றும் ஒரு மையப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்துவதையும் குறித்தது. |
| **33வது** | 1974 | சரத்துகள் 101, 190 | ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் ராஜினாமா கடிதத்தை அவைத் தலைவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டாயமில்லை என்பதற்கான சரத்து ஒன்பதாவது அட்டவணையில் விஸ்திரிக்கப்பட்டது. |
| **34வது** | 1975 | ஒன்பதாவது அட்டவணை | ஒன்பதாவது அட்டவணை விஸ்தரிக்கப்பட்டது |
| **35வது** | 1975 | சரத்து 80 பாதிக்கப் -பட்டது. சரத்து 371F மற்றும் பத்தாவது அட்டவணை இணைக்கப்பட்டது. (2A சேர்க்கப்பட்டது) (81 மற்றும் 82 திருத்தப்பட்டன) | சிக்கிம் இந்தியாவின் ஒருங்கிணைந்த மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| **36வது** | 1975 | சரத்து 80 பாதிக்கப்பட்டது. சரத்து 371F சேர்க்கப்பட்டது. மேலும் 10வது அட்டவணை நீக்கப் -பட்டது. (81 மற்றும் 82 திருத்தப்பட்டன) | சிக்கிம் ஒரு முழுமையான மாநிலத்தின் அந்தஸ்து வழங்கப்பட்டது. |
| **37வது** | 1975 | சரத்து 239A மற்றும் 240 | அருணாச்சலப்பிரதேசத்தில் மாநில சட்டசபையையும் அமைச்சரவையையும் அமைப்பதற்கான விதிகள் |

| | | | |
|---|---|---|---|
| **38வது** | 1975 | 123, 233, 239B, 352, 359, 360 – ஆகியவைகளைத் திருத்தி யுள்ளது. | குடியரசுத் தலைவர், ஆளுநர் மற்றும் Lt ஆளுநர் ஆகியோரால் வெளியிடப்பட்ட அவசரச்சட்டம், நீதி மன்றங்களின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாக ஆக்கப்பட்டது. |
| **39வது** | 1975 | சரத்து 71, 329A ஆகியவை பாதிக்கப் -பட்டன. சரத்து 391A சேர்க்கப்பட்டது. மேலும் அட்டவணை X நீக்கப்பட்டது. | குடியரசுத் தலைவர், துணைக்குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் மக்களவை சபாநாயகர் ஆகியோரின் தேர்தல்களை நீதிமன்றத்தில் எதிர்க்க முடியாது. |
| **40வது** | 1976 | சரத்து 31B, 297 மற்றும் ஒன்பதாவது அட்டவணை பாதிக்கப்பட்டது. | ஒன்பதாவது அட்டவணையில் புதிய விவகாரங்கள் இணைக்கப்பட்டன. இந்தியாவில் உள்ள கடல் நதிகளின் நீர் மீது பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. |
| **41வது** | 1976 | சரத்து 316(2) | மாநில மற்றும் கூட்டு மாநில பொதுப்பணி ஆணையத்தின் உறுப்பினர்களின் ஓய்வு பெறும் வயது 60லிருந்து 62ஆக உயர்த்தப்பட்டது. |
| **42வது** | 1976 | முகப்புரை சரத்து 31, 31C, 39, 55, 74, 77, 81, 82, 83, 100, 102, 103, 105, 118, 145, 150, 166, 170, 172, 189, 191, 192, 194, 208, 217, 225, 226, 227, 228, 311, 312, 330, 352, 353, 356, 357, 358, 359, 366, 368, 371F, மற்றும் ஏழாவது அட்டவணை, சரத்து 31D, 32A, 39A, 43A, 48A, பகுதி IVA (சரத்து 51A), 114C, 131A, 139A, 144A, 226A, 228A, 257A, பகுதி XIVA, 323A | 1. மதச்சார்பற்ற சமத்துவ மற்றும் ஒருங்கிணைந்த ஆகிய வார்த்தைகள் முகப்புரையில் சேர்க்கப்பட்டது.<br>2. அரசியலமைப்புத் திருத்தத்தின் செல்லத்தக்க தன்மையின் மீது எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது. 368(A)<br>3. அரசுக் கொள்கையின் வழிகாட்டி நெறிகளின் விஸ்தரிப்பு.<br>4. அடிப்படை உரிமைகளை விட அரசுக் கொள்கையின் வழிகாட்டி நெறிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.<br>5. அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்டது.<br>6. அடிப்படை உரிமைகளின் மீதான கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டன.<br>7. மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளின் பதவிக்காலம் தேசிய |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் 423A ஆகியவை சேர்க்கப்பட்டன.<br>226A – நீக்கப்பட்டது | நெருக்கடி நிலையின் போது 6 வருடங்களாக அதிகரிக்கப்பட்டது.<br>8. தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கேற்க செய்வதற்காக விதிகள் வரையறுக்கப்பட்டது.<br>9. நீதிமன்றங்களின் நீதிப்புணராய்வு அதிகாரம் வரையறுக்கப்பட்டது.<br>10. சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகளின் பாதுகாப்பிற்கான விதிகள்.<br>11. குழந்தைகள் மற்றும் இளைஞர்களை சுரண்டலில் இருந்து காக்கும் விதிகள்.<br>12. மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளின் தொகுதிகளை மறுசீரமைப்பது 2001 ஆம் ஆண்டு வரை 1971 ஆம் ஆண்டின் மக்கள் தொகையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.<br>13. மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளின் கூட்டங்களை நடத்த குறைந்த பட்ச உறுப்பினர்களின் வருகை அவசியமில்லை.<br>14. சரத்து 32Aன் கீழ் மாநில அரசுகளுடைய சட்டங்களின் செல்லத்தக்க தன்மையை ஆராயும் உச்ச நீதி மன்றத்தின் அதிகாரம் நீக்கப்பட்டது.<br>15. நீதிமன்றங்களின் செயல்பாட்டில் ஜுரி முறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.<br>16. அமைச்சரவையின் அறிவுரையின்படி குடியரசுத் தலைவர் செயல்பட வேண்டும்.<br>17. எந்த ஒரு மாநிலத்திற்கோ (அ) ஒரு மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதிக்கோ சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக மத்திய படைகளை அனுப்ப மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அப்படைகளின் கட்டுப்பாடு மத்திய அரசிடமே இருக்கும். |

| | | | |
|---|---|---|---|
| | | | 18. நெருக்கடி நிலை விதிகள் (அ) தேசிய நெருக்கடி நிலையை இந்தியப்பிரதேசத்தின் ஒரு பகுதியில் பிரகடனம் செய்யலாம், (அ) குடியரசுத் தலைவரின் ஆட்சி ஒரு தடையை நீடிக்கும் காலம் 6 மாதத்திலிருந்து ஒரு வருடமாக உயர்த்தப்பட்டது.<br>19. வனம் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, கல்வி, எண் மற்றும் அளவுகள், மக்கள்தொகை கட்டுப்பாடு மற்றும் நீதித்துறை நிர்வாகம் போன்ற சிலபொருள்கள் பொது அதிகாரப்பட்டியலுக்கு மாற்றப்பட்டன.<br>20. பொது ஊழியர்களுக்காக நிர்வாக தீர்ப்பாயங்கள் அமைப்பது தொடர்பான விதிகள். |
| **43வது** | 1977 | சரத்து 145, 226, 228, 366 ஆகியவை பாதிக்கப்பட்டன. 31D, 32A, 131A, 144A, 226A, 228A ஆகியவை நீக்கப்பட்டன. | 1. நீதிதுறையின் உரிமைகளும் அதிகாரங்களும் காக்கப்பட்டன.<br>2. நீதிப்புணராய்வுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது.<br>3. ஒரு அமைப்பை தேசத்திற்கு எதிரானது என்று அறிவிக்க பாராளுமன்றத்திற்கு இருந்த அதிகாரம் நீக்கப்பட்டது. |
| **44வது** | 1977 | சரத்து 19, 20, 30, 31A, 38, 74, 77, 83, 105, 123, 132, 133, 134, 139A, 150, 166, 172, 194, 213, 217, 226, 227, 239A, 327, 352, 356, 358, 359, 360 371F, மற்றும் 9வது அட்டவணை ஆகியவை பாதிக்கப்பட்டன.<br>சரத்து 19(i)f, 31, 257F, 329 ஆகியவை பாதிக்கப்பட்டன.<br>சரத்து 71, 103, 192 | 1. சொத்தின் மீதான அடிப்படை உரிமைகள் நீக்கப்பட்டன.<br>2. மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளின் பதவிக்காலம் 5 வருடங்களாக குறைக்கப்பட்டது.<br>3. பாராளுமன்ற மற்றும் மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களுடைய தகுதிகளின் மீதான பிரச்சனைகள் முறையே குடியரசு தலைவர் மற்றும் ஆளுநரால் முடிவு செய்யப்படும்.<br>4. சட்டசபைகளின் கூட்டங்களை நடத்த தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய விதிகள் 42வது |

| | | | |
|---|---|---|---|
| | | ஆகியவை புத்துயிர் அளிக்கப்பட்டன. சரத்து 134A, 330A, பகுதி XIIன் அத்தியாயம் IV மற்றும் 361A ஆகியவை சேர்க்கப்பட்டன. சரத்து 359 கூறப்பட்ட திருத்தம் பகுதி 8 கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் உள்ளது. | திருத்தத்திற்கு முன்பு இருந்தவாறே மாற்றப்பட்டன.<br>5. குடியரசுத் தலைவர் மற்றும் துணைக்குடியரசுத் தலைவரின் தேர்தல் பற்றிய சர்ச்சைகளின் மீது உச்ச நீதிமன்றமும், பாராளுமன்ற மற்றும் மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களுடைய தேர்தலில் ஏற்படும் சர்சைகளின் மீது உயர்நீதி மன்றங்களும் முடிவெடுக்கும் என்று கூறப்பட்டது.<br>6. கேபினெட்டின் எழுத்துப்பூர்வமான பரிந்துரையை பெற்றாலன்றி தேசிய நெருக்கடி நிலையை பிரகடனம் செய்ய முடியாது.<br>7. வாழும் உரிமை, தன்னுரிமை மற்றும் பத்திரிகை சுதந்திம் ஆகியவை மீண்டும் வழங்கப்பட்டன. |
| **45வது** | 1980 | சரத்து 330, 332, 333 மற்றும் 334 | மாநில சட்டசபைகளில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ இந்திய சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு மேலும் 40 வருடங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| **46வது** | 1982 | சரத்து 269, 286 மற்றும் 7வது அட்டவணை 29A சேர்க்கப்பட்டது. | மாநில அரசுகளால் விதிக்கப்பட்ட விற்பனை வரி மறுசீரமைப்பு செய்யப்பட்டது. |
| **47வது** | 1984 | 9வது அட்டவணை | நிலச்சீர்திருத்தங்கள் தொடர்பான 14 புதிய விதிகள் 9வது அட்டவணையில் இணைக்கப்பட்டது. |
| **48வது** | 1984 | சரத்து 356(5) | பஞ்சாபில் அமலாக்கப்பட்ட குடியரசுத் தலைவரின் ஆட்சி இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| **49வது** | 1984 | சரத்து 244, அட்டவணை V மற்றும் VI ஆகியவை பாதிக்கப்பட்டன | திரிபுரா மாநில பழங்குடியின பகுதிகளை பற்றி சட்டங்கள் இயற்ற பாராளுமன்றத்திலும், திரிபுரா மாநில சட்டசபைக்கும் அதிகாரம் உண்டு. 1982- தீர்மானம் ஒன்றை இயற்றியுள்ளது. |
| | | | ஆயுதப் படைகளின் உறுப்பினர்களுடைய |

| | | | |
|---|---|---|---|
| **50வது** | 1984 | சரத்து 33 | அடிப்படை உரிமைகளை சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. |
| **51வது** | 1984 | சரத்து 330 மற்றும் 332 திருத்தப்பட்டது | அஸ்ஸாம் மாநிலத்தின் தன்னாட்சி பகுதிகளில் உள்ள இடங்களை தவிர பாராளுமன்ற மக்களவை மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சட்டசபைகளில் உள்ள சில இடங்களை அம்மாநிலங்களை சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்தல் |
| **52வது** | 1985 | 102, 190, 191 ஆகியவை திருத்தியது. அட்டவணைX சேர்க்கப்பட்டது. | கட்சித்தாவல் தடை சட்டம் தொடர்பான விதிகள் அரசியலமைப்பில் இணைக்கப்பட்டது. |
| **53வது** | 1986 | அட்டவணை I - 317G சேர்த்தது. | இந்தியாவின் 23வது மாநிலமாக மிசோரம் இணைக்கப்பட்டது. |
| **54வது** | 1986 | அட்டவணை II சரத்து 125 221 ஆகியவற்றில் மற்றவைகளை ஏற்படுத்தியது. | உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகளின் சம்பளம் படிகளும் உயர்த்தப்பட்டன. |
| **55வது** | 1986 | அட்டவணை I – 371H சேர்க்கப்பட்டது. | இந்தியாவின் 24வது மாநிலமாக அருணாச்சலப்பிரதேசம் இணைக்கப்பட்டது. |
| **56வது** | 1987 | அட்டவணை I – 371I சேர்த்தது. | இந்தியாவின் 25வது மாநிலமாக கோவா இணைக்கப்பட்டது. |
| **57வது** | 1987 | பகுதி XXII மற்றும் சரத்து 332 ஆகியவை பாதிக்கப்பட்டன. 332 திருத்தப்பட்டது. | மிசோரம், நாகலாந்து, மேகலாயா, அருணாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு மக்களவையிலும் அம்மாநிலங்களின் சட்டசபைகளிலும் வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு மேலும் மேம்படுத்தப்பட்டது. |
| **58வது** | 1987 | சரத்து 394A சேர்க்கப்பட்டது | அரசியலமைப்பின் அதிகார மூல வாக்கியம் இந்தியாவில் இருப்பதற்கான விதிகள். |
| | | | 1. பஞ்சாப்பின் குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலம் 3 வருடங்கள் வரை |

| | | | |
|---|---|---|---|
| **59வது** | 1988 | சரத்து 356, 352 மற்றும் 358, 359 ஆகியவை பாதிக்கப்பட்டன. சரத்து 359A சேர்க்கப்பட்டது | நீட்டிக்கப்பட்டது.<br>2. உள்நாட்டு கிளர்ச்சிகளின் அடிப்படையில் பஞ்சாபில் தேசிய நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்துவதற்கான விதிகள்.<br>3. பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் நெருக்கடி நிலையின் போது வாழும் உரிமையும் தன்னுரிமையும் தற்காலிகமாக நீக்கப்படும். |
| **60வது** | 1988 | சரத்து 376(2) திருத்தியது. | உள்நாட்டு அதிகாரிகளால் விதிக்கப்படும் தொழில் வரியின் அதிகபட்ச தொகை 250 ரூபாயிலிருந்து 2500 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. |
| **61வது** | 1988 | சரத்து 326 | வாக்குரிமைபெறுவதற்கான வயது வரம்பு 21லிருந்து 18ஆக குறைக்கப்பட்டது. |
| **62வது** | 1989 | சரத்து 334 | மக்களவை மற்றும் மாநிலசட்டசபைகளின் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ இந்திய சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு மேலும் 10 வருடங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| **63வது** | 1989 | சரத்து 356 பாதிக்கப்பட்டது. சரத்து 359A நீக்கப்பட்டது. | பஞ்சாப் மாநிலத்தில் நெருக்கடி நிலையின் போது வாழும் உரிமையும் தன்னுரிமையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. |
| **64வது** | 1990 | சரத்து 356 | பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி (1987, மே 11 ஆம் நாள் அமலாக்கப்பட்டது). மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| **65வது** | 1990 | சரத்து 338 | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய குழுவிற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது. |
| **66வது** | 1990 | அட்டவணை IX 55 சட்டங்களைச் சேர்த்தது. | நிலச்சீர்திருத்தங்கள் தொடர்பாக மாநிலங்களினால் இயற்றப்பட்ட 25 சட்டங்கள் 9வது அட்டவணையில் இணைக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **67வது** | 1990 | சரத்து (356) (4) | பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலாக்கப்பட்ட நாளிலிருந்து (1987 மே 11) 4 வருடங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| **68வது** | 1991 | சரத்து 356 (4) | பஞ்சாப் மாநிலத்தின் குடியரசுத் தலைவர் ஆட்சி 5 வருடங்களுக்குநீட்டிக்கப்பட்டது. |
| **69வது** | 1991 | சரத்து 239AA மற்றும் 239AB ஆகிவை சேர்க்கப்பட்டன | டெல்லி யூனியன் பிரதேசம். டெல்லி தேசிய தலைநகர் பிரதேசம் எனப் பெயர் மாற்றப்பட்டது. மேலும் டெல்லிக்கு 70 இடங்களைக் கொண்ட மாநில சட்டசபை வழங்கப்பட்டது. |
| **70வது** | 1992 | சரத்து 54 | டெல்லி மற்றும் பாண்டிச்சேரியின் சட்டசபை உறுப்பினர்களுக்கு குடியரசுத் தலைவர் தேர்தலில் பங்கேற்க உரிமை வழங்கப்பட்டது. |
| **71வது** | 1992 | அட்டவணை VIII | நேபாளி, கொங்கனி மற்றும் மணிப்பூரி ஆகிய மொழிகள் எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டன. |
| **72வது** | 1992 | சரத்து 322.ல் 3B என்ற வாசகத்தைச் சேர்த்தது. | 2000 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்கும் வரை திரிபுரா மாநில சட்டசபையில் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்களை சட்டப்படி முடிவு செய்தல். |
| **73வது** | 1993 | சரத்து 243க்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. மற்றும் அட்டவணை XI இணைக்கப்பட்டது. | பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளின் அமைப்பு தேர்தல்கள் நிதி மற்றும் பணிகள் தொடர்பான விதிகள். |
| **74வது** | 1993 | சரத்து 243க்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. அட்டவணை IXA, XII இணைக்கப்பட்டது | உள்ளாட்சிகள் அமைப்பு, தேர்தல்கள், நிதி மற்றும் பணிகள் தொடர்பான விதிகள். |
| **75வது** | 1994 | சரத்து 323B திருத்தப்பட்டது. | வீட்டு உரிமையாளருக்கு வாடகைக்கு குடியிருப்போருக்கும் இடையே ஏற்படும் பிரச்சனைகளை விரைவாக தீர்ப்பதற்காக சிறப்பு நிர்வாகத் தீர்ப்பாயங்களை அமைப்பதற்கான விதிகள். |

| | | | |
|---|---|---|---|
| **76வது** | 1994 | அட்டவணை IX | இட ஒதுக்கீடு தொடர்பாக தமிழ்நாடு சட்டசபையால் இயற்றப்பட்ட சட்டங்கள் 9வது அட்டவணையில் இணைக்கப்பட்டது. |
| **77வது** | 1995 | சரத்து 16 (4A) | பொதுப்பணிகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வுகள் அளிப்பது தொடர்பான விதிகள். |
| **78வது** | 1995 | அட்டவணை IX | பல மாநிலங்களால் இயற்றப்பட்ட சில நிலச்சீர்திருத்த சட்டங்கள் 9வது அட்டவணையில் இணைக்கப்பட்டன. |
| **79வது** | 1999 | சரத்து 334 | மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ இந்திய சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு மேலும் 10 வருடங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| **80வது** | 2000 | சரத்து 268, 269, 270, 272 | பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு மத்திய மாநில அரசுகளிடையே வரிகளை பகிர்ந்தளிக்க மாற்றுமுறை ஏற்படுத்தப்பட்டது. |
| **81வது** | 2000 | சரத்து 16(1) புதிதாக வாசகம் (40) சேர்ந்துள்ளது. | அரசியலமைப்பின் சரத்து 16ன் கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக ஒதுக்கப்பட்டு காலியாக உள்ள இடங்கள் பின்வரும் வருடம் அல்லது வருடங்களில் நிரப்பப்பட வேண்டிய சிறப்பு காலியிடங்களாகக் கருதப்படும். |
| **82வது** | 2000 | சரத்து 335 | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு தேர்வுகளில் பெறவேண்டிய தகுதி மதிப்பெண்களை தளர்த்துதல், பதவி உயர்வுக்கு தேவையான தகுதிகளை குறைத்தல் மற்றும் மத்திய மாநில வேலைகள் தொடர்பான விவகாரங்கள் போன்றவற்றில் சலுகைகளை அளிப்பதற்காக மாநில அரசு விதிகளை வகுப்பதை சரத்து 335 தடை செய்யாது. |

| | | | |
|---|---|---|---|
| **83வது** | 2000 | சரத்து 243M | அருணாச்சலப்பிரதேசத்தில் ஒரு பஞ்சாயத்தில் வசிக்கும் மக்கள் அனைவரும் பழங்குடியினராக இருந்தால் அப்பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்க தேவையில்லை.. |
| **84வது** | 2001 | சரத்து 1, 2 மற்றும் அட்டவணை I, IV. 55, 81, 82, 170, 330, 332 திருத்தப்பட்டன. | சட்டிஸ்கர், உத்தராஞ்சல், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களின் உருவாக்கம். |
| **85வது** | 2001 | சரத்து 16 (4A) | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பதவி உயர்வு தொடர்பான ஒதுக்கீடு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. |
| **86வது** | 2002 | (k) சேர்ந்துள்ளது | 21A கட்டாய கல்வி 45 குழந்தைகள் பராமரிப்பு 51A பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புதல் |
| **91வது** | 2003 | 75(1A), 164(1A) 361A, 361B சேர்ந்துள்ளது | 5% க்கு மந்திரிசபை அளவு மொத்த உறுப்பினர்களில் அதிகம் போகாமல் தடுத்தல். |
| **92வது** | 2006 | | நான்கு மொழிகள் 8வது அட்டவணையில் இணைக்கப்பட்டது. |
| **93வது** | 2005 | | OBC 27% இட ஒதுக்கீடு |
| **94வது** | 2006 | சரத்து 164(1) | பழங்குடியினர் அமைச்சரை நியமித்தல் (சட்டீஸ்கர், ஜார்கண்ட் மத்தியபிரதேசம், ஒடிசா) |
| **95வது** | 2009 | சரத்து 334 | SC,ST பிரநிதித்துவத்தை நீட்டித்தல் மற்றும் மக்களவை (ம) மாநில சட்டமன்றத்தில் ஆங்கிலோ - இந்தியர்களின் சிறப்பு பிரதிநித்துவத்தை மேலும் 10 ஆண்டுகளுக்கு (2020வரை) நீட்டித்தல். (Art 334 ) |
| **96வது** | 2011 | | ஓரியா மொழி இனி ஒடியா என அழைக்கப்படும் |
| **97வது** | 2011 | சரத்து 19 | கூட்டுறவுச் சங்களுக்கு அரசியல் அமைப்ப அந்தஸ்து மற்றும் பாதுகாப்பு அளித்தல்.<br>கூட்டுறவு சங்கம் வகை அடிப்படை |

| | | | |
|---|---|---|---|
| | | | உரிமையில் இணைக்கபடும். (சரத்து 19) அரசுநெறி முறைக்கோட்பாடு சரத்து 43-Bயிலும் இணைக்கப்பட்டுள்ளது. பகுதி 1xB யிலும் கூட்டுறவு சங்கமானது இணைக்கப்பட்டுள்ளது. Art (243ZH to 243Z7) |
| **98வது** | 2012 | சரத்து 371 -J | கர்நாடகா - ஹைதரபாத் பகுதிகளுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கதல். |

**24வது சட்ட திருத்தம்**

**உருவாக்கம்**

- அடிப்படை உரிமைகளை இந்திய பாராளுமன்றம் சரத்து 368ன் மூலம் திருத்தலாம் என உச்ச நீதிமன்றம் சங்கரி பிரசாத் வழக்கு மூலம் தீர்ப்பளித்தது. (முதல் சட்ட திருத்தம் 1951)
- 1967ல் கோலக் நாத் வழக்கில் உச்சநீதிமன்றம் பாராளுமன்றம் அடிப்படை உரிமைகளை குறைக்கவோ ஒடுக்கவோ உரிமை கிடையாது என்று தீர்ப்பு வழங்கியது.
- கோல்நாத் வழக்கிற்கு எதிராக 24வது சட்டதிருத்தம் பாராளுமன்றத்தில் 1971ல் நிறைவேற்றப்பட்டது.

**முக்கியத்துவம் :**

- 24வது சட்ட திருத்தம் அடிப்படை உரிமைகளை திருத்தி அமைக்கும் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்கியது.
- இத்திருத்தத்தின்படி அரசியல் சட்ட சரத்து 368ன்படி செய்யப்பட்ட திருத்தங்கள் சரத்து 13 பாதிக்காது என்பதாகும்.
- 368ன்படி அரசியல் சட்ட திருத்த நடைமுறைகள் என்ற வாசகங்கள் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக அரசியல் சட்டத்தை திருத்துவதற்கு அளிக்கப்பட்ட அதிகாரமும் அதற்குரிய நடைமுறையும் என்ற வாசகங்கள் இணைக்கப்பட்டன.
- 368ன்கீழ் பிரிவு 1ன்படி பாராளுமன்றம் தனது அரசியல் சட்ட நிர்ணய சபை அதிகாரத்தை கொண்டு அரசியல் சட்டத்தில் இணைப்பையோ மாற்றத்தையோ நீக்கத்தையோ சரத்து 368க்குள்ளும் அரசியல் சட்ட நடைமுறையை பின்பற்றி செய்யலாம்.

**42வது சட்ட திருத்தம்**

- இந்திய அரசியலமைப்பின் முன்னுரையில் மதச்சார்பற்ற சமுதாயம் மற்றும் ஒருமைப்பாடு வார்த்தைகள் இணைக்கப்பட்டன.
- அரசியலமைப்பு சட்டதிருத்தங்களை எந்த நீதிமன்றமும் விவாதிக்க கூடாது.
- அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் அடிப்படை உரிமைகளை விட முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.
- அடிப்படை கடமைகள் (IV A) இணைக்கப்பட்டது.
- நீதிமன்றங்களின் நீதிப்புணராய்வு கட்டுப்படுத்தப்பட்டது.
- தேசிய நெருக்கடியின்போது மக்களவை மற்றும் மாநில

சட்டமன்றத்தின் காலத்தை 6 ஆண்டுகளுக்கு நீட்டிக்க செய்தது.

- ❖ தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்குபெற வழி செய்தது.
- ❖ நாட்டின் வனவிலங்கையும், சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாக்க வேண்டும்.
- ❖ 1971 மக்கள் தொகை கணக்கீட்டின்படி தொகுதி மறுசீரமைப்பு 2001 வரை நடைமுறைபடுத்த வேண்டும்.
- ❖ எந்த ஒரு மாநிலத்திற்கும் அல்லது மாநிலத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கோ சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக மத்திய படைகளை அனுப்ப மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ வனம் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, கல்வி, எடை மற்றும் அளவுகள், மக்கள் தொகை கட்டுப்பாடு, நீதித்துறை நிர்வாகம் போன்றவை மாநிலப்பட்டியலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது.
- ❖ மக்களவை மாநில சட்டமன்றம் கூட்டங்களை நடத்த குறைந்த பட்ச உறுப்பினர்கள் வருகை அவசியமில்லை.

## 44வது சட்ட திருத்தம்

- ❖ சொத்தின் மீதான அடிப்படை உரிமை நீக்கப்பட்டது.
- ❖ மக்களவை மற்றும் மாநில சட்டசபையின் பதவிக்காலம் 5 வருடங்களாக குறைக்கப்பட்டது.
- ❖ பாராளுமன்ற மற்றும் மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களுடைய தகுதிகளின் மீதான பிரச்சனைகள் முறையே குடியரசுத் தலைவர், ஆளுநரால் முடிவு செய்யப்படும்.
- ❖ சட்டசபைகளின் கூட்டங்களை நடத்த தேவையான குறைந்த பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய சரத்துகள் 42வது திருத்தத்திற்கு முன்பு இருந்தவாரே மாற்றப்பட்டன.
- ❖ குடியரசுத் தலைவர் மற்றும் துணைக்குடியரசுத் தலைவரின் தேர்தல் பற்றிய சர்ச்சைகள் மீது உச்ச நீதிமன்றமும் பாராளுமன்ற மற்றும் மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களுடைய தேர்தலில் ஏற்படும் சர்ச்சைகள் மீது உச்ச நீதிமன்றமும் முடிவெடுக்கும்.
- ❖ கேபினெட் எழுத்துப்பூர்வமான பரிந்துரையை பெற்றாலன்றி தேசிய நெருக்கடி நிலையை பிரகடனம் செய்ய முடியாது.
- ❖ வாழும் உரிமை, தன்னுரிமை மற்றும் பத்திரிக்கை சுதந்திரம் ஆகியவை மீண்டும் வழங்கப்பட்டது.

# இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அட்டவணைகள்

## இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அட்டவணைகள்

| எண்கள் | பொருள்கள் | அடங்கும் சரத்துகள் |
|---|---|---|
| **முதல் அட்டவணை** | 1. **29 மாநிலங்கள்** பெயர்கள் மற்றும் அவைகளின் **7 யூனியன்** பிரதேச அதிகாரங்கள் | 1 மற்றும் 4 |
| **2வது அட்டவணை**<br>**பகுதி A**<br>**பகுதி C**<br>**பகுதி D**<br>**பகுதி E** | தொடர்புடைய விதிகள்<br>1. குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்<br>2. மக்களவை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர்<br>3. மாநிலங்களவை தலைவர் மற்றும் துணைத் தலைவர்<br>4. மாநில சட்டசபைகளின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர்<br>5. மாநில சட்டமேலவைகளின் தலைவர் மற்றும் துணைத்தலைவர்<br>6. உச்ச நீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகள்<br>7. இந்திய தலைமை கணக்கு மற்றும் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரி | 59(3),65(3),75,97,12, 148(3),158(3),164(5), 186 மற்றும் 221<br>A,B,C,D,E – 5 பகுதி உள்ளன.<br>B- நீக்கப்பட்டுவிட்டது<br>இவர்களின் சம்பளம் படிதொகை & சலுகைகள் பற்றி கூறுகிறது. |
| **3வது அட்டவணை** | பின்வருபவர்களுக்கான உறுதிமொழிகள் வடிவங்கள்<br>1. மத்திய அமைச்சர்கள்<br>2. பாராளுமன்ற தேர்தலின் வேட்பாளர்கள்<br>3. பாராளுமன்ற உறுப்பினர்கள்<br>4. உச்ச நீதிமன்ற நீதிபதிகள்<br>5. இந்திய தலைமை மற்றும் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரி<br>6. மாநில அமைச்சர்கள்<br>7. மாநில சட்டசபை தேர்தலின் வேட்பாளர்கள்<br>8. மாநில சட்டசபை உறுப்பினர்கள்<br>9. உயர்நீதி மன்ற நீதிபதிகள் | 75,99,124,148,164, 188 மற்றும் 219<br>சரத்து 84(a) 173 (a)<br>இவர்களின் பதவிப் பிரமானம் பற்றி உள்ளது. |

| | | |
|---|---|---|
| | 10. குடியரசுத் தலைவர் எடுக்க வேண்டிய பதவிப் பிரமானத்திற்கான **சரத்து 60**ல் உள்ளது.<br>11. துணை குடியரசு தலைவருக்கு **சரத்து 69**-லும் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| **4வது அட்டவணை** | மாநிலங்ளவையின் இடங்களை மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் ஒதுக்கீடு செய்தல் | 4(1) மற்றும் 80(2) |
| **5வது அட்டவணை** | பழங்குடியினப் பகுதிகள் மற்றும் பழங்குடியின மக்களின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான விதிகள் | 244(1) |
| **6வது அட்டவணை** | அஸ்ஸாம், மேகலாயா, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பழங்குடியினப் பகுதிகளின் நிர்வாகம் தொடர்பான விதிகள் (மலைச்சாதியினர் 97) | 244(2) மற்றும் 275(1) |
| **7வது அட்டவணை** | பட்டியல் I (மத்திய அதிகாரப் பட்டியல் 100) பட்டியல் II (மாநில அதிகாரப் பட்டியல் 61),III (பொதுப்பட்டியல்52), ஆகியவற்றின்படி மத்திய மாநில அரசுகளுக்கிடையே உள்ள அதிகாரங்களை பகிர்ந்தளித்தல். | 246 |
| **8வது அட்டவணை** | அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளை உள்ளடக்கியது. முதலில் 14 மொழிகள் இருந்தன. ஆனால் தற்போது 22 மொழிகள் உள்ளன. அவையாவன, 1. அஸ்ஸாம், 2. பெங்காலி, 3.குஜராத்தி, 4. இந்தி, 5.கன்னடம், 6.காஷ்மீர்,7. மலையாளம், 8. மணிப்பூரி, 9. மராத்தி, 10. கொங்கனி, 11.நேபாளி, 12. ஒரியா, 13. பஞ்சாபி, 14.சமஸ்கிருதம், 15.சிந்தி, 16.தமிழ், 17. தெலுங்கு, மற்றும் 18.உருது,சிந்தி மொழி 21வது திருத்த சட்டம் 1967ன் மூலம் சேர்க்கப்பட்டது. கொங்கனி, மணிப்பூரி மற்றும் நேபாளி ஆகியவை **71வது** திருத்தச்சட்டம் 1992ன் மூலம் சேர்க்கப்பட்டது. போடோ, டோக்ரி, மைதிலி, சந்தாலி மொழிகள் 92 வது சட்டத்திருத்தின் படி சேர்க்கப்பட்டது. | 344(1) மற்றும் 351 |
| **9வது அட்டவணை** | நிலச் சீர்த்திருத்தங்களுடன் தொடர்புடைய சில சட்டங்கள் மற்றும் விதி முறைகளை செல்லத்தக்கவையாகச் செய்தல். அத்தகைய 284 சட்டங்கள் இருக்கின்றன. இந்த அட்டவணை முதல் திருத்தச்சட்டம் **1951** மூலம் | **31- B** |

| | | |
|---|---|---|
| | அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்த அட்டவணையில் ஏதேனும் ஒரு சட்டத்தை இணைப்பதன் மூலம் அரசு அதனை நீதித் துறையின் ஆய்விலிருந்து பாதுகாக்கலாம் | |
| **10வது அட்டவணை** | கட்சித்தாவலின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தகுதியிழந்து தொடர்பான விதிகள் இது 52வது திருத்தச்சட்டம் 1985ன் மூலம் சேர்க்கப்பட்டது. இது கட்சித்தாவல் தடைச்சட்டம் என்றும் அழைக்கப்படும். | 102 (1)மற்றும் 191 (2) 36/B என்ற உறுப்பை புதிதாகச் சேர்த்துள்ளது. |
| **11வது அட்டவணை** | பஞ்சாயத்துகளின் அதிகாரங்கள் கடமைகள் ஆகியவற்றை குறிப்பிடுகின்றது. இதில் 29 **பொருள்கள் உள்ளன.** இது **73வது திருத்தச்சட்டம் 1992ன் மூலம்** சேர்க்கப்பட்டுள்ளது. | **243-G** |
| **12வது அட்டவணை** | நகராட்சிகளின் அதிகாரங்களையும் கடமைகளையும் குறிப்பிடுகின்றது. இதில் 18 பொருள்கள் உள்ளன. இது **74வது திருத்தச் சட்டம் 1992ன் மூலம்** சேர்க்கப்பட்டுள்ளது. | **243- W** |

**அட்டவணை 1:**

- மாநில மறுசீரமைப்பு ஆணையம் **1953 ல் பசல்** அலி தலைமையில் ஏற்படுத்தப்பட்டது.
- இந்த குழுவின் பரிந்துரைப்படி,**மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956** ம் ஆண்டு இயற்றப்பட்டது.
- 14 மாநிலங்களும், 6 யூனியன் பிரதேசங்களும் உருவாக்கப்பட்டது. பின்பு பல மாநிலங்கள் உருவாக்கப்பட்டது.

| 1.ஆந்திர பிரதேசம் (1953) | 2. மகாராஷ்டிரா மற்றும் குஜராத் (1960) |
|---|---|
| **3. நாகலாந்து (1963)** | 4. பஞ்சாப் மற்றும் ஹரியானா (1966) |
| **5. ஹிமாச்சல பிரதேசம் (1971)** | 6. அஸ்ஸாம் (1972) |
| **7. மேகாலயா, மணிப்பூர், திரிபுரா (1972)** | 8. சிக்கிம் (1975) |
| **9. மிசோராம் (1986)** | 10. அருணாச்சல பிரதேசம் (1986) |
| **11. கோவா (1987)** | 12. சட்டீஸ்கர், உத்தரகண்ட், ஜார்கண்ட் (2000) |
| **13. தெலங்கானா** | 2014. ஜூன் |

# அரசியலமைப்பு சட்டத்தின் பகுதிகளும், தலைப்புப் பொருள்களும்

| பகுதிகள் | தலைப்புப் பொருள்கள் | பிரிவுகள் |
|---|---|---|
| I | ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும் | 1 - 4 |
| II | குடியுரிமை | 5 - 11 |
| III | அடிப்படை உரிமைகள் | 12 - 35 |
| IV | அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் | 36 - 51 |
| IV A | அடிப்படைக் கடமைகள் | 51 - A |
| V | பாராளுமன்றம் | 52 - 151 |
| VI | மாநில அரசாங்கம் | 152 - 237 |
| VIII | யூனியன் பிரதேசங்கள் | 239 - 242 |
| IX | ஊராட்சிகள் | 243 - 243 - 0 |
| IX - A | நகராட்சிகள் | 243 P - 243 ZG |
| IX - B | கூட்டுறவு | 243-ZH to 243-ZT |
| X | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பரப்பிடங்கள் | 244 - 244 A |
| XI | ஒன்றியத்திற்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலான உறவுகள் | 245 - 263 |
| XII | நிதி, சொத்து மற்றும் தீங்கு நடவடிக்கைகளில் அரசு அல்லது அரசாங்கத்தின் பொறுப்பு நிலை | 264 - 300 |
| | சொத்துரிமை | 300 A |
| XIII | இந்திய ஆட்சி எல்லைக்குள் வியாபாரம் மற்றும் வணிகப் போக்குவரத்து | 301 - 307 |
| XIV | மத்திய மற்றும் மாநில அரசுகளின் கீழான பணிகள் | 308 - 323 |
| XV | தேர்தல்கள் | 324 - 329 A |
| XVI | சில வகுப்பினர் தொடர்பான சிறப்பு சட்ட வகைமுறைகள் | 330 - 342 |
| XVII | ஆட்சிமொழி | 343 - 351 |
| XVIII | நெருக்கடி நிலை சட்ட வகைமுறைகள் | 352 - 360 |
| XIX | பலவகைப்பட்டவை | 361 - 367 |
| XX | அரசியலமைப்பின் திருத்தம் | 368 |
| XXI | தற்காலிக இடைமாறு கால மற்றும் சிறப்பு வகைமுறைகள் | 369 - 392 |
| XXII | அரசியலமைப்பின் தொடக்கம், தலைப்பு மற்றும் திரும்ப பெறப்பட்ட விதிகள் | 393 - 395 |

# நிர்வாக சீர்திருத்தங்கள், தீர்ப்பாயங்கள்

**பின்வருபவை தொடர்பான குற்றச்சாட்டுகளை கவனித்தல்**

- ❖ பெண்களின் உரிமையை பறித்தல்
- ❖ பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் சமத்துவம் மேம்பாடு ஆகிய நோக்கங்களுக்காகவும் இயற்றப்பட்ட சட்டங்களை அமலாக்காமல் இருத்தல்.
- ❖ பெண்களுக்கு எதிரான கொடுமை -களை குறைப்பதையும் பெண்களின் நலவாழ்வினை உறுதி செய்வதையும் பெண்களுக்கு நிவாரணம் வழங்கு -வதையும் நோக்கமாக கொண்ட கொள்கை முடிவுகள் வழிகாட்டுதல் -களையும் அறிவுரைகளையும் பின்பற்றாமல் இருத்தல்.
- ❖ பெண்களுக்கெதிரான கொடுமைகள் மற்றும் பாரபட்சம் போன்ற பிரச்சனைகளுக்கு சிறப்பு விசாரணை மற்றும் ஆய்வு ஆகியவற்றை கோருதல் மேலும் அவற்றுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்வதற்கான திட்டங்களை பரிந்துரை செய்தல்.
- ❖ பெண்கள் அனைத்து துறைகளிலும் பிரநிதித்துவம் பெறவும் அவர்களுக்கு இடையூறாக இருப்பவற்றை கண்டறிய -வும் வேலை செய்யும் இடத்தில் ஆரோக்கியத்திற்கு கேடு விளை -விக்கக்கூடியவற்றை குறைக்கவும் பெண்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் தேவையான மேம்பாடு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் தேவையான மேம்பாடு மற்றும் கல்வி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்
- ❖ ஒரு மாநில அல்லது யூனியன் பிரதேசத்தில் பெண்கள் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் மதிப்பீடு செய்தல்
- ❖ பெண்கள் கைதிகளாக வைக்கப் -பட்டுள்ள இடங்களை ஆய்வு செய்து தேவைப்பட்டால் எடுக்கப்படவேண்டிய தீர்வு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்இணைந்து எடுத்தல்.
- ❖ பெண்களின் அமைப்பை பாதிக்கக் கூடிய விவகாரங்களை உள்ளடக்கிய நிதி விவகாரங்களை கவனித்தல்.
- ❖ பெண்கள் பற்றியும் அவர்களுக்குண் -டான கஷ்டங்களை பற்றியும் அரசுக்கு அறிக்கையளித்தல்.
- ❖ மத்திய அரசால் இக்குழுவிற்கு அனுப்பப்படும் மற்ற விவகாரங்களை கவனித்தல்

**தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி -யினருக்கான தேசியக்குழு (National Commission forthe Scs the STs)**

- ❖ தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் அறிந்திருந்தனர்.
- ❖ எனவே இத்தகைய நலிவடைந்த பிரிவினரின் சமூக கல்வி மற்றும் பொருளாதார நலனை காப்பதற்காக அரசியலமைப்பில் சில சிறப்பு விதிகள் உருவாக்கப்பட்டன.
- ❖ சரத்து 338ன் கீழ் இப்பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பான விவகாரங் -களை விசாரிக்கவும் இப்பாதுகாப்பு அம்சங்களின் செயல்பாடு குறித்து குடியரசுத் -தலைவருக்கு ஆண்டுக்கொருமுறையோ அல்லது தேவைப்படும்போதோ அறிக்கை அளிக்கவும் ஒரு சிறப்பு அதிகாரியை நியமிக்கவும் இந்திய அரசியலமைப்பு வழிவகுக்கிறது.
- ❖ தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்களை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை -யிடுவதற்கு பல உறுப்பினர்களை கொண்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான குழு 1978 முதல் அமைக்கப்பட்டது.
- ❖ இப்பிரிவினர்கள் தொடர்பான விவகாரங்களின் மீது தேசிய அளவிலான ஆலோசனை அமைப்பாக செயல்படுவதற்காக இக்குழு 1987 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய குழு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ❖ தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான முன்பிருந்த ஆணையர் அலுவலகங்கள் இக்குழுவின் கீழ் கொண்டுவரப் -பட்டன.
- ❖ 1990 ஆம் ஆண்டு சரத்து 338 அரசியலமைப்பு (65வது திருத்தம்) சட்டம் 1990ன் மூலம் திருத்தப் -பட்டது. மேலும் இப்பிரிவினருக்காக முன்பிருந்த ஆணையர் அலுவலகங்களுக்கு பதிலாக இக்குழு 12.03.1992 முதல் அமைக்கப்பட்டது.
- ❖ இக்குழு டெல்லியில் தலைமை அலுவலகத்தையும் 16 மாநிலங்களில் அலுவலகங்களையும் கொண்ட ஒரு சட்ட அமைப்பாகும்.
- ❖ 89 சட்டதிருத்தம் 2003ல் பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினர் ஆணையம் என தனித்தனியே பிரிக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் - சரத்து 338

பழங்குடியினர் ஆணையம் சரத்து 338 (A) இது பின்வருபவர்களை உள்ளடக்கியது

1. தலைவர்
2. துணைத்தலைவர்
3. மற்ற 5 உறுப்பினர்கள்

**இக்குழுவின் பணிகளும் கடமைகளும்**

இக்குழு பின்வரும் பணிகளையும் கடமைகளையும் முக்கிய செயல்பாடாகக் கொண்டுள்ளது.

- ❖ இந்திய அரசியலமைப்பு அல்லது பிற சட்டங்களின் கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்களை ஆய்வு செய்வது அவ்வம்சங்களின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்வதும்
- ❖ தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் உரிமைகளை பறிப்பது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்தல்
- ❖ இப்பிரிவுகளை சார்ந்த மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக திட்ட நடைமுறையை வகுப்பதில் பங்கேற்பது மற்றும் ஆலோசனை கூறுவது மேலும் இம்மக்களின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வது
- ❖ இப்பிரிவினருக்கான பாதுகாப்பு அம்சங்களின் செயல்பாட்டினை பற்றி குடியரசுத் தலைவருக்கு ஆண்டிற்கொருமுறை அல்லது தேவைப்படும் சமயங்களிலோ அறிக்கை அளித்தல்
- ❖ இப்பாதுகாப்பு அம்சங்களை மேலும் நல்லமுறையில் நடைமுறைப்படுத்தவும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் நலவாழ்வுக்கு ஒரு மாநில அல்லது யூனியன் பிரதேச அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவ்வறிக்கை பரிந்துரைத்தல்.

## அரசியலமைப்பு சார்ந்த அமைப்புகள்

**நிதிக்குழு**

- ❖ நீதி அமைப்பு - சரத்து 280
- ❖ பகுதி - XII
- ❖ குடியரசு தலைவரால் 5 ஆண்டுக்கு 1 முறை நியமனம்.

**அமைப்பு**

- ❖ தலைவர்
- ❖ 4 உறுப்பினர்கள்
- ❖ முதல் நிதி ஆணையம் - K.C. நியோகி
- ❖ 14வது நிதி ஆணையம் - Y.V. ரெட்டி
- ❖ 15வது நிதி ஆணையம் - N.K. சிங்

**பணிகள்**

**வரயதீர்வு**

- வரிவருமானத்தை **மத்திய - மாநில அரசுகளுக்கிடையே** பகிர்ந்தளிக்கப்படுகிறது.
- **மானியம் - Art 275**
- இந்திய திரள் நிதியிலிருந்து மாநிலங்கள் வழங்கப்படும் நிதி அளவை நிர்ணயத்தில் 1. சமூக நல திட்டங்கள், 2. பேரிடர் மேலாண்மை

**மாநிலங்களில்**

- மாநில நிதி ஆணையம் பரிந்துரை பேரில் மாநில திரள் நிதியை உயர்த்த ஆலோசனை
- பஞ்சாயத்துகள் (ம) நகராட்சிகளுக்கு வழங்கும் நிதி அளவை உயர்த்த பரிந்துரை

**ஆலோசனை**

- குடியரசு தலைவர் குறிப்பிடும் நிதி குறித்த விஷயங்களில் அறிவுரை வழங்குதல்

**அறிக்கை**

- குடியரசு தலைவரிடம் சமர்பிப்பார்.

**சரக்கு மற்றும் சேவை வரி (GST)**

- GST விதி - 279A
- GST சட்டம் - 101
- GST சட்டத்திருத்த மசோதா - 122
- GST சட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட நாள் 12.09.2016
- GST மசோதாவை ஏற்றுக்கொண்ட முதல் மாநிலம் அஸ்ஸாம்
- 2வது பீகார்
- தமிழகம் 28வது மாநிலம்
- GST காரணமாக நீக்கப்பட்ட சரத்து 268A
- சட்டதிருத்தம் செய்யப்பட்டுள்ள அட்டவணை 6 மற்றும் 7

## அரசியலமைப்பு சாராத அமைப்புகள்

**திட்டக்குழு:**

- 1950 மார்ச் 15 ஆம் நாள் திட்டக்குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழு இந்தியாவின் எதிர்கால குறிக்கோள் -களை ஐந்தாண்டுக்கு ஒருமுறை தீர்மானிக்கும் வகையில் விரிவான திட்டத்தை உருவாக்கும்.இந்தியப் பிரதமர் திட்டக்குழுவின் தலைவராவார்.
- துணைத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார். இவரே குழுவின் உண்மையான நிர்வாகத் தலைவராவார்.

- ❖ அவரே ஐந்தாண்டு திட்ட வரைவு அறிக்கையை உருவாக்குவதற்கும் அதை அமைச்சரவையில் சமர்ப்பிப் -பதற்கும் பொறுப்புடையராவார்.
- ❖ இவர் கேபினெட்டால் நியமிக்கப் -படுகிறார். ஆனால், இவர் கேபினெட்டில் உறுப்பினர் இல்லை. அதன் கூட்டங்களில் வாக்குரிமை ஏதுமின்றி கலந்து கொள்ளலாம்.
- ❖ திட்ட அமைச்சரும், நிதி அமைச்சரும் தம் பதவி வழி உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.
- ❖ மற்ற சில அமைச்சர்கள் பகுதிநேர உறுப்பினர்களாக நியமிக்கப்படு -கின்றனர்.

**தேசிய வளர்ச்சிக் குழு:**

- ❖ 1952 ஆகஸ்ட் முதல் ஐந்தாண்டு திட்ட அறிக்கையின் பரிந்துரையின்பேரில் தேசிய வளர்ச்சிக் குழு உருவாக்கப்பட்டது.
- ❖ இந்திய பிரதமர் இவர் தலைவராக செயல்படுவார்.
- ❖ மத்திய அரசின் அனைத்து கேபினெட் அமைச்சர்களும் இடம் பெறுவர்.
- ❖ எல்லா மாநில முதலமைச்சர்களும் இடம் பெறுவர், யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்கள் அல்லது ஆளுநர்கள் இடம் பெறுவர்.திட்டக்குழு உறுப்பினர்கள் பங்கு பெறுவர்.

**பணிகள்:**

- ❖ தேசிய திட்டத்தை உருவாக்கு -வதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்
- ❖ திட்டக்குழு தயாரித்த தேசியத் திட்டத்தை ஆய்வு செய்தல்
- ❖ திட்டங்களை செயல்படுத்துவதற்கான வளங்களை அதிகரித்தல்

**நிதி ஆயோக்:**

1) கொள்கைக்குழு
2) மத்திய அரசு **64** ஆண்டுகளாக செயல்பாட்டில் இருந்து வந்த திட்டக்குழுவிற்கு நிதி ஆயோக் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது.
3) **NITI** என்பதன் பொருள் **National Institute of Transforming India.**இவ்வமைப்பு செயல்பாட்டில் இருந்து வரும் திட்டக்குழுவினை மறுசீரமைப்பதற்கான முதற்படி ஆகும்.

**அமைப்பு :**

1) தலைவர் - பிரதமர்
2) ஆட்சி மன்றம் - அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள்/ யூனியன் பிரதேச ஆளுநர்கள்
3) பிராந்திய சபை - அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள்/ யூனியன் பிரதேச ஆளுநர்கள்
4) முழுநேர உறுப்பினர்கள்
5) பகுதி நேர உறுப்பினர்கள்

6) செயலகம் - தேவைப்பட்டால் அமைத்துக் கொள்ளலாம்.

- ❖ தற்போதைய முதல் துணை தலைவர் - ராஜீவ் குமார்

**நோக்கம்:**

- ❖ தேசிய மேம்பாட்டிற்கான முன்னுரிமை அளித்தலில் ஒன்றுபட்ட தொலை நோக்கினை உருவாக்குதல்.
- ❖ ஒருங்கிணைந்த கூட்டாட்சித் தத்துவத்தினை ஊக்குவித்தல்.
- ❖ கிராமப்புறங்கள் வரை அரசாங்கத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் சென்றடையும் அளவில் செயல்பாட்டு வழிமுறை -களை வகுத்தல்.
- ❖ தொழில்நுட்ப மேம்பாட்டின் மீது அதிக கவனம் செலுத்துதல்.

**முக்கிய செயல்பாடுகள் :**

- ❖ இந்த அமைப்பு அரசினுடைய "சிந்தனை களஞ்சியமாக" செயல்படும். அரசாங்க கொள்கை -களை வகுப்பதிலும் மற்றும் அக்கொள்கைகளின் சிறப்பான செயற்பாட்டிற்காகவும் வழிவகை செய்யப்படும்.
- ❖ மத்திய மற்றும் மாநில அரசுகள் தங்களது கொள்கைகளை வடிவமைப்பதற்கு தேவைப்படும் அறிவுசார்ந்த மற்றும் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கும் நிறுவனமாகும்.
- ❖ புதிய கொள்கை முடிவுகளை செயலாக்கத்திற்கு கொண்டு வருவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதார வர்த்தக திட்டங்கள் அமைப்பது இதன் செயல்பாடாகும்.

உள்நாட்டிலோ அல்லது வெளி -நாட்டிலோ செயல்பட்டுக் கொண்டிருக்கும் சிறந்த ஆட்சி முறைகளை நாடு முழுவதும் செயல் -படுத்துவது. குறிப்பிட்ட பிரச்சினை சார்ந்த விஷயங்களுக்கு தீர்வளிப்பது இவ்வமைப்பின் முக்கிய அம்சமாகும்.

# பொது வாழ்வில் ஊழல், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள், மத்திய லஞ்ச ஒழிப்புத்துறை, லோக் அதாலத், இந்திய தலைமைத் தணிக்கை துறைத்தலைவர்

## ஊழல்

**ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள்**

**அரசாங்க நடவடிக்கைகள்**

- அரசு, ஊழல் தடுப்புசட்டத்தை **(1988)** இயற்றியுள்ளது. இச்சட்டம், முறையின்றி அனுமதி வழங்க குற்றம் புரிதல், பரிசுப் பொருட்களை வாங்குதல் போன்றவற்றை தண்டனைக்குரிய குற்றமாக அறிவித்துள்ளது.
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் **(CVC)**, மத்திய அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன
- மத்திய புலனாய்வுதுறை **(CBI)**: **சந்தானம் குழுவின்** பரிந்துரைப்படி **1963**, உருவாக்கப்பட்டது. இது, ஒருகுற்றத் தடுப்பு ஊழல் தடுப்பு அமைப்பாக செயல்படுகிறது.
- லோக்பால் சட்டம், ஊழல் புகார் விசாரிக்கும் பொருட்டு இயற்றப்பட்டது.
- ஊழலை வெளிச்சத்திற்கு கொண்டு வருவோர்களை (Whistle blowers) பாதுகாக்கும் மசோதா நிலுவையில் உள்ளது.
- அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத் -தன்மை கொண்டுவரும் பொருட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம் **(RTI - 2005)** இயற்றப்பட்டது.

## இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை

**சரத்து** (148 - 151):

- **சரத்து** 148(1) - இந்தியாவிற்கு கணக்காய்வு மற்றும் தணிக்கை துறை ஒருவர் இருக்க வேண்டும்.
- **நியமனம்:** 6 ஆண்டுகள் (அ) 65 வயது வரை
- **பணிநீக்கம் முறைகளின் படி:** உச்சநீதிமன்ற நீதிபதியை நீக்கும் முறைகளின்படி (148)
- ஊதியம் மற்றும் பிறபணி நிலைபாடுகள் பாராளுமன்றத்தால் நிர்ணயம்.

**கடமைகள் மற்றும் அதிகாரம்:**

- திரட்டு நிதியிலிருந்து எடுக்கப்படும் பணத்தில் கணக்காளர் என்ற

முறையில் கட்டுப்பாடு வைத்திருக்கிறார். (முன்பு) தற்போது தணிக்கை மட்டும்.

- ❖ தணிக்கையாளர் என்ற முறையில் மத்திய / மாநில அரசுகளின் எல்லா செலவுகளையும் தணிக்கை செய்கிறார்.

**கணக்குகள் படிவம் (சரத்து 150)**

- ❖ ஜனாதிபதி தரும் படிவத்தில் மத்திய / மாநில அரசுகளின் கணக்கை வரவு வைக்க வேண்டும்.

**அறிக்கைகள்**

- ❖ மத்தியரசின் கணக்குகளை ஜனாதிபதி முன்வைப்பார். பாராளுமன்றத்தில் முன் வைப்பார். சரத்து 151 (1).
- ❖ மாநில அரசின் கணக்குகளை ஆளுனர் முன் வைப்பார். அவர் சட்டமனறத்தில் வைப்பார் - சரத்து 151 (2).

**தற்போது**

- ❖ பொதுமக்கள் பணத்தின் பாதுகாவலன் - CAG
- ❖ முதல் CAG – V நரஹரி (1948-54)

**பணிகள்**

1. மக்களின் திரட்டு நிதி சட்டப்படி செலவு செய்யப்படுவதை உறுதி செய்வார். அரசு நிறுவனங்களின் கணக்குகளையும் உறுதி செய்வார்.
2. பொது கணக்கு குழுவின் நண்பர் மற்றும் வழிகாட்டியாக செயல்படுவார்.
3. ஜனாதிபதியில் கையொப்பமிட்ட கணக்குகளை சரிபார்ப்பார்.

**தற்போது CAG**

**இராஜிவ்மெஹரிசி**

**மத்தியபுலனாய்வுத் துறை Central Bureau Of Investigation (CBI)**

- ❖ மத்தியபுலனாய்வுத் துறை (சந்தானம் கமிட்டி பரிந்துரை) 1963ம் ஆண்டு உள்துறை அமைச்சகத்தின் தீர்மானம் மூலம் கொண்டுவரப்பட்டது.
- ❖ தற்போது கேபினட் செயலகத்தின் கீழ் ஒரு இணைக்கப்பட்ட அலுவலகமாக செயல்படுகிறது.

**பணிகள்**

- ❖ ஊழல், இலஞ்சம் மற்றும் நடத்தைமீறிய மத்திய, மாநில அரசு அதிகாரிகள் குறித்த வழக்குகளை விசாரித்தல்.
- ❖ நிதி, பொருளாதார சட்டங்கள், ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாடு, கலால் மற்றும் சுங்கவரி, வருமானவரி, அந்நிய செலவாணி ஒழுங்குமுறை போன்றவை தொடர்பான வழக்கு -களை, அத்துறைகள் விரும்பினால், CBI விசாரிக்கும்.

- தேசிய அல்லது உலக அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த குற்றங்களை விசாரிக்கிறது.
- மற்ற ஊழல் தடுப்பு நிறுவனங்களின் செயல் பாடுகளையும் ஒருங்கிணைக் -கிறது.
- மாநில அரசுகள் விரும்பிக் கேட்பின் பொது முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை விசாரிக்கும்.

## மத்திய கண்காணிப்பு ஆணையம் Central Vigilance Commission (CVC)

- மத்திய அரசில் ஊழல்களை தடுக்கும் ஒரு முக்கிய அமைப்பு மத்திய கண்காணிப்பு ஆணையம் (CVC) ஆகும்
- மத்திய அரசின் ஒரு தீர்மானத்தின் மூலம் **1964**ல் இது உருவாக்கப்பட்டது. (சந்தானம் கமிட்டி பரிந்துரைப்படி உருவாக்கப்பட்டது)
- CVC ஆனது அரசியலமைப்பு பெற்ற நிறுவனமும் அல்ல, பாராளுமன்றத் -தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமும் அல்ல
- **செப்டம்பர் 2003** ல் பாராளுமன்றம் இவ்வமைப்பிற்கு அங்கீகாரம் அளித்தது

### அமைப்பு

- இது பல உறுப்பினர்கள் கொண்ட அமைப்பு
- ஒரு மத்திய கண்காணிப்பு ஆணையர் /தலைவர் மற்றும் இரண்டு கண்காணிப்பு ஆணையர்களையும் கொண்டுள்ளது.
- இந்த ஆணையத்தின் உறுப்பினர்கள் பிரதமர் (குழுவின் தலைவர்) மத்திய உள்துறை அமைச்சர் மக்களவை எதிர்க்கட்சிகள் தலைவர் கொண்ட பரிந்துரைக்கப்படுகின்றனர். அவ்வாறு பரிந்துரைக்கப்படும் நபரை குடியரசு தலைவர் நியமிக்கிறார்.

### பதவிக்காலம்

- ஆணையர்களின் பதவிக்காலம் **4 ஆண்டுகள் அல்லது 65 வயது**
- இவற்றில் எது முந்தையதோ அதன்படி பதவிவிலக வேண்டும்
- பதவிக்காலம் முடிந்த பிறகு அவர்கள் மத்திய மற்றும் மாநில அரசுகளில் எப்பதவியையும் வகிக்க இயலாது.

**<u>தற்போது</u>**
**தலைமை கண்காணிப்பு ஆணையர்**
**கே.வி. சௌத்ரி**

### பதவி நீக்கம்

- வேலை செய்யும் திறனற்றவராய் இருத்தல்
- நீதிக்கு புறம்பாக செயல்படுதல்
- பணம் வருமானம் வரும் தொழில் ஈடுபட்டிருத்தல்

- ❖ உடலளவிலோ (அ) மனதளவிலோ இப்பணியினை செய்ய தகுதியில்லாதிருத்தல் (குடியரசுத் தலைவர் கருத்துப்படி)
- ❖ அலுவல்களை பாதிக்கும் வண்ணம், ஏதேனும் வருவாய் மற்றும் பிறவற்றை பெறுதல்.
- ❖ மேற்குறிப்பிட்ட காரணங்களுள் ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டிருந்தாலோ அல்லது தவறான செய்கைகள் அல்லது வேலை செய்வதற்கு தகுதியற்ற நிலை போன்ற காரணங்களினாலோ குடியரசுத் தலைவர் ஆணையர்களை பதவிநீக்கம் செய்யலாம்.
- ❖ எனினும் இது குறித்து குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திடம் தெளிவுப்படுத்திகொள்ள அப்போதும், உச்சநீதிமன்றம் ஆணையர்களின் பதவிநீக்கத்திற்கு பரிந்துரைப்பின் குடியரசுத் தலைவர் ஆணையர்களை பதவிநீக்கலாம்.

**சம்பளம் மற்றும் இதர சலுகைகள்**

- ❖ மத்திய பணியாளர் தேர்வு வாரியம் தலைவருக்கான சலுகைகள் மற்றும் சம்பளம் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையருக்கு வழங்கப்படும்
- ❖ மத்திய பணியாளர் தேர்வு வாரியம் உறுப்பினருக்கும் சலுகைகள் மற்றும் சம்பளம் மற்ற இரு ஆணையர்களுக்கு வழங்கப்படும்.

**பணிகள்**

- ❖ ஊழல் தடுப்புச் சட்டத்தின் (1988) கீழ் வரும் குற்றங்களில் ஏதேனும் ஒன்றை மத்திய அரசின் ஊழியர்கள் அல்லது மத்திய அரசு நிறுவனம் புரியமாயின் அதை விசாரிக்கும்.
- ❖ ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களில் ஏதேனும் ஒன்றை கீழ்க்குறிப்பிட்ட அலுவலர்கள் புரிந்தால் அவ்வழக்கை விசாரணை செய்யும்

  - ♦ மத்திய அரசில் பணிபுரியம்
  - ♦ அகில இந்திய பணியாளர்கள்
  - ♦ மத்திய அரசின் குரூப் A அதிகாரிகள்
  - ♦ மற்றும் மத்திய அரசு அலுவலங்களில் குறிப்பிட்ட நிலையில் வேலையிலுள்ள அதிகாரிகள்

- ❖ டெல்லி சிறப்பு போலீஸ் படை சட்டம் 1946ல் கீழ், டெல்லி சிறப்பு போலீஸ் அமைப்பிற்கு அதன் பணிகளை செய்யுமாறு அறிவுறுத்துகிறது.
- ❖ டெல்லி சிறப்பு போலீஸ் அமைப்பு விசாரிக்கும் வழக்குகளின் முன்னேற்றம் குறித்து மேற்பார்வை செய்கிறது.

- ❖ மத்திய அரசு மற்றும் அதன் நிறுவனங்களின் கேள்விகளுக்கு அறிவுரை வழங்குகிறது.

**CVC செயல்பாடுகள்**

- ❖ CVC அதனுடைய பணிகளை தன் தலைமையிடத்திலிருந்தே (நியூ டெல்லி) மேற்கொள்கிறது.
- ❖ ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களும் இந்நீதிமன்றத்திற்கு உண்டு.
- ❖ மத்திய அரசிலிருந்தோ, அல்லது மத்திய அரசு நிறுவனங்களிலிருந்தோ தேவையான தகவல்களை கேட்டுப் -பெறும் அதிகாரம் இவ்வமைப்பிற்கு உண்டு
- ❖ தனது அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்படும் புகார்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்
- ❖ அவ்வறிக்கை / அறிவுரையின் மேல் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம் எடுக்காமல் போகலாம்.
- ❖ எனினும் CVCன் அறிவுரைகள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்.
- ❖ CVC ஆண்டு தோறும் தனது செயல்பாடுகள் சார்ந்த அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கிறது.
- ❖ குடியரசுத் தலைவர் அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமர்ப்பிக்கிறார்
- ❖ மத்திய அரசானது அகில இந்திய பணியாளர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கான ஊழல் மற்றும் ஒழுங்கு தொடர்பான விதிமுறைகளை விதிக்கும் பொழுது மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்திடம் ஆலோசனை பெற வேண்டும்.

**<u>லோக் அதாலத்</u>**

**<u>மக்கள் நீதிமன்றம்</u>**

- ❖ லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றம் சமாதான நிலை மற்றும் சமரசம் மூலம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க இந்திய அரசால் உருவாக்கப்பட்ட நீதிமன்றம் ஆகும்

**வரலாறு**

- ❖ இது ஒரு மாற்று முறையில் சச்சரவுகளுக்குத் தீர்வு காணும் ஒரு வழிமுறையாகும்.
- ❖ லோக் என்பது மக்களையும் அதாலத் என்பது நீதிமன்றத்தையும் குறிக்கும்.
- ❖ முதன் முதலில் குஜராத் மாநிலத்தில் ஜீனாகார் என்ற இடத்தில் **மார்ச் 14,1982** அன்று லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றம் நடந்தது.

**சிறப்புகள்**

- ❖ மக்கள் நீதிமன்றம் மூலம் கோர்ட்டில் நிலுவையில் இருக்கும் வழக்குகள்

மட்டுமல்லாமல் கோர்ட்டுக்கு வர இருக்கும் தாவாக்களுக்கும் தீர்வு கண்டுவிடலாம்.

- இந்த நீதிமன்றங்களில் தீர்வு காணப்பட்டால் அதற்கு மேல் முறையீட்டிற்குப் போகமுடியாது.

**தீர்க்கப்படும் வழக்கு வகைகள்**

- காசோலை தொடர்பான வழக்குகள்.
- வாகன விபத்து வழக்குகள்
- குடும்பப் பிரச்சனைகள் தொடர்பான வழக்குகள்
- தொழில் தகராறுகள்
- தொழிலாளர் பிரச்சினை தொடர்பான வழக்குகள்
- குற்றவியல் வழக்குகளில் சமாதானம் ஏற்படுத்திக் கொள்ளத் தன்மையுள்ள வழக்குகள்.
- நில ஆர்ஜிதம் மற்றும் இழப்பீடு தொடர்பான வழக்குகள்
- வங்கிக் கடன் பிரச்சினைகள்
- வாடகை விவகாரங்கள்
- விற்பனை வரி
- வருமான வரி
- மறைமுக வரி தொடர்பான பிரச்சினைகள்

**மெகா லோக் அதாலத்**

- இந்தியாவில் நவம்பர் 23,2013 அன்று வழக்குகளுக்கு விரைவாக தீர்வு காண உதவும் **மெகா லோக் அதாலத்** நாடு முழுவதும் நடைபெற்றது.
- வட்டார அளவிலான கிழமை நீதிமன்றம் தொடங்கி, உச்சநீதிமன்றம் வரை நாடு முழுவதும் அனைத்து நீதிமன்றகளிலும் இந்த மெகா அதாலத் நடத்தப்பட்டது.
- ஒரே நாளில் இந்தியா முழுவதிலும் **35 இலட்சம் வழக்குகள்** தீர்த்து வைக்கப்பட்டன
- தமிழகம் மற்றும் புதுச்சேரியில் **13 லட்சத்து 62 ஆயிரம்** வழக்குகளுக்கு ஒரே நாளில் தீர்வு காணப்பட்டது.

**லோக்பால் (LOKPAL)**

- லோக்பால் என்றால் மக்கள் காவலன் என்று பொருள்
- இந்த வார்த்தையை சட்ட வல்லுநர் **L.M. சிங்வி 1963ல்** அறிவித்தார்.
- மக்களின் குறைதீர்க்கும் சிறப்பு ஆணையங்களாக லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா அமைப்புகளை **நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் (1966 - 1970)** பரிந்துரை செய்தது தலைவர் - மொரார்ஜி தேசாய்
- லோக்பால் மத்திய அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் மாநில அதிகாரிகள் என்று அனைவரையும் விசாரிக்கும் அதிகாரம் படைத்தது.
- லோக்பால் மசோதா முதன்முதலில் 1968ல் மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பிறகு 8 முறை லோக்பால் மசோதாவை நிறைவேற்ற

முயற்சித்தும் நிறைவேறவில்லை. இறுதியாக லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா **மசோதா (2011) நிறைவேற்றப்பட்டு 2014 ஜனவரி 1 ல்** குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறப்பட்டது.

- ❖ தேசிய சட்டப்பணிகள் ஆணைகள் வழிகாட்டுதலுடன் தேசிய அளவில் லோக் அதலாத் நடைபெற்றது.

**குறைகேள் அதிகாரி (OMBUSDSMAN)**

- ❖ **ஸ்காண்டிநேவியன்** நாட்டில் காணப்படும் குறைகேள் அதிகாரி அமைப்பானது முதன் முதலில் **ஸ்வீடன் நாட்டில் 1809ல்** தொடங்கப்பட்டது.
- ❖ உலக அளவில் குடிமக்களின் குறையைத் தீர்க்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட முதல் குறைதீர்க்கும் அமைப்பு இதுவாகும்
- ❖ நியூசிலாந்தில் இவ்வமைப்பு பாராளு -மன்ற விசாரணை கமிஷனார் என வழங்கப்படுகிறது.
- ❖ இந்தியாவில் இக்குறைகேள் அதிகாரி (Ombaudsman) லோக்பால் என்று மத்தியிலும் லோக் ஆயுக்தா என்று மாநிலங்களிலும் வழங்கப்படுகிறது.

**தற்போது இயற்றப்பட்டள்ள லோக்பால் சட்டத்தின் சிறப்புகள்**

1) **லோக் ஆயுக்தா**

- ❖ அனைத்து மாநில அரசுகளும், லோக் ஆயுக்தா நீதிமன்றங்களை ஒரு ஆண்டுக்குள் அமைக்க வேண்டும்.
- ❖ அதன் வகைகள் மற்றும் அமைப்புகளை மாநில அரசுகளே நிர்ணயித்து கொள்ளலாம்.

2) **லோக் அமைப்பு**

- ❖ லோக்பால் அமைப்பில் ஒரு தலைவர் மற்றும் அதிகபட்சம் 8 உறுப்பினர்கள் இருப்பார்கள்.
- ❖ இதில் 50% நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் மீதமுள்ள 50% உறுப்பினர்கள் SC, ST, OBC சிறுபான்மையினர் மற்றும் மகளிர் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பர்.
- ❖ தலைவராக தற்போது பதவியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது நீதித்துறை சாராத எனினும் அதற்குரிய தகுதி பெற்றவர்கள் இருப்பார்கள்.

3) **லோக் உறுப்பினர்கள் தேர்வு**

- ❖ உறுப்பினர்களை தேர்வு செய்யும் தேர்வுக் குழுவில்
  - ♦ பிரதமர்
  - ♦ மக்களவை சபாநாயகர்
  - ♦ மக்களவை எதிர்க்கட்சி தலைவர்
  - ♦ நாட்டின் தலைமை நீதிபதி

  ஆகியோர் இருப்பார்கள்.

| வருடம் | மசோதாவின் நிலை |
|---|---|
| மே 1968 | நான்காவது மக்களவைகலைக்கப்பட்டதால் நிறைவேறவில்லை |
| ஏப்ரல் 1971 | ஐந்தாவது மக்களவை கலைக்கப்பட்டதால் நிறைவேறவில்லை |
| ஜீலை 1977 | ஆறாவது மக்களவை கலைக்கப்பட்டதால் நிறைவேறவில்லை |
| ஆகஸ்ட் 1985 | மக்களவைகலைக்கப்பட்டதால் நிறைவேறவில்லை |
| டிசம்பர் 1989 | மசோதா, அரசால் திரும்ப பெறப்பட்டது |
| செப்டம்பர் 1996 | 11வது மக்களவை கலைக்கப்பட்டதால் நிறைவேற்றவில்லை |
| ஆகஸ்ட் 1998 | 12வது மக்களவை கலைக்கப்பட்டதால் நிறைவேற்றப்படவில்லை |
| ஆகஸ்ட் 2001 | மக்களவை கலைக்கப் பட்டதால் நிறைவேற்றப்படவில்லை |
| ஆகஸ்ட் 2011 (லோக்சபா) | மக்களவையில்அறிமுகப்படுத்தப்பட்டு பாராளுமன்ற நிலைக் குழு (பணியாளர் மற்றும் மக்கள் குறை) சரிபார்த்துதல் |
| டிசம்பர் 22, 2011 | மக்களவையில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| டிசம்பர் 27,2011 | மக்களவையில் மசோதாநிறைவேற்றப்பட்டது. |
| டிசம்பர் 29, 2011 | ராஜ்ஜியா சபா மாநில சமர்ப்பிக்கப்பட்டது பாராளுமன்ற நிலைக்குழு அறிக்கைக்கு அனுப்பப்பட்டது. |
| மே 21, 2012 | மாநிலங்களவையில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| டிசம்பர் 17, 2013 | மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. |
| டிசம்பர் 18, 2013 | மக்களவையில் மசோதா நிறைவேற்றப்பட்டது. |
| ஜனவரி 1, 2014 | குடியரசுத தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. |

- ஐந்தாவது நபராக ஏற்கனவே குழுவில் இருக்கும் 4 பேரால் பிரபல நீதிபதி என்று பரிந்துரைக்கப்படும் நபரை குடியரசுத் தலைவர் நியமிப்பார்.

4) **மத அமைப்புகள் மற்றும் அறக்கட்டளைகள்**

- பொது நிதியை பெறுவது
- வெளிநாட்டிலிருந்து பணம் பெறுவது
- குறிப்பிட்ட அளவுக்கு வருவாயை கொண்டவை ஆகியன அமைப்புகள் மற்றும் அறக்கட்டளை இதில் சேர்க்கப்பட்டுள்ளன

❖ எனினும் மதம் மற்றும் பொதுக் காரியங்களுக்கான அறக்கட்டளைகள்

ஆகியவற்றிற்கு விலக்கு அளிக்கப் -பட்டுள்ளன.

- 10 லட்சத்திற்கும் மேல் வெளிநாடுகளி -லிருந்து நன்கொடை பெறும் வழக்குகளும் விசாரிக்கப்படும்.

5) **வழக்கு**

- விசாரணை அறிக்கையின் பேரில் ஒரு வழக்கை பதிவு செய்ய முடிவு எடுப்பதற்கு முன்பாக லோக்பால் அமைப்பு தனது சட்டக்குழு அல்லது சம்பந்தப்பட்ட புலனாய்வு அமைப்பு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய அனுமதி வழங்கும்.
- ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரின் சொத்துகளை வழக்கு விசாரணையின் போது முடக்கவும் அதிகாரம் உள்ளது.

6) **மத்திய புலனாய்வு விசாரணை**

- சிபிஐ சுதந்திரமான அமைப்பாக செயல்பட வேண்டும் என்பதற்காக புதிய மசோதாவில் வழக்குகளுக்கான இயக்குநரை நியமிக்க வகை செய்கிறது.
- வழக்குகளுக்கான இயக்குநர் மத்திய ஊழல் கண்காணிப்பு (CVC) கமிஷன் பரிந்துரையில் நியமிக்கப்படுவார்
- லோக்பால் அனுமதிக்கு பின்னரே வழக்குகளை விசாரணை செய்யும் சி..பி.ஐ அதிகாரிகளை இடமாற்றம் செய்ய முடியும்.

7) **பிரதமர்**

- லோக்பால் விசாரணை வரம்பில் பிரதமரும் உள்ளடங்குவார்.
- எனினும் பிரதமருக்கு எதிரான வழக்குகளில் சில விவகாரங்கள் மற்றும் குறிப்பிட்ட பணிகளில் விலக்கு அளிக்கப்படும்.

8) **புலனாய்வு :** வழக்குகளின் விசாரணை 60 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

9) **அபராதம்**

- தவறான மற்றும் போலியான புகார்களுக்கு ஓராண்டு வரை சிறைத் தண்டனையும் ரூ 1 லட்சம் வரையிலும் அபராதம் விதிக்கப்படும்
  - பொது ஊழியர்களுக்கு 7ஆண்டு வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
  - தவறான குற்ற நடவடிக்கை தொடர்ந்த ஊழல் ஆகியற்றிற்கு 10 ஆண்டு வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

**<u>லோக் ஆயுக்தா (LOK AYUKTAS)</u>**

- தற்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா மசோதா 2011வின் குறிப்பிடத்தக்க அம்சம்

❖ மாநிலங்கள் தங்கள் விதிமுறைகளை பயன்படுத்தி ஒரு வருடத்திற்குள் லோக் ஆயுக்தா அமைப்புகளை நிறுவ வேண்டும்.

❖ லோக் ஆயுக்தா மாநில அளவில் மக்கள் குறை தீர்ப்பவையாகவும் ஊழலுக்கு எதிரான அமைப்பாகவும் செயல்படுகிறது.இந்தியாவில் முதல் லோக் ஆயுக்தா அமைப்பு மகாராஷ்டிராவில் 1971ல் தொடங்கப்பட்டது.

❖ 1970ல் ஒரிஸ்ஸா மாநிலம் லோக் ஆயுக்தாவிற்கான சட்டத்தை இயற்றிய போதிலும் 1983 ம் ஆண்டு தான் ஒரிஸ்ஸாவில் லோக் ஆயுக்தா அமைப்பு நிறுவப்பட்டது.

❖ இந்தியாவில் லோக் ஆயுக்தா அமைப்பு இல்லாத மாநிலங்கள்

- மேற்கு வங்காளம்
- தமிழ்நாடு
- அருணாச்சல பிரதேசம்
- ஜம்மு காஷ்மீர்
- மணிப்பூர்
- மேகாலயா
- மிசோரம்
- நாகலாந்து
- சிக்கிம்
- திரிபுரா

**அமைப்பு வேறுபாடு**

❖ அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியான லோக்ஆயுக்தா செயல்படுவதில்லை

❖ ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரா, மகராஷ்டிரா மாநிலங்களில் லோக் ஆயுக்தா மற்றும் உபலோக்ஆயுக்தா என்ற அமைப்புகள் உள்ளன.

❖ பீகார், உத்திரபிரதேசம், இமாச்சல பிரதேசம் மாநிலங்களில் லோக் ஆயுக்தா மட்டும் உள்ளது.

❖ பஞ்சாப் மற்றும் ஒரிஸ்ஸா மாநிலங்களில் இவ்வதிகாரி லோக்பால் என்றே வழங்கப்படுகிறது.

**நியமனம்**

❖ லோக் ஆயுக்தா மற்றும் உபலோக்ஆயுக்தா அமைப்பின் உறுப்பினர்கள் ஆளுநர் நியமிக்கிறார்.

❖ தேர்ந்தெடுக்கும் போது ஆளுநர், மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் கலந்து ஆலேசிக்க வேண்டும்.

**தகுதிகள்**

❖ உத்தர பிரதேசம், இமாச்சல பிரதேசம், ஆந்திர பிரதேசம், குஜராத், ஒரிஸா, கர்நாடகம் மற்றும் அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் தலைவர் மற்றும்

| தீர்ப்பு விசாரணை | மாநிலங்கள் |
|---|---|
| மாநில முதல்வரை விசாரிக்கும் அதிகாரம் மாநில முதல்வரை விசாரணைக்கு உட்படுத்த இயலாது. | இமாச்சல பிரதேசம், ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம் குஜராத், மகராஷ்டிரா, உத்திரபிரதேசம், ராஜஸ்தான், பீஹார், ஒரிஸ்ஸா |
| அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை விசாரிக்கும் அதிகாரம் | அனைத்து மாநிலங்கள் |
| முன்னாள் அமைச்சர்கள் விசாரணை செய்யும் அதிகாரம் சட்டப்பபேரவை உறுப்பினர்கள் விசாரிக்கும் அதிகாரம் | மகாராஷ்டிரா |
| சட்டப்பேரவை உறுப்பினர்களை விசாரிக்கும் அதிகாரம் | ஆந்திரபிரதேசம், இமாச்சல பிரதேசம், குஜராத் உத்திரபிரதேசம் அஸ்ஸாம் |
| குடிமகன்களிடம் இருந்து வரும் வழக்குகளை மட்டும் விசாரிக்கும் அதிகாரம் (தானாக முன்வந்து விசாரிக்கும் அதிகாரம் இல்லை) | உத்தரபிரதேசம், இமாச்சல பிரதேசம் அஸ்ஸாம் |
| ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேட்டை இரண்டை விசாரிக்கும் அதிகாரம் | மகாராஷ்டிரா உத்திரபிரதேசம், அஸ்ஸாம், பீஹார் மற்றும் கர்நாடகம் |
| ஊழலை மட்டும் விசாரிக்கும் அதிகாரம் | இமாச்சல் பிரதேசம், ஆந்திர பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் குஜராத் |

# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

- ❖ தகவல் அறியும் உரிமைச் சட்டம் (மத்திய சட்டம் - 22) 2005, அக்டோபர் 2005 முதல் அமலுக்கு வந்துள்ளது.
- ❖ இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தகவல் அறியும் உரிமை (கட்டணங்கள்) விதிகள் 2005, அரசாணை (சிலை) எண் 989, பொது (பணியாளர் - தொகுதி 1 மற்றும் சட்ட மன்றம்) துறை நாள் 07-10-2005 வெளியிடப்பட்டது.

**மத்திய தகவல் ஆணையம் :**

- **தொடங்கப்பட்ட ஆண்டு 2005**
- **முதல் தலைமை தகவல் ஆணையர் : வாஹத் ஹபிபுல்லா**
- **தற்போதைய தகவல் ஆணையர்: ஆர்.கே. மாத்தூர்**

### 1. நோக்கம்

- ❖ ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், அரசு அதிகாரிகளிடம் இருந்து தகவல்களைப் பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக மக்களுக்கு வழங்கும் வகையில் இச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ❖ அரசு அதிகாரிகளின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வருவதையும், ஊழலைக் கட்டுப்படுத்துவதையும் அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவைகள் மக்களுக்கு கட்டுப்பட்டுள்ளதை உறுதிசெய்வதையும் இச்சட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. மக்களுக்கு தகவல்கள் வழங்குதற்கான ஒரு செயல் வடிவத்தை இச்சட்டம் உருவாக்கியுள்ளது.
- ❖ தன்னியல்பாகவும், கோரிக்கையின் அடிப்படையிலும் மக்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டியதை அரசு அதிகாரிகளின் முக்கியக் கடமையாக இச்சட்டம் உருவாக்கியுள்ளது.
- ❖ மக்களுக்குத் தகவல்கள் அளிப்பதைத் தடை செய்யும் அரசு ஆவணங்கள் ரகசியச் சட்டம் 1923 போன்ற முந்தைய அனைத்துச் சட்டங்கள்

அரசாணைகள் போன்ற அனைத்தையும் இப்புதிய சட்டம் ரத்து செய்கிறது.

**2. அதிகார வரம்பு**

- மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளால் சொந்தமாகவோ, நேரடியாகவோ அல்லது நிதி உதவி மூலமாகவோ உருவாக்கப்பட்டுள்ள அனைத்து விதமான அலுவலகங்களும் இச்சட்டத்தின் கீழ் வருகின்றன (இந்த வரம்பிற்குள் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் நகரமன்றங்களும் கிராமப் பஞ்சாயத்து -களும் கூட உள்ளடங்கியுள்ளன) மேற்கூறிய அரசு மற்றும் அரசு நிர்வாகங்களின் நேரடி கட்டுப்பாட்டி -லோ, நிதி உதவியிலோ செயல்படும் அனைத்து அலுவலகங்களும் தகவல் அறிவும் உரிமையை மக்களுக்கு வழங்கக் கடமைப்பட்டுள்ளன.
- அரசின் நிதி உதவியை நேரடியாகவோ மறைமுகமாகவோ பெறும் அனைத்து அரசு சாரா அமைப்புகள் மீதும் இச்சட்டம் அமல்படுத்தப்படும்.

**3. தகவல் என்பது**

- பதிவேடுகள் ஆவணங்கள் அலுவலகக் குறிப்புகள் மின் அஞ்சல்கள், கருத்துரைகள் ஆலோசனைகள், பத்திரிக்கைக் -குறிப்புகள் சுற்றறிக்கைகள், ஆணைகள், தினசரிக் குறிப்புகள், ஒப்பந்தங்கள் அறிக்கைகள், தாங்கள் மாதிரிகள் முன்வடிவங்கள் மின்னணு வடிவில் பதிவாகியுள்ள தகவல்கள் தரவுகள் என அனைத்தும் மக்கள் அறிந்து கொள்ள உரிமை உள்ளது.

**4. பதிவேடுகள் என்பது**

- அனைத்து விதமான ஆவணங்கள் கையெழுத்து மூலப் பிரதிகள் மற்றும் கோப்புகள்
- நுண் சுருள், நுண் புகைநகல் தொலை புகைப்பட நகல் போன்ற வடிவங்களில் பதிவு செய்யப்பட்ட ஒரு ஆவணத்தின் நகல்கள்.
- நுண் சுருளில் (பெரிதுபடுத்தியோ அல்லாமலோ) பொதியப்பட்ட உருவம் அமலுப்படுத்த உருவங்களின் மறு பதிப்புகள்.
- கணினி போன்ற சாதனங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் போன்றவை அனைத்தும் தகவல்கள் அறிந்து கொள்வதற்கான பதிவேடுகள் ஆகும்.

**5. தகவல் பெறும் உரிமை என்பது**

- பணிகள் ஆவணங்கள், பதிவேடுகளை ஆய்வு செய்யும் உரிமை

- குறிப்புகள், சுருக்கங்கள் போன்றவற்றை பெறும் உரிமை அல்லது சான்று நகல்கள் பெறும் உரிமை.
- மாதிரிகள் எடுக்கும் உரிமை
- மின்னணு வடிவத்தில் தகவல்களைப் பெறும் உரிமைபொதுநலன் தொடர்புடைய அனைத்துத் தகவல்களையும் பெறும் உரிமை
- நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் தகவல்களை மறுக்கக்கூடாது. எந்த நாளும் சட்டங்களை உருவாக்கும் அமைப்புகளுக்கு தகவல்களை மறுக்கக்கூடாது.

## 6. பாதுகாக்கப்பட வேண்டிய ரகசியங்கள்

- நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, நாட்டின் பொருளாதார மற்றும் அறிவியல் நலன்கள், வெளியுறவு தொடர்பான தகவல்கள் போன்றவை பாதுகாக்கப்பட வேண்டியவை.

# மத்திய மற்றும் மாநில ஆணையங்கள்

- இரண்டு அரசுகளைக் கொண்ட கூட்டாட்சி முறையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கொள்கைகளும் அவற்றின் செயலாக்கமும் ஒத்திருப்பது மிகவும் கடினம். கூட்டாட்சியின் அலகுகளிடையே ஒத்துழைப்பையும் ஒருமைப் -பாட்டினையும் உருவாக்க ஒரு கூட்டாட்சி மன்றத்தை அமைக்க **சரத்து 263** வகை செய்கின்றது.
- இவ்விதி பின்வரும் கடமைகளைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்தால் பொதுமக்களின் நலன் காக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் கருதினால் அவர் அத்தகைய ஒரு குழுவினை அமைக்கலாம் என்று கூறுகிறது.
- மாநிலங்களிடையே எழுந்துள்ள பிரச்சனைகளை விசாரிப்பது மற்றும் அதன் மீது ஆலோசனை வழங்குவது.
- சில, அல்லது அனைத்து மாநிலங்களுமோ, அல்லது மத்திய அரசும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளும் விரும்பும் விவகாரங்களை விவாதிப்பது மற்றும் ஆய்வு செய்வது.
- சில விவகாரங்களின் மீது குறிப்பாக ஒத்துழைப்பை ஏற்படுத்தும் விவகாரங்களின் மீது பரிந்துரைகளை அளிப்பது.
- இத்தகைய குழுவினால் பணி சம்பந்தப்பட்ட விவகாரங்களை ஆய்வு செய்வதும் அவற்றின் மீது பரிந்துரைகளை அளிப்பதும் மட்டுமே ஆகும்.
- இக்குழுவினால் நடுத்தீர்வு வழங்க இயலாது. பின்வருபவர்களைக் கொண்ட மாநிலங்களிடையேயான குழுவினை குடியரசுத் தலைவர் **1990 ஆம் ஆண்டு** அமைத்தார்.பிரதமரே இதன் தலைவராவார்.
- மாநிலங்களின் முதலமைச்சர்களும் சட்டசபைகளைக் கொண்ட யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்களும் மற்றும் **6 மத்திய கேபினட்** அமைச்சர்களும் இதன் உறுப்பினர்கள்.
- மத்திய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களும் இக்குழுவின் கூட்டங்களுக்கு தேவைப்பட்டால் அழைக்கப்படுவர்.
- இதன் நடைமுறைகள் வெளிப்படை -யானதாக இருக்கும். மேலும் இதன் முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்படும்.
- இதற்கு முன் குடியரசுத் தலைவர் தேசிய உள்நாட்டு அரசாங்க

குழுவினையும் போக்குவரத்து மேம்பாட்டு குழுவினையும் அமைத்தார்.

- மாநிலங்களிடையேயான குழுவினை மற்ற அமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்ட இதனை அரசுகளுக்கிடையேயான குழு என்று அழைக்க வேண்டும் என் **சர்க்காரியா குழு** பரிந்துரை செய்தது.
- 1997 ஜூலையில் இக்குழுவின் கூட்டத்தில் 10வது நிதிக்குழு கூறிய மாற்று அதிகாரம் வழங்குதல் முறையை நடைமுறைப்படுத்தவும் **சரத்து 356யை** உபயோகிப்பதை கடினமாக்க நடவடிக்கைகள் எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

# பெண்களுக்கு அதிகாரமளித்தல்

**பெண்களுக்கான தேசியக்குழு**

**(National Commission for Women)**

- பெண்களுக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மறு ஆய்வு செய்வதற்காக பெண்களுக்காக தேசியக்குழுச்சட்டம் 1990ன் கீழ் 1992 ஆம் அண்டு ஜனவரி மாதம் பெண்களுக்கான தேசியக்குழு ஒரு சட்ட அமைப்பாக அமைக்கப்பட்டது.
- சட்டத்தீர்வு நடவடிக்கைகளை பரிந்துரை செய்வது குறைகளை தீர்த்து வைக்க உதவுவது மற்றும் பெண்களை பாதிக்கும் கொள்கை -களின் மீது அரசுக்கு ஆலோசனை வழங்குவது போன்றவை இதன் பணிகளாகும்.
- இதன் முதல் குழு **1992 ஆம் ஆண்டு** ஜனவரி 31 ஆம் நாள் **திருமதி. ஜெயந்திபட்நாயக்** தலைமையில் அமைக்கப்பட்டது.
- இதன் இரண்டாவது குழு **1995 ஜூலையில்** முனைவர் **திருமதி மோகினி கிரி** அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது

**இக்குழு பின்வருபவர்களை உள்ளடக்கியது**

- மத்திய அரசால் நியமிக்கப்படும் தலைவர் 5 உறுப்பினர்கள் சட்டம், தொழிற்சாலை, நிர்வாகம், பெண்களின் தன்னார்வ அமைப்புகள் நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சுகாதாரம், கல்வி அல்லது சமூக நலவாழ்வு போன்ற துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுள் இருந்து மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுபவர்.
- மத்திய அரசால் நியமிக்கப்படும் ஒரு உறுப்பினர் செயலர் இதன் உறுப்பினர் செயலர்.
- இச்சட்டம் இக்குழுவிற்கு அதிக அதிகாரங் களையும் பணிகளையும் வழங்கியுள்ளது. மேலும் இக்குழுவிற்கு ஒரு சமூகவியல் நீதிமன்றத்துக்குரிய அதிகாரங்களை வழங்கியுள்ளது.

**பணிகள் (function)**

இச்சட்டத்தின் பின்வரும் பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

- அரசியலமைப்பையும் மற்றும் பிற சட்டங்களின் கீழ் பெண்களுக்கு

- வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்களை ஆய்வு செய்தல்.
- **1978ஆம் ஆண்டு** ஐ.நா. சபை உலக பெண்கள் ஆண்டாக அறிவித்தது.
- இத்தகைய பாதுகாப்பு அம்சங்களின் செயல்பாடு குறித்து மத்திய அரசுக்கு ஆண்டுக்கொரு முறையோ அல்லது தேவைப்படும் போதோ அறிக்கை அளித்தல்.
- பெண்களின் நிலையை மேம்படுத்து -வதற்காக இப்பாதுகாப்பு அம்சங்களை மேலும் நன்முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு தேவையான பரிந்துரைகள் அவ்வறிக்கையில் கூறுதல்
- அரசியலமைப்பும் மற்றும் பிற சட்டங்களில் உள்ள விதிகளையும் மறு ஆய்வு செய்து அவற்றின் மீதான திருத்தங்களை பரிந்துரைத்தல்.
- பெண்கள் தொடர்பான அரசியலமைப்பு விதிகளையோ அல்லது பிற சட்டங்களை மீறுவது தொடர்பான வழக்குகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு இணைந்து எடுத்துக்கொள்ளுதல்

**பின்வருபவை தொடர்பான குற்றச்சாட்டுகளை கவனித்தல்**

- பெண்களின் உரிமையை பறித்தல்
- பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் சமத்துவம் மேம்பாடு ஆகிய நோக்கங்களுக்காகவும் இயற்றப்பட்ட

| | |
|---|---|
| **அந்தமான் நிக்கோபர் தீவுகள்** | **கொல்கத்தா உயர்நீதிமன்றம்** |
| **சண்டிகர்** | பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்றம் |
| **தாதர் நாகர் ஹவேலி** | மும்பை உயர்நீதிமன்றம் |
| **லட்சத்தீவுகள்** | கேரளா உயர்நீதிமன்றம் |
| **பாண்டிச்சேரி** | சென்னை உயர்நீதிமன்றம் |

சட்டங்களை அமலாக்காமல் இருத்தல்.

- பெண்களுக்கு எதிரான கொடுமை -களை குறைப்பதையும் பெண்களின் நலவாழ்வினை உறுதி செய்வதையும் பெண்களுக்கு நிவாரணம் வழங்கு -வதையும் நோக்கமாக கொண்ட கொள்கை முடிவுகள் வழிகாட்டுதல் -களையும் அறிவுரைகளையும் பின்பற்றாமல் இருத்தல்.
- பெண்களுக்கெதிரான கொடுமைகள் மற்றும் பாரபட்சம் போன்ற பிரச்சனைகளுக்கு சிறப்பு விசாரணை மற்றும் ஆய்வு ஆகியவற்றை கோருதல் மேலும் அவற்றுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்வதற்கான திட்டங்களை பரிந்துரை செய்தல்.
- பெண்கள் அனைத்து துறைகளிலும் பிரநிதித்துவம் பெறவும் அவர்களுக்கு

இடையூறாக இருப்பவற்றை கண்டறிய -வும் வேலை செய்யும் இடத்தில் ஆரோக்கியத்திற்கு கேடு விளை -விக்கக்கூடியவற்றை குறைக்கவும் பெண்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் தேவையான மேம்பாடு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் தேவையான மேம்பாடு மற்றும் கல்வி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

- ❖ ஒரு மாநில அல்லது யூனியன் பிரதேசத்தில் பெண்கள் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் மதிப்பீடு செய்தல்
- ❖ பெண்கள் கைதிகளாக வைக்கப் -பட்டுள்ள இடங்களை ஆய்வு செய்து தேவைப்பட்டால் எடுக்கப்படவேண்டிய தீர்வு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்இணைந்து எடுத்தல்.
- ❖ பெண்களின் அமைப்பை பாதிக்கக் கூடிய விவகாரங்களை உள்ளடக்கிய நிதி விவகாரங்களை கவனித்தல்.
- ❖ பெண்கள் பற்றியும் அவர்களுக்குண் -டான கஷ்டங்களை பற்றியும் அரசுக்கு அறிக்கையளித்தல்.
- ❖ மத்திய அரசால் இக்குழுவிற்கு அனுப்பப்படும் மற்ற விவகாரங்களை கவனித்தல்

# பெண்களுக்கு அதிகாரமளித்தல்

- ❖ இந்தியாவில் சமீபத்திய காலங்களில் நடைபெற்று வரும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், சுரண்டல்கள் மற்றும் அநீதிகளை களைய பெண்களுக்கு அதிகார -மளித்தல் இன்றியமையாதது.

## பெண்களின் தற்போதைய நிலை

- ❖ பாலின வளர்ச்சிக் குறியீடு (Gender Developmental Index )
- ❖ GDI யின் இந்தியாவின் தரம் $\frac{132}{148}$
- ❖ MMR $\frac{200}{100000}$
- ❖ இதை 2015க்குள் $\frac{109}{100000}$ ஆக குறைத்தல்
- ❖ IMR = $\frac{44.6}{1000}$ (2012)
- ❖ ஆண் = $\frac{43.28}{1000}$
- ❖ பெண் =$\frac{46.28}{1000}$

## பாலின விகிதம்

- ❖ இந்தியா $\frac{940}{1000}$; கேரளா $\frac{1084}{1000}$ ; தமிழ்நாடு =$\frac{995}{1000}$

## குழந்தைகள் பிறப்பு விகிதம் (Child sex ration )

- ❖ இந்தியா $\frac{914}{1000}$

**பெண்கள் அதிகாரமளித்தலுக்கான வழிமுறைகள்**

**அரசியல் வழிகள் :**

- அரசியல் கட்சிகளில் பெரும் பதவிகள்
- 73,74 வது சட்டத்திருத்தப்படி உள்ளாட்சிகளில் 33 % இடஒதுக்கீடு

**பொருளாதர வழி**

- தொழிற்கல்வி
- தொழில் முனைவோர்க்கு வரிச்சலுகை, நிதி உதவியளித்தல்
- சமவேலைக்கு, சமஊதியம் அளித்தல்
- 11 ஐந்தாண்டு திட்டப்படி, அரசின் அனைத்து திட்டங்களில் 33% பேர் பெண்களாய் இருக்க வேண்டும்.

**சமுதாய வழி :**

- ஒரே மாதரியான சிவில் முறையை நாடு முழுவதும்
- பெண்களுக்கெதிரான சுரண்டலை தடுக்க சட்டமிற்றுதல்
- பெண்ணுரிமை மீறுபவர்களை சட்டப்படி தண்டித்தல்.

**பெண்களுக்கு அதிகாரமளித்தலில் அரசின் பங்கு**

- மத்திய - மாநில அரசுகள் பெண்களுக்கான
- உடல் நலம்
- கல்வி
- பொருளாதாரத் திட்டம்
- சமூக உதவித்திட்டம்
- மற்ற திட்டங்கள்

**மத்திய அரசின் பெண்களுக்கான உடல் நலத்திட்டங்கள்**

**ஜனனி சுரக்ஷா யோஜனா 2005**

- பாதுகாப்பான பிரசவத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மருத்துவ -மனைகளில் பிரசவம் மேற்கொள்ளும் வறுமைகோட்டிற்கு கீழே வாழும் பெண்களுக்கு ஊக்கத்தொகை.
- ASHA என்னும் மருத்துவ நலப் பணியாளர் உதவுவர்.
- IMR & MMR வீதத்தை குறைப்பது அதன் நோக்கம்.

**காப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன் - 2005 (Reprodeative & Child Health (ROH))**

**நோக்கம் :**

- IMR & MMR வீதத்தை குறைத்தல்
- முழு செழுமைக்காலம்

**மில்லினியம் வளர்ச்சி கணக்கு -2000**

- தேசிய மக்கள் தொகைக் கொள்கை இவற்றை நிறைவேற்றும் பொருட்டு கொண்டு வரப்பட்டது.

**தமிழக அரசின் உடல் நலத்திட்டங்கள்**

- சத்யா அம்மையார் நினைவு அரசு அநாதைகளுக்கான திட்டம்.

- ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவ வசதி
- டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேற உதவித்திட்டம் 1989
- வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் கர்ப்பிணி பெண்களுக்க நிதி உதவி.
- அங்கன்வாடி மையம்

**மத்திய அரசின் பெண்கள் கல்விக்கான திட்டங்கள்**

- SSA - 2001 (End of the 9th five year plane)
- 86 - A act 2002 ன்படி 6 to 14 வயதுள்ள குழந்தைகளுக்கு கட்டாயக்கல்வி
- பெண்குழந்தைகளின் கல்விக்கென முக்கியத்துவம் திட்டம்
    - பெண் குழந்தைகளின் தொடக்க கல்விக்கான தேசிய திட்டம்
    - மகிளா சமக்யா திட்டம்
    - கஸ்தூரிபா காந்தி பவிக்கா வித்யாலயா

**மகிளா சமக்யா திட்டம் 1989**

- தேசிய கல்விக் கொள்கையின் இலக்குகளை நிறைவேற்றும் பொருட்டு இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்துஅங்கன்வாடி மையங்கள் மூலம் ஊட்டச்சத்து. தற்போது சாப்லா திட்டம் (SABLA) என்பர்.

**SABLA திட்டம் 2010**

- இராஜீவ் காந்தி வளரும் பெண்கள் இளம் பருவத்தினற்கான திட்டம்.
- வயது (11-18 )
- ஊட்டச்சத்து அளித்தல் மற்றும் உடல் நலத்தை பேணுதல்

**இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்து திட்டம் (2002 -2003) (Nutritional Prog. for Adolescent (circle )**

- ஊட்டசத்து குறைவான இளம் பெண்களுக்கான மாதந்தோறும் 6 கிலோ தானியம்

**Indira Gandhi Matirtva Sahyog yojana (IMSY)**

- கர்ப்பிணிப் பெண்கள் பாலூட்டும் தாய்மார்களுக்கான பணம் வழங்கும் திட்டம்
- வேலை அளிப்பிற்கான கூலி தருத்தல்.
- ரூ. 4000 - 3 தவணைகளில்

**பேறுகால விடுப்புச் சட்டம் 1961**

- பணிபுரியும் பெண்களுக்கான 6 மாதகாலம் வழிமுறை கூடிய சம்பளம்.

**கஸ்தூரிபா காந்தி பலிக்கா வித்யாலயா திட்டம்**

- நடுநிலைக் கல்வி வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு விடுதியுடன் கூடிய கல்வி நிறுவனங்கள் அமைத்தவர்.

**தமிழக அரசின் நடவடிக்கைகள்**

- பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை திட்டம் (1989)
- பெண் குழந்தைக்கான இலவச கல்வி வழங்கும் திட்டம்.
- இடைநிற்றலை குறைத்தல்
- இளைநிலை கல்லூரி படிப்பு வரை பெண்களுக்குகானக் கல்வி

**இந்திய அரசின் பெண்களுக்கான பொருளாதார திட்டங்கள்**

**1. ஸ்வாலம்பன் - 1982**

- வேலைவாய்ப்பை பெறவும், சுயவேலைவாய்பை உருவாக்கிக் கொள்ளவும் பயிற்சியளிக்கும் திட்டம்.

**சுவசக்தி திட்டம் (1988)**

- ஊரக மகளிர் மேம்பாட்டு திட்டங்களுக்கு நிதியுதவி வளங்களை, மகளிர் எளிதாக பயன்படுத்தும் பொருட்டு

**வட்டியில்லா கடன் வழங்குதல்**

- (STEPW 2003 -2004)
- Support to traning employments progammes sex human
- எட்டு விதமான துறைகளில் பெண்களின் அறிவை வளர்க்கவும், திறமைகளை வெளிக்கொளரவும் பயிற்சி.

**ஸ்வயம் சித்தா (2001)**

- SHG - மூலம் பெண்கள் தொழில் தொடங்க வழி
- இந்திரா மகிளா யோஜனா எனவும் இத்திட்டம் வழங்கப்படும்.

**தனலஷ்மி - 2008 (Conditional Cashtranifer)**

- 8ம் வகுப்பு வரை பயிலும் பெண்களுக்கு நிதியதவி
- Encourage the family to educate girl child and present the child.

**Rashtriya mahila Kosh (National creadit find for women)**

- குறு நிதிசேவைகள் வழங்குதல்.

**Gender Budgiting - 2004**

- நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு செலவீனத்திலும் குறிப்பிட்டத் தொகையை பெண்களுக்காக செலவு செய்யப்பட வேண்டும்.
- அனைத்து துறைகளிலும் பெண்களுக்கான வள ஒதுக்கீடு செய்வதற்கு Gender Budgeting உதவும்

**கஸ்திரி சக்தி புரஸ்கர்**

- சமூக வளர்ச்சி முன்னேற்றத்தில் பெண்களின் சாதனைகளை

அங்கீரிக்கும் பொருட்டு விருதுகளை வழங்குகிறது.

- தேவி அகல்யா பாய் விருது
- கண்ணகி விருது
- மாதா ஜீஜாபாய் விருது
- ராணி ஜெயின் டென்ஜோ ஜெகாங் விருது
- ராணி லட்சுமி பாய் விருது
- ரமா தேவி விருது

**இந்திய அரசின் மற்ற திட்டங்கள்**

- நவஜத் சிசு சுரக்ஷ கார்யாகிராம் 2009
- IMR , MMR வீதத்தை குறைத்தல்
- சுகாதார நிலையங்களில் பணிபுரிகிற -வர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதன் மூலம் பெண்களுக்கு உடல் நல பாதுகாப்பை உறுதி செய்யும்.

**பாரதிய மகிளா வங்கி 2013**

- 2013ம் ஆண்டு பட்ஜெட்டில் அறிவிப்பு
- 1000 கோடி முதலீடு
- பெண்களுக்கான வங்கி

**தமிழக அரசின் பெண்களுக்கான பொருளாதார திட்டங்கள்**

- சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992
- ஒரு பெண் குழந்தை இருப்பின் ரூ 22000
- 2 பெண் குழந்தை இருப்பின் ரூ 15200 வழங்குதல்.

**நோக்கம்**

- குடும்ப நலத்திட்டத்தை ஊக்குவித்தல்
- பெண்கல்வி
- பெண் சிசுக்கொலையை ஒழித்தல்.

**இந்திய அரசின் பெண்களுக்கான சமூக உதவித்திட்டங்கள்**

- பணிபுரியும் பெண்களுக்கான விடுதி 1972
- ராஷ்டிரிய மகிளா கோஷ் 1993
- பெண்களுக்கான தேசிய நிதி உதவித் திட்டம்
- இது கடன் வழங்கம் முதலாளிகளின் சுரண்டல் களிலிருந்து பெண்களை பாதுகாக்கிறது.
- பெண்களின் எழுத்தறிவை அதிகரிப்பதே அதன் நோக்கம்.
- 11வது 5 ஆண்டு திட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் 80% எழுத்தறிவை அடைவதே இலக்கு

**தமிழக அரசின் பெண்களுக்கான சமூக உதவித்திட்டங்கள்**

- மகளிர் திட்டம் 1997-98
- திருமண உதவித் திட்டம்
- மங்கள மாலை திட்டம்

- மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் நினைவு திருமண உதவித் திட்டம் 1989
- ஈ.வெ.ரா. மணியம்மை நினைவு ஏழை விதவைப் பெண்கிள்ன திருமண உதவித் திட்டம் 1981
- சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்
- தொட்டில் குழந்தை திட்டம் 1992
- விதவைகள் நிதியுதவி திட்டம்

**அரசின் தற்போதைய நடவடிக்கைகள்**

- பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதா 2012
- 108 சட்டத்திருத்த மசோதா படி
- நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவையில் 33.3%

**பெண்களுக்கு இடஒதுக்கீடு**

- நகர்மன்றங்களில் 50 %

**பெண் சிசு கொலையை எதிர்த்து**

- பெண்கள் : இயக்கம் மூலம் விழிப்புணர்வு தத்து எடுப்பதனால் கிடைக்கும் நன்மைகளை எடுத்துரைத்தல்.

**பணிபுரியும் பெண்களின் நலன் காக்க - சட்டங்கள்**

- தொழிற்சாலை சட்டம் 1948
- தோட்டத் தொழில் சட்டம் 1951
- சுரங்கச் சட்டம் 1952
- பேருகால உதவி சட்டம் 1961
- 1976 சமஊதியச் சட்டம்
- மகளிர் காவல் நிலையம் 1992
- தமிழக பெண்கள் ஆணையம் 1993
- தேசிய பெண்கள் ஆணையம் - 1992

**உலக பெண்கள் மாநாடு**

- மெக்ஸிகோ - 1975
- டென்மார்க் - 1980
- கென்யா - 1985
- சீனா - 1995

**SAARC**

- **பெண்கள் ஆண்டு - 1978**
- **சர்வதேச பெண்கள் தினம் - மார்ச் 8**
- **குழந்தைகள் ஆண்டு - 1979**
- **பெண் குழந்தை ஆண்டு 1990**
- SAARC Decade of the will child - **1991 - 2000**